## உள்ளடக்கம்


1. ஐ.நா.வை ஏமாற்றும் இலங்கை அரசு – **தத்தர்**....................4
2. ஐ.நா.வை கையாளல் : தமிழகம் சார்ந்த ஒரு நோக்கு – **திரு.பரணி கிருஸ்ணரஜனி** (பின்கற்கைஆய்வாளர் பிரான்சு)....................13
3. தொடரட்டும் மக்கள் புரட்சி – **தோழர். சுப.உதயகுமாரன்**....................25
4. ஜல்லிக்கட்டு : அவசரச் சட்டமும் ரகசியத் திட்டமும் – **திரு. சு.வெங்கடேசன்**....................35
5. மெரினா : தை எழுச்சி – **திரு. ஜமாலன் தமிழ்**....................38
6. மாணவர் ஆட்சி – **பாவலர் அறிவுமதி**....................45
7. தை புரட்சி : சாதனைகளும் சவால்களும் – **ஐயா.பெ.மணியரசன்**....................46
8. ஆற்றல் சான்ற தலைமை வேண்டும் – **திரு. செ.ப. முத்தமிழ்மணி**....................54
9. ஜல்லிக்கட்டுக்கான மக்கள் போராட்டம் எழுப்பும் சில வினாக்கள்? **திரு.ஏ.அழகிய நம்பி**....................57
10. தை வசந்தம் – **எழுத்தாளர்.சரவணன் சந்திரன்**....................63
11. ஜல்லிக்கட்டு : பண்பாட்டுப் புரிதலின்மை உருவாக்கும் சிக்கல்கள் – **ஊடகவியலாளர். கா.அய்யநாதன்**....................67
12. கீழடி : சங்ககால தமிழர்களின் நகர நாகரிகம் – **தோழர். முத்தமிழ் வேந்தன்**....................75
13. மெல்லச் சாகும் எண்ணூர் : தொடரும் பேரிடர்கள் – **தோழர். அருண் நெடுஞ்செழியன்**....................80
14. மெரினா: நினைவுகளும் படிப்பினைகளும் – **எழுத்தாளர். டி.அருள் எழிலன்**....................83
15. பல்லவர்கள் தமிழர்களே – **ஐயா.இராம.அகத்தியதாசன்**....................86
16. புலம் பெயர்ந்து வாழும் தமிழர்களின் கோரிக்கை மற்றும் தேவைகள்– **சிவதாரணி மலர்மகள்**....................89
17. மாக்சிய நோக்கில் ஜல்லிக்கட்டு – **தோழர். கே.ஆர்.எஸ்.மணி**....................93
18. தமிழ் மக்களின் ஜல்லிக்கட்டு உரிமை போராட்டமும் தமிழீழமும் – **தோழர் தியாகு**....................96




# அறிவாயுதம்

தமிழ் தேசிய ஆய்விதழ்


**ஆசிரியர்**
வழக்கறிஞர்
**ப.அமர்நாத்**

**சிறப்பாசிரியர்கள்**
ஐயா. **ந.விசுவநாதன்**
தோழர்.
**கே.ஆர்.எஸ்.மணி**

**நெறியாளர் குழு**
பொறியாளர் வெ.சேனாபதி
பொறியாளர் இராஜா குள்ளப்பன்
தோழர் ப.ஜீவானந்தன்
மருத்துவர் வ.நா.தன்மானன்
திருமதி. சுதாஹரி சந்திரன்
தோழர் சீ.பிரகாசம்
மருத்துவர் வீ.சின்னதுரை
வழக்கறிஞர் ஏ.இரமணிகாந்தன்
பொறியாளர் த.சரவணன்

இதழ் வடிவமைப்பு
காயத்ரி
7502022320

அச்சு :
**கேபிடல் இம்பரசன்**
ராயப்பேட்டை
சென்னை-14

முகவரி:
அறிவாயுதம்
'தமிழ்தேசிய ஆய்விதழ்'
737, 95வது தெரு,
15வது பகுதி (செக்டார்),
கே.கே. நகர்.
சென்னை - 78

அறிவு 1
ஆயுதம்
5

பிப்ரவரி – 2017
ஏப்ரல் – 2017



தொடர்புக்கு : **9444081126**

மின்னஞ்சல் : arivaayudham2013@gmail.com

## தலையங்கம்

# தூங்கும்புலியை பறைகொண்டு எழுப்பினோம், தூயதமிழரை தமிழ்கொண்டு எழுப்பினோம்'

புரட்சிக் கவிஞரின் இந்த வரிகள் தமிழர் கடற்கரையாம், மெரினா கடற்கரையில் மெய்ப்பிக்கப்பட்டது. தமிழ், தமிழர் என்ற ஒற்றை அடையாளத்தோடு தமிழகமெங்கும் கூடிய இலட்சக்கணக்கான மக்கள், அதுவரை தமிழர் மீது படிந்திருந்த அவமான சின்னங்களை துடைத்தெறிந்தனர். காலில்விழுதல், மண்டியிட்டுகிடத்தல், மண்சோறுதின்றல், வானூர்தியைவணங்குதல், ஊர்தியின் அடியினைதொட்டு வணங்குதல் என்று அடிமை விசுவாவம் அரங்கேறிக் கொண்டிருந்த தமிழ்நாட்டில், தங்களையாரென்றே காட்டிக் கொள்ளாமல், தங்களை வெளிப்படுத்திக் கொள்ளாமல், தங்களை அடையாளப் படுத்திக் கொள்ளாமல் மாணவர்கள் / இளைஞர்கள் நடத்திய எழுச்சி, தமிழகம் இதுவரை கண்டிராத மாபெரும் 'தைபுரட்சி' யாக மாறியது. போராட்டம் துவங்கிய நாள் முதல், அதை அரசு வன்முறையால் ஒடுக்க முனைந்த நாள் வரையிலும், தமிழகம் முழுவதும் போராட்டம் நடைபெறும் அந்தந்த இடங்களில் மக்கள் குடும்பத்தோடு திரண்டு ஆதரவு அளித்ததும், அரச வன்முறையால் போராட்டம் ஒடுக்கப்பட்டபோது, பொதுமக்கள் ஆங்காங்கே திரண்டு நடத்திய போராட்டங்களும், சாலை மறியல்களும், தமிழ் மக்கள், மத்திய மாநில அரசுகளின் மீது கொண்டிருந்த கோபத்தினை வெளிக் கொணர்ந்தது.

'சல்லிக்கட்டு' என்ற ஒற்றை கருத்து முன்னிடப் படுத்தப்பட்ட போதும். காவிரி நீர் பிரச்சனை, முல்லைப் பெரியாரு அணை பிரச்சனை, மீத்தேன் எரிவாயு, கேல் எரிவாயு குழாய், கூடங்குளம் அனுமின் நிலையம், நூட்ரினோ, 2009ல் நடந்த ஈழத்தமிழர் படுகொலை, அரசியல்வாதிகளின் கயமை ஆகிய எல்லாமும் போராட்ட களங்களில் பேசப்பட்டது. கடந்த காலங்களில் தமிழர்களுக்கெதிராக நடைப்பெற்ற அநீதிகளுக்கெல்லாம், மக்கள் நியாயம் கேட்டனர். மெரினா கடற்கரையில் ஐநூறு பேரென துவங்கிய போராட்டம் பத்து இலட்சத்திற்கும் மேலான மக்கள் சங்கமிக்கும் போராட்டமாக மாறியது.போராட்டம் ஒரு வாரத்தையும் கடந்து செல்ல, குடியரசு நாள் விழாவும் முடங்க கூடும், மக்கள் எல்லா பிரச்சனைகளுக்கும் நியாயம் கேட்பார்கள், இனி இவ்வாறான போராட்டங்கள் அவ்வப்போது எழும் என்ற நிலை ஏற்படவே, அரச பயங்கரவாதம் போராடும் மாணவர்கள் / இளைஞர்கள், மற்றும் அவர்களுக்கு ஆதராவாக திரண்ட இலட்சக்கணக்கான மக்கள் மீது ஏவப்பட்டு, அறவழிப்போராட்டம், அடித்து நொறுக்கப்பட்டு ஒடுக்கப்பட்டது. மாணவர்களுக்கு ஆதரவு அளித்தனர் என்பதற்காக மீனவர்கள் குடியிருப்புகளும் அவர்களின் மீனங்காடிகளும் காவல்துறை யினரால் கொழுத்தப்பட்டது. போராட்டத்தை ஒடுக்கிய அரசு அந்த இடத்தில் தேசிய கொடியினை ஏற்றி குடியரசு நாள் விழாவினை நடத்தி மகிழ்ந்தது. ஆனால், குடியரசு நாளன்று அதில் மக்கள் யாரும் பங்கெடுக்காமல், விழா பகுதியே வெறிச்சோடி கிடந்ததை அரசு கவணிக்காமல் இருந்திருக்க வாய்ப்பில்லை. மக்கள் மீண்டும் தங்களின் எதிர்ப்பினை அரசுக்கு உணர்த்தினர்.

போராட்டம் ஒடுக்கப்பட்டாலும், அது தனது இலக்கை அடைந்தது. மத்திய அரசு தொடர்ந்து மறுத்து வந்தாலும், வேறுவழியின்றி மாநில அரசு சல்லிக்கட்டிற்கு ஆதரவான சட்டத்தை, சட்டமன்றத்தின் சிறப்பு கூட்டத்தை

கூட்டி நிரைவேற்றியது. போராட்டம் மாணவர்களுக்கும், இளைஞர்களுக்கும், பொது மக்களுக்கும் வெற்றியாக அமைந்தது என்பதை ஏற்க தயங்கிய மத்திய மாநில அரசுகள், அதைதேச விரோத போராட்டமாக சித்தரிக்க தவறவில்லை. சட்டமன்றத்தில் பேசிய தமிழக முதலமைச்சர் திரு. பன்னீர் செல்வம், இந்த போராட்டம் ‘தேச விரோத’ சக்திகள் கையில் சிக்கிக் கொண்டது என்று கூச்சப்படாமல் பொய்யுரைத்தார். ‘தேச விரோதம்’ என்ற சொல்லாடலை அவர் பயன்படுத்தியதிலிருந்தே, அந்த சொல்லின் சொந்தக்காரர்களுக்கும் அவருக்கும் இருக்கும் நெருக்கம் அம்பலமானது. பின்னாளில் அவர்களின் ஆசியோடு அவர் வெளியேறியதும், ‘புனிதராக’ அவர் புணையப்பட்டதும், திருமதி. சசிகலா அவர்களின் எழுச்சியும், வீழ்ச்சியும், தமிழக அரசியலில் அடுத்தடுத்து அரங்கேறி மறைந்தன. அஇஅதிமுகவை பிளவுப்படுத்துவதால் தனக்கான தளத்தை தமிழ் நாட்டில் ஏற்படுத்தலாமென்று நினைக்கும் பா.ஜ.க., அஇஅதிமுகவின் வீழ்ச்சியை பயன்படுத்த தருணம் பார்த்து காத்திருக்கும் திமுக, தமிழக அரசியல் சூழலை தனக்குச் சாதகமாக ஆக்கிக் கொள்ள ஆளுநரை பயன்படுத்துகிறது பா.ஜ.க. என்று குற்றம் சாட்டும் இடதுசாரிகள், பெரியாரிஸ்டுகள், தமிழ்தேசியவாதிகள் என்று தமிழக அரசியல் களம், பல களமுனைகளை கண்டு வருகிறது. பெரும்பான்மையாருக்கு, ஆட்சியாருக்கு என்ற போட்டிகளுக்கிடையே, மார்ச்சு மாதம் ஐ.நா. மன்றத்தின் மனித உரிமைகளுக்கான ஆணையத்தின் முன் இலங்கை அரசை குற்றவாளியாக நிறுத்த வேண்டுமென்ற பேச்சும், முனைப்பும் தமிழகத்தில் கேட்கத் துவங்கியுள்ளது. ஈழத்தின் வடக்கிலும் கிழக்கிலும் உள்ள தமிழ் தேசிய கூட்டமைப்பினரை தனக்கு சாதகமாக்கிக் கொண்டும், தான் புதிதாக இயற்றும் யாப்பை முன்னிலைப்படுத்தியும் இலங்கை அரசு உலக நாடுகளை மீண்டும் ஏமாற்ற முயற்சிக்கிறது. தமிழகத்தில் நிலவும், உறுதியற்ற அரசியல் சூழலை பயன்படுத்தி. மைய அரசு, இதை கண்டும் காணாததுமாய் இருந்து இலங்கைக்கு ஆதரவான போக்கினை எடுத்துவிடும் என்ற அச்சம் ஏற்படுகிறது. இந்திய அரசின் நிலைப்பாடு ஏனைய நாடுகளின் நிலைப் பாட்டிலும் மாற்றத்தை ஏற்படுத்தும் என்பதால், இலங்கை அரசு தொடர்ந்து காப்பாற்றப்படும் சூழ்நிலை உருவாகியுள்ளது. மாணவர்கள், இளைஞர்கள் முன்னெடுத்த போராட்டம் ‘சல்லிக்கட்டு’ என்ற ஒற்றை சொல்லை மையமாக கொண்டிருந்தாலும், அது அதையும் கடந்து ‘தமிழ்த்தேசியம்’ என்ற கருத்துருவாக்கத்திற்கு வித்திட்டுள்ளதால், மத்திய அரசின் உள்துறை அமைச்சு இதுப்பற்றி தமிழக அரசின் உள்துறையிடமிருந்து அறிக்கை கேட்டுள்ளது. 2009ல் ஈழத்தில் ஏற்பட்ட பின்னடைவு, தொடர்ந்து தமிழ்நாட்டில் நடைபெற்று வரும், தமிழர் விரோத செயற்பாடுகள் ஆகிய அனைத்தும், தமிழ் மக்களை ஒரு புதிய விடியலை நோக்கி பயணிக்கச் செய்துள்ளது. மாற்றத்தை நோக்கி மக்கள் பயணிக்க ஆயத்தமாகவுள்ளனர், ஆனால் மாற்றத்திற்கான தளங்கள் இன்னமும் ஆரோக்கியமானதாக இல்லை. கால தேவைக்கு ஏற்ப, சூழலுக்கு ஏற்ப, இவர் நல்லவர், அவர் நல்லவர் என்று ஆட்களையும் கட்சிகளையும் அடையாளம்காட்டுபவர்களாகவே தமிழ் தேசிய சக்திகள் இருந்து வருகின்றன. இதை கடந்து, ஓர் நீண்ட கால அரசியல் திட்டத்தை உருவாக்கி அதை நோக்கி தமிழ் மக்களை ஆயத்தப் படுத்த வேண்டிய தேவை காலத்தின் கட்டாயமாக உருவெடுத்துள்ளது. ‘தைபுரட்சி’ எதிரிகளை வீழ்த்தியுள்ளது, ஆனால் நாம் எழவில்லை என்றால், 1965 தை மாதத்தில் எழுந்த மொழிப் போராட்டம் போல இந்த ‘தைபுரட்சி’யும் வரலாற்றின் ஒருபக்கமென சுருங்கிப் போய்விடும்.

**ஆசிரியர்**

வழக்கறிஞர் **ப.அமர்நாத்**

தத்தர்

# ஐ.நா.வை ஏமாற்றும் இலங்கை அரசு!



**இனப்படுகொலைக்கு உள்ளான ஈழத்தமிழருக்கு நீதி வேண்டும்:**

**போர்க்குற்ற விசாரணைக்கு மேலும் அவகாசம் கொடுக்காமல் ஐநா பொதுச்சபையிடம் ஒப்படைக்க வேண்டும்;.**

ஐக்கிய தேசியக் கட்சியும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் தமிழ் மக்களுக்கு எதிரான இனவாதக் கொள்கையில் ஒரே மாதிரியானவை. ஒன்று இனவாதத்தை ஆரம்பித்து வைக்க, மற்றது அதனை நிறைவேற்றி வைக்கும். இரண்டு கட்சிகளும் மாறி மாறி பதவிக்கு வருவதும் ஒன்றுடன் ஒன்று போட்டியிட்டு தமிழ் மக்களுக்கு எதிரான இன அழிப்புக் கொள்கையை முன்னெடுப்பதும் வரலாறு கண்ட உண்மையாகும்.



நெருக்கடிகள் ஏற்படும் இடத்து அதனை சமாளிப்பதற்காக அவ்வப்போது இவ்விரு கட்சிகளும் தமிழ்த் தலைவர்களுடன் ஒப்பந்தம் செய்வதும் பின்பு நிலைமையை சமாளித்ததும் ஒப்புக்கொண்ட அவ்வொப்பந்தங்களுக்கு எதிராக செயற்படுவதும் கடந்த 90 ஆண்டுகளுக்குக் குறையாத நடைமுறையாகும்.

இவ்விருகட்சிகளும் செய்துவந்த தமிழின அழிப்பின் கூட்டுமொத்த உச்சமாக முள்ளிவாய்க்கால் படுகொலை அமைந்தது. இதற்கு முன் 1987ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியின் போது "ஆப்பரேஷன் லிபரேஷன்" என்றதன் பேரில் இலங்கை இராணுவம் பாரிய இனப்படுகொலையை மேற்கொண்டு பல்லாயிரக்கணக்கில் தமிழ் மக்களை கொன்றுகுவித்த போது அன்று இந்தியாவின் தலையீட்டால் அந்த இனப்படுகொலை தொடரப்பட முடியாது நிறுத்தப்பட்டது. அப்படுகொலை திட்டத்தை 2009ஆம் ஆண்டு முள்ளிவாய்க்காலில் சுதந்திரக் கட்சியின் ஆட்சியின் கீழ் நிறைவேற்றப்பட்டது. எனவே இனப்படுகொலை என்பது இருபெரும் சிங்களக் கட்சிகளினதும் கொள்கையாகும்.

**தற்போது பிரச்சனை என்னவெனில் முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையின் மூலம் சிங்கள அரசு சர்வதேச நெருக்கடிக்கு உள்ளாகியிருப்பதுடன் சிங்களத் தலைவர் களும், சிங்கள இராணுவத் தளபதிகளும் என அனைவரும் சர்வதேச நீதி விசாரணைக்கு உட்பட வேண்டிய சர்வதேச நடைமுறை பனிப் போரின் பின் உருவாகியிருக்கிறது. இந்நிலையில் இலங்கை அரசை இனப்படுகொலை களங்கத் திலிருந்தும், சிங்களத் தலைவர்களையும், இராணுவத் தளபதிகளையும் சர்வதேச விசாரணையிலிருந்தும் காப்பாற்றுவதற்காக இருபெரும் இனவாத சிங்களக் கட்சிகளும் ஒன்று சேர்ந்து செயற்படுகின்றன. தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு நீதி வழங்கப்போவதாக பாசாங்கு செய்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவைப் பெற்று தமிழ் மக்களுக்கு எதிரான இன அழிப்பை முன்னெடுப்பதும், இலங்கை அரசை சர்வதேச அரங்கில் காப்பாற்றுவதுமே ரணில் சிறிசேன என்ற இருகட்சித் தலைவர்களினதும் கூட்டின் இரகசியமாகும்.**

இந்நிலையில் "தமது நல்லாட்சி அரசாங்கமானது நீதியும், ஜனநாயகமும் கொண்டதென்றும் அது போர்க்குற்றத்திற்கு நீதியான தீர்வு காணும் என்றும் அதற்காக போர்க்குற்ற விசாரணையை மேலும் 18 மாதத்திற்கு பின்போடுமாறும், கூடவே தம் நல்லாட்சி அரசாங்கத்தால் உள்நாட்டு விசாரணையின் மூலம் நீதி காணமுடியும் என்றும், எனவே சர்வதேச விசாரணை அவசியமற்றது என்றும், ஐநா தீர்மானத்தில் ஒரு திருத்தம் கொண்டுவர இந்த அரசாங்கம் முயல்கிறது.

ஒரு நூற்றாண்டிற்கும் மேலாக ஈழத் தமிழ்த் தலைவர்களை ஏமாற்றுவதில் வெற்றிகண்ட சிங்களத் தலைவர்கள், கடந்த அரை நூற்றாண்டுக்கும் மேலாக இந்தியத் தலைவர்களை ஏமாற்றுவதில் வெற்றி கண்டுவரும் சிங்களத் தலைவர்கள் தற்போது








சர்வதேச நாடுகளை ஏமாற்றுவதில் தம் கைவண்ணத்தை காட்ட முற்பட்டுள்ளனர். இந்நிலையில் இலங்கை அரசு விரும்புவது போல மேலும் போர்க்குற்ற விசாரணையை பின்போட அனுமதிக்கக் கூடாது என்பதுடன் ஐநா மனிதஉரிமைகள் ஆணையமானது இவ்விடயத்தை ஐநா பொதுச்சபையிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதுமே இன்றைய அவசியமாகும்.

ஐநா மனிதஉரிமைகள் ஆணையத்தில் அங்கம் வகிக்கும் மொத்தம் 47 நாடுகளில் 37 நாடுகள் சர்வதேச கலப்பு விசாரணைக்கு ஆதரவாக வாக்களித்தன. ஆனால் 2 ஆண்டுகள் ஆகியும் இதற்கான எந்தவித தொடக்க நிலை நடவடிக்கைகள்கூட இதுவரை இலங்கை அரசால் மேற்கொள்ளப்படவில்லை.

1987ஆம் ஆண்டு இந்திய அரசுடன் இலங்கை அரசு மேற்கொண்ட ஒப்பந்தத்தின் போது வடக்குகிழக்கு இணைப்பு பற்றிய பிரச்சனை பிரதான இடம் வகித்தது. அப்போது வடக்கு கிழக்கு பிரிக்கப்பட்ட அரசியல் தீர்விற்கு தமிழ்த் தரப்பில் இருந்து எந்தொரு கட்சியோ அல்லது ஆயுதம் தாங்கிய அமைப்புகளோ சம்மதிக்க மறுத்தன. இந்நிலையில் வடக்கு கிழக்கு இணைப்பை தற்காலிக இணைப்பாக இலங்கை அரசு முன்வைத்தது.

அவ்வாறு முன்வைத்து அதை நிரந்தர இணைப்பாக மாற்றுவதாக அன்றைய இந்திய பிரதமர் திரு.ராஜீவ் காந்தியிடம் உறுதியும் அளித்து அவரை முதலில் நம்பவைத்தனர். இலங்கை விவகாரத்தில் அப்போது இந்தியா பலமாக இருந்த சூழலில் இவ்வாறு இணைப்பு என்று சட்டத்தில் புதியாத ஓர் ஒட்டை விட்டு ஏற்பாடும் செய்துவிட்டது வடக்கு கிழக்கு இணைந்த ஆட்சிமுறையை பிரகடனம் செய்தனர். ஆனால் இந்தியா பலவீனம் அடைந்த நிலையில், இணைத்த முறையில் அன்றைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன தவறு செய்துவிட்டார் என்றும், இணைப்பு சட்டபூர்வமற்றது என்று இணைப்பை ரத்து செய்யுமாறு உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து அதன் மூலம் இணைப்பை இல்லாமல் செய்தார்கள். ஒரு பிராந்திய வல்லரசான இந்தியாவை எப்படி ஏமாற்றலாம் என்பதுகூட அவர்களுக்குத் தெரிந்திருந்தது. வடக்குகிழக்கு தற்காலிக இணைப்பு நாடாளுமன்றத்திற்கு அறிவிப்பதன் மூலம் செய்யப்பட வேண்டுமே தவிர அரசாங்க இதழில் வெளியிடுவதன் மூலம் இணைப்பைச் செய்யக்கூடாது என்பதே அந்த இணைப்பை ரத்து செய்வதற்கான வாதமாய் அமைந்தது. அந்த வாதத்தை ஏற்றுக்கொண்ட இலங்கையின் தலைமை நீதிபதி சரத் என். சில்வா இணைப்பை ரத்து செய்தார்.

ஆனால் அந்த இணைப்பு பிரிக்கப்பட்ட பின்பு இதுவரை இந்தியா தலையிடுவதற்கான எந்தவித வாய்ப்பையும் அவர்கள் கொடுக்கவில்லை. இது இலங்கைஇந்திய ஒப்பந்தத்திற்கு முரணானது.

இந்த தற்காலிக இணைப்பு விவகாரத்தில் இணைத்தமுறை தவறு என்று தொழில் நுட்பக்காரணம் சொல்லப்பட்டிருக்கிறதே தவிர சட்டம் தவறு என்று சொல்லப்படவில்லை. இதன்படி இப்போதைய ஜனாதிபதிகூட நாடாளுமன்றத்திற்கு வெறுமனே அறிவிப்பதன் மூலம் மட்டுமே முந்தைய ஜனாதிபதியால் தவறாக இணைக்கப்பட்ட இணைப்பை இவரால் ஒரு நொடியிற்கூட சரிசெய்திட முடியும். இந்த இணைப்பு விவகாரத்தில் தவறு ஆட்சியாளர்கள் பக்கமே தவிர தமிழர் பக்கம் கிடையாது. எப்படியோ ஒரு சிங்கள ஜனாதிபதி தவறு இழைத்ததாகக் கூறி அந்த தவறுக்காக பாதிக்கப்பட்டிருப்பது தமிழர்கள்தான். இதுவரை இந்தியாவால் கூட அதை சரிசெய்ய முடியாத நிலையே உள்ளது. இப்படி இந்தியாவை ஏமாற்றுவதில் அவர்கள் அடைந்த வெற்றி இதுமட்டுமல்ல அந்த பட்டியல் நீளும்.

மேலும் மேற்படி சர்வதேச கலப்பு நீதிவிசாரணை சம்பந்தமான தீர்மானத்தில் ஒரு சட்டத்திருத்தத்தை மங்கள சமரவீர ஐநா சபையில் முன்மொழிய இருப்பதாக ஜனவரி இறுதிவாரத்தில் கொழும்பில் நடந்த பத்திரிகையாளர்கள் மாநாட்டில் கூறியுள்ளார். இதன்படி அவர் மேற்கொள்ளயிருக்கும் திருத்தப் பேரணை எதுவாக இருக்க

முடியுமென்றால் தற்போது இலங்கையில் உள்நாட்டில் ஜனநாயகம் மீட்கப்படுகிறது. பழைய அரசாங்கத்தின் ஜனநாயக வீரோத செயல்கள் சரிசெய்யப்பட்டுவிட்டன. இந்நிலையில் நீதியான விசாரணையை நடத்த இன்றைய இலங்கை அரசால் முடியும். எனவே சர்வதேச கலப்பு விசாரணை என்பதற்குப் பதிலாக உள்நாட்டு பொறிமுறை கொண்ட விசாரணைதான் இலங்கையின் அமைதியைப் பேண வழிவகுக்கும் என்றும் சர்வதேச விசாரணை என்றால் சிங்களத் தீவிரவாதிகளை சமாளிக்க முடியாமல் போகும் அதுவே அரசியல் தீர்வை எட்டுவதற்கு தடையாக அமைந்துவிடும் எனவே சர்வதேச விசாரணையைத் தவிர்த்து உள்நாட்டுப் பொறிமுறை கொண்ட விசாரணை என்பதன் மூலமே இலங்கையில் நீதியையும், அமைதியையும், தமிழ் மக்களுக்கான தீர்வையும் காண முடியுமெனக் கூறி சர்வதேச கலப்பு விசாரணையை இல்லாமல் செய்து உள்நாட்டு விசாரணைக்கும 18 மாத கால அவகாசம் கோரவுள்ளனர்.




முள்ளிவாய்க்கால் யுத்தத்தின் பின் தமிழ் மக்கள் மத்தியில் முளைத்தெழுந்த திரு.எம்.எ.சுமந்திரன் என்பவர் ரணிலின் கையாளாக இருப்பவர். இவர் ஐதேக சார்பில் கொழும்பில் தேர்தலில் போட்டியிட முதலில் ஆலோசிக்கப்பட்டிருந்தவர். ஆனால் அவர் அவ்வாறு கொழும்பில் ஐக்கிய தேசிய கட்சியின் சார்பில் உறுப்பினராக போட்டியிட்டு வெற்றி பெறுவதைவிட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குள் அவரை நுழைத்து அவரை தன் மூலம் எம்பி ஆக்குவது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை கையாள வசதியாக இருக்கும் என்ற சதிகார சிந்தனையின் அடிப்படையில் அவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் எம்.பி. ஆக்கப்பட்டார்.



இப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலையாய நபராக செயற்படுவது இவர்தான். வயது முதிர்ந்த சம்பந்தனை இலகுவாக கையாள இவரால் முடிகிறது. இதற்குப் பின்னால் ரணில் விக்கரமசிங்கவின் பெருந்திட்டம் உள்ளது. தற்போது கொழும்பை பிறப்பிடமாகவும், வாழ்விடமாகவும் கொண்ட சுமந்திரன் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் தேர்ச்சியுள்ளவர். இவர் மேற்குலகின் செல்லப்பிள்ளையுங்கூட.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அநேகமான ஏனைய எம்பிக்களிடம் ஆங்கிலப் புலமையில்லை. ஆனால் அது சுமந்திரனிடம் உண்டு. ஆதலால் அவரால் ஏனைய எம்பிக்களை கட்சிக்குள் இலகுவாக பின்தள்ளமுடியும். அதையும் ஒரு முக்கிய பலமாக பயன்படுத்தி தள்ளாடும் வயதைக் கொண்டுள்ள சம்பந்தனை ஒரு காட்சிப் பொருளாக முன்னே நிறுத்தி சுமந்திரன் அனைத்துவகையான நாடகங்களையும் ஆடுகிறார். இவர் தமிழ் மக்களை அரைப்பணத்திற்கு எதிரியிடமும், அந்நியர்களிடமும் விற்பவராக காணப் படுகிறார்.

தற்போது தமிழ் மண்ணில் அமைதி நிலவுவதாக சொல்வது சுத்த அபத்தம். ஐந்து குடிமகனுக்கு ஒரு சிங்கள இராணுவ சிப்பாய் (5:1) என்ற விகிதத்தில் தமிழ் மண்ணில் சிங்கள இராணுவத்தின் பிரசன்னம் உள்ளது. இதைவிட உளவுத்துறையினரதும், பொலீசாரினதும் தொகை வேறு. இவ்வாறு படையினரின் இரும்புப்பிடிக்குள் தமிழ் மக்கள் நசிந்துகிடக்கின்றனர் என்பதே உண்மை. இதைத்தான் அவர்கள் அமைதி என்கிறார்கள்.

தற்போது ஐக்கிய தேசியக் கட்சியும், ரணில் விக்ரமசிங்கவும் இனவாதம் கொண்டவர்கள் அல்ல என்றும் எனவே இவர்களை நம்பினால் நல்ல தீர்வு கிடைக்கும் என்றும் பொய்கூறி ஏமாற்றப்பார்க்கிறார்கள். அதாவது 1979ஆம் ஆண்டு அக்டோபர் மாதம்

“பயங்கரவாத தடைச் சட்டத்தை” (PTA) ஜே.ஆர். பிறப்பித்து தமிழ் மண்ணை இராணுவ ஆட்சி பிரதேசமாக பிரகடனப்படுத்திய போது அவரது அமைச்சரவையில் இளம் வயதைக் கொண்ட அமைச்சராக இருந்தவர் ரணில்.

**1979ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை இந்த பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் இராணுவ ஆட்சிக்கு உட்பட்ட பகுதியாகவே உள்ளது. இச்சட்டத்தின் படி எந்தொரு தமிழ் மகனும் இராணுவத்தினராலோ, போலீசாராலோ கொல்லப்பட்டால் அதற்கு மரண விசாரணை தேவையில்லை. கொல்லப்பட்டதற்கான காரணம் யாருக்கும் சொல்லவேண்டியதும் இல்லை. கொல்லப்பட்டவரின் உடலை உறவினரிடம் ஒப்படைக்காமல் படையினர் தாம் நினைத்தபடி என்னவும் செய்யலாம். அதற்கு மரணக்கிரிகைகளும் செய்யப்படுவதில்லை.**

அத்துடன் எவரையும் காரணம் கூறாமல் கைது செய்யலாம். விசாரணையின்றி எவ்வளவு காலமும் சிறையில் அடைக்கலாம். சிறையில் உள்ளவர் உறவினருடனோ தொடர்பின்றி, வைத்திருக்கப்படும் இடம் சொல்லப்படாமல் “Incommunicado” நிலையில் அடைத்து வைத்திருக்கலாம். இச்சட்டத்தின் கீழ் தமிழர்கள் சித்ரவதை முகாமிற்குரிய பரிசோதனை எலிகளாக பயன்படுத்தப்பட்டனர். இந்த சட்டம் தற்போது இந்த நல்லாட்சி அரசாங்கத்தின் கீழும் அமுலில் உள்ளது என்பது இந்த அரசாங்கத்தின் உண்மையான தோற்றத்தையும், தமிழ் மக்கள் தொடர்ந்து இராணுவ ஆட்சியின் கீழ் உள்ளார்கள் என்பதையுமே உணர்த்துகிறது.

தற்போது இந்த அரசாங்கம் ஐநா மனிதஉரிமைகள் ஆணையத்திடம் 18 மாத கால அவகாசம் கோரயிருப்பது உறுதிப்படுத்தப்பட்ட முதலாவது செய்தியாகும். இது காலம் கடத்தி பிரச்சனையை நீர்த்துப் போகச் செய்துவிட்டு உரிய தருணத்தில் இனவாதிகள் குழப்புகிறார்கள் என்று ஒரு சிங்களத் தரப்பைக் கைகாட்டிவிட்டு எல்லாவற்றையும் முதலை முழுசாக விழுங்குவது போல் விழுங்கி கபளீகரம் செய்யப் போகிறார்கள்.

மார்ச் மாதம் கூடவுள்ள ஐநா மனிதஉரிமைகள் ஆணைத்தின் முன் கால அவகாசத்திற்கு வாய்ப்பு கொடுக்காதிருப்பதற்குரிய பணியை தமிழகமும், இந்திய அரசும்தான் முன்னின்று செய்ய வேண்டும். அதாவது ஈழத்தமிழர்கள் மத்தியில் உள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை சுமந்திரன் என்ற ஐக்கிய தேசியக் கட்சிக்கார தமிழ் நபரை உள்ளே அனுப்பி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையே ஐதேகாவின் கிளையாக மாற்றுவதில் அரசாங்கம் வெற்றி பெற்றுள்ளது. நயத்தாலும், பயத்தாலும் மேற்படி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பலரையும் இப்படி இலகுவாக ஐதேகாவின் கிளையாக மாற்ற முடிந்துவிட்டது. இது ஒரு பெருந்துயரம். இந்த நிலையில் ஈழத் தமிழரின் தொப்புள் கொடி உறவினரான தமிழக மக்களும், ஜனநாயத்தின் பேரில் இந்திய அரசும் தமிழருக்கான நீதி கோரி, சர்வதேச நீதிவிசாரணை கோரி குரலெழுப்பி செயற்படுத்த வேண்டும்.

ஐநா மனிதஉரிமைகள் ஆணையம் வழங்கிய ஓர் ஆண்டிற்குப்பின் இன்னொரு ஆண்டுகால அவகாசமும் முடிவடைந்துவிட்டது. இனி மேலும் கால அவகாசம் வழங்கப்படக்கூடாது.

முள்ளிவாய்க்காலில் இனப்படுகொலை நடந்ததைப் பற்றி முதலில் 2009ஆம் ஆண்டு





கூறப்பட்டபோது, அங்கு இராணுவத்தால் ஒரு குடிமகன்கூட கொல்லப்படாத வகையில் "Zero Casualty" என்ற வரன்முறைக்கு ஏற்ப பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தம் வெற்றியில் முடிந்ததென அரசாங்கம் அறிவித்தது. சிங்கள ஊடகங்களும், அனைத்து சிங்கள கட்சிகளும், இராணுவமும், பௌத்த மத பீடங்களும், மற்றும் சிங்க்ள பௌத்த நிறுவனங்களும் கூறின.

**ஆனால் தமிழ் மக்கள் விடாப்படியாக புலம்பெயர்ந்த நாடுகளில் இனப்படுகொலை பற்றி பலமாக குரலெழுப்பினர். இப்பின்னணியில் ஐநா பொதுச் செயலாளர் பான்கீமூன் உண்மையைக் கண்டறிவதற்காக ஒரு நிபுணர் குழுவை நியமித்தார். அக்குழுவானது 40,000 பேருக்கு மேற்பட்ட குழந்தைகள், சிறுவர்கள், பெண்கள், கார்ப்பிணித்தாய்மார்கள் உள்ளிட்ட தமிழ்க் குடிமக்கள் கொல்லப்பட்ட தகவலை முதல் முறையாக அறிவித்தது. இது உலகை அதிர்ச்சிக்குள்ளாக்கியது.**

**அதேவேளை லண்டனில் இருந்து வெளியாகும் சுயாதீன தொலைக் காட்சியான சேனல் 4 தொடர்ச்சியாக ஒன்றன்பின் ஒன்றென களத்தில் நிகழ்ந்த படுகொலைகள் பற்றிய நேரடி ஆவணப்படங்களை ஆதாரபூர்வமாக வெளியிட்டது. இது பரந்துபட்ட உலக மக்கள் மத்தியில் பெருந்தாக்கத்தை ஏற்படுத்தியது. இனப்படுகொலையின் கொடூரம் அப்பட்டமாகத் தெரியவந்தது.**

கனரக ஆயுதங்கள் கொண்டும், பீரங்கிக் குண்டுகள் கொண்டும், விமானக் குண்டுகள் வீசியும், குழந்தைகள், சிறுவர்கள். பெண்கள், முதியோர், கர்ப்பிணித்தாய்மார் என பெருந்தொகையான தமிழ் மக்கள் அவலமாக படுகொலை செய்யப்பட்ட காட்சிகளையும், இளைஞர்களும், யுவதிகளும் சீருடை தரித்த இலங்கை இராணுவத்தினரால் சுட்டு வீழ்த்தப்படும் காட்சிகளையும், இராணுவத்தால் இளம் பெண்கள் பாலியல் பலாத்காரத்திற்கு உட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்படும் நேரடிக் காட்சிகளையும் சேனல் 4 ஆவணப் படங்கள் எடுத்துக் காட்டின. இவற்றில் விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் 12வயது சிறுவன் பாலச்சந்திரன் இராணுவத்தினரிடம் உயிருடன் இருக்கும் காட்சியையும், பின்பு அவர் ஒரு மீட்டர் தொலைவில் வைத்து துப்பாக்கியால் இராணுவத்தினர் சுட்டுக் கொன்றிருக்கும் காட்சியையும் வெளிக்கொணர்ந்தது.



இதே போல ஊடகவியலாளரும், நடிகையும், கலைஞருமான இசைப்பிரியா என்னும் இளம் பெண் சிங்கள இராணுவத்தால் உயிருடன் பிடிக்கப்பட்டு, அவர் உயிருடன் நிர்வாணம் ஆக்கப்பட்டு இராணுவத்தினரின் முன்னிலையில் தவிக்கும் காட்சியையும், இதன்பின்பு அவர் பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்தப்பட்டு துப்பாக்கியால் சுட்டு படுகொலை செய்யப்பட்டிருக்கும் காட்சியையும் சேனல்4 ஆவணப்படம் தெளிவாக காட்சிப்படுத்தியது. மேலும் பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்தப்பட்டு நிர்வாணமாக படுகொலை செய்யப்பட்டிருக்கும் இளம் பெண்களின் மறைவிடங்களில் இராணுத்தினர் இரும்பு சப்பாத்து கால்களால் மிதிக்கும் காட்சிகளையும் சேனல்4 ஆவணப்படத்தில் காணமுடிந்தது.

இதன் பின் உலகம் அதிகம் அதிர்ச்சியுற்றது. அவை பொய்யான ஆவணங்கள் என சிங்கள அரசு திரும்பத் திரும்பக் கூறியது. இதன்

பின் இவ்வாவணப்படங்களின் உண்மைத் தன்மையைக் கண்டறிய ஐநா சபை ஒரு தொழில்நுட்ப வல்லுனர் குழுவை நியமித்தது. அந்தக் குழு இந்த ஆவணப்படங்கள் அனைத்தும் போலியானவைகள் அல்ல, பொய்யானவைகள் அல்ல, உண்மையானவைகள் என அத்தாட்சிப்படுத்தியது.

அதேவேளை ஐநா சபையால் நியமிக்கப்பட்ட ஓர் உள்ளக ஆய்வுக்குழுவின் அறிக்கையின்படி (UN Internal Review Report) 70,000 மேற்பட்ட குடிமக்கள் வகைதொகையின்றி கொல்லப்பட்டுள்ளனர் என கூறியது. இவை அனைத்தும் உலகில் 21ஆம் நூற்றாண்டில் நிகழ்ந்த பலமான ஆதாரங்கள் கொண்ட இனப்படுகொலை என்பதை நிரூபிப்பதற்கு முற்றிலும் போதுமான ஆதாரங்களாகும். இதைக்கண்டு இலங்கை அரசு அஞ்சுகிறது.

இனப்படுகொலை நிரூபிக்கப்படும் போது தமிழ் மக்கள் பிரிந்து தனியரசு அமைப்பது ஐநாவின் விதியின்படியும், நடைமுறைகளின்படியும் சட்டபூர்வமானதாகி விடும். ஒருபுறம் இனப்படுகொலை அரசுக்குப் பொறுப்பான அன்றைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, பாதுகாப்பு செயலாளராக இருந்த அவரது சகோதரன் கோத்தபாய ராஜபக்ஷ, இறுதிகட்ட யுத்தத்தின் இறுதி 4 நாட்களும் பாதுகாப்பு அமைச்சராக இருந்த இன்றைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அன்றைய இராணுவ தலைமை தளபதி சரத் பொன்சேக, மற்றும் தளபதிகள் அனைவரும் இனப்படுகொலை குற்றச்சாட்டின் பேரில் சர்வதேச விதிகளின் படி ஆயுட்கால சிறைத்தண்டனைக்கு உரியவர்களாவர். இவர் அனைவரையும் பாதுகாப்பதில், தண்டனையில் இருந்து தப்ப வைப்பதில் இந்த அரசாங்கம் வெற்றி பெற்றுள்ளது. மேலும் இனப்படுகொலை நிரூபிக்கப்படும் இடத்து நாடு பிரியும் என்ற அபாயத்தில் இருந்தும் சிங்கள அரசை இந்த நல்லாட்சி அரசாங்கம் காப்பாற்றி தமிழ் மக்களுக்கு முழுநீள அநீதியிழைத்து வருகிறது.

120 கோடி மக்கள் தொகையைக் கொண்ட 2வது பெரிய ஜனத்தொகையைக் கொண்ட நாடாகவும், உலகில் முதலாவது பெரிய ஜனநாயக நாடாகவும் உள்ள இந்தியாவில் இந்தோ பாகிஸ்தான் யுத்தங்களில் வெற்றி பெற்றதன் பேரால் இதுவரை மூவருக்கு மட்டும் பீல்டு மார்ஷல் பட்டம் வழங்கப்பட்டிருக்கிறது என்பதையும் ஆனால் எந்தொரு அந்நியநாட்டுடனும் போரிடாத ஒரு சிறிய இலங்கைத் தீவின் இராணுவ தளபதிக்கு, அதுவும்; தமது சொந்த நாட்டின் குடிமக்களான தமிழ் மக்களை இனப்படுகொலை செய்தமைக்காக அவருக்கு பீல்டு மார்ஷல் பட்டம் வழங்கப்பட்டிருக்கிறது என்பதை அறிஞர்களும், மனிதஉரிமை ஆர்வலர்களும் சுட்டிக்காட்டியுள்ளனர். இதுதான் இந்த அரசாங்கத்தின் நீதி. அதாவது எந்த இராணுவத் தளபதி லட்சக்கணக்கில் தமிழ் மக்களை இனப்படுகொலை செய்தார் என்று தமிழ் மக்கள் சுட்டிக்காட்டினார்களோ அந்த இராணுவத் தளபதிக்கு இந்த அரசாங்கம் அதுவும் தமிழ் மக்களின் ஆதரவை பெற்று ஆட்சிக்கு வந்த இந்த அரசாங்கத்தால் பீல்டு மார்ஷல் பட்டம் வழங்கப்பட்டிருக்கிறது என்பதை பல்வேறு சமூக வலைத்தளங்களும், மனித உரிமையாளர்களும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மேற்படி ஆதாரபூர்வமாக பார்க்கும் போது இனப்படுகொலை நிகழ்ந்தமைக்கு நம்பகமான ஆதாரபூர்வமான ஆவணங்களும், இவற்றிற்கு அப்பால் உயிருள்ள சாட்சிகளும் ஒருபுறம் இருக்க, ஐநா சபையின் இரண்டு அறிக்கைகளும் குறைந்தது 70,000க்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டிருக்கின்றனர் என்பதை ஒப்புக்கொண்டிருக்க பெரும் இடப்பெயர்வு அவலமும், மனித பேரவலமும் நடந்துள்ளமையை ஆதாரபூர்மாக பல்வேறு தொண்டர் ஸ்தாபனங்களும் கூறியிருக்க, சேனல்4 ஆவணமானது உண்மையானது என ஐநா நிபுணர்குழு அத்தாட்சிப்படுத்தியிருக்கும் பின்னணியில் இனப்படுகொலைக்கு எதிரான விசாரணை முற்றிலும் ஆதாரபூர்வமாக இருக்கிறது. இது இன்று உலகில் காணப்படக்கூடிய எந்தொரு இனப்படுகொலை அல்லது மனிதஅவலம் அல்லது மனிதகுலத்திற்கு எதிரான குற்றம் என்று சொல்லத்தக்க குற்றச்சாட்டுகளுக்கும் இல்லாதளவு ஆதாரம் இலங்கையில் நிகழ்ந்த இனப்படுகொலைக்கு உண்டு. எனவே இதனை விசாரணைக்கு உட்படுத்துவது மிகவும் ஆபத்தானது என்று சிங்கள அரசுக்குத் தெரியும்.

சிங்கள அரசானது தந்திரத்தாலும், நயத்தாலும், பயத்தாலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஐக்கிய தேசியக் கட்சியின் கிளைபோல ஆக்கி அதனை சர்வதேச அரங்கில் தமக்கான ஆதரவாக காட்சிப்படுத்தி நீதிக்கும், நியாயத்திற்கும், தர்மத்திற்கும், உண்மைக்கும் எதிரான தமது அநியாயத்தை அரங்கேற்றிவருகின்றனர். இந்நிலையில் தமிழகமும், அண்டையில் உள்ள இந்தியாவும்தான் தமிழ் மக்களின் நீதிக்காக பாடுபட வேண்டும்.

இதன்படி 2 ஆண்டு அவகாசத்திற்கு மேல் இனி கால அவகாசம் வழங்கக்கூடாது. ஐநா விதியின் படி பார்க்கையில் இவ்வருட மார்ச் மாதத்திற்குள் எவ்வித விசாரணையும் இல்லையென்ற நிலையில் ஆணைக்குழு இதனை ஐநா பொதுச்சபையிடம் ஒப்படைக்கலாம். ஐநா பொதுச்சபையானது ஆணைக்குழுவின் ஒப்படைத்தலை ஒரு பரிந்துரையாகவே கருதுவது வழமை. அந்த வழமையின்படி ஐநா பொதுச்சபையானது ஐநா பாதுகாப்பு சபைக்கு நேரடியாக அனுப்பி அதற்காக மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கும் பொறுப்பை ஐநா பாதுகாப்பு பொதுச்சபையிடம் ஒப்படைக்கும். அப்போது ஐநா பொதுச்சபையானது சர்வதேச நீதிமன்றத்தின் முன்னோ, அன்றி அதற்கு நிகரான ஒரு சர்வதேச விசாரணையின் பொருட்டு ஏற்பாடு செய்வதற்காகவோ தீர்மானிக்க முடியும்.

சிலவேளை பாதுகாப்புச் சபையின் நிரந்தர உறுப்பு நாடுகளில் ஏதாவது ஒன்று ரத்து அதிகாரத்தை பிரயோகித்தால் மட்டுமே மேற்கொண்டு நடவடிக்கைகள் தடைப்படலாம். வெளிப்படையான ஆதாரங்கள் கொண்ட இந்த இனப்படுகொலைக்கு ஆதரவாக ஏதாவது ஒரு நாடு "வீட்டோ" என்பது சர்வதேச அரங்கில் அந்த நாட்டின் நன்மதிப்பை பெரிதும் பாதிக்கும். எனவே இன்றைய சூழலில் இதனை "வீட்டோ" பண்ணுவது எந்தொரு வல்லரசுக்கும் இலகுவான காரியமும் அல்ல.

அதேவேளை அப்படி வீட்டோ பண்ணப் பட்டாலுங்கூட பிரச்சினை முடிந்துவிட்ட ஒரு விவகாரமாக அன்றி சர்வதேச அரங்கிலும், உள்நாட்டு அரங்கிலும் தொடர்ந்தும் தீர்வு காணப்படாத ஒரு விவகாரமாகவே காணப்படும். அது எதிர்காலத்தில் தமிழ் மக்களுக்கு வேறு நல்ல வாய்ப்புக்களை கொடுக்கக்கூடியதாய் இருக்கும்.





**நல்லாட்சி அரசாங்கம் பதவிக்கு வந்ததும் தமிழ் அரசியல் கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கப்படும் என்றும், காணாமல் ஆக்கப்பட்டோர் கண்டுபிடிக்கப்படுவர், அதில் தொடர்புடையோர் நீதியின் முன் நிறுத்தி தண்டிக்கப்படுவர். இராணுவம் விலக்கிக் கொள்ளப்படும், இராணுவம் பொதுமக்களிடம் அபகரித்த நிலங்கள் விடுவிக்கப்படும், வடக்கு கிழக்கு இணைந்த சமஸ்டி அடிப்படையிலான தீர்வு காணப்படும், போர்க்குற்றவாளிகள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு தண்டிக்கப்படுவார்கள் என்ற வாக்குறுதிகள் பெரிதும் நிறைவேற்றப்படவில்லை.**

ஒரு தமிழ் அரசியல் கைதிகூட பொதுமன்னிப் பிற்கு உட்படுத்தப்படவில்லை. ஆனால் சரத் பொன்சேகவிற்கு பொதுமன்னிப்பு அளிக்கப்பட்டு பறிமுதல் செய்யப்பட்ட பதவிகள், பட்டங்கள் எல்லாம் திருப்பி கையளிக்கப்பட்டு மேலதிகமாக பீல்டு மார்ஷல் பட்டமும் வழங்கப்பட்டுள்ளது.

இராணுவத்தினரிடம் சரணடைந்து மற்றும் கைது செய்யப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட 21,000 பேரில் யாரும் உயிருடன் இருக்க வாய்ப்பில்லை என்று பிரதமர் ரணில் அறிவித்திருக்கிறாரே தவிர, அவர்கள் எப்படி காணாமல் ஆக்கப்பட்டார்கள், அவர்கள் எப்படி கொல்லப்பட்டார்கள் அதற்கு யார் பொறுப்பு என்ற எதனையும் அவர் கூறவில்லை.

வடக்குகிழக்கு இணைந்த சமஷ்டி முறை யிலான தீர்வுத் திட்டம் என்று கூறப் பட்ட விடயம் ஒருபோதும் நடை முறைப் படப் போவதில்லை. இதனை நடைமுறைப்படுத்து வதில்லை என்பதில் அனைத்து சிங்களக் கட்சிகளும் உறுதியான ஒரே கொள்கையைக் கொண்டுள்ளன.





**நூல்பெயர்:**
**ஏறுதழுவுதல் சல்லிக்கட்டு**
**தொகுப்பாசிரியர் பாவெல்பாரதி**

வெளியீடு: கருத்துபட்டறை, 2, முதல்தளம், நாகாவளாகம், 4வதுநிறுத்தம், திருநகர், மதுரை 625 006.

தொடர்புக்கு : 9444340724

சல்லிக்கட்டு இந்து, இஸ்லாம், கிறித்துவ சமயங்களுடன் கொண்டுள்ள உறவை ஆதாரங்களுடன் தருகிறார் முனைவர் ஆ. சிவக்கொழுந்து. தற்கால தமிழ் புனைகதைகளில் ஏறுதழுவுதல் பற்றிய தொகுப்பை பி.ஆர். ராஜமய்யர், கொத்தமங்கலம் சுப்பு, கு.ப.ரா, சி.சு. செல்லப்பா, அகிலன், வேல. இராமமூர்த்தி, சு. வெங்கடேசன் ஆகியோரின் புனைவிலக்கியங்களில் இருந்து ஏறுதழுவுதல், காளைபிடித்தல் என்ற பகுதிகளை விவரிக்கிறார். இவர் விட்ட கோணங்கியின் புனைவுப் பகுதி பிற்சேர்க்கையில் உள்ளது. சு. வேணுகோபாலின் "அழிக்க வந்த போலி காரூண்யம்" மிகவும் உணரச்சிகரமாக ஜீவ காருண்யம் என்ற பெயரில் காளை இனத்தை அழிப்பதை பேசுகிறது.




**நூல்பெயர்: சல்லிக்கட்டுக்குத் தடை தீர்ப்பும் தீர்வும் – ஒரு மீள்பார்வை**

நூலாசிரியர்: ப. பாலதண்டாயுதம்,

வெளியீடு: கருத்துபட்டறை, 2, முதல்தளம், நாகாவளாகம், 4வதுநிறுத்தம், திருநகர், மதுரை 625 006.

தொடர்புக்கு : 9444340724

தமிழரின் தொன்மையான அடையாளம், நவீன இந்தியாவின் சட்டத்தால் முடக்கப்படுகிறது. 'காட்டு மிராண்டி காலத்திய பழக்கம்', 'விலங்குகள் வதைப்படுகின்றன', போன்ற காரணங்களால் சல்லிக் கட்டு முடக்கப்படுகிறது. சல்லிக்கட்டை தடைச் செய்வதற்கு பல அமைப்புகள் காரணமா னாலும், தடை என்பது நீதிமன்றத்தின் 'ஆணையாக' அமை கிறது. நீதிமன்றத்தின் (உச்சநீதிமன்றத்தின்) ஆணையென ஆனப்பிறகு, அதன் அமலாக்கமும் கடுமையாகிறது. ஓராண்டு, ஈராண்டு என்று தடை தொடர, மூன்றாமாண்டிலும் நாம் முடக்கப்பட்டு விடுவோம் என்ற சூழலில் மாணவர்கள் / இளைஞர்கள் தலைமையேற்க, அரசுகள் அடிபணிந்தன, சல்லிக் கட்டு சட்டப் பாதுகாப்பு பெற்றது. ஆனால், இது ஒரு முடிந்து விட்ட போராட்டமல்ல, இனியும் நீதிமன்றத்தில் இது தொடரவிருக்கிறது.





திரு.பரணி கிருஸ்ணரஜனி
(பின்கற்கை ஆய்வாளர் பிரான்சு)

# ஐ.நா.வை கையாளல்

## தமிழகம் சார்ந்த ஒரு நோக்கு

'புலிகளை முற்றாக அழித்துவிட்டோம். பயங்கரவாதத்தை ஒழித்துவிட்டோம்' என்று தமிழர்களின் பிணங்களின் மேல் நின்று இன அழிப்பு அரசு 2009 மே 19 அன்று அறிவித்தபோது சக தமிழர்களில் ஒருவனாக நான் பேதலித்து விறைத்துப்போய் நின்ற போது Peace and war conflicts கற்கும் ஜப்பான் தோழி ஒருவர் குறிப்பிட்டார்.



‘சிறீலங்கா அரசின் வெற்றுக் கூச்சல் அது. எந்த ஒடுக்கப்பட்ட இனத்திற்கும் போராடும் இனத்திற்கும் இல்லாத பலம் உங்களுக்கு இருக்கிறது. ஏனென்றால் ஒரு சிறிய நீர்ப்பரப்பு பிரித்து வைத்திருக்கும் கூப்பிடு தூரத்தில் ஒரு தனித்த மாநிலமாக 7 கோடி தமிழர்களை கொண்ட ஒரு நிலப்பரப்பு இருக்கும்வரை உங்கள் போராட்டத்தை யாரும் தோற்கடிக்க முடியாது. இந்த புவியியல் அமைவு பிராந்திய பூகோள நலன்களை உங்களுக்கு என்றாவது ஒரு நாள் சார்பாக திருப்பும் வல்லமை கொண்டது. சனத்தொகையில் ஈழம் தமிழகம் சேர்ந்த நிலப்பரப்பை ஒப்பிடும்பொழுது சிங்களவர்கள் எந்த பெறுமதியும் அற்றவர்கள் ஆவார்கள். இது பிராந்திய அரசியலில் பலம் சார்ந்த முக்கியமான கூறு. என்றாவது ஒரு நாள் தமிழகம் உங்களது விடுதலையை சாத்தியப்படுத்தும் அரசியலை எழுதும். அதனால் கவலை கொள்ளாதீர்கள்’ என்றார்



ஈழத் தமிழர்ளாகிய நாம் நம்பிக்கை கொள்ளும் ஒரு அம்சம் இது. 2013 மாணவர் எழுச்சி இந்த நம்பிக்கையை மேலும் விதைத்தது. விளைவாக தமிழக சட்டசபையில் தனித்தமிழீழ தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஆனால் தொடர்ந்து தமிழகம் தனது சக்தியை உணர்ந்து செயற்பட்டதா என்ற கேள்விக்கு நம்பிக்கை தரும் பதில் இல்லை. இந்த பழியை முழுமையாக தமிழககத்தின் மீது திணித்து விட முடியாது. ஈழத்தமிழர்களாகிய நாம் அதை சரிவர பயன்படுத்தவில்லை என்ற உண்மையையும் சேர்த்து புரிந்து கொள்ள வேண்டும்.

தமிழீழத்தின் விடுதலை என்பது தமிழகத்தில் தங்கியிருக்கும் ஒரு அரசியல் இராஜதந்திர அம்சம்.

மே 18க்கு பிறகு இதில் மேலும் கணிசமான இடம் தமிழகத்திற்கு போய் விட்டது மட்டுமல்ல, மீண்டும் எமது விடுதலைப் பேராட்டத்தின் பின்தளமாகவும் தமிழகம் மாறியிருக்கிறது.

எனவே தமிழக அளவில் போராட்ட அரசியல் இராஜதந்திர வழிமுறைகள் மாற்றப்பட வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக இன அழிப்புக்கு நீதி வேண்டி நிற்கும் இனமாக பிராந்திய பூகோள அரசியலை தமிழகத்தை மையமாக வைத்து நாம் ஒரு வரைபடத்தை வரைய தவறிவிட்டோம்.

குறிப்பாக ஐநா தொடர்பான விடயங்கள் அல்லது அதை கையாளல் என்பதில் நாம் ஒரு மோசமான தேக்கத்தைச் சந்தித்துவிட்டோம் என்பது இன்றளவும் மறுக்க முடியாத உண்மை.

2009 நடந்து முடிந்த இனஅழிப்பிற்கு பிறகான நமது தோல்வி மனப்பான்மையின் வெளிப்பாடான ஒரு தெளிவற்ற குழப்பகரமான எதையும் சந்தேகக் கண்கொண்டு பார்க்கும் ஒரு மனநிலையின் வெளிப்பாடாக அமைந்த எமது மதிப்பீடுகளின் விளைவு இது.

ஆனாலும் 2013 இல் மாணவர்கள் ஒரு புரட்சியினூடாக அந்த மதிப்பீட்டை கேள்விக்குள்ளாக்கி ஒரு பாதையை திறந்து வைத்தார்கள். ஆனால் தமிழக அரசியல்வாதிகளும், அமைப்புகளும் அதை அதன் அடுத்த கட்டத்தை நோக்கி நகர்த்தத் தவறிவிட்டார்கள்.

எனவே இது சரி செய்யப்பட வேண்டும்.

**'ஐநாவை கையாளல்' என்பதன் கன பரிமாணத்தை அதன் உள்ளார்ந்த அர்த்தத்தில் நாம் சரியாகப் புரிந்து கொள்வதனூடாகவே நாம் இந்த தேக்கத்தை சரி செய்ய முடியும்.**





எனவே கொஞ்சம் பின்னோக்கிப் போய் இதை புரிந்து கொள்ள முற்படுவோம்.

கடந்த ஏழு வருடங்களாக தமிழின அழிப்பின் முதன்மை குற்றவாளிகளாக ஐநாவை குறிப்பிட்டுப் பேசியும் எழுதியும் அதை ஒரு செயற்பொறிமுறையாக மாற்றவும் முயன்றும் வரும் ஒரு தரப்பின் பிரதிநிதியாக எனது கருத்துக்களை இங்கு பதிவு செய்யலாம் என்று எண்ணுகிறேன்.


ஈழத்தில் நடத்தப்பட்டது உண்மையில் மனித குலத்திற்கு எதிரான அமைதிக்கெதிரான குற்றம். இதுவே இன அழிப்பாக மாறியது. இது ஐநாவின் பூரண அறிவுடன் நடத்தப்பட்டது.

எனவே ஐநா வை குற்றவாளியாக நாம் அடையாளப்படுத்துவது மட்டுமல்ல ஐநாவிற்கு சமாந்தரமாக ஒரு அமைப்பு உருவாக்கப்பட வேண்டியதன் தேவையையும் வலியுறுத்த வேண்டிய கடப்பாட்டில் நாம் உள்ளோம்.

ஏனென்றால் பொறுப்பற்ற விதத்தில் மனித விழுமியங்களுக்கு முரணாக மேற்குலக நிகழ்ச்சி நிரலுக்குள் இயங்கிய ஒரு அமைப்பின் கட்டமைப்பு ரீதியான தோல்விக்குள் சிக்கி அழிவுற்ற ஒரு இனமாக மேற்படி பொறிமுறையை உருவாக்குவதுதான் சரியானதும் நீதியை நோக்கி நகர்வதுமாகும்.

ஐநா தமிழின அழிப்பில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கியிருக்கிறது என்று தெரிந்திருந்தும் தமிழ் அமைப்புகளோ தமிழ் அரசியல் தலைவர்களோ அதை கண்டிக்கவோ அதை அனைத்துலக மட்டத்தில் ஒரு விவாதமாகவோ கூட மாற்ற முன்வரவில்லை. இதன் விளைவுதான் ஏழு வருடங்களைக் கடந்தும் எமக்கான நீதி மறுக்கப்பட்டு வருகின்றதென்பதை இங்கு அழுத்தமாக பதிவு செய்ய விரும்புகிறேன்.

ஐநா விற்கு எதிரான சட்டரீதியான போராட்டங்களை முன்னெடுக்கும் அதே நேரத்தில் ஐநாவிற்கு எதிராக ஒருங்கிணைக்கப்பட்ட மக்கள் போராட்டங்களையும் விரிவு படுத்தியிருக்க வேண்டும். ஆனால் எதுவுமே நடைபெறவில்லை.





பேராசிரியர் பிரான்சிஸ் பொய்ல், கரன் பாக்கர், ரம்சி கிளார்க் என்று பல உலகறிந்த சட்ட அறிஞர்கள் தமிழ் அமைப்புகளுடன் நெருங்கிய தொடர்பிலேயே இருக்கிறார்கள். எனவே அமைப்புகள் இந்த பலத்தையும் அறிவையும் பயன்படுத்தியிருக்க வேண்டும். ஆனால் குழு கும்பல் மோதல்களுக்குள் நமது அமைப்புகள் சுருங்கிப்போன அவலம்தான் நடந்து முடிந்திருக்கிறது.

நடந்து முடிந்த விடயங்களை பேசுவதோ பரஸ்பரம் குற்றங்களை வீசுவதோ ஆரோக்கியமான போக்கு இல்லை. ஆனாலும் நாம் ஏன் தேங்கிப் போய் இருக்கிறோம் என்பதை கண்டறியவும் அதிலிருந்து மீளும் ஒரு பொறிமுறையை உருவாக்கவும் சிலவற்றை இங்கு பேச வேண்டியுள்ளது.


# ஐ.நா.வை கையாளுதல்

**இங்கு இரண்டு விடயங்களை நாம் முதன்மையாக பார்க்க வேண்டும்.**

**01. ஐநா எங்களை எப்படி அணுகியது?**

**02. ஐநா வை நாம் எப்படி அணுகினோம்?**





# ஐநா உண்மையிலேயே குற்றவாளிதானா?

இந்தக் குற்றச்சாட்டை முதன் முறையாக நாங்கள் முன்வைக்கவில்லை. இக் குற்றச்சாட்டு 2009 இனஅழிப்பு நேரத்தில் உலெகெங்கிலுமுள்ள பல மனிதநேய ஆர்வலர்கள், மனித உரிமையாளர்கள் உட்பட பல மேற்குலக ஊடகங்களினாலும் பரவலாக முன்வைக்கபட்டது.

அவர்கள் தொடர்ந்தும் ஐக்கிய நாடுகள் சபையின் மீதும் அதன் செயலாளர் நாயகத்தின் மீதும் தமது கண்டனத்தை இன்றுவரை பதிவு செய்து வருகிறார்கள். குறிப்பாக “இன்னர்சிற்றிபிரஸ்’ இதை ஒரு இயக்கமாகவே முன்னெடுத்து வருவது குறிப்பிடத்தக்கது.

வன்னிப்படுகொலைகள் திடீரென்று நடந்த நிகழ்வுகள் அல்ல. சர்வதேச ஊடகங்கள், மனித உரிமை அமைப்புகள், தொண்டு நிறுவனங்கள் என்பவற்றை முற்றாக வெளியேற்றிவிட்டு வெளி உலகத்துடனான தொடர்புகளை முற்றாகத் துண்டித்துவிட்டு பொருளாதார மருத்துவ தடைகளை போட்டுவிட்டு குறிப்பான ஆறு மாத காலப்பகுதிக்குள் கிட்டத்தட்ட ஒன்றரை இலட்சம் உயிர்களை காவு கொண்டு ஒரு இனப்படுகொலையை நடத்தி முடித்திருக்கிறது சிறீலங்கா பேரினவாத அரசு.

இங்கு குறிப்பான விடயம் என்னவெனில் சிறீலங்கா அரசின் படிப்படியான மேற்படி நடவடிக்கைகளை அவதானித்து ஒரு இனப்படுகொலை நிகழப்போகிறது என்பது பல தரப்பாலும் உணரப்பட்டு உடனடியாக போர்நிறுத்தம் செய்யப்பட வேண்டும் என்று அதற்கு சிறீலங்கா அரசை இணங்கச்செய்ய வேண்டும் என்ற வேண்டுகோள் ஐக்கிய நாடுகள் சபையிடம் பல தரப்பாலும் முன்வைக்கப்பட்டது.

நாம் வீதியில் மாதக்கணக்காகக் கிடந்ததே அதற்கு சாட்சி. ஆனால் காத்திரமான எந்த நடவடிக்கையையும் ஐநா மேற்கொள்ளவில்லை என்பது மட்டுமல்ல இன்றுவரை இவ் இனப்படுகொலை தொடர்பாக ஒரு மௌனத்தையே கடைப்பிடித்து வருகிறது. **இது ஐநாவின் சாசனத்திற்கும் தோற்றத்திற்குமே ஒருமுரணான விடயம்.**

உலகப் போர்களின் விளைவாக நிகழ்ந்த அனர்த்தங்களினாலும் மனிதப் பேரழிவுகளினாலும் அதிர்ச்சியுற்ற அரசுகள் அமைப்புகள் ஒன்று சேர்ந்து இனி இப்படியான மனிதப்பேரழிவுகள் நடைபெறக்கூடாது

இதை 2009க்கு முன்பும் பின்பும் என்று நாம் பிரித்துப் பார்க்க வேண்டும்.

உலக வல்லரசுகளின் கைப்பாவை அமைப்பான ஐநா ஒரு போராடும் இனத்தை எப்படி கையாளும் என்பதில் போதிய அறிவிருந்தும் நாம் அந்த கோணத்தில் ஐநாவை அணுகவில்லை. அதீத நம்பிக்கைகளை வளர்த்து விட்டோம் அல்லது அதை விட வேறு தெரிவில்லாத நிலை என்று கூட இதை வரையறுத்துக் கொள்ளலாம்.

பிரச்சினை இங்கு அதுவல்ல. 2009க்கு பிறகு நீதி வேண்டி நிற்கும் ஒரு தரப்பாக நாம் எப்படி ஐநா வை அணுகினோம் என்பதுதான் இங்கு பிரச்சினையே!

ஐநாவை ஒரு குற்ற தரப்பாக நாம் அணுகத் தவறிவிட்டோம். ஐநாவை குற்றவாளியாக்குவ தனூடாகத்தான் நாம் அடுத்த கட்டத்தை நோக்கி நகர முடியும் என்ற கள யதார்த்தத்தை நிலவரத்தை நாம் மறந்து விட்டோம் அல்லது அதன் சாத்தியம் குறித்த அச்சத்தால் அதை விரும்பியே மறக்க முயன்றோம் என்று கூட இந்த நிலையை வர்ணிக்கலாம்.





என்ற கொள்கையுடன் முன்னெச்சரிக்கையாக தோற்றுவித்த ஒரு உலக பொது அமைப்பு. இந்த நவீன யுகத்தில் ஒரு இனம் தனது சொந்த நிலத்தில் வைத்து அழித்தொழிக்கப்பட்டதை அனுமதித்ததும் அதனைத் தடுக்காததும் அந்த அமைப்பின் தோற்றத்தையும் இருப்பையும் கேள்விக்குள்ளாக்குகிறது.

ஐ.நா சாசனத்தின்படி நாடுகள் என்ற உள் வெளி எல்லைகளுக்கு அப்பால் ஒரு இனத்தின் மொழி, அடையாளம், பண்பாடு, இறைமை என்பவை பாதுகாக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்படுகிறது. முள்ளிவாய்க்காலில் இனம், மொழி, பண்பாடு, நிலம் என்ற அடையாளங்களின் மீதான அழித்தொழிப்பே மனித உயிர்களாகக் காவு கொள்ளப்பட்டது. இது இந்த பூமிப்பந்தில் வாழும் ஒரு இனம் தொடர்பான ஐநாவின் சாசனத்திற்கு முரணானது.

இந்த அடிப்படையிலேயே “இன்னர்சிற்றிபிரஸ்” உட்பட பல ஊடகங்கள், மனிதநேய ஆர்வலர்கள், மனித உரிமையாளர்கள் பான்கிமூன் மீது குற்றத்தை சுமத்துகிறார்கள்.

**சர்வதேச கூட்டு அரச பயங்கரவாதத்தால் சிறீலங்கா மட்டுமல்ல அழித்தொழிக்கப்பட்ட ஒரு இனத்தின் இரத்த சாட்சியங்கள் நாங்கள். ஐநாவின் சாசனத்திற்கெதிராக நாம் அழித்தொழிக்கப்பட்டிருக்கிறோம். இதை நாம் உலகத்திற்கு சுட்டிக்காட்ட வேண்டும்.**

தாயகம், தேசியம், சுயநிர்ணயம் என்ற எமது அரசியல் அவாவை வெல்வதன் பின்னணியில் அதன் அடிப்படையாக இனம், மொழி, பண்பாடு, நிலம் என்ற அடையாளங்கள் இருக்கின்றன. மீண்டும் மீண்டும் பேசப்படுகிற ஒரு விடயமாக இது இருக்கிறது. இந்த அடையாள அழிப்பே முள்ளிவாய்க்காலின் பின்னணயில் இருந்தது. எனவே எமக்கு பதில் சொல்லவேண்டியவர் பான்கிமூன்தான். அவர் தற்போது தனது பதவி காலத்தை முடித்துவிட்டார். ஆனாலும்; அவர் குற்றவாளி என்பதில் எனக்கு தெளிவு வேண்டும்.

நாம் பான்கிமூனை குற்றவாளியாக்கி போராடுவதனூடாக எமது போராட்டம் பன்மைப்படுத்தபடும். உலக கவனம் அதில் குவியும். விளைவாக இனப்படுகொலை குறித்த விசாரணைகள் துரிதப்படுத்தப்படும். முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையின் நேரிடையான சூத்திரதாரிகளான சிங்கள இராணுவ, அரச தலைவர்கள் சர்வதேச நீதிமன்றத்திற்கு கொண்டு வரப்படும் வாய்ப்புகள் கிடைக்கும். ஆனால் நாம் அந்த வாய்ப்புகளை தவற விட்டு விட்டோம்.

பெரும் போர் நடந்து முடிந்த தேசங்களில் ஐநாவின் அமைதிப்படை சென்று பணியாற்றுவதும் ஏதிலிகள் முகாம்களை ஐநா பொறுப்பெடுப்பதும் வழமை. ஆனால் சிறீலங்காவில் என்ன நடக்கிறது?

நாம் ஐநாவிற்கு எதிராக ஒரு வழக்கை பதிவு செய்யுமாறு தொடர்ந்து கேட்டு வந்தோம். ஐநா மீது வழக்கு தொடர முடியாது என்பதும் அதற்கு சட்ட விலக்கு இருக்கிறது என்பதும் எமக்கு தெரியாத தல்ல. ஆனாலும்; இந்த முயற்சி எமக்கு சில இராஜதந்திர வெற்றிகளை பெற்று தரும் என்ற கோணத்தில் சிந்திக்க நாம் வலியுறுத்தினோம்.

அதாவது ஒரு இனம் ஏன் ஐநா வை குற்றவாளி என்கிறது? அதன் மீது வழக்கு தொடுக்க முனைகிறது? என்ற கோணத்தில் ஓர் விவாதத்தை உலக அளவில் எழுப்பி தமிழின அழிப்பிற்கான நீதியை நோக்கி நகரும் ஒரு முயற்சியே தவிர இந்த வழக்கு ஏற்றுக்கொள்ள பட மாட்டாது என்பது மட்டமல்ல அது நின்று பிடிக்காது என்பதும் எமக்கு தெரியும்.





*நாம் ஐநா எமக்கு அநீதி இழைத்து விட்டது என்பதை கண்டடைந்த உடனேயே 2009 யூன் மாதமளவிலேயே ஐநா மீது குறிப்பாக பான்கிமூன் மீது ஒரு வழக்கை பதிவு செய்ய முனைந்திருக்க வேண்டும். குழு கும்பல் மோதல்களும், தோல்வி தந்த உளவியல் பாதிப்புகளும், அரசியல் இராஜதந்திர விவேகமற்ற செயற்பாடுகளும் இதைத் தடுத்து மடைமாற்றி விட்டன.*

*அப்போதே ஒரு வழக்கை பதிவு செய்திருந்தால் எமது நீதிக்கான படிமுறைகள் வேறு ஒரு பரிமாணத்தை எட்டியிருக்கும். இப்படி தேங்கிப்போயிருக்க மாட்டோம்.*

**இலங்கையில் ஐநாவின் செயற்பாடுகள் கட்டமைப்பு ரீதியாகத் தோல்வியுற்றன என்ற வெளிப்படையான அறிவிப்புடன் இறுதி அறிக்கையும் ஐநாவிற்கான பரிந்துரைகளும் எப்போதோ வெளிவந்து விட்டன. அதற்கு முன்பாக ஐநா செயலர் பான்கிமூன் ஐநா வின் பிரதி பொது செயலாளர் ஜேன் எலிசன் கூட வெவ்வேறு தருணங்களில் இந்த தோல்வியை பகிரங்கமாக ஒப்புக் கொண்டிருந்தார்கள்.**



# இந்த ஒப்புதல் வாக்கு மூலத்தை வைத்து நாம் என்னதான் செய்வது?

*வரலாற்றில் முதல் தடவையாக கெயிட்டி மக்கள் ஐநா மீது 2 வருடங்களுக்கு முன்பு நியூயோர்க் நீதிமன்றில் ஒரு வழக்கை பதிவு செய்திருக்கிறார்கள். இவ்வாறான நீதிமன்ற வழக்கு நடவடிக்கைகளிலிருந்து சட்டப்படியான விலக்கு பெறும் தகுதி இருப்பதாக ஐநா கூறுகிறது.*

*இந்த வழக்கின் தீர்ப்பு பாதகமாக அமைந்தாலும் அது சர்வதேச சட்டத்தின் மிக முக்கியமான மைல் கல்லாகவே இன்றளவும் பார்க்கப்படுகிறது உண்மையில் தமிழர்கள் செய்திருக்க வேண்டிய சாதனையை கெயிட்டி மக்கள் தட்டி சென்று விட்டார்கள்.*

*எமது வழக்கும் இத்தகையதுதான். வழக்கு முடிவு முக்கியமல்ல. எமது இன அழிப்பில் ஐநா உடந்தையாக இருந்தது என்ற அனைத்துலக மட்டத்திலான எமது குற்றச்சாட்டுத்தான் முக்கியமானது. வழக்கில் தோல்வியுற்றாலும் இந்த வரலாற்று குற்றச்சாட்டு ஐநாவையும் மேற்குலகையும் எமக்கான நீதியை வழங்க உந்தும். தொடர்ந்து எம்மை இம்சிக்கும் அல்லது நீதியை மடைமாற்றும் வேலைகளை நாம் தடுக்க உதவும்.*

*ஏனெனில் ஒன்றல்ல இரண்டல்ல ஐநாவிற்கு எதிரான ஆயிரக்கணக்கான ஆதாரங்கள் எம்மிடையே குவிந்துள்ளன.*

**வரலாற்றில் முதல் தடவையாக ஒரு இன அழிப்புக்கு உடந்தையாக ஐநா இருந்தது என்பதை நிறுவி ஐநா செயலாளர் நாயகத்தை பதவிநீக்கம் செய்து தமது நீதியை பெற்றார்கள் என்ற வரலாற்றை எம்மால் படைத்திருக்க முடியும். ஆனால் இன்று ஏதோவெல்லாம் நடந்து கொண்டிருக்கிறது. வெறும் பார்வையாளர்கள் போல் நாம் பார்த்து கொண்டிருக்கிறோம்.**

*2009 இல்தான் ஏமாற்றப்பட்டோம். ஆனால் தொடர்ந்தும் நமது அணுகுமுறைத் தவறினால் உள்ளக அளவில் ஐநாவிற்குள்: பல சதிகள்*



அரங்கேற நாமே வழி கோலிவிட்டோம்.

அதாவது இலங்கையில் தமிழர்களுக்கெதிராக மேற்கொள்ளப்பட்டது இன அழிப்பும் அமைதிக்கெதிரான குற்றமுமாகும். 2002இன் சமாதான நடவடிக்கைகள் ஊடாக வேறுபட்ட காரணங்களுக்காகப் பேச்சுவார்த்தை அடிப்படையிலான தீர்வை அடைய முயன்று கொண்டிருந்த இலங்கைத் தீவின் மக்கள் அனைவருக்கும் எதிராக நிகழ்த்தப்பட்ட அமைதிக்கெதிரான குற்றமாகவும் அது இருக்கிறது.

இலங்கையின் வன் கொடுமைகளை வரலாற்று நோக்கில் உண்மையாகப் பிரதிபலிக்கும் வகையில் சர்வதேச மனிதநேயச் சட்டம் அமல்படுத்தப்படவில்லை என்றே பல வல்லுனர்கள் குறிப்பிடுகிறார்கள்.

**ஐநா வின் பிரதி பொது செயலாளர் ஜேன் எலிசன் இலங்கை இறுதி யுத்தத்தின் போது ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு சபை மனித உரிமைகள் ஆணைக்குழு போன்ற அனைத்து உள்ளக அமைப்புகளும் தோல்வி கண்டுள்ளதாக கூறியுள்ளார். இதுவே போதும் நாம் ஐநாவை குற்றவாளி என்று அறிவிக்க..**

ஆனால் பிற்பாடு இதையும் தாண்டி பான்கிமூன் சில உள்ளக சதிகளில் ஈடுபட்டது ஆதாரங்களுடன் பல தரப்பாலும் முன்வைக்கப்பட்டுள்ளன. நம்பியார் தொடக்கம் சார்ள்ஸ் பெற்றி வரை பான்கிமூன் ஐநா விதிகளை மீறியிருக்கிறார். இதை நாம் சொல்லவில்லை இன்னர்சிற்றி பிரெஸ் விரிவாகவே பதிவு செய்திருக்கிறது.

முதலில் நம்பியார். வெள்ளைக்கொடி விவகாரம் தொடக்கம் பல சதிகள் செய்தவர் இவர்தான்.

அடுத்து தமிழின அழிப்பை நடத்தி முடிக்க ஏதுவாக பான் கீ மூன் இந்திய கைக்கூலி நம்பியாரை களம் இறக்கியது போல் நடந்து முடிந்த இன அழிப்பை மறைக்க நோர்வே கைக்கூலி சார்ள்ஸ் பெற்றியை ஆயிரக்கணக்கான பொதுமக்கள் கொல்லப்பட்ட போரில் ஐ.நாவின் செயற்பாடுகள் குறித்து ஆராய எகிப்தைச் சேர்ந்த தொராயா ஒபெய்ட் என்ற அதிகாரி நியமனத்திற்கு பதிலாக நியமித்தவர் பான் கீ மூன்.

இவர் 4 மாதத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய அறிக்கையை 9 மாதங்கள் கடந்தும் சமர்ப்பிக்காமல் மௌனம் சாதித்து வருவதாக இன்னர்சிற்றி பிரஸ் குற்றம் சுமத்திய பிற்பாடுதான் பல இழுத்தடிப்புகளின் பின் அது வெளிவந்தது. இந்த சார்ள்ஸ் பெற்றிதான் விதிகளுக்கு முரணாக ஐநா நிபுணர் குழு அறிக்கையை பார்வையிட்டவர்.

அடுத்து இலங்கையில் இறுதி யுத்தத்தின் போது நாற்பதாயிரத்துக்கும் அதிகமான பொது மக்கள் கொல்லப்பட்டனர் எனவும் அதற்கான காணொளி ஆதாரங்கள் உள்ளதாகவும் ஐக்கிய நாடுகள் சபையின் விசேட பிரதிநிதி கிறிஸ்டொப் ஹென்ஸ் ஒரு பக்கம் தெரிவித்த பின்பும் எந்தவிதமான காத்திரமான நடவடிக்கைக்கும் பான் கீ மூன் உத்தரவிடவில்லை.

மாறாக இன அழிப்பு அரசின் இராணுவ அதிகாரிகள் ஐநா பதவிகளையும் தூதரக பதவிகளையும் அலங்கரித்தார்கள். வெள்ளைக்கொடி விவகாரத்தில் சம்பந்தப்பட்ட பாலித கோகன்ன தொடக்கம் இசைப்பிரியாவை பாலியல் வல்லுறவுக்குட்படுத்தி கொலைசெய்த சவேந்திர சில்வா வரை இந்த பட்டியல் நீளமானது.

அடுத்து வன்னிப் போரில் கொல்லப்பட்ட தமிழர்களின் எண்ணிக்கை ஐநா நிபுணர் குழு அறிக்கையின்படி

40,000

அந்த அறிக்கையை தயார் செய்த மூவர் குழுவில் ஒருவரான ஜஸ்மின் சூக்கா அண்மையில் ஊடகவியலாளர் பிரான்சேஸ் கரிசனிடம் தனிப்பட்ட முறையில் சொல்லிய எண்ணிக்கை

75,000





**ஆனால் அவர் ஏன் அதை நிபுணர் குழு அறிக்கையில் பதிவு செய்யவில்லை என்பதற்கு இன்று வரை பதிலில்லை. பாருங்கள் 35000 பேரை ஐநா தெரிந்தே விழுங்கிவிட்டது. ஆனால் வண பிதா ராஜப்பு ஜோசப்பு அடிகளார் போன்றவர்கள் சொல்லும் உண்மையான எண்ணிக்கை**

# 1,46,679

இப்படி எண்ணற்ற திருகுதாளங்கள் தமிழினத்திற்கு எதிராக ஐநாவிற்குள்ளேயே நடந்தது இன்னும் நடந்து கொண்டிருக்கின்றன.

இதன் பின்பும் ஐநா வின் நிகழ்ச்சி நிரலின் பின் எப்படி நாம் இழுபட முடியும்? ஐநா வை இக்கட்டில்தள்ளி அதை நாம் வளைப்பதனூடாகவே நாம் ஒரு நீதிக்கான பாதையை தெரிவு செய்யலாமே ஒழிய எந்த நிபந்தனையுமின்றி ஐநாவின் பின் இழுபடுவதனூடாக எதையும் சாதிக்க முடியாது.

இவ்வளவு விமர்சனம் இருந்த போதிலும் ஐநாவுடன் உடன்படும் புள்ளிகளையும் நாம் சரியாக பயன்படுத்தவில்லை என்பதையும் இந்த இடத்தில் குறிப்பிட்டேயாக வேண்டும்.

தமிழின அழிப்பில் ஐ.நா ஒரு பங்காளி என்ற பொழுதும் தமிழ்த்தேச விடுதலைக்கான அங்கீகாரத்தில் ஐ.நா வின் இடம் மறுக்க முடியாத ஒரு பாத்திரமாகிறது. புலிகளின் மே 18 செய்தி என்பதே ஐ.நா வை சுற்றி வைக்கப்பட்ட வரையப்பட்ட பொறி(முறை)கள்தான். எனவே நாம் வளைத்தும், சுற்றியும் ஊடறுத்தும் ஓட வேண்டிய பாதை ஐ.நாவை மையமாகக் கொண்டது தான் என்பது வெளிப்படை.

ஐ.நா வுடன் உடன்பட்டும், உடன்படாமலும் அதாவது ஐ.நா வின் இனஅழிப்பு பங்களிப்பை அம்பலப்படுத்துவது தொடக்கம், இனஅழிப்பில் ஐ.நா வை குற்றவாளியாக்குவது வரை எதிர்த்தும் ஐ.நா வின் தலையீட்டை மிக தந்திரமாக எதிர்கொண்டு, அதனோடு ஒத்தோடுவது வரை இதன் உள்ளடக்கத்தை பலவாறாக விபரிக்கலாம்.

ஆனால் மே 18 க்கு பிறகு அரசியல் செய்ய புகுந்த யாருமே இதைக் கவனத்தில் கொள்ளவில்லை அல்லது இந்த உண்மையின் ஒரு பகுதியை மட்டும் நம்ப விரும்பினார்கள். அல்லது தாம் தெரிந்தே உருவாக்கிய தம்மை இயக்கும் எதிரிகளின் நிகழ்ச்சி நிரலின் ஊடாக இந்த உண்மையை மழுங்கடிக்க முனைந்தார்கள்.

இத்தகைய புரிதல் உள்ள நாம் தான் ஐ.நா வுடன் ஒத்தோட வேண்டிய புள்ளிகளையும் அடையாளம் கண்டு அதனோடு இசைந்து பயணிக்க வேண்டியிருக்கிறது. ஆனால் நமது அமைப்புக்கள் அதைக்கூட பயன்படுத்திக்கொண்டார்களா என்றால் அதுதான் இல்லை.

இனஅழிப்புக்கு துணைநின்ற மேற்குலகம் குறிப்பாக அமெரிக்கா கொண்டு வரும் தீர்மானத்தை தெளிவான அரசியல் புரிதல் உள்ள யாராலுமே ஏற்க முடியாது. இனஅழிப்பை படிப்படியாக போர்க்குற்றமாகச் சுருக்கி அதையும் காலப் போக்கில் மனித உரிமை மீறல் பிரச்சினையாக்கி முன்மொழியப்படும் தீர்மானத்தை இனஅழிப்பை எதிர்கொண்ட தொடர்ந்து எதிர்கொண்டுள்ள ஒரு இனம் எப்படி ஏற்க முடியும்?





மனித உரிமைகள் சபையில் அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானத்தில்தான் 'போர்க்கால நெறி பிறழ்வுகள்' என்று இனப்படுகொலையை சுருக்கியிருந்தார்கள். ஆனால் நடந்தது உண்மையில் மனித குலத்திற்கு எதிரான அமைதிக்கெதிரான குற்றம். இதன் விளைவாக நடந்தது இன அழிப்பு. இங்கு எல்லோருமே குற்றவாளிகள்தான

எனவே தான் பல தளங்களில் இந்த தீர்மானத்திற்கு எதிரான போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

ஆனாலும் நமக்கு இதை விடுத்தால் வேறு தெரிவில்லை என்ற தெளிவான புரிதலுடன் தான் தீர்மானத்தை முடிந்தவரை வலிமையானதாக மாற்ற எம்மைப்போன்ற பலர் நமது எதிர்ப்பை பதிவு செய்தோம்.

ஆனால் இந்த தீர்மானத்திற்கு எதிராக போராட்டத்தை முன்னெடுத்த சில கட்சிகள், அமைப்புகள் இதை எதிர்ப்பதிலே குறியாக இருந்தார்களே ஒழிய இதன் அடுத்த பக்கத்தை பார்க்கவில்லை.

ஏனென்றால் ஐநா தீர்மானமோ அதன் விளைவான விசாரணைக் குழுவோ எமக்கு விடுதலையைப் பெற்றுத்தரப் போவதில்லை என்பது பகுதியளவு உண்மைதான். ஆனால் இந்த தொடர் பிரச்சாரங்களின் விளைவாக மக்கள் ஐ.நா விசாரணைக் குழுவுக்கு தமது இனஅழிப்பு சாட்சியங்களை வழங்காமல் பின் வாங்கியது தான் பெரும் வரலாற்றுத் தவறாக மாறியிருக்கிறது.

இந்த சாட்சியங்களை பதிவு செய்வதென்பது ஐ.நா எமக்கு நீதியை தூக்கித் தந்து விடும் என்பதற்காக அல்ல. தமிழின அழிப்பில் ஐ.நா வும் ஒரு தரப்பு என்ற புரிதல் எமக்கு நிறையவே உண்டு என்பதை நாம் மீண்டும் மீண்டும் வலியுறுத்துகிறோம்.

ஆனாலும் எமது வாக்கு மூலங்களை நாம் அனுப்ப வேண்டிய கடமை எமக்கிருக்கிறது. நடந்த இனஅழிப்பை அம்பலப்படுத்தவும் அதை ஒருங்கிணைத்து ஒரு அங்கீகரிக்கப்பட்ட ஒரு அமைப்பின் கீழ் ஆவணப்படுத்தவும் என்பது தொடக்கம். எமது நீதிக்கான ஒரு சிறிய புள்ளியாவது இதன் மூலம் உருவாக்கப்படலாம் என்பது வரை ஆயிரம் காரணங்களை அடுக்கலாம்.

குறிப்பாக புலிகளை குற்றவாளிகளாக்கி எமக்கான நீதியை குழி தோண்டி புதைக்க இருக்கும் அனைத்துலக பிராந்திய சதியை முறியடிக்க வேண்டியாவது நாம் இதை அனுப்பியிருக்க வேண்டும்.

குறிப்பாக தமிழகத்திலிருந்து ஏராளமான வாக்கு மூலங்களை பதிவு செய்வதினூடாக மேற்குலக நலன்களை மையப்படுத்திய ஐ.நா நகர்வுகளுக்கு எதிராகவும், பிராந்திய வல்லரசான இந்தியாவையும் தமிழர் தரப்பு ஒரு இக்கட்டினுள் தள்ளி தமிழர் போராட்டத்தை வேறு ஒரு பரிமாணத்திற்குள் கொண்டு வந்திருக்கலாம்.

இதன் வழி தமிழர் தரப்பு ஒரு பேரம் பேசும் வல்லமையாக உருவெடுக்கலாம். ஆனால் நடந்தது என்ன? ஐ.நா வை எதிர்க்க வேண்டிய தெளிவை பெற்ற தமிழக போராட்ட குழுக்கள் சில ஐ.நா வோடு ஒத்தோட வேண்டிய புரிதலை வளர்க்காததால் வந்த சிக்கலா? அல்லது திட்டமிட்டு நடைமுறை படுத்தப்பட்ட சதியின் ஒரு பகுதியா ? என்பதை காலம் தான் தெளிவுபடுத்த வேண்டும்.

ஏனென்றால் தமிழின அழிப்புக்கு துணை நின்ற இந்தியா தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் மனித உரிமை பேரவையில் இலங்கைக்கு எதிராக தீர்மானம் கொண்டு வரும்போதும் அதை நீர்த்துபோக செய்து வருகிறது. எனவே நாம் நீதியை வென்றெடுக்க இந்தியாவிற்கு கடிவாளம் இட வேண்டியது முக்கியமானது. ஆனால் இன்றளவும் அது எமக்கு சர்தியப்படவேயில்லை.

2013 மாணவர் போராட்டத்தின் போதே நாம் ஒரு பொறிமுறையை வரையறுத்து தமிழக மாணவர்களிடம் கொண்டுசேர்த்தோம்.



தமிழக மாணவர்கள் போராட்டம் தமிழகத்தின் குக்கிராமங்கள் வரை சென்று தொடர்ந்து பரவிக்கொண்டிருந்த நேரம் அது. தமிழக சட்டசபை தீர்மானம் என்பது மாணவர்கள் போராட்டத்திற்கு கிடைத்த உச்சபட்ச வெற்றி. ஆனால் இனி என்ன செய்வது என்ற குழப்பத்தால் நாம் அந்த வெற்றியை தக்க வைக்க தவறிவிட்டோம். இனியாவது சுதாரித்து கொண்டு மீண்டும் ஒரு மாணவர் பேராட்ட குழுவை அமைத்து அதை முழு இந்தியாவிற்கும் விரிவுபடுத்த வேண்டும்.

அதாவது இந்திய மட்டத்தில் அனைத்து மாநில மாணவர்களிடமும் போராட்டத்தை கொண்டு செல்ல வேண்டும். ஏனெனில் இந்திய வெளியுறவுக்கொள்கையில் மாற்றம் நிகழ வேண்டும். அதற்கு இந்திய மக்கள் முதல் அதை உணர வேண்டும்.

ஒரு தலைமை குழுவை உருவாக்கி ஒவ்வொரு மாநிலத்திற்கும் என குழுவை பிரித்து அவர்கள் அந்தந்த மாநிலங்களிலுள்ள பல்கலைக்கழகங்கள் கல்லூரி களுக்கு சென்று நடந்த நடந்து கொண்டிருக்கிற இன அழிப்பு குறித்து விளக்கி 'ஐநாவின் பாரகட்சம் தொடக்கம் இந்திய தலையீடு வரை' புரிய வைக்க வேண்டும்.

சனல் 4 இன் ஆவணப்படங்களுடன் டப்ளின் தீர்ப்பாயத்தின் நகல், மற்றும் ஐநா நிபுணர்கள் குழு அறிக்கை தொடங்கி இன்று வரையான கட்டமைக்கப்பட்ட இனஅழிப்பு ஆவணங்கள் வரை காண்பித்து வேற்று மாநில மாணவர்களின் ஆதரவை பெற வேண்டும்.

அவர்களை பிற்பாடு அந்தந்த மாநில மக்களுக்கும் அரசியல்வாதிகளுக்கும் அமைப்புக்களுக்கும் விளக்குமாறு கோர வேண்டும்.

நாம் ஒன்றை கவனமாக விளங்கி கொள்ள வேண்டும். இந்திய அரசோ, இந்திய மக்களோ நமக்கு எதிரி அல்ல . எமது எதிரி இந்திய வெளியுறவுக் கொள்கைதான். அது தனிப்பட்ட சிலரின் கைகளுக்குள் சிக்கி சின்னாபின்னமாவதை இந்திய மக்களுக்கு உணர்த்த வேண்டும். இந்திய அளவில் மக்களினதும் மாணவர்களினதும் மாற்றம் இந்திய வெளியுறவுக்கொள்கை மாற்றமாக வெளிப்படும். இதுவே நமது அடுத்த இலக்காக இருக்க வேண்டும்.

இன மொழி வேறுபாடுகளுக்கப்பால் அழிவையும் துயரத்தையும் கண்டு கலங்குவதும் தோழமை கொள்வதும்தான் மனித மனம். இந்திய மக்களுக்கு தமிழர்கள் அழித்தொழிக்கப்பட்ட கதையை சொல்ல வேண்டும். அதில் இந்திய அரசின் பங்கிருந்ததை தெளிவு படுத்த வேண்டும். எனவே தமிழர்களுக்கு நீதி கிடைக்க வழி செய்ய வேண்டியது ஒவ்வொரு இந்தியனதும் கடமை என்று வலியுறுத்துவதனூடாகவே தமிழகம் சார்ந்த எமது அடுத்த கட்ட போராட்டத்தின் வடிவம் ஒழுங்கமைக்கப்படும்.

அவர்கள் நிச்சயம் நம்மோடு இணைந்து கொள்வார்கள்.

போர்க்குற்றங்களை இனஅழிப்பை விளக்குவதுடன் இந்திய நலனுடன் ஒத்துப்போகும் தமிழீழம் எனும் தேசத்தின் பிராந்திய முக்கியத்துவத்தை, இந்து சமுத்திரத்தில் இந்தியாவிற்கு தமிழீழக் கடல் அரண் தரும் பிராந்திய பாதுகாப்பை, இன்ன பிற முக்கியத்துவங்களை விளக்க வேண்டும்..

இந்திய மக்களை மாற்றுவதனூடாகவே இந்திய வெளியுறவுக்கொள்கையை மாற்றலாம் என்பதை தயவு செய்து மறந்து விடாதீர்கள்.

இந்திய அளவிலான மனித உரிமை அமைப்புகளுடன் சேர்ந்து இந்திய அளவிலுள்ள ஒவ்வொரு கல்விக்கூடங்களுக்கும் செல்லுங்கள் பேசுங்கள் விவாதியுங்கள்.

இதுவே ஒரு கட்டத்தில் ஐநா வை கையாளும் நமது தந்திரத்தில் சமகாலத்தில் இந்தியாவையும் கையாளும் ஒரு தந்திரமாக வடிவமாற்றம் பெறும்.

அடுத்து ஐநா மனித உரிமை பேரவையின் நகர்வுகளில் நான் முக்கியமாக கருதும் ஒரு விடயம் இது.

ஐ.நா மனித உரிமைகள் பேரவை ஆணையாளரின் அறிக்கையின்

பரிந்துரைகளில் எமக்கு பெரும்பாலும் உடன்பாடில்லாத போதிலும் அது எமது நீதிக்கான பாதைகள் சிலவற்றை திறந்துவிடப்பட்டுள்ளதை மறுக்க முடியாது.

அவரது பரிந்துரைகளை பயங்கரவாத அரசுகள் சேர்ந்து ஒரு தீர்மானமாகக் கொண்டுவந்து 'உள்ளக விசாரணை' யில் முடித்துள்ளபோதும் அவரது அறிக்கை எம்மளவில் முக்கியமானது என்பதை நாம் எமக்கேயான முரண்பாடுகளையும் சேர்த்து ஏற்றுக்கொண்டேயாக வேண்டும்.

தமிழர் தரப்பு இதைக் கையாள்வதைப் பொருத்தே அதன் பெறுமதியை உறுதிப்படுத்துவதுடன் எமது நீதிக்கான பாதையும் வகுக்கப்படும்.

குறிப்பாக பாதிக்கப்பட்ட தரப்பாக நின்றுகொண்டு இனஅழிப்பு, மனிதகுலத்திற்கு எதிரான குற்றம், போர்க்குற்றம் குறித்து எத்தகைய ஆதாரங்களை முன்வைத்தாலும் உலகளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட அமைப்பு ஒன்றினூடாக அதை ஏற்றுக்கொண்டு பரிந்துரைக்கப்படுவதனூடாகவே அது உலக கவனத்தை குவிக்கும், நம்பத்தகுந்த ஆதாரமாக ஏற்றுக்கொள்ளப்படும்.

அந்த வகையில் இறுதிப்போரில் மனிதகுலத்திற்கு எதிரான குற்றம் நடந்ததாக ஐநா மனித உரிமை பேரவை சுட்டிக்காட்டியிருப்பது ஒரு தகுந்த ஆதாரமாக ஏற்றுக்கொள்ளப்பட்டு இன்று உலக அளவில் ஒரு உரையாடல் தொடங்கிவிட்டது.

தமிழர் தரப்பு அதன் மீதான கவனத்தை குவிக்காததும் அதை ஒரு திறந்த உரையாடலாக மாற்றாததும் கவலையளிக்கிறது.

குறிப்பாக தமிழக அளவில் ஒரு பெரும் விவாதமாக இது மாறியிருக்க வேண்டும்.

குறிப்பாக இறுதிப்போரில் பெண்கள் குழந்தைகள் மீதான வன்முறைகள் குறிப்பாக பாலியல் வல்லுறுவு குற்றங்கள் நிகழ்த்தப்பட்டதை பல மனித உரிமை அமைப்புக்கள் மற்றும் பல்கலைக்கழகங்கள், அனைத்துலக ஊடகங்கள் ஆய்வுக்குட்படுத்த தொடங்கிவிட்டன.

இது ஐநா மனித உரிமை பேரவை அறிக்கையினூடாக கிடைத்த பெரு வெற்றியென்றே கருத வேண்டும்.

இந்த பாலியல் வல்லுறுவுக்குற்றங்கள் இனஅழிப்பு நோக்கில் நடத்தப்பட்டவை என்பதை நாம் நிருப்பிப்போமாயின் சிங்கள அரசு இனஅழிப்பு குற்றவாளியாக அம்பலப்படும்.






அதை நாம் மேற்படி அறிவுசார் சமூகத்துடன் இணைந்து நிறுவ உழைக்க வேண்டும்.

அண்மையில் " Washington Post" இல் பேராசிரியர்கள் Nimmi Gowrinathan மற்றும் Kate Cronin-Furman சேர்ந்து மிக முக்கியமான கட்டுரை ஒன்றை இந்த பாலியல் வல்லுறவுக் குற்றங்களை முன்வைத்து எழுதியிருக்கிறார்கள்.

இவர்கள் இதற்கு முன்பாக

"The Forever Victims? Tamil Women in Post-War Sri Lanka" என்ற ஒரு ஆய்வையையம் செய்து வெளியிட்டுள்ளார்கள். இதுவும் மிக முக்கியமானது.

ஐநா நிபுணர்குழுவில் பங்களிப்பு செய்த யஸ்மின் சுக்கா தொடக்கம் பல பல்கலைக்கழக ஆய்வாளர்கள் வரை பலர் தற்போது அனைத்துலகப் பரப்பில் இந்த பாலியல் வல்லுறவுக் குற்றங்கள் தொடர்பாக எழுத பேச ஆரம்பித்துவிட்டார்கள்.

அமெரிக்கா எப்படி திட்டமிட்டு தமிழின அழிப்பை மறைக்க முற்படுகிறதோ அதற்கு எதிர்வினையாக இன்று அமெரிக்க அறிவுப் பின்புலத்திலும் அமெரிக்க ஊடகங்களிலும் தமிழின அழிப்பு ஒரு பேசுபொருளாக மாற ஐநா மனித உரிமை பேரவை அறிக்கை வழி சமைத்திருக்கிறது.

இதெல்லாம் நாம் ஐநா வை அதை தாங்கும் மேற்குலக பிராந்திய அரசுகளை எப்படி அணுக வேண்டும் என்ற மைய கருத்துக்களே ஒழிய.. தீர்வல்ல முடிவுமல்ல.

இவயெல்லாவற்றையும் விட ஐநாவிற்கு எதிராக மக்கள் போராட்டம் விரிவுபடுத்தப்பட வேண்டும். உண்மையில் ஒருங்கிணைக்கப்பட்ட மக்கள் போராட்டம்தான் எமது போராட்டத்தில் பெரும் விளைவை ஏற்படுத்தும்.

எமக்கு தாயகம் மட்டுமல்ல புலம் முழுக்க பரந்துள்ள தமிழர்களும் குறிப்பாக தமிழகமும் மிகப்பெரிய பலம். ஐநாவை குறிவைத்து இந்த 3 தளங்களிலும் போராட்டத்தை விரிவுபடுத்தினால் ஐநா வை நாம் வளைக்க முடியும்..

இதன் வழி நீதிக்கான பாதையை கண்டடைய முடியும்.

**இதன் முதல் அடியாக வரும் மார்ச் ஐநா மனித உரிமை அவையின் அமர்வை நாம் எமக்கானதாக மாற்றி இனஅழிப்பு அரசிற்கான காலக்கெடு வழங்குவதை முறியடித்து ஒரு அனைத்துலக விசாரணை பொறிமுறை ஒன்றிற்கான நகர்வுகளை தொடக்கி வைப்போம்.**





தோழர். சுப.உதயகுமாரன்

**புரட்சி!** தமிழகத்தில் அரசியல் தலைவர்களின், சினிமா நடிகர்களின் பெயர்களோடு மட்டும் இணைக்கப்பட்டிருந்த அர்த்தமற்ற வார்த்தை இது. ஆனால் இன்று "ஆகாவென் றெழுந்ததுபார் யுகப்புரட்சி" என பாரதி மெய்சிலிர்த்து வர்ணித்த ருசியப் பிரளயத்தை நினைவூட்டும் உண்மைச் சமராக உருமாற்றம் பெற்றிருக்கிறது.. "பொதுநலம் வந்திடப் புதுவழி தந்தால் புரட்சி அதுவாகும்" என்று விவரித்தார் நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் அய்யா. தமிழகத்துக்கு ஒரு புதுவழியை தந்திருக்கின்றன(ர்) காளைகள்.




தமிழ் வசந்தம், தமிழர் புரட்சி, தைப் புரட்சி, ரத்தமில்லா யுத்தம் என்றெல்லாம் பலவாறாக வர்ணிக்கப்படுகிற "சல்லிக்கட்டுப் போராட்டம்" தமிழகத்தை ஓர் ஆழ்ந்த உறக்கத்திலிருந்து அடித்து எழுப்பியிருக்கிறது. தலைநகராம் சென்னை முதல் காலூராம் கன்னியாகுமரி வரை இந்தப் போராட்டம் நடைபெறாத இடமே இல்லை.

இனப் படுகொலை, கொலைப்பொருள் அணுஉலை, முல்லைப்பெரியார் நீரணை, நீரின்றி வறண்ட காவிரி என எதற்குமே அசையாதத் தமிழர் கூட்டம் ஒரு சில சிற்றூர்களில்





மட்டுமே நடக்கும் ஏறு தழுவலுக்காக இறங்கி வருவானேன்? பற்பல பதில்களைப் பகர்கின்றனர் பண்டிதர்கள். சமூக ஊடகங்கள் சாதித்தனவாம்; தமிழர் பெருமை தறிகெட்டு எழுகிறதாம்; அக்கிரமங்கள் எழச்செய்த ஆத்திரங்கள் தடுப்பணை உடைத்து தகதகக் கின்றனவாம்.

தனித்தனியான இப்பதில்கள் தவறானவை. இவ்விடைகளின் கூட்டுக்கலவை உன்னதமானா லும், இன்னும்பல வினையூக்கிகள் கலந்த விளக்கமே உண்மையானது. இந்தி எதிர்ப்புப் போர் தந்த எழுச்சியின் ஆணிவேர் அசையாமல் இருந்தாலும், அரசியல் கொண்டை கோடம்பாக்கத்திற்குள் குப்புற விழுந்தது. தலைவர்கள் நடிகராயினர், நடிகர்கள் தலைவராயினர். பின்னர் ஈழப் பிரச்சினை எழுந்தபோது இங்குள்ளத் தமிழரின் சதையும் ஆடிற்று. தமிழக ஊசல் இந்தியம் தமிழம் என ஊடாடி, கடந்த 2009ஆம் ஆண்டு முதல் தமிழம் முனையில் தட்டி நிற்கிறது. தமிழரெல்லாம் கொதிநிலை அடைந்து குமுறிக் கொண்டிருக்கிறார்கள். தமிழர்களின் ஆழ் கலாச்சாரம், அன்றாடப் பொருளாதாரம், அடிமைத்தளை அரசியல் என முப்பெரும் விடயங்களை நாம் கருத்தில் கொண்டாக வேண்டும்.

**புறநானூற்றுக் காலம் முதலே போற்றிவரப்படும் ஏறு தழுவல், மஞ்சு விரட்டு என பற்பல பெயர்களில் அழைக்கப்படும் சல்லிக்கட்டு ஓர் ஆழமான தாக்கத்தை தமிழர் வாழ்வில், கலாச்சாரத்தில் ஏற்படுத்தியிருக்கிறது. நம்மில் பலர் மாட்டையேப் பார்க்காமல் வாழ்ந்து கொண்டிருக்கலாம், வீர விளையாட்டுக்கு எதிராகக்கூடக் களமாடலாம். ஆனாலும் நம்மனைவருக்குள்ளும் ஊடாடிக் கொண்டிருக்கும் ஆழ் கலாச்சாரம் மிக முக்கியமான ஒன்று.**

உளவியலாளர் சிக்மண்ட் பிராய்ட் தனிமனிதனின் மனப்பாங்கிற்குக் கீழே, ஆழமான மனப்பாங்கு ஒன்று இருப்பதாகச் சொல்கிறார். கார்ல் யங் என்பவர் குழுக்களின் மனப்பாங்கிற்குக் கீழே ஆழமான ஒன்றுபட்டக் குழு மனப்பாங்கு ஒன்று இருப்பதாகச் சொல்கிறார். இந்த ஆழ் மனப்பாங்குகளைத் தனிமனித ஆழ்மனம் என்றும், குழும ஆழ்மனம் என்றும் பார்க்கலாம். ஒரு குழுமத்தில் நிலவும் ஒரே மாதிரியான எண்ணப் பதிவுகள் அம்மனிதர்களை கிட்டத்தட்ட ஒரே மாதிரியாக உருவாக்குகின்றன. இந்தக் குழும ஆழ்மனத்தை ஆழ் கலாச்சாரம் என்றும் அழைக்கலாம். இந்த ஆழ் கலாச்சாரம் அன்றாட வாழ்க்கை பற்றிய மனப்பாங்குகளையும், செயல்பாடுகளையும் உருவாக்குவதில் முக்கிய பங்கு வகிக்கிறது.

அன்றாட வாழ்வின் இன்றியமையா அம்சங் களுள் ஒன்று கதை சொல்லல். இலைமறை காய்மறையாக வெளியாகும் கருத்துக்கள் (sub-texts, undertexts), வெளிப்படையாகத் தோன்றும் கருத்துக்கள் (overtexts), சந்தர்ப்ப சூழ்நிலைகள் போன்றவற்றின் உதவியோடுதான் இந்த கதைகளை நாம் முழுவதுமாக புரிந்து கொள்ள முடியும். ஆழ்மனதில் உறைந்திருக்கும் ஆழ் கதைகளும் (deep texts) முக்கியமானவை. நமக்குள் புதைக்கப்பட்டு, நமது பழக்க வழக்கங்களுடன் ஒன்றிப்போன இந்த ஆழ்கதைகள்தான் நம்மை அறியாமலேயே நம்மை இயக்குகின்றன.

காளையடக்குதல் ஒரு கலாச்சாரக் கதையினை சொல்கிறது. ஸ்பெயின் நாட்டில் நடக்கும் மாட்டுச் சண்டைக்கும் தமிழக சல்லிக்கட்டுக்கும் அடிப்படை வேறுபாடுகள் இருக்கின்றன. அங்கே ஒரே ஒரு முரட்டுக் காளையும், ஒரே ஒரு மாடுபிடி வீரரும் மட்டும் முட்டிமோதுவர். மிகப் பெரும்பாலான போட்டிகளில் வீரர் காளையைக் கொல்வார், காளை கசாப்புக்கடைக்குப் போகும். வெகுசில தருணங்களில் காளை வீரரைத் தாக்கும், வீரர் மருத்துவமனைக்குப் போவார்.

ஆனால் தமிழகத்தில் முரட்டுக் காளை களும், அடக்கும் வீரர்களும் கூட்டமாக மல்லுக்கட்டி நிற்கின்றனர் பொதுவெளியில். பார்வையாளர்களும் அந்த பரபரப்பில் தம்மை மறந்து குதூகலிக்கின்றனர். சில நேரங்களில் அவர்களும் காளையடக்குவதில் தற்செயலாகப் பங்கேற்பதுண்டு. நம் நாட்டில் நடப்பது ஸ்பெயின் நாட்டில் நடப்பது போல ஒரு கொலைவெறிச் செயலல்ல, இது ஒரு



வெகுசனக் கொண்டாட்டம். உடல் பலம், உள நலம், அச்சமின்மை, ஆபத்தை எதிர்கொள்ளும் துணிச்சல் என பல அம்சங்கள் கொண்ட வீர விளையாட்டு இது. தமிழர் ஆழ் கலாச்சாரத்தில் மேற்குறிப்பிட்ட அம்சங்கள் புதைந்து கிடப்பது தெளிவு.

வாடிவாசல்களில் மாடுகளை உசுப்பிவிட அங்கொன்றும் இங்கொன்றுமாக சில துன்புறுத்தல்கள் நடந்தாலும், சல்லிக்கட்டு மாடுகளுக்கு பெரும் சங்கடங்கள் தருவதில்லை. அப்படியே வீர விளையாட்டில் குறைகள் இருந்தாலும் அவற்றை தமிழ் மக்கள்தான் மேலாண்மை செய்து மாற்றியமைக்க வேண்டுமே தவிர, எங்கிருந்தோ வந்த ஓர் அமெரிக்க ஏகாதிபத்திய நிறுவனம் இங்கே வந்து நம்மிடையே நாட்டாமை செய்ய முடியாது. ஊரான் ஊரான் தோட்டத்திலே ஒருத்தன் போட்டான் வெள்ளரிக்காய், காசுக்கு இரண்டு விற்கச் சொல்லி கடிதம் போட்டான் வெள்ளைக்காரன் என்கிற கதையாக இருக்கிறதே? அப்பட்டமான அரசியல் காலனியாதிக்கம் மருவி நேரடி பொருளாதார, கலாச்சார காலனியாதிக்கமாகி நம்மை ஆட்டுவித்துக் கொண்டிருக்கும்போது, பீட்டாவையும் ஒரு பீடையாகத்தான் பார்த்தாக வேண்டும்.

**சல்லிக்கட்டுக் காளைகள் வீட்டு செல்லப் பிராணிகளாகவே போற்றி வளர்க்கப்படுகின்றன, பாதுகாக்கப்படுகின்றன. இந்தப் போற்றுதலின் பின்னால் ஏழை விவசாயிகளின் அன்றாடப் பொருளாதாரம் புதைந்து கிடக்கிறது.**

முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் விவசாயிகளிடம் விவசாயத்தை கைவிட்டு சேவைத் துறைக்குச் செல்லுங்கள் என்று அறிவுரைத்தார். அடுத்து வந்த பிரதமர் மோடியோ, இன்னும் ஒருபடி மேலே போய், விவசாயிகளுக்கு ரூபே கார்ட் கொடுத்து அவர்களை டிஜிட்டல் மயமாக்குவேன் என்கிறார். இவர்கள் இருவரின் பன்னாட்டு நிறுவன அடிமை அரசுகளும் மாபெரும் இந்திய உணவுச் சந்தையை தங்கள் முதலாளிகளுக்கு தாரை வார்த்தனர், வார்க்கின்றனர். இதற்குத் தடையாக இருக்கும் நமது நாட்டு மாடுகளையும், நமது வேளாண் பாரம்பரியத்தையும் அழித்தொழிக்க கடிதில் முனைகின்றனர்.

நமது பாரம்பரிய காளை ரகங்களை கொஞ்சம் கொஞ்சமாக அழித்து, கலப்பின மாடுகளை அறிமுகப்படுத்தும் திட்டம் நிறைவேறிக் கொண்டிருக்கிறது. ஏற்கனவே பல நாட்டு மாடு இனங்கள் முற்றிலுமாக அழிந்துவிட்டன. ஏறத்தாழ அறுபது விழுக்காடு பாரம்பரியக் காளைகள் அழிந்துவிட்டனவாம். மதுரைப் பகுதியில் காணப்படும் புளிக்குளம் மாடுகள்

# 35,000

மட்டுமே இருப்பதாகவும், இவற்றுள் காளைகள் வெறும்

# 4,000

மட்டும்தான் என்றும் சொல்கிறார்கள். மரபை இழந்து, மாடுகளை இழந்து, மண்ணை இழந்து, இன்றைய விவசாயி மாண்பையும் இழந்து நிற்கிறார்.

எங்கே எதைக் கொள்ளையடிப்பது, அதை யாரிடம் எவ்வளவுக்கு கைமாற்றுவது என்று சிந்திக்கும், செயல் படும் மாநில அரசுக்கு பாரம் பரிய காளைகளைக் கணக் கெடுப்பதற்கும், அவற்றை வளர்ப்போரை ஊக்குவிப் பதற்கும், நம் வேளாண் பாரம்பரியத்தை தக்க வைத்துக் கொள்வதற்கும் நேரம் இருப்பதில்லை. இதற்கிடையே லட்சக்கணக்கான தமிழ் இளைஞர்களும், மாணவர்களும் மெரீனா கடற்கரையில் போராடும் போதே, டென் மார்க் நாட்டிலிருந்துநூறுகாளைகள் சென்னைக்குவந்து இறங்குகின்றன.

சல்லிக்கட்டில் காளைகளை அடித்தார்கள், குத்தினார்கள் என்று ஆதங்கப்படும் பீட்டா அமைப்பு, குளிர்ப் பிரதேசத்தில் பிறந்து வளர்ந்த வெளிநாட்டுக் காளைகளை சுட்டெரிக்கும் வெயிலடிக்கும் இந்தியாவுக்குள் கொண்டுவந்து திணிப்பதை ஏன் எதிர்க்கவில்லை? அவற்றின் விந்துக்களை சேகரித்து செயற்கை முறையில் பசுக்களைக் கருத்தரிக்க வைக்கும் அயோக்கியத்தனத்தை



ஏன் கேள்விக்குள்ளாக்குவதில்லை?

உலகெங்குமுள்ள மனிதர்களை மேற்கத்திய தனியார்மயமாதல், தாராளமயமாதல், உலகமயமாதல் எனும் மும்மைக்கு அடிமைப் படுத்திவிட்டவர்கள், நாட்டு மாடுகளைக்கூட விட்டுவிடக் கூடாது என்பதில் உறுதியாக இருக் கிறார்கள். முதலாளித்துவ உலகமயத்தின் அம்சங்களான தாராளமயமாக்கப்பட்டச் சந்தை, ஒருங்கிணைக்கப்படாத தொழிலா ளர்கள், சுருங்கிப்போகும் அரசு, சிக்கனப் போக்கு, சனநாயகமின்மை, உள்கட்டமைப்புகளைச் சரி செய்தல், (பொருளாதார) நிலைநிறுத்தல் நடவடிக்கைகள் போன்றவை ஓர் அடிமைத் தளை பூட்டிய அரசியலையே எளிய மக்கள் மீது திணிக்கின்றன. பொருளாதார அமைப்புக்களான உலக வங்கி, உலக வர்த்தக நிறுவனம், சர்வதேச நிதிக் குழுமம் போன்றவை ஒரு பக்கம் ஏழை எளியோரை பொருளாதார ரீதியில் அடிமைப்படுத்த, சார்பு நிறுவனங்கள் அதே வேலையை கலாச்சார, அரசியல் தளங்களில் இன்னும் அழுத்தமாகச் செய்கின்றன.

எடுத்துக்காட்டாக, பீட்டா (PETA) எனும் விலங்குகள் பாதுகாப்பு நிறுவனம் ஏகாதிபத்திய பன்னாட்டு நிறுவனங்களின் நலனுக்காகவேப் பாடுபடுகிறது. விலங்குகளின் உரிமைக்காகப் போராடும் இந்த நிறுவனம் விலங்குகளை உணவாக பாவிக்கக்கூடாது, அவற்றிலிருந்து பெறப்படும் தோல் போன்ற பொருட்களைப் பயன்படுத்தக் கூடாது; விலங்குகளை வைத்து மருத்துவ ஆய்வுகள் செய்யக் கூடாது என்று போராடுகிறது. பெரும் செல்வம் பெற்றிருக்கும் இந்த அமைப்பு அநாதை விலங்குகளுக்குப் புகலிடம் கொடுக்கும் சரணாலயமாகவும் இயங்குகிறது. அதே நேரம், தன்னால் நீண்ட நாட்களாகக் காப்பாற்ற முடியாத விலங்குகளை கருணைக் கொலை செய்வதாகவும் குற்றச் சாட்டு எழுகிறது.



தமிழகத்தின் மாட்டுப் பால் சந்தை ஒரு வருடத்துக்கு ஏறத்தாழ

**மூன்றரை லட்சம் கோடி**

ரூபாய் புழங்கும் மாபெரும் வர்த்தகமாக இருக்கிறது.

இனவிருத்திக்கு பயன்படும் நாட்டுக் காளைகள் இந்த வர்த்தகத்தில் மிக முக்கிய மான அங்கங்கள். சல்லிக்கட்டை அழித்து விட்டால், நாட்டுக் காளைகள் இனம் அழியத் துவங்கும், அதன் மூலம் கலப்பினக் காளைகளை தமிழகத்திற்குள் கொண்டு வரலாம். இன்னோரன்ன காரணங்களால்தான் பீட்டா சல்லிக்கட்டை தீவிரமாக எதிர்க்கிறது. மாட்டுத்தீவன நிறுவனங்கள், கால்நடை மருந்து நிறுவனங்கள் போன்றவையும், அவற்றின் லாபம் பெறும் நடவடிக்கைகளும் பீட்டாவின் எதிர்ப்புக்குப் பின்னால் இருக்கின்றன என்றும் சந்தேகிக்கின்றனர் பலர்.

இப்படியாக தமிழர்களின் ஆழ் கலாச்சாரம், அன்றாடப் பொருளாதாரம், அடிமைத்தளை அரசியல் எனும் மூன்று விடயங்களும் சல்லிக்கட்டு பிரச்சினையில் விரவிக் கிடப்பதை நாம் பார்க்கலாம்.

கடந்த 2011 ஆம் ஆண்டு சனவரி மாதம் மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வன அமைச்சகத்தின் விலங்குகள் நலப் பிரிவு, சல்லிக்கட்டு விளையாட்டு பழக்கப்படுத்திய விலங்கின் செயலைக் காட்சிப்படுத்துகிறது, எனவே அதைத் தடை செய்ய வேண்டும் என்றும், விலங்குகளுக்கு இழைக்கப்படும் தீங்கினை தடுத்தல் சட்டத்தின் பிரிவு 22ன் கீழ் புலிகள், கரடிகள் போன்ற விலங்குகளுடன் காளையையும் சேர்க்க வேண்டும் என்று பரிந்துரைத்தது. காங்கிரசுக் கட்சி தலைமை வகித்த மத்திய அமைச்சரவையில் தி.மு.க.வும் இடம் பெற்றிருந்தாலும், அனைவரும் கூட்டாகச் சேர்ந்து உரிய அறிவிப்பை உடனே வெளியிட்டனர். அப்போது தமிழகத்தில் அ.தி.மு.க. ஆட்சி நடைபெற்றது. ஈழப் பிரச்சினை, காவிரிப் பிரச்சினை போல, இதையும் இவ்விரண்டு பெரிய கட்சிகளும் கண்டுகொள்ளாமல் விட்டன.

கடந்த 2011 யூலை 7 அன்று மன்மோகன் சிங்கின் காங்கிரசு அரசு காளை மாடுகளை காட்சி விலங்குகளாக பயன்படுத்துவதை தடை செய்து அறிவிப்பாணை ஒன்றைக் கொண்டு வந்ததும் சல்லிக்கட்டு போன்ற வீர விளையாட்டுகள் சட்ட விரோதமாயின. அதனையடுத்து வழக்கு ஒன்றில் தீர்ப்பளித்த உச்சநீதிமன்றம் 2014 மே 7 அன்று சல்லிக்கட்டுத் தடையை உறுதி செய்தது. பிரிவு 77ல் இந்திய



விலங்குகள் நல வாரியம் சொல்வதுபோல சல்லிக்கட்டு, மாட்டுவண்டிப் போட்டி போன்ற நிகழ்வுகள் 1960 மிருகவதைத் தடுப்பு சட்டத்தின் சில சரத்துக்களை மீறுகின்றன. கடந்த 2011 அறிவிப்பாணையை உயர்த்திப் பிடித்த உச்சநீதிமன்றம் காளைகளை காட்சி விலங்குகளாக பயன்படுத்துவது கூடாது என்று அறிவித்தது. தமிழ் நாடு சல்லிக்கட்டு மேலாண்மைச் சட்டம் இந்தியாவின் மிருக வதைத் தடுப்பு சட்டத்தோடு முரண்படுவதால், அது செல்லாது என்றும் உச்சநீதிமன்றம் அறிவித்தது.

மேற்கண்ட சட்ட சிக்கல்களால் 2015, 2016 ஆம் ஆண்டுகளில் சல்லிக்கட்டு நடத்தப் படவில்லை. டிசம்பர் 22, 2015 அன்று தமிழக முதல்வர் ஜெயலலிதா பிரதமர் நரேந்திர மோடியிடம் சல்லிக்கட்டு நிகழ்ச்சியை நடத்த வழிவகை செய்யும் அவசரச் சட்டம் ஒன்றை உடனடியாகக் கொண்டுவர வேண்டும் என கேட்டுக் கொண்டார். ஆனால் அது கொண்டுவரப்படவுமில்லை, சல்லிக்கட்டு நடத்தப்படவுமில்லை. மத்திய அரசு இந்த விவகாரத்திலும் நமக்கு சாதகமாக எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

2016ஆம் ஆண்டு பொங்கலுக்கு முந்தைய வாரம் (சனவரி 8, 2016) மத்திய அரசு சல்லிக்கட்டு நடத்துவதற்கான ஓர் அறிவிப்பை வெளியிட்டது. ஆனால் அடுத்த இரண்டு நாட்களில் உச்சநீதிமன்றம் அதனை ரத்து செய்தது. தமிழக மாணவர்களும், இளைஞர்களும் லட்சக்கணக்கில் தமிழகம் முழுவதும் திரண்டு தொடர் போராட்டம் நடத்தத் துவங்கினர். போராட்டத்தின் அழுத்தத்தால், தமிழக முதல்வர் பன்னீர்செல்வம் தில்லிக்குச் சென்று பிரதமர் மோடியுடன் கலந்தாலோசித்து அவசரச் சட்டம் ஒன்றை இயற்றி, குடியரசுத் தலைவரிடம் ஒப்புதல் பெற்று, தமிழக பொறுப்பு ஆளுனரால் பிரகடனப்படுத்தி, சட்டமன்றத்தில் நிறைவேற்றவும் செய்தார்கள்.

மத்திய, மாநில அரசுகளும், பெரிய அரசியல் கட்சிகளும் மக்கள் உணர்வுகளுக்கு எதிராக இயங்குவது போதாதென்று, பீட்டா போன்ற அமைப்புகளும் தங்கள் பங்களிப்பைச் செய்கின்றன. இந்த அரசுகளும், மிருக உரிமை அமைப்புகளும், நீதிமன்றங்களும் அடுத்து என்னென்ன செய்யப் போகிறார்கள் என்பது ஒரு பெரிய கேள்வியாகவே தொக்கி நிற்கிறது.

சல்லிக்கட்டு என்பது ஒரு குறியீடுதான். சிங்களப் பேரினவாதமும் இருபது நாடுகளும் சேர்ந்து ஈழத்தில் நடத்திய இனப்படுகொலை, அப்போது இங்கே ஆட்சியிலிருந்த தி.மு.க. அரங்கேற்றிய கபட நாடகங்கள் எல்லாமே தமிழகத் தமிழர்களை பெருங்கோபம் கொள்ளச் செய்தன. தலைவர் பிரபாகரன் உள்ளிட்ட விடுதலைப் புலிகளின் முன்னோடிகள் கொல்லப்பட்டதாக அறிவித்துக் கொண்டாடியது இன்னும் சீற்றத்தை உருவாக்கியது. கூடங்குளம் அணுமின் நிலையத்துக்கு எதிரான நீண்ட நெடிய அறப்போராட்டம், முல்லைப்பெரியார் அணையைக் காத்திட நடந்த தன்னெழுச்சியான மக்கள் போராட்டம், கெயில் குழாய் பதிப்புக்கு எதிரான கொங்கு மண்டல விவசாயிகளின் போராட்டம், மீத்தேன் எரிவாயு எடுப்பதற்கு எதிரான காவிரி டெல்டா மக்கள் போராட்டம், காவிரி நதிநீர்ப் பிரச்சினையில் மத்திய அரசு காட்டிய மாற்றாந்தாய் மனப்பான்மைக்கு எதிரானப் போராட்டம், தேனி மாவட்டம் நியூட்ரினோ திட்டத்துக்கு எதிரான போராட்டம், குளச்சல் / இனையம் துறைமுகத்துக்கு எதிரான போராட்டம் என தமிழ் இளைஞர்கள் நிறையப் பார்த்துக் கொண்டிருந்திருக்கிறார்கள்.

அமைச்சர்களுக்கு இலாகாக்கள் ஒதுக்கப்படுவதுபோல, தமிழ் நாட்டில் மட்டும் தான் ஆற்று மணலைத் திருட ஒருவர், கடல் மணலை அபகரிக்க இன்னொருவர், கிரானைட் கற்களை ஏப்பம் விட மற்றொருவர், காடுகளை அழிக்கப் பிறிதொருவர் என்று இலாகா ஒதுக்கி ஸ்வாகா பண்ணுகிறார்கள். வேறு எந்த மாநிலத்திலும் இப்படி மக்கள் வளங்கள் கூறுபோட்டுக் கொள்ளையடிக்கப்படவில்லை. தமிழ் மக்கள் குடிநீருக்கு அலைமோதும்போது, பெப்சி, கோக் கம்பெனிகள் நிலத்தடி நீரையும், ஆற்று நீரையும் கபளீகரம் செய்து கொண்டிருக்கிறார்கள்.



மேற்படி நிகழ்வுகளோடு, நிலத்தடி நீரின் அளவு பெருமளவு குறைந்துபோய், மழை பொய்த்து, விவசாயம் அழிந்து, விவசாயிகள் தற்கொலை செய்யத் துவங்கியதையும் தமிழ் இளைஞர்கள் கவனித்திருக்கிறார்கள். தாங்கள் பெறும் தரமற்ற கல்வி, நீட் நுழைவுத் தேர்வுத் திட்டம், வேலையில்லாத் திண்டாட்டம், அடிப்படை ஊதியமின்மை, வருங்காலம் குறித்த நம்பிக்கையின்மை போன்றவையும் அவர்களை நிலைகுலையச் செய்திருக்கின்றன.

இன்னொரு புறம் மாஃபியா அரசியல், அடிமைத்தனம் போன்றவற்றில் ஊறித் திளைத்த மாநில அமைச்சர்கள் பல்லாயிரம் கோடிகளை அள்ளிச் சுருட்டுவதும், ஊழல் ஊரெங்கும் தலைவிரித்தாடுவதும் நடந்து கொண்டிருந்தது. மத்திய அரசு மக்களை முற்றிலுமாகக் கைவிட்டு, வெளிநாடுகளுக்கும், அவர்களின் பன்னாட்டு நிறுவனங்களுக்குமாக செயல்படத் துவங்கிற்று. பணமதிப்பு நீக்கம் இன்னும் கோபமூட்டியது. சல்லிக்கட்டு எனும் பாரம்பரிய பண்பாட்டு உரிமைகளிலும், உணர்வுகளிலும்கூட அரசு கைவைத்தபோது

## “அச்சிறும் அப்பண்டம் சால மிகுத்துப் பெயின்”

என வள்ளுவம் எச்சரித்ததுபோல, தமிழ் மாணவர்களின், இளைஞர்களின் பொறுமைத் தேரின் அச்சு ஒடிந்தது. நாம் எடுப்பார் கைப்பிள்ளைகளாக நடத்தப்படுகிறோம், நம் தமிழர் பெருமையை மீட்டெடுக்க வேண்டும் எனும் வைராக்கியம் அவர்களின் சிந்தனை, சொல், செயல் அனைத்திலும் பரிணமித்தது. “தை பிறந்தால் வழி பிறக்கும்” என்பது நம் நம்பிக்கை. ஆனால் தைப் புரட்சியே பிறக்கும் என்று யாரும் நினைக்கவில்லை.

சனவரி 16 அன்று மாலையில் அடுத்த நாள் காலை “நாகர்கோவில் அண்ணா விளையாட்டரங்கம் முன்பாகக் கூடுவோம்” என்று ஒரு குறுஞ்செய்தி வந்தது. ஏதாவது நடக்கிறதா, என்ன நடக்கிறது என்று பார்ப்பதற்காகவேச் சென்றேன். என்னை அடையாளம் கண்டுகொண்ட இளைஞர்கள் போராட்டத்தில் பேசச் சொன்னார்கள். சல்லிக்கட்டுப் பற்றி மட்டுமே பேசுங்கள், அரசியல் பேசுவதைத் தவிர்த்திடுங்கள் என்று அறிவுரைத்தனர். தமிழக அரசியல் சூழல்; மத்திய மாநில அரசுகள் பற்றியெல்லாம் அவர்கள் பெற்றிருந்த அறிவு; சமூக பொருளாதாரஅரசியல் பிரச்சினைகள் குறித்த ஆழமானப் புரிதல்; தெளிவான தீர்க்கமான நிலைப்பாடுகள்; சாதி, மதம், கட்சிகள், ஊர், தொழில் போன்றவைக் கடந்து அவர்களை ஒற்றுமையுடன் ஒருங்கிணைத்த பாங்கு; வெறுப்பு கோபமின்றி அதிகாரிகளைக் கையாண்ட சாதுரியம்; அறிவார்ந்த பேச்சுக்கள் எழுத்துக்கள் அனைத்துமே பெரிதும் மெச்சும்படியாக இருந்தன.

சல்லிக்கட்டுப் பிரச்சினையில் ஒரு தெளிவான நிலைப்பாடு எடுத்து களம்கண்ட மாணவர்கள், இளைஞர்களின் மேடைப் பேச்சுக்களில், முழக்கங்களில், தனிப்பட்ட அளவளாவல்களில் மேற்குறிப்பிட்ட பல்வேறு தமிழகப் பிரச்சினைகளும் நீக்கமற நிறைந்திருந்தன. சல்லிக்கட்டு ஒரு குறியீடுதான் என்பது தெளிவாகத் தெரிந்தது. நாமக்கல் கவிஞரின் கவிதை வரிகளான

“தமிழனென்று சொல்லடா,
தலைநிமிர்ந்து நில்லடா!” “தமிழன்
என்றோர் இனமுண்டு; தனியே
அவற்கொரு குணமுண்டு!”

அனைவராலும் முழங்கப்பட்டன. போராட்டம் தமிழகம் முழுவதும் பரந்து வியாபித்தது. சனவரி 19 அன்று பாம்பனில் நின்று கொண்டிருந்தேன். அப்பகுதி கல்லூரி மாணவர்கள் சாரை சாரையாக அறுபது கிலோ மீட்டருக்கு அப்பாலுள்ள இராமநாதபுரம் நோக்கி விரைந்து கொண்டிருந்தனர்.

“மீசையை முறுக்கு,
பீட்டாவை நொறுக்கு!”

“சின்னம்மா, சின்னம்மா,
ஓ.பி.எஸ். எங்கம்மா?”

“முட்டைன்னா ஒயிட்டு,
தமிழன்னா வெயிட்டு!”

“தடை அதை உடை!”

“தமிழன்டா!”

என்பன போன்ற முழக்கங்களை உரத்தக் குரலில் எழுப்பிச் சென்றார்கள். நாமக்கல்லார் கவிதை வரிகளும் நீக்கமற நிறைந்திருந்தன.

அடுத்து இராமநாதபுரத்துக்குச் சென்றேன். மாணவர்களும், மாணவியரும் அடுத்தடுத்து தனித்தனி கூட்டமாகக் கூடியிருந்து முழக்கங்

கள் எழுப்பினர். பிரதமர் தன்னால் எதுவும் செய்ய முடியாது என முதல்வரிடம் கையை விரித்திருந்த தருணம் அது. அடுத்து என்ன நடக்குமோ என்று யாரும் அறியாதிருந்த நேரம். ஒரு போராளியாகப் பேசுவதா, அல்லது ஒரு தந்தையாகப் பேசுவதா என என்னுள் ஒரு பெரும் போராட்டம் நடந்து கொண்டிருந்தது. இறுதியில் ஒரு தந்தையாக அந்த மாணவ, மாணவியரை எச்சரிக்கையுடன் போராடும்படி அறிவுரைத்தேன். அங்கிருந்து பரமக்குடி போனோம். சாலையோரத்தில் அமர்ந்திருந்த மாணவர்கள், இளைஞர்கள் பேசச் சொன்னார்கள். சிக்கலான ஊர் என்றாலும், சிறப்பாக நடந்து கொண்டிருந்தது போராட்டம்.

திருப்புவனம், மானாமதுரை என போகும் வழி தோறும் ஆங்காங்கே சிறு சிறு குழுக்களாக மாண வர்கள், இளைஞர்கள் பதாகைகளுடன் அமர்ந் திருந்தனர், முழக்கங்களுடன் ஆர்ப்பரித்தனர். கனவுலகின் பரந்த தெருக்களில் கோலாகலமும் கொண்டாட்டமுமாக, உவகையும் உற்சாகமுமாக மக்கள் கூடி நின்று ஏதோ ஒரு பிரமாண்டத்தை வரவேற்றுக் கொண்டிருப்பது போன்ற தோற்றமும், உணர்வும் என்னுள் எழுந்தது. அது எல்லோருக்குள்ளும் எழுகிறது என்பதையும் ஒவ்வொருவராலும் உணர முடிந்தது.

முன்னிருட்டுக் குவிகின்ற மாலை வேளையில் மதுரை மாநகருக்குள் நுழைந்தோம். பரபரப்பும், விறுவிறுப்புமாக மதுரை குதிரை போன்று எழுந்து நின்றது. கொட்ட வந்தக் கொடுந்தேளை ஒரு கூட்டம் கட்டெறும்புகள் கடித்துப் பிடித்து வைத்திருப்பதைப் போல, ஆயிரக்கணக்கான இளைஞர்கள் ஏதோ ஓர் ரயிலை மடக்கிப் பிடித்து வைகை ஆற்றின் குறுக்கே நிறுத்தி விட்டிருந்தனர். ரயிலின் மீது, பாலத்தின் மீது, ஆற்றின் மீது, கரைகளின் மீது, காணும் இடமெல்லாம் மாணவர்கள், இளைஞர்கள், பெண்கள், பொது மக்கள். ஒட்டு மொத்த மதுரையே ஊருக்குப் போகிறதா, அல்லது உலகமே ஓடிவந்து மதுரையில் இறங்கியதா என்று வியக்கும் வண்ணம் மக்கள், மக்கள், மக்கள் வெள்ளம்! அவர்கள் மூச்சினிலே வெளிவந்த வீரமோ என்னவோ, அப்படி ஓர் அபார சக்தி காணுமிடமெல்லாம் கரைபுரண்டு ஓடியது. "எங்கெங்கு காணினும் சக்தியடா, எழுகடல் அவள் வண்ணமடா!" என பாரதிதாசன் பாடிக்கொண்டிருப்பது போன்ற ஒரு பிரமை பிடித்தாட்டியது. குதூகலம், நம்பிக்கை, புத்துணர்ச்சி அதுதான் புரட்சி என்பதை வாழ்நாளில் முதன்முறையாக நான் உணர்ந்தேன்.

அலங்காநல்லூருக்குப் போவோம் என்றனர் நண்பர்கள். அது ஓர் இடிந்தகரையாக சிலிர்த்து நின்றது. ஏராளமான மக்கள் கூட்டம் பெரும்பாலும் பெண்கள் மற்றும் இளைஞர்கள்! இயற்கை உபாதைகளுக்காகக்கூட எவரும் எழாத கட்டுப்பாடு, அதீத கவனம், அபரிமித எழுச்சி! எனது கால்கள் தரையில் பட முடியாதவாறே இழுத்தும், தள்ளியும் கூட்டத்துக்கு நடுவே கொண்டு சென்றனர் தோழர்கள். மக்களின் நடுவே நிற்பது மந்திரம் போன்றது என்றறிவேன். ஆனால் மந்திரவாத மாமகத்தின் நடுவே நிற்பது? இரவு பாலமேடு சென்றபோது, அந்த ஊர்ப் பெரியவர்கள் வரவேற்றனர். அங்கே மட்டும்தான் நான் என் வயதொத்தவர்களைப் பார்த்தேன் இந்தப் புரட்சியில்.

"மதுரைப் போர்க்களம் தமுக்கம் பகுதியில் அமைந்திருக்கிறது, அங்கேயும் போங்கள்" என்றார்கள் உள்ளூர் தோழர்கள். எண்ணிலடங்கா மக்கள் கண்மூடாதிருந்து ஆடியும், பாடியும், ஆகாவென முழங்கியும் புரட்சி போற்றிக் கொண்டிருந்தனர். புரட்சியின் எழுச்சி அதன் வெளிச்சத்தைவிட வீரியமிக்கதாய் இருந்தது.

*"புரட்சி என்பது ஓர் இரவு விருந்தல்ல...*
*அது ஒரு கிளர்ச்சி, ஒரு வகுப்பு இன்னொரு*
*வகுப்பைத் தூக்கி எறியும் வன்முறைச் செயல்"*

என்றார் மாவோ. ஆனால் தமிழகத்தின் குறுக்கும், நெடுக்கும் நான் கண்டது சாதி, மதம், கட்சி, ஊர், தொழில், பாலினம், பாலியல் பேதங்களற்ற அறவழி அரசியல் பொங்கல். எனது வாழ்நாளில் நான் மகிழ்ந்து நெகிழ்ந்து கொண்டாடிய மாபெரும் பொங்கல் இந்தப் பொங்கல்தான். புரட்சிப் பொங்கல்!

சென்னை மெரீனா கடற்கரையில் மாணவர்களும், இளைஞர்களும் ஆறு நாட்கள் அற்புதமான ஓர் அறவழிப் போராட்டத்தை எந்தவிதமான அசம்பாவிதமும் இன்றி அருமையாக நடத்தினார்கள். ஆனால் சனவரி 23, 24 ஆகிய நாட்களில் தமிழகக் காவல்துறையினர் ஒரு மாபெரும் வன்முறை



வெறியாட்டத்தை மாணவர்கள், இளைஞர்கள், மீனவ மக்கள் மீது கட்டவிழ்த்து விட்டனர்.

சனவரி 27, 2017 அன்று பச்சைத் தமிழகம் கட்சித் தோழர்கள் சுப. உதயகுமாரன், ஆண்டனி கெபிஸ்டன், கதிரவன் ராயன், அருள் தாஸ், சி. பிரான்சிஸ், அ. ரே. அபினேஷ், அஜூ அரவிந்த், வழ. வி. நடராஜன், இளவரசன் அப்பு உள்ளிட்டோர் நொச்சிக்குப்பம், மாட்டான்குப்பம், நடுக்குப்பம், வெங்கடரங்கன் பிள்ளைத் தெரு உள்ளிட்டப் பகுதிகளுக்குச் சென்று அங்குள்ள மக்களை சந்தித்தோம்.

நொச்சிக்குப்பம் பகுதியில் வாழும் மீனவப் பெண்கள் கடந்த 23 அன்று காவல்துறையினர் மாணவர்களை, பெண்களை அடித்து நொறுக்கியதாகவும், பலரும் இருசக்கர வாகனங்களை அப்படியேப் போட்டுவிட்டு ஓடியதாகவும் சொன்னார்கள். ஒரு கர்ப்பிணிப் பெண்ணை ஒரு சில காவல்துறையினர் வயிற்றில் உதைத்ததால் அவருக்கு இரத்தப் போக்கு ஏற்பட்டு அவதியுற்றதாகவும் தெரிவித்தனர்.

பின்னர் மாட்டான்குப்பம் கெனால் தெரு பகுதிக்குச் சென்றோம். அங்கே வசிக்கும் பல பெண்கள், ஆண்கள், இளைஞர்கள் தாங்களும், தங்கள் வீடுகளும் உடைமைகளும் தாக்கப்பட்டதாகத் தெரிவித்தனர். முரளி என்கிற இளைஞர் மூர்க்கத்தனமாகத் தாக்கப்பட்ட தனது முதுகையும், தலையையும், கால்களையும் காட்டினார். வினோத் என்கிற இன்னொரு இளைஞர் தனது முகத்தில் காவல்துறையினர் அடித்து மூன்று பற்களை உடைத்ததைக் காட்டினார். அஸ்வினி என்கிற இளம்பெண் தனது இருசக்கர வாகனத்தை காவலர்கள் அடித்து உடைத்தபோது, தட்டிக்கேட்டதால் அவரையும் மூர்க்கத்தனத்துடன் அடித்து உதைத்ததாகத் தெரிவித்தார்.

அந்தப் பகுதியின் பெண்கள் தாங்கள் மிக மோசமாகத் தாக்கப்பட்டதையும், தங்கள் வீடுகளிலுள்ள டி.வி., பாத்திரங்கள், நாற்காலிகள் போன்றவை அடித்து நொறுக்கப்பட்டதையும் காண்பித்தனர். பல வீடுகளில் காவல் துறையினர் ஓட்டுக் கூரைகளை உடைத்து நொறுக்கியதையும் காண்பித்தனர். சில காவலர்கள் தங்கள் கால்சட்டைகளின் சிப்களைத் திறந்து, உடலுறுப்பை எடுத்துக்காட்டி, தகாத உறவுக்கு அழைத்ததாகவும் சொன்னார்கள். வாயால் பேச முடியாத ஆபாசமான வார்த்தைகளைச் சொல்லி தங்களைத் திட்டியதாகவும் முறையிட்டார்கள். பலர் கண்ணீர்விட்டு அழுதனர்.

பின்னர் நடுக்குப்பம் கிராமத்துக்குச் சென்றோம். அங்குள்ள ஆண்களும், பெண் களும் தங்கள் பகுதியில் பெண்களால் நடத்தப் பட்ட பல மீன் கடைகள், வாகனங்கள், குடிசைகள் காவல் துறையினரால் எரித்து அழிக்கப் பட்டதையும், ஒருவிதப் பொடியைத் தூவி தீ மூட்டியதையும், பெண் காவலர்கள் தீ வைத்தத்தையும் சொன்னார்கள். வீடு வீடாக காவலர்கள் நுழைந்து அராஜகம் செய்ததாகவும், மக்களை பயங்கரமாகத் தாக்கியதாகவும் சொன்னார்கள். வெங்கடரங்கன் பிள்ளைத் தெருவில் வசிக்கும் மக்களும் தாங்கள் தாக்கப்பட்டதையும் ஏறத்தாழ பதினைந்து பேர் காவலர்களால் தாக்கப்பட்டு கைகள், விரல்கள் உடைக்கப்பட்டதையும் சொன்னார்கள். காவல்துறையினர் அவ்வப்போது வந்து பெரும் உளவியல் தாக்குதல் நடத்துவதையும் குறிப்பிட்டார்கள். சிவராஜபுரம், ரூதர்புரம் போன்ற பகுதி மக்களின் அனுபவங்களும் இதே மாதிரியானவைதான் என்று தோழர்கள் சொன்னார்கள்.

தமிழக அரசின் தலைமைச் செயலகம் மற்றும் தமிழக காவல்துறைத் தலைவர் அலுவலகம் போன்றவற்றின் மிக அருகில் இருக்கும் இந்தப் பகுதியில் முதல்வரோ, அமைச்சர்களோ, அதிகாரிகளோ வந்து மக்களை சந்திக்கவுமில்லை, என்ன நடந்தது என்று விசாரிக்கவுமில்லை. மாறாக, மத்திய அரசை மகிழ்விக்கும் விதத்தில் தீவிரவாதிகள் புகுந்தார்கள், தேசவிரோதிகள் நுழைந்தார்கள் என்றெல்லாம் கதைகள் சொல்வதும், மத்திய அமைச்சர் பொன் ராதாகிருஷ்ணன் சொல்லும் புனைகதைகளைத் திரும்பச் சொல்வதுமாக இருந்தார்கள்.

இம்மாதிரியான தேசவிரோத குழுக்கள் இயங்கிக் கொண்டிருந்தால், உளவுத் துறைகள், புலனாய்வுத் துறைகள் இதுவரை என்ன செய்துகொண்டிருந்தார்கள்? ஏன் இவர்களைப் பற்றி அரசுக்கு முன்னரே சொல்லவில்லை.

மெரீனா போராட்டத்தின் முதல் ஆறு நாட்களில்கூட எதுவும் தெரிவிக்கவில்லையே ஏன்? சென்னையில் பல்வேறு பகுதிகளில் நடந்தேறிய தமிழகக் காவல்துறையின் அராஜகங்கள் பற்றி நீதி விசாரணை ஒன்று நடத்த வேண்டுமென்றும், குற்றம் செய்த காவல்துறையினர் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்கள் வழங்க வேண்டுமென்றும், ஜல்லிக்கட்டு வேண்டி போராடிய மாணவர்கள், இளைஞர்கள், அவர்களுக்கு ஆதரவு கொடுத்த மீனவர்கள், பொது மக்கள் மீது போடப்பட்ட பொய் வழக்குகளை திரும்பப் பெற வேண்டுமென்றும், காவல்துறையால் கடுமையாக தாக்கப்பட்ட அனைவருக்கும் மருத்துவ சிகிச்சை வழங்க வேண்டுமென்றும் நாங்கள் வலியுறுத்தினோம்.

தமிழகத்திற்கு ஒரு புது வழி தந்த நமது மாணவர்களையும், இளைஞர்களையும் அடித்து நொறுக்கி, அவர்களின் ஒப்பற்ற போராட்டத்தை வன்முறைக் காடாக்கி, அவர்கள் காட்டும் வழியை அடைக்க முயல்கின்றனர் பல ஆதிக்க சக்திகள். தில்லியில் எழுதி தயாரிக்கப்பட்ட அவசரச் சட்டத்தை உடனடியாக போராட்டக்காரர்களோடும், பொதுமக்களோடும் பகிர்ந்துகொண்டு, அவர்களுடைய கருத்துக்களையும் கேட்டுப் பெற்று, சனநாயக வழியில் அமைதியான முறையில் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவந்திருக்கலாம். புதிய அவசரச் சட்டம் மிருகவதைத் தடுப்பு சட்டத்தின் பிரிவு 22ஐ நீக்குவதாலும், சல்லிக்கட்டு என்பதை மறு விவரணம் செய்வதாலும் மாணவர்கள் அதை அப்படியே ஏற்றுக்கொண்டிருப்பார்கள். அதை குடியரசுத் தலைவரும், ஆளுநரும் அங்கீகரித்ததும், போராட்டம் வெற்றிக் களிப்போடு முடிவுக்கு வந்திருக்கும். ஆனால் இந்தச் சட்ட வரைவை யாருக்கும் தெரியாமல் மறைத்துவைத்தது ஏன்? மறைத்தது யார்? வன்முறை வெறியாட்டம் துவங்கிய பிறகே அது வாட்ஸ் அப்பில் வெளிவந்ததன் மர்மம் என்ன?

**போராட்டத்தை வெற்றியோடு, கொண்டாட்டத்தோடு முடிக்கவிடக் கூடாது என்று முன்னரே தீர்மானித்திருந்தனர் ஆதிக்க சக்திகள் என்கிற சந்தேகம் எழுகிறது. அனைவருக்கும் பொது சிவில் சட்டம் என்று ஆர்.எஸ்.எஸ்., பா.ஜ.க. பேசிக்கொண்டிருந்த வேளையில், நம் மாணவர்களின் போராட்டம் பி.சி.ஏ. சட்டத்தில் தமிழகத்துக்கு சிறப்பு அந்தஸ்தைப் பெற்றுத் தந்தது, அவர்களின் கோட்பாட்டை குழிதோண்டிப் புதைத்தது. இது சங்கப் பரிவாரத்தை சங்கடப்படுத்தியது. காங்கிரசில் இருக்கும் பார்ப்பனர்களாலும் இதை ஏற்றுக் கொள்ள முடியவில்லை. கீழடிப் பெருமைகளை மறைத்து நம்மை கீழே தள்ளப் பார்க்கிறவர்கள் நாம் மேலே எழுந்து வருவதை எப்படி ஏற்றுக்கொள்வார்கள்?**

தில்லி நிலைமை இதுவென்றால், சென்னை நிலைமை இன்னும் மோசம். தமிழரின் பாரம்பரிய உரிமைகளையும், பெருமைகளையும் மீட்டெடுக்கும் பொருட்டு தமிழக மாணவர்களும், இளைஞர்களும் அற்புதமான போராட்டமொன்றைக் கையிலெடுத்து, எள்ளளவும் வன்முறையின்றி அழகுற நடத்தி, மாபெரும் வெற்றியைப் பெற்றிருப்பது திராவிடஸ்தான் பிரகஸ்பதிகளுக்கு வயிற்றுப்போக்கை ஏற்படுத்தியது. ஊழலும், ஊதாரித்தனமும், வளக்கொள்ளையும், பணக்கொள்ளையுமாக ஐம்பது ஆண்டுகள் ஆண்டு அனுபவித்தவர்களுக்கு இது நிச்சயமாக ஏற்புடையதாய் இருக்கவில்லை. கடிதம் எழுதிப் போடுவதும், கதைகள் சொல்வதும், ஒருவரையொருவர் குறை சொல்வதுமாக நம்மை ஏமாற்றிக்கொண்டிருந்தவர்களுக்கு, மாணவர் காட்டும் புதுவழி கிலி பிடிக்கச் செய்தது. போராட்டத்தை திசை திருப்புவதிலும், வன்முறையை நிகழ்த்துவதிலும் பிரகஸ்பதிகள் பலர் இருந்ததாகச் சொல்கிறார்கள்.

அதேபோல, ஆளும் கட்சியில் அதிகாரத்துக்கு வர விரும்பும் தரப்பு ஆண்டுகொண்டிருக்கும் தரப்பை வீழ்த்த வன்முறையைத் தூண்டியதாகவும் சொன்னார்கள். தில்லிக்காரர்களும் வன்முறையையே காரணம் காட்டி குடியரசுத் தலைவர் ஆட்சியைக் கொண்டுவந்து கொல்லைப்புறமாக உள்ளே நுழையவும் ஆசைப்பட்டதாகவும் தெரிகிறது. எதுவாக இருந்தாலும், ஆதிக்க சக்திகள் அனைத்தும் அம்பலப்பட்டுவிட்டார்கள் என்பதுதான் உண்மை. மாணவர் போராட்டம் மாபெரும் வெற்றி பெற்றிருக்கிறது. மாணவர்கள் காட்டும் இந்தப் புதுவழியில் தொடர்ந்து பயணம் செய்து தமிழர் எல்லோரும் நம் வளங்களை,

வாழ்வாதாரங்களை, வாழ்க்கையை, வருங் காலத்தை செழுமைப்படுத்த சபதமேற்போம்.

நம் மாணவர்களால், இளைஞர்களால் நாம் இன்று ஒருபடி உயர்ந்து நிற்கிறோம். தமிழரை கிள்ளுக்கீரை என்று நினைத்தவர்கள் எல்லாம் இன்று அண்ணாந்து ஆச்சரியத்தோடும், மரியாதையோடும் பார்க்கிறார்கள். தில்லி எசமானர்களும், சென்னை அடிமைகளும் அவர்களைக் கண்டுகொள்ளாதது போல நடித்தாலும், உண்மையிலேயே நடுங்கிக் கொண்டிருக்கிறார்கள். இது ஒரு மாபெரும் வெற்றி!

போராட்டம் தோல்வி என்றோ, முடிந்து விட்டது என்றோ சொல்பவர்களை அருகே வரவிடாமல் துரத்தி விடுவோம். போராட்டக் களத்தில் தோல்வியே கிடையாது. அண்மை வெற்றி, தாமதமான வெற்றி என இரண்டு வெற்றிகள் மட்டுமே அங்கேக் கிடைக்கின்றன. அதே போல, தமிழ் மக்கள் போராட்டம் இப்போதுதான் துவங்கியிருக்கிறது. இந்தத் தண்டமிழ் நாட்டை தூய்மைப்படுத்தும் பணி, நமது குழந்தைகளுக்கும், அவர்களின் வழித்தோன்றல்களுக்கும் நம் நாட்டை வாழ்வதற்கு ஏற்ற இடமாக மாற்றும் பணி இப்போதுதான் தொடங்கியிருக்கிறது. இது தொடர்ந்தாக வேண்டும்.

**கூடங்குளம் அணுமின் நிலையத்துக்கு எதிரான இடிந்தகரைப் போராட்டம் தோல்வியில் முடிந்தது என்று முடிவுரை எழுதிய மூடர்கள் முழி பிதுங்கி நிற்கிறார்கள். தமிழகமெங்கும் நம் பிள்ளைகள் நடத்திய அசம்பாவிதம் ஏதுமில்லா அறவழிப் போராட்டம், பெண்களை முன்னிலைப்படுத்தி மகிமைப்படுத்திய விதம், சாதி மதம் பாரா சன்மார்க்க நெறிமுறை, சமரசமில்லா உறுதிப்பாடு, கடலுக்குள்ளே இறங்கி உயிரையேத் துச்சமென மதித்து நின்ற துணிச்சல் போன்றவையெல்லாம் இடிந்தகரை முடிந்தகரையல்ல, அது தமிழினத்தின் விடிந்தகரை என்பதை கோடிட்டுக் காட்டுகின்றன.**

போராட்டத்தைத் தொடரும் விதமாக தமிழ் மாணவர்கள், இளைஞர்கள், பெண்கள், பொதுமக்கள் அனைவரும் ஓர் ஒத்துழையாமை இயக்கத்தை உடனே கையிலெடுப்போம்:



[1] சினிமாக்காரர்களை பொழுது போக்குக்காக மட்டுமே பயன்படுத்துவோம். சினிமாவை விட்டு விலகி குறிப்பிட்ட காலம் மக்கள் தொண்டு ஆற்றாத வரை, இவர்கள் பொதுவாழ்க்கையில் ஈடுபடுவதை ஏற்றுக்கொள்ள மாட்டோம்.

[2] பணமில்லாப் பரிவர்த்தனைகளில் இயன்றவரை ஈடுபட மாட்டோம். சிறு குறு வியாபாரிகள், உள்ளூர் கடைகளையே ஆதரிப்போம். பன்னாட்டு நிறுவனங்களை, அவர்கள் ஊக்குவிக்கும் நுகர்வு கலாச்சாரத்தைப் புறக்கணிப்போம்.

[3] கோக், பெப்சி போன்ற வெளிநாட்டு குளிர்பானங்களைத் தொடவே மாட்டோம்.

[4] தமிழக விவசாயிகள் உற்பத்தி செய்யும் சிறு தானியங்களை அன்றாட வாழ்வில் அதிகம் சேர்த்துக் கொள்வோம். உள்ளூர் விவசாயத்தை பேணிக் காப்போம்.

[5] தமிழக மீனவர்களுக்கு எதிராக கடற்கரையில் அமைக்கப்படும் அழிவுத் திட்டங்களை ஏற்க மறுப்போம்.

[6] தமிழர்களுக்கு எதிராக எழுதும், பேசும் பத்திரிகைகள், இதழ்கள், டி.வி. ஊடகங்களை ஒதுக்கித் தள்ளுவோம்.

[7] பெயருக்குப் பின்னால் 'ஜி' போட்டு யாரையும் அழைக்க மாட்டோம், அந்த அடைமொழியை சேர்த்துப் பேச மாட்டோம்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக, நமது மாணவர்களில், இளைஞர்களில் உண்மை, உறுதி, ஒழுக்கம் கொண்ட ஒவ்வொருவரும் தலைவர்களாக முகிழ்த்தாக வேண்டும். நடைபெறவிருக்கும் உள்ளாட்சித் தேர்தலில் தமிழகம் முழுவதும் மாணவ, மாணவிகள், இளைஞர்கள் போட்டியிட வேண்டும்.

மெரீனா, அலங்காநல்லூர், கோவை போன்ற பகுதிகளில் நடத்திய துரோகங்களுக்கு, துயரங்களுக்கு பதிலளிக்கும் அடுத்தக்கட்டப் போராட்டமாக அது அமையட்டும். தொடரட்டும் மக்கள் புரட்சி!




திரு.
சு.வெங்கடேசன்

# அவசரச் சட்டமும் ரகசியத் திட்டமும்




**ஜல்லிக்கட்டுக்கான அவசரச் சட்டம் ஜனவரி 21 ஆம் தேதி பிறப்பிக்கப்பட்டது. 23 ஆம்தேதி சட்டமன்றத்தால் நிரந்தரச் சட்டமானது. இடைப்பட்ட நாட்களில் அது ரகசிய சட்டமாக வைக்கப்பட்டிருந்தது ஏன்? போராடுபவர்களை முழுமுற்றாக களத்தில் இருந்து அகற்றும் வரை, அரசின் இணையதளத்திலோ, ஊடகங்களுக்கோ, பொதுவெளிக்கோ அவசரச் சட்டத்தின் பிரதிகள் கசிந்துவிடாமல் மறைத்துவைத்தது எதனால்? இந்தக் கேள்விக்கான விடையில் தான் தமிழகம் தெரிந்து கொள்ளவேண்டிய உண்மைகள் புதைந்திருக்கின்றன.**

ஜனவரி 17 ஆம் தேதி காலை ஆறுமணிக்கு அலங்காநல்லூரில் 135 பேர் கைது செய்யப்பட்டதோடு துவங்கியது இந்தப்போராட்டம். அடுத்தநாள் மாலை மெரினாவில் நிற்பவர்களின் எண்ணிக்கை லட்சத்தைத்தொட்டது. அதற்கு அடுத்தநாள் அதன் பெருக்கல் தொகையை தமிழகம் பார்த்தது. 135 பேர் சுமார் பத்து லட்சம் பேராக மாறியதற்கு இடையில் இருந்தது வெறும் ஐம்பது மணி நேரமே. இப்படி ஒரு பெருவெடிப்பு எப்படி நிகழ்ந்தது?

வழக்கு நீதிமன்றத்தில் இருக்கிறது; எங்களால் எதுவும் முடியாது என்று கதையடித்துவந்த நீங்கள் முழுமுற்றாக அம்பலப்பட்டு நின்றது அன்று தான். அந்தத் தோல்வியில் இருந்துதான் உங்களது வஞ்சகமும், பழிவாங்கலும் துவங்கியது. உங்கள் தோல்வியை மறைக்க கைவசம் இருந்த ஒரேவழி வெற்றியை சீர்குலைப்பது மட்டுந்தான்.

தனி நபர்களோ, குழுக்களோ, இயக்கங் களோ இதனை கட்டி எழுப்பவில்லை. இது பின்னப்பட்ட வலைத்தொடர்புகளால் மட்டும் உருவானதல்ல. உணர்வுகளின் ஒருங்கிணைப்பால் மேலெழுந்த பேரலை. இன்னும் சொல்லப்போனால் நீங்கள் தொடர்ந்து கொடுத்துவந்த அடியின் அழுத்தம் தாங்காமல் ஏற்பட்ட வெடிப்பு. காவிரி, முல்லைப் பெரியாறு, மீத்தேன் என நீளும் புறக்கணிப்பின் வலிதாங்காமல் வெளிவந்த குமுறல்.





ஜல்லிக்கட்டு

இன்னும் சொல்லப்போனால் உங்களை பயமுறுத்தியதும் அந்த ஆசைதான். ஏழு நாட்களாக தமிழகம் முழுவதும் நிகழ்ந்த போராட்டத்தில் ஒற்றைக்கல்கூட வீசப்படவில்லை, பேருந்தின் சிறு கண்ணாடி கூட உடையவில்லை. இத்தனை லட்சம்பேர் பொதுவெளியில் இத்தனைநாட்கள் கூடியும் டாஸ்மாக்கின் வருமானம் துளிகூட உயரவில்லை. நீங்கள் எதிர்பார்த்த எந்த பலகீனமும் இல்லாமல் ஒரு கூட்டம் கண்ணுக்கு முன்னால் உருத்திரண்டு நின்றது. அதனால்தான் நீங்கள் பதற்றத்தின் உச்சிக்குப் போனீர்கள். இப்போராட்டத்துக்குள் இருந்த அறம் உங்களை நடுங்கச்செய்தது. அதனால்தான் அதற்கு நேரெதிரான சொற்களான, தீவிரவாதம், அல்கொய்தா, சமூகவிரோதிகள் எனப் பேச ஆரம்பித்தீர்கள். தேசியக்கொடியை போர்த்திக் கொண்டால் போலீஸ் அடிக்காது என்று நம்பி நீங்கள் ஓங்கிய லத்திக்கு முன் உடல்குறுகி உட்கார்ந்தான் மாணவன். கடற்கரைச் சாலையில் தேசியக்கொடிக்கு அவன் செய்த மரியாதையின் தூசிக்கு ஈடல்ல, அடுத்தடுத்த நாட்களில் நீங்கள் செய்தது.

அப்பல்லோ முதல் போயஸ் கார்டன் வரை, சேகர் ரெட்டி முதல் ராமமோகன ராவ் வரை முகம் சுழித்து, கூனிக்குறுக வைக்கும் தமிழக அரசியலின் அசூசையால் ஏற்பட்ட எழுச்சி. அதனால் தான் மக்கள் இவ்வளவு தூய்மையாக இதனை நடத்திக்காட்டினார்கள். நீங்கள் யார்? நாங்கள் யார்? என்பதை உலகுக்குச் சொல்ல ஒவ்வொரு இளைஞனும் ஆசைப்பட்டான். அந்த ஆசை எல்லோருக்கும் இருந்ததால்தான் தங்கள் வீட்டுக் குழந்தைகள் கைஉயர்த்தி கோஷம் போடுவதை இத்தனை லட்சம் குடும்பங்கள் முதன் முறையாக அனுமதித்தன. அந்த ஆசைதான் இசைஞானியை போர்ப்பரணி பாடவைத்தது. அந்த ஆசை தான் காவலரை சீருடையோடு போராட்டத்தில் கலந்து கொள்ளச்செய்தது. அந்த ஆசைதான் மீனவக் குப்பத்திலிருந்தும், மசூதியிலிருந்தும், உணவுப் பொருட்களை அள்ளிவழங்க வைத்தது. அந்த ஆசை தான் உணவும் உறைவிடமும் பார்க்காமல் ஊர்கள் தோறும் இளைஞர் கூட்டத்தைச் சுழல வைத்தது.

பத்து மணிக்கு மேல் எங்கும் கூட்டம் நடத்தக்கூடாது, அப்படியே கூட்டம் நடத்துவதாக இருந்தாலும் மக்களுக்கு சம்பந்தமே இல்லாத ஒதுக்குப் புறத்தில் தான் கூட வேண்டும். அதற்கு அனுமதி வாங்க பலமுறை அலையவேண்டும் என்று கடந்த சில ஆண்டுகளாக தமிழகத்தில் எத்தனையோ விதிகளை உருவாக்கி ஒன்று கூடும் மனிதச்செயல்பாட்டை முடிவுக்கு கொண்டுவர நீங்கள் நினைத்தீர்கள். ஆனால் ஒரே நாளில் உங்களின் அத்தனை உத்தரவுகளையும் முடிவுக்கு கொண்டு வந்தனர் தமிழகத்து இளைஞர்கள். அதுவும் உங்களின் தலைமையகத்து வாசலில். ஒரு நாள் இருநாள் அல்ல, ஏழுநாட்கள். எப்படிச் சகிக்க முடியும் உங்களால்?

காவல்துறையின் கணக்கும் ஆளுங்கட்சியின் கணக்கும் ஒன்றாயின. 17ஆம் தேதி போராட்டம் துவங்கியது. முதல்வரின் அறையில் இருந்து எட்டிப்பார்க்கும் தூரத்தில்தான் அது நடந்தது. ஆனால், அந்த சில நூறடியை கடப்பது எளிதல்ல, பல ஆயிரம் கிலோமீட்டர் கடந்து தில்லிபோவது எளிது. கடந்த மூன்று ஆண்டுகளாக எண்ணற்ற பொய்களைச் சொல்லி ஏமாற்றிய மத்திய, மாநில அரசின் தலைமைகள் இருவரும் சந்தித்த பொழுது புதிதாய்ச் சொல்ல பொய்களற்று முழித்தீர்கள். ஏனென்றால் உண்மையின் ஆவேசம் தமிழகத்தின் வீதிகள் தோறும் எழுந்துநின்றது. வேறு வழியே இல்லாமல் 20ஆம் தேதி அவசரச் சட்டம் கொண்டுவர முடிவு செய்தீர்கள். ஒரே நாளில் அவசரச்சட்டத்தை மாநில அரசு நிறைவேற்றி, அதே நாளில் மத்தியஅரசின் அனைத்து துறைகளும் ஒப்புதல் கொடுத்தன. அன்றே ஆளுநரின் கையொப்பமும் பெற்று ஜல்லிக்கட்டுக்கான அவசரச் சட்டம் அமலானது. உங்கள் அதிகாரத்தின் ஆணவம் நொறுங்கிவிழ ஒற்றை நாள்தான் ஆனது. வழக்கு நீதிமன்றத்தில் இருக்கிறது எங்களால் எதுவும் முடியாது என்று கதையடித்துவந்த நீங்கள் முழுமுற்றாக அம்பலப்பட்டு நின்றது அன்று தான். அந்தத் தோல்வியில் இருந்துதான் உங்களது வஞ்சகமும், பழிவாங்கலும் துவங்கியது.





ஜல்லிக்கட்டுப் போராட்டம் வெற்றி என்ற அறிவிப்பு, உங்களின் அரசியல் தோல்வியோடு நேரடியாக சம்பந்தப்பட்டது. திறந்துவிடப்படும் காளை முதலில் யாருடைய குரல்வளையை குத்தும் என்று உங்களுக்கு நன்றாகவே தெரியும். அந்த உண்மைதான் உங்கள் இருவரையும் ஆத்திரங் கொள்ளச்செய்தது. உங்கள் தோல்வியை மறைக்க கைவசம் இருந்த ஒரேவழி வெற்றியை சீர்குலைப்பது மட்டுந்தான். இந்த மாபெரும் எழுச்சியோடு உங்களின் பூர்வபயமும் இணைந்து கொண்டது. ஜல்லிக்கட்டுக்கான கோபம், செத்து மடியும் விவசாயின் கோபமாக மாறிவிடக்கூடாது. ஏடிஎம் வாசல் மெரினா சாலையோடு இணைந்துவிடக்கூடாது. வாடிவாசலில் இருந்து காளைகள் துள்ளிக்குதிக்க வேண்டும்; ஆனால் திமிறும் அதன் திமில் ஒடுக்கப்பட வேண்டும். அதற்குத்தான் நீங்கள் திட்டம் வகுத்தீர்கள். நிறைவேற்றப்பட்ட அவசரச்சட்டம் என்னவென்றே சொல்லாமல் வித்தை காட்டினீர்கள். சட்டத்தை கண்ணில் காட்டாமல் நம்பிக்கையைக் கோரினீர்கள். உங்கள் மீதான கடந்த கால அவநம்பிக்கையையே உங்களுக்கு சாதகமான கருவியாக மாற்றினீர்கள்.

**நாங்கள் சட்டம் கொண்டுவந்துவிட்டோம்; அவர்கள் கலையாமல் இருக்கிறார்கள் என்றீர்கள். போராட்டத்தின் நோக்கத்துக்கு எதிராக போராட்டக்காரர்களை நிறுத்த சாமர்த்தியமாய் செயல்பட்டீர்கள். ஒரே நாளில் ஜல்லிக்கட்டுக்கானவர்களாக நீங்கள் மாறி போராடிக் கொண்டிருந்தவர்களைப் பார்த்து யாரெனக் கேட்டீர்கள். போராட்டக்களத்தில் வேறு முழக்கம் கேட்கிறது என்று சொன்னீர்கள். தவறாக வழிநடத்தப்படுகிறார்கள்; அரசியல் பக்குவமற்றவர்கள் என்று, அழைத்துவரப்பட்டவர்களை வைத்து பேசவைத்தீர்கள். தலைமையற்ற போராட்டம் இப்படித்தான் ஆகும் என அக்கறையோடு முத்துக்கள் உதிர்த்தீர்கள். தடைசெய்யப்பட்ட இயக்கம் என்றீர்கள் கடைசியாக ஒசாமா பின்லேடனிடம் கொண்டு போய்ச் சேர்த்தீர்கள். அலங்காநல்லூரின் பெயர்ப் பலகையில் ஆப்கானிஸ்தான் என்று எழுதி கதையை முடித்தீர்கள்.**

நீங்கள் விரும்பும் நாளும் வந்தது. உங்களின் பூட்ஸ் கால்கள் உற்சாகமாக களம் இறங்கின. உங்களின் லத்திகள் தமிழகம் எங்கும் சுழன்றன. தடிகளையும், கற்களையும் கொண்டு பொதுவெளியில் ஒரு பேச்சுவார்த்தையை துவக்கினீர்கள். நீங்கள் விரும்பியதைப் போலவே எதிர்கற்கள் வீசப்பட்டவுடன் உற்சாகமடைந்து உலகத்தைப்பார்த்து நீதிசொல்ல ஆரம்பித்தீர்கள். சட்டம் ஒழுங்கை காக்கும் வீரபுருஷர்களாக மாறினீர்கள். இறுதியாக உங்களைப்பாராட்டி 27ஆம் தேதி சட்டமன்றத்தில் முதல்வர் அறிக்கையும் வாசித்தார். அதில் அவர் குறிப்பிடுகிறார்: ‘ஜல்லிக்கட்டு தடை நீங்கிய மகிழ்ச்சியை மாணவர்கள், இளைஞர்கள், பொதுமக்கள் அனுபவிக்க முடியாதபடி சமூகவிரோதிகள் செய்துவிட்டனர்’

எவ்வளவு உண்மையான வாசகம் இது. நீண்ட காலத்துக்குப்பின் முதலமைச்சரின் அறிக்கைக்கு எழுந்து நின்று மரியாதை செய்யத் தோன்றியது. முதல்வர் குறிப்பிடும் அந்த சமூக விரோதிகளின் நோக்கம் இந்த போராட்டத்தை முடிவுக்கு கொண்டுவருவது மட்டுமல்ல, போராட்டம் என்ற எண்ணத்தையே முறிப்பது. அதற்கான திட்டத்தைத்தான் அவர்கள் செயல்படுத்தினர். ஆனால் இயற்கையின் விதி வேறொன்று; முறிபடும் கிளையே நாற்புறமும் தழைக்கும்.



# மெரினா தை எழுச்சி

## பகுப்பாய்வு 1

எல்லா போராட்டங்களும் குறியீடுகள் வழிதான் நிகழும். அதிகாரத்தின் குறிகளை சிதைத்தல், மாற்றுக் குறிகளை உருவாக்குதல் என்பதே இன்றைக்கான போராட்ட வழிமுறை. இதுவே புதிய இடதுசாரி சிந்தனைமுறையாகும். அதை சரியாக செய்துள்ளது “மெரினா தை எழுச்சி”.

சல்லிக்கட்டு என்பது ஒரு ஆதிக்கசாதியின், அதிகாரத்தின், ஆணவத்தின் குறியீடாக இருந்ததை சிதைவாக்கம் (டிகன்ஸ்டரக்ஷன்) செய்துள்ளது. சல்லிக்கட்டு என்பது வெறும் தமிழ் பண்பாட்டை சொல்லும் காளையின் வீரவிளையாட்டு மட்டுமல்ல அதனுள் பொதிந்துள்ள பொருளியல் நலன், சமூகவயம், வரலாற்று தொடர்ச்சி என்பதை வெளிப்படுத்தியுள்ளது. சல்லிக்கட்டு என்கிற குறியை முற்றிலுமாக சிதைத்து கார்பரேட் காவிகளின் நலனை வெளியேற்றி தமிழினம் என்கிற புதிய குறியாக்கியுள்ளது. இனியான தமிழன் இந்த எழுச்சியின் வழி அறியப்பட்ட குறியாகவே குறிப்பீடு செய்யப்படுவான். இதுதான் இது தரும் மகத்தான செய்தி.





## திரு. ஜமலான் தமிழ்

## பகுப்பாய்வு2:

தமிழ் என்கிற சாதிய சைவக் கருத்தியல் முற்றிலுமாக சிதைவாக்கம் செய்யப்பட்டு மதச்சார்பற்ற சாதிசார்பற்ற தமிழன் என்கிற இனக்கருத்தியலுக்கான வடிவத்தை எடுத்துள்ளது. இது ஒரு நல்ல சமூகவயப்பட்ட குறியாடல். இதில் கலந்துகொண்ட அனைவரும் இதே கருத்தியலுடன் தொடர்ந்து இருக்கப்போவதில்லை. அதில் பலரோ அல்லது சிலரோ மீண்டும் சாதிய, மத, இனவெறி கொண்டவர்களாக மாறலாம். என்றாலும், ஒரு எழுச்சிக்குள் நுழைந்து வெளியேறும் உடல் என்பது நனவிலயாக பெறும் உயிர் ஆற்றல் முக்கியமானது. அதில் சில ஆயிரம் இளைஞர்கள், மாணவர்கள், குழந்தைகள், பெண்கள், மாணவிகள் அரசியல்வயப் படுத்தப்படுவதே இந்நிகழ்வின் மாபெரும் வெற்றி.

அடையாளம் என்பது மாறாத மோலார் தன்மைகொண்டது அல்ல. அது மாறிக் கொண்டிருக்கும் மூலக்கூறு தன்மைகள் கொண்டது என்பதால் அடையாளங்கள் வேர் பாய்ந்து நிற்பதில்லை. வலைப்பின்னலில் அது மற்றமைகளினால் உருவாகி உருவாகி கலைவது. ஆனால் ஒவ்வொரு கலைவிற்கும் ஒரு கூறை அது உள்ளிருத்துகிறது. அப்படியான அரசியல் கூறுகள் உடலில் பதிவாகும் ஒரு வெளியே இது.

தூங்கியதாக, உதிரிகளாகிவிட்டதாக, சுயமரியாதை அற்றதாக எண்ணிய ஒரு சமூகம் தனது விழிப்பை காட்டியுள்ளது என்பதே முக்கியம். எத்தனை சதிகள் இதில் இருந்தாலும் இந்தி எதிர்ப்பு போர் என்பது எப்படி ஒரு வரலாற்று நனவிலியாக மாறியதோ அப்படி ஒரு நனவிலியாக மாறியுள்ளது இந்நிகழ்வு. இது ஒரு படைப்பூக்கமிக்க புனைவுவெளியை திறந்துவிட்டுள்ளது. இனி தமிழில் மொழிபெயர்ப்பு படைப்புகளால் நிறைந்து வழியும் இலக்கிய வெளியைத்தாண்டி இதில் கலந்துகொண்டவர்கள் உருவாக்கும் கதையாடல்களின் புனைவு என்பதே இனியான தலைமுறைகளின் கதைகேட்பதாக அமையும். இதுதான் இதன் சமூகவெற்றி. இது ஒரு புதிய சமூகநனவிலியை கட்டியுள்ளது.

## பகுப்பாய்வு3:

மெரினா செல்லும் பேருந்தில் உள்ள பாதிக்கும் மேற்பட்ட இளைஞர்கள் கருப்பு சட்டை, கருப்பு டீசர்ட், கருப்பு துண்டு எனக் காணப்படுகின்றனர். கருப்பு என்கிற பெரியாரின் எதிர்ப்பு என்கிற குறியீடு ஒரு நனவிலிப்போல எல்லா இளைஞர்களிடமும் விரவியுள்ளது. பெரியாரை யார் என்று அறியாமலே எண்ணற்ற பெரியார்களாக உருவாகுதல் நிகழ்கிறது. கருப்பை பெரியார் திராவிட இனம் கருப்பர்கள், மிலேச்சர்கள் என்று குறியிட்ட வர்ணக்கோட்பாட்டு சனாதன இந்து மதத்தை எதிர்க்க அதையே தனது சிந்தனையின் குறியீட்டு நிறமாக மாற்றினார். கருப்பை துக்கம், மரணம் போன்ற தாழ்ந்த செயல்களுக்கானதாக ஒதுக்கிய இந்து சனாதனக் கோட்பாட்டையும், உலக அளவில் வெள்ளை ஐரோப்பியம் அறமற்றதாக குறிநிலைப்படுத்தியுள்ள கருப்பை (கருப்பு பணம், கருப்பு சந்தை) விடுதலைக்கான போராட்டத்திற்கான எதிர்ப்பிற்கான நிறமாக்கியவர் பெரியார். திராவிடத்தின் கருப்பு தற்போது இளைஞர்களால் தமிழின் குறியீடாக மாற்றப்படுகிறது. கருப்புச்சட்டைத் தமிழனாக பலரும் குழுமியுள்ளதும், அதை ஒரு போராட்ட வடிவமாக ஏற்றிருப்பதும் கருப்பு என்கிற திராவிடக் குறியினை தமிழினக் குறியாக மாற்றியுள்ளது.

விடுதலை, சுதந்திரம் என்பது மிகைல் பக்தின் கூறிய கார்னிவல் களிப்பாக மாறியுள்ளது. மத்தியமாநில அரசுகளின் கொடும்பாவிகளும், தாரை தப்பட்டை சவ ஊர்வலங்களும், உருவ பொம்மையை செருப்பாலடிக்கும் பெரியார் வழி சுயமரியாதை போராட்ட வடிவங்களும் நிறைந்து வழிகிறது மெரினாவில்.

# பகுப்பாய்வு4:

பால் (னீவீறீளீ) அரசியல் பள்ளிலிக்கிறது. நம்மைச் சுற்றியுள்ள ஒவ்வொன்றும் கார்பரேட்டுகளால் கைப்பற்றப்படுவது உணரப்பட்டுள்ளது. சிறுவியபாரிகளை ஒழிக்க மோடியின் செல்லாக்காசுத்திட்டம். விவசாயிகளை ஒழிக்க காவேரிப்பிரச்சனை. கார்பரேட்டுகள் தண்ணீரை களவாடி கோக்காக விற்பதற்காக நதிநீர்களை கையில் எடுப்பது. இப்படி வாழ்வின் அனைத்து அடிப்படை மூலங்களிலும் கார்பரேட்டுகள் தங்கள் அதிகாரவலையை விரிப்பதை இப்போராட்டம் உணரவைத்துள்ளது. எல்லோருக்கும் ஏதோ ஒருவகையில் நாம் கார்பரேட்டுகளால் சுரண்டப்படுகிறோம் என்ற உணர்வு வந்துள்ளது.

தொடர்ந்து மக்களை மதிக்காத அரசுகளின் திமிர்த்தனம் ஏற்படுத்திய அதீத வெறுப்பு. தன்னை வாக்கு வங்கியாகவும், பணத்திற்கு வாக்களிக்கும் சோரம் போனவர்களாக கருதும் அரசியல் கட்சிகளின் அலட்சிய மனப்போக்கிற்கு எதிராக தனது சுயத்தை வலிமையாக வெளிப்படுத்தும் ஏக்கம். அதற்கு கிடைத்திருக்கும் ஒரு நல்வாய்ப்பாக மக்கள் இதில் கூட்டம் கூட்டமாக வந்து பங்கேற்பதில் புரிந்துகொள்ள முடிகிறது. மனக்காயங்களை வெளிப்படுத்தும் குமுறல்களே முழக்கங்களாக ஆட்டங்களாக பாட்டாக வெளிவருகிறது. காளை ஒழிப்பின் கார்பரேட் நலன்களை அதற்கு காவடி தூக்கும் காவிகளின் நலனை, அதற்கு கைகட்டி நிற்கும் தமிழக அரசை அம்பலப்படுத்தி நடுத்தெருவில் அம்மணமாக்கியுள்ளது ”மெரினா தைஎழுச்சி”.



# பகுப்பாய்வு5:


மெரினா தைஎழுச்சி இன்றைக்கான சமூகத்தில் ஒரு பின்நவீன உத்தியாக பிரடரிக் ஜேம்சன் என்கிற மார்க்சியர் முன்வைத்த ''பேஷ்டிச்'' (றிணீஃமீவீநீலீமீ) என்கிற ''பழமைக்கு புதிய அர்த்தம் தந்து நவீனத்தில் ஒட்டுதல், பழமையை நவீன பொருள் போலச் செய்து காட்டுதல், பழமையை முன்வைத்து நவீனத்தை பகடி செய்தல், பழமையை புத்தாக்கம் செய்தல்'' என்ற செயலை சல்லிக்கட்டு போராட்டம் என்ற குறி வழியாக நிகழ்த்தியுள்ளது.



இது ஒரு பின்காலனியப் போர். பண்பாடு என்ற பெயரில் பழமையை காப்பதோ தூக்கிப்பிடிப்பதோ அல்ல. பண்பாட்டை மீளாக்கம் செய்வதன் வழியாக அதன் பின் உள்ள கார்பரேட் காவிகளை விரட்டியடிப்பதே. தேசியம் என்ற பெயரில் இழிநிலைக்கும், இரண்டாந்தர குடிமக்களாக தமிழ்நாட்டு மக்களை நடத்தியதற்கும் எதிரான ஒரு குறியீடு. இதற்குள் சாதியை, மதத்தை, தீண்டாமையை தேடுவதும் அதன் காரணமாக எதிர்ப்பதும், வரலாற்றில் தன்னை தனிமைப்படுத்திக் கொள்ளும் தற்கொலை முயற்சியே.

இது தெல்யுஸ்கத்தாரி கூறும் ரைசோமேட்டிக் (தமிழில் சல்லிவேராக்கம் அல்லது குறுக்குமறுக்கு என்று சொல்லலாம்) அசம்பலேஜ். யார் வேண்டுமானாலும் எங்கு வேண்டுமானாலும் போராட்டத்தில் இணையலாம், கலையலாம். வேறு ஒரு இடத்தில் மீண்டும் இணையலாம். முழக்கங்களில் தனது அரசியலை முன்வைத்து செயல்படலாம். மையமற்ற பல்கிப் பரவி நிகழும் ஒரு எழுச்சி.

தமிழ் என்கிற கருத்தியல் காவிகார்பரேட்டை எதிர்க்கும் சல்லிக்கட்டு அரசியலாக உயிர்முதலீடு செய்யப்படும் நிகழ்வே இந்த போராட்டத்தில் கிடைத்த வெற்றி.




## பகுப்பாய்வு6:

மையமற்ற எழுச்சியான புதியதொரு போராட்ட முறையை உண்மையில் பெருந்திரள் மக்களுக்கான குடியாண்மை ஜனநாயக அரசியலை அதற்கான போராட்ட வடிவை அறிமுகப்படுத்தி வெற்றியடைந்துள்ளனர். திரள்கள்தான் இனி புரட்சிக்கான அடிப்படைகளை உருவாக்குபவர்கள் என்பதை நடத்திக் காட்டியுள்ளார்கள். இனி புரட்சிகர சக்திகள் இந்து பெருந்திரளிலிருந்துதான் உருவாகும்.

இதற்கு ஒரு மையத்தை உருவாக்க முயன்ற எல்லா ஊடக, பத்திரிக்கை, முகநூல் வாசிகளையும் திணறடித்துள்ளனர். சிலர் தற்போது மையமாகி இதை தங்களது சுயலாபத்திற்கு கடத்தி செல்லமுயல்கிறார்கள். இனிதான் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். போராட்டமே கடினம், அதன் பலனை அறுவடை செய்வது எளிது. தற்போது அந்த கட்டத்தை நெருங்குகிறது போராட்டம். இது ஒரு காவியசோகம்தான்.

## பகுப்பாய்வு7:

இனி வெற்றி தோல்வி என்கிற தன்முனைப்பு விளையாட்டில் ஈடுபடாமல் கூடியது தெரியாததைப்போல கலைவதும் தெரியாமல் கலைவதே சரியான வழிமுறையாக இருக்கும் எனத் தோன்றுகிறது. அரசை திணறடிப்பதற்கு இப்புனைவு வெளியின் மர்மமே முக்கியமானது. அரசோடும் அதிகாரத்தோடும் மக்கள் நிகழ்த்தும் கண்ணாமூச்சி விளையாட்டாக இது நிகழ்வதால் மக்களிடம் அரசு தன்னை கிள்ளுக்கீரையாக நடத்தமுடியாது என்கிற உளவியல் பலத்தை தரக்கூடியதாக அமையும்.

முடிவை அடைவதற்கு இது ஒரு நாவலோ, கதையோ அல்ல. முடிவுகள்தான் ஆரம்பத்தை தீர்மாணிக்கிறது. முடிவற்றது எப்பொழுதும் ஆரம்பமாக மட்டுமே அமையும். துவக்கம், முன்னணி இதுவே போராட்டத்திற்கு தேவை. செல்லாக்காசு திட்டத்தைவிட ஒரு பெரும் அவலத்தை, சோகத்தை மக்கள் அனுபவித்திருக்க மாட்டார்கள். துன்பமும், துயரமும் இயல்பு என அதை ஏற்று வாழும் ஒடுங்கிய நிலைக்கு ஆளாக்கப்பட்ட மக்களின் கையறு நிலையிலிருந்து ஒரு பெரும் சுதந்திரத்தை, விடுதலையை, நம்பிக்கையை பெற்றிருக்கிறார்கள். ஒரு உரிமைக்கான வேட்கை திறக்கப்பட்டுள்ளது. அது பற்றி பரவ, மக்கள் தங்களுக்குள் அதை பொறியாக காப்பதற்கு இப்போராட்டம் பயிற்று வித்திருக்கிறது. இதை இப்படியே மையமற்ற தான, முடிவற்றதான, பொருள்புரியா ஒரு சொல்லாடலாக மாற்றுவதே சரியான உத்தி.

## பகுப்பாய்வு8:

தற்போது அரசும் போராட்டக்காரர்களும் தங்களது தற்போதைய செயலுக் கான நியாயப்படுத்தல்களை (லெஜிட்டைமை சேஷனை) உருவாக்க முனைகிறார்கள்.

"பின்நவீன நிலமை" என்ற புகழ் பெற்ற நூலை எழுதிய லியோதார்த் "லெஜிட்டைமை சேஷனை" என்ற கோட்பாடு பற்றி பேசுகிறார். ஒவ்வொரு செயலும் போராட்டம், தினவாழ்வு,

அரசின் செயல், பொதுவாழ்வின் செயல், சுயநல செயல்கள் போன்ற சிறுகதையாடல்கள் அல்லது சின்ன கதையாடல்கள் தன்னை லெஜிட்டைமைஸ் (நியாயப்படுத்திக்கொள்ள) செய்துகொள்ள ஒருபெருங்கதையாடலுடன் தன்னை இணைத்துக் கொள்ளும். நவீனத்து சமூகத்தில் அத்தகைய பெருங்கதை யாடல்களாக உருவானவைதான் விடுதலை, சுதந்திரம், வளர்ச்சி, முன்னேற்றம் என்பதெல்லாம். இப்படியான சிறுசிறு கதை யாடல்கள் இந்த பெருங்கதையாடலுடன் இணையும்போது மட்டுமே லெஜிட்டிமைஸ் (நியாயப்படுத்துதல்) ஆகும். இப்போராட்டம் நமது சமூகத்தின் ஒரு சிறுகதையாடல். அதை அப்படியே பெருங்கதையாடலுடன் (புரட்சி, வளர்ச்சி, முன்னேற்றம்) இணைக்காமல் அதற்கான நியாயத்தை வழங்குவதே முக்கியம். இப்போராட்டம் ஒரு சமூகசிறுகதையாடலாக உருவாகியுள்ளது. பெருங்கதையாடலை வைத்து இதை ஆராய்வது ஒரு உட்டோப்பியாவின் கனவாகவே முடியும்.



## பகுப்பாய்வு9 :

ஏன் ஆட்டோ மற்றும் காவல்நிலையம் தீ வைக்கப்பட்டது? இதற்கு விடை சமூக உளவியல் ஆய்வில்தான் உள்ளது. போராட்டம் என்பது எரிக்கப்பட்டு தீயின் ஒளிச்சுவாலைகளுடன் முடிந்தால்தான் அதை ஒரு அதிகாரத்தின் உக்ரமான வன்முறையான காட்சிப்பிம்பமாக்க முடியும். திரும்ப திரும்ப அந்த தீயை காட்டி அறப்போராட்டங்களை வன்முறைப் போராட்டங்காளாக காட்டி மக்களிடம் போராட்டம் என்றாலே பயத்தீயை மூட்டும் பிம்பத்தை மனப்பதிவாக்குவதே அதன் நோக்கம். அதனால் தீ இல்லாமல் இந்த போராட்டத்தை முடிக்கமுடியாது. அறப்போராளிகள், ஆதரவு மக்கள் தீவைக்கும் போராட்டத்தில் ஈடுபடாதபோது என்ன செய்வது?

ஆங்கில தமிழ் காட்சி ஊடகங்கள் தொடர்ந்து தீயை மட்டுமே காட்டுவதன் நோக்கம் இதுதான். போராட்டம் என்பது தீமையானது என்ற உணர்வை படிமமாக்கவே. இது மொழியற்ற தளத்தில் பதிவாகும் ஒரு உளப்படிமம். அது நம்மை அறியாமல் பயமாக மனதில் உணர்வாகிவிடும். (இந்த பிம்ப உணர்வாக்கத்தைதான் அஃபக்ஃட் என்ற விளைவாக விவரிக்கிறார்கள் டெல்யுஸ்கத்தாரி இரட்டையர்கள்.) நாம் இருட்டை, பேயை, சத்தத்தை கண்டு திடுக்குறுதல் என்பதே இப்படி நம் உடலில் கட்டப்பட்ட உணர்வுதான்.

மக்கள் மனதில் போராட்டங்கள் பற்றிய கொடுமையான பிம்பங்களை உருவாக்குவது, அதன்பின் போராட்டம் பற்றிய அச்சத்தை உருவாக்குவது. தொடர்ந்து ஊடகங்கள் காட்டும் பிம்பங்களில் தீ என்பது முக்கியமான பிம்பமாதல். வன்முறையின் உச்சமாக எரித்தல், கொளுத்துதல் என்பதே. அதை மனதில் நம்மை அறியாமல் புகுத்தும் ஒரு உளவியல் தாக்கத்தை உருவாக்குவதே ஊடகங்களும் அதன் டாக் ஷோக்களும். தற்போது போராட்டம் உருவமைக்கப்பட்ட களத்தைவிட்டு தொலைக்காட்சிகளின் திரைகளுக்கு நகர்ந்துவிட்டது. இனி பல கதையாடல்கள் உருவாக்கப்படும். இவைதான் வரலாறாக மாற்றப்படும். இப்படியான அதிகாரப்புனைவாகவே வரலாற்றை நாம் வாசித்து வருகிறோம்.



## பகுப்பாய்வு10 :

1. சல்லிக்கட்டை முன்வைத்து நிகழ்ந்தது ஒரு எழுச்சியே. அதனால்தான் அதை ”தை எழுச்சி” என்று குறிக்கிறோம். அதை ஒரு போராட்டமாக மாற்ற முனைவதே அரசின் அவசரச் சட்டம். இந்த எழுச்சியைக்கூட ஏற்காத காவல்துறையும், அரசும் அதனை முன்வைத்து மீனவ குப்பங்களை தாக்குதல் நிகழ்த்தி இந்த எழுச்சியை சல்லிகட்டிற்கு மட்டுமான போராட்டமாக நியாயப்படுத்த முனைகின்றன. அரசு மற்றும் குடியாண்மை சமூகம் பற்றிய அதன் விழிப்பு கொள்ளல் பற்றிய இந்த எழுச்சி உருவாக்கிய கருத்தாக்கங்களே

முற்போக்கு அரசியலுக்கு முக்கியமானது. இது ஒரு முழுமையான புரட்சியோ, அல்லது அரசு எதிர்ப்பிற்கான ஒழுங்கமைக்கப்பட்ட போராட்டமோ அல்ல. ஒரு முழக்கத்தை சுற்றி தானாக இணைந்த ஒரு ஒன்றுகூடல். இந்த எழுச்சி பல இடையீட்டு விளக்கங்களைக் கொண்டது. அதற்கான பலமும், பலவீனம் கொண்டது.

2. தை எழுச்சியில் கலந்துகொண்டவர்கள், மற்றும் ஆதரித்த மக்களில் 80 சதவீதம் பேர் சல்லிக்கட்டு என்பது ஒரு எழுச்சிக்கான முகாந்திரம் என்ற அடிப்படையில் ஆதரித்தவர்களே. ஒட்டமொத்த மக்களின் மத்திய மாநில அரசுக்கு எதிரான கோபமே இந்த எழுச்சிக்கான அடிப்படை. இதை மறுப்பதில்தான் அரசின் அடக்குமுறையின் காரணம் அடங்கியுள்ளது. எழுச்சியை சமூகவிரோத செயலாக மாற்றவே அடக்குமுறை ஏவிவிடப்பட்டது. கைது செய்ய தலைமையற்ற நிலையில் ஆதரித்தவர்களை குறிவைக்கிறது.

3. தை எழுச்சி சாதியை, மதத்தை ஒழித்துவிடுமா? என்பதுபோன்ற கேள்விகளும் கற்பனையும் அதன் எல்லைக்கு அப்பாற்பட்டது. ஒருவகையில் அது சிதறலாக உள்ள பல குழு அடையாள அரசியலை தமிழன் என்ற அடையாளத்திற்குள் திணிக்க முயற்சித்துள்ளது. குறிப்பாக இந்திய தேசியம் என்பதை கருத்தளவில் நிராகரித்துள்ளது. ஏதோ ஒருவகையில் புதிய தலைமுறையினருக்கு தமிழ் இன அரசியலுக்கான அடிப்படையை மறுஉருவாக்கம் செய்துள்ளது.

4. தை எழுச்சியை ஒரு புரட்சியாக, அரசு எதிர்ப்பாக, சாதியமற்றதாக கற்பனை செய்பவர்களே அந்த போராட்டத்தின்மீது கேள்விகளை எழுப்புவார்கள். உண்மையில் இப்போராட்டம் தமிழ் இனம் என்பதைவிட தமிழ் என்கிற பிராந்தியத்தை முன்வைக்கும் ஒன்றே. இந்திய கூட்டாச்சியில் தனக்கான உரிமையைக் கோரும் அரசியலே. இது இனவாத அரசியலைக் கொண்ட ஒரு எழுச்சியல்ல. இதன் மதமற்ற தன்மைதான் அரசை பயங்கொள்ள வைக்கிறது. அதனால் காவல்துறையும், காவித்துறையும் இணைந்து இதை சமூகவிரோதிகள் ஊடுறுவிய நிகழ்வாக ஊடகங்கள் வழியாக பதிவு செய்ய முயல்கின்றன.

5. சல்லிக்கட்டை நடத்துபவர்கள் மீனவ குப்பத்திற்காக ஏன் அதை நிறுத்தவில்லை என்பது இந்த எழுச்சியே சல்லிக்கட்டிற்குதான் என்கிற அரசு வாதத்தை புரிந்துகொள்ளாத நிலையில் வருவதே. இந்த எழுச்சி சல்லிக்கட்டில் உள்ள சாதியத்தை கலைந்துவிடாது. சமத்துவ சல்லிகட்டும் நடைபெறாது. இது தமிழ் பண்பாட்டை காத்துவிடுமா? நிச்சயமாக இல்லை. பண்பாடு என்பது இருமுனையுள்ள கத்தி போன்றது. அதை கையெலெடுப்பவனையும் குத்தும். நாளை தமிழ் பண்பாடு என்று ஒவ்வொரு சாதியம் தனக்கான வட்டாரப் பண்பாட்டிற்கு தமிழ் அடையாளம் தரலாம். தனது மதச்சடங்கிற்கு தமிழ் அடையாளம் தரலாம். இப்போராட்டத்தில் தமிழ் பண்பாடு என்று முன்வைக்கப்பட்டிருப்பது ஒரு மேலோட்டமான குறியீடே. அதனால்தான் இன்று சல்லிக்கட்டு நடத்தும் அமைப்புகளை தமிழக மக்கள் ஒரு பொருட்டாக கருதுவதில்லை. போராட்டத்தில் ஈடுபட்ட அனைவரும் அதில் கலந்துகொள்வதும் இல்லை. இதுவே சல்லிக்கட்டிற்கான நிராகரிப்புதான். சல்லிக்கட்டு என்பது வேட்டி கட்டிக் கொள்வதைப் போன்ற மற்றொரு தமிழ் பண்பாட்டை காட்டும் ஒரு நிகழ்வே. எல்லோரும் தமிழர் என்றாலும் வேட்டிக் கட்டிக் கொள்வதில்லை.

6. அரசு மாணவர்களின்மீதான தாக்குதலை நியாயப்படுத்த தொடர்ந்து மீனவ குப்பங்களை, ஆதரித்தவர்களை தாக்குகிறது. இந்த தாக்குதலுக்கு எதிராக மாணவர்கள், இளைஞர்கள் கிளர்ந்தெழாதபோது அரசு இப்போராட்டத்தை வெறுமனே சல்லிக்கட்டிற்கான ஒரு மாணவர் எழுச்சியாக குறியீடு செய்வதை நியாயப்படுத்தும். தற்போது நிகழ்வது குறியியல் தளத்திலான ஒரு போராட்டமே. மீனவ குப்பங்கள் தாக்கப்பட்டிருப்பது இந்த குறியமைப்புகளை மாற்றியமைக்கவே. இதைதான் சாணக்கிய தந்திரம் என்பது. சல்லிக்கட்டுகளை புறக்கணிப்பதே மாணவர்கள், அவர்களை ஆதரித்தவர்கள் மீதான தாக்குதலையும், அரசையும் எதிர்ப்பதாக அமையும். ஆக, நமது முழக்கம் சல்லிக்கட்டை புறக்கணிப்பதாகவே அமைய வேண்டும். உடனடியாக மீனவ குப்பங்களுக்கு நிவாரணம் மற்றும் அரசின் மாணவர்கள், மீனவர்கள் மீதான தாக்குதலுக்கு எதிரான கண்டனங்கள், ஆர்ப்பாட்டங்கள் வழியாக தமிழகம் முழுவதும் இந்த எழுச்சியை ஒரு அரசு எதிர்ப்பு எழுச்சியாக மாற்றியமைப்பதே இன்றைய தேவை.



பாவலர்
அறிவுமதி

# மாணவர் ஆட்சி

இனத்தமிழ்
மாணவர்
எழுந்து
விட்டார்!
பகை
எரித்திடும்
தீயென
கொழுந்து
விட்டார்!

ஒரு வழி
தடுத்தவர்
கிளப்பி
விட்டார்!
மாணவர்
ஒவ்வொரு
திசையிலும்
கிளம்பி
விட்டார்!

வடக்கினைச்
சடக்கென
மடக்கி
விட்டார்!
இன
வழக்கினில்
தமிழ்
அறம்
தொடக்கி
விட்டார்!

அடைத்தவர்
கதவுகள்
திறக்க
விட்டார்!
ஏறு
தழுவுதல்
தடுப்பவர்
திகைக்க
விட்டார்!

இருட்டினும்
ஒளிக்
கொடி
பறக்க
விட்டார்!
பார்
கடற்கரை
திணறிட
நிரம்பி
விட்டார்!

மாணவர் படை
இனி
தூங்காது!
வட
ஆரியம்
தமிழ்
அடி
தாங்காது!

திரிசா
தங்கையோ
திருந்துதல்
நல்லது!
பிராமணச்
சங்கம்
உமக்கென
உள்ளது!

இதுவோ
எங்களின்
இன
விளையாட்டு!
இதற்குள்
ஏனம்மா
நூல்
விளையாட்டு?

காவிரியாற்றிலே
உழவரின்
பிணங்கள்!
திருவையாற்றிலே
உம்
இன
சனங்கள்!

இதுவே
மாணவர்
தொடக்க
அரசியல்!
இனிதான்
இருக்குது
இவர்களின்
களச்
செயல்!

அரசியல்
அறிவினை
எடுப்பார்!
மாணவர்
திரண்டினி
திருடுதல்
தடுப்பார்!

ஆற்று மணலை
அள்ளுதல்
தடுப்பார்!
நிலத்தடி
நீரினை
நிறைத்துக்
கொடுப்பார்!

கடலினில்
சாமிகள்
கரைப்பதை
தடுப்பார்!
கடல்தமிழ்
மீன்களைக்
காத்திடத்
துடிப்பார்!

சாதிகள் கடந்த
தமிழினம்
படைக்கணும்!
அதற்கென
மாணவர்
அரசியல்
படிக்கணும்!

மதவெறி
அரசியல்
மாணவர்
தடுக்கணும்!
தமிழரின்
விழுமியம்
உரிமையில்
எடுக்கணும்!

ஏறு
தழுவுதல்
மாணவர்
நடத்தணும்!
அதில்
தில்லி
திருடர்கள்!
நுழைவதை
தடுக்கணும்!





தமிழ்த்தேசியப் பேரியக்கத் தலைவர்

ஐயா. **பெ. மணியரசன்**

சிறப்புக் கட்டுரை!



# தை புரட்சி சாதனைகளும் சவால்களும்

# தைப்புரட்சி என்று போற்றப்படும் தமிழர் புரட்சி வழங்கியுள்ள பாடங்கள்

1. இக்கால இளைஞர்களும் மாணவர்களும் ஆண்களும் பெண்களும் சமூகச் சிந்தனை இன்றி நுகர்வு வாழ்வில் தோய்ந்து உதிரிகளாக இருக்கிறார்கள் என்ற வசையைத் தைப்புரட்சி புரட்டிப் போட்டு விட்டது.

   சமூகப் பொறுப்பு, தமிழினப் பொறுப்பு ஆகியவற்றில் பெரியவர்களுக்கே வழிகாட்டும் அளவிற்கு இளைஞர்கள் இலட்சோப இலட்சமாய்த் தமிழ் நாடெங்கும் களத்தில் இறங்கி விட்டார்கள்! அவர்கள் பொறுப்பற்ற உதிரிகளுமல்லர்; விவரம் அறியாதவர் களுமல்லர்! எல்லாம் தெரிந்தவர்களே!

2. ஒரு கோடி உறுப்பினர்களைக் கொண்டுள் ளோம்; ஒன்றரைக் கோடி உறுப்பினர்களைக் கொண்டுள்ளோம் என்று கூறிக் கொள்ளும் கட்சிகள், தன்னலப் பூதங்களே தவிர, தமிழர் களுக்கான தற்காப்புத் தலைமைகள் அல்ல என்பதைத் தைப்புரட்சி உணர்த்தி விட்டது.

   அவற்றின் தலைவர்கள் தங்கள் பெயருக்கு முன்னால் சுமந்து கொண்டிருக்கும் புகழ்ச்சிப் பட்டங்கள் செல்லப் பிராணிகளுக்கு சூட்டப்பட்ட பெயர்களை விடவும் பொருத்தமற்றவை என்பதைக் காட்டி விட்டது!

3. இந்தியன், திராவிடன் என்ற போலி இனப் பெயர்களைத் தைப்புரட்சிப் புயல், வரலாற்றின் குப்பைக் கூடையில் வீசி விட்டது.

   "தமிழன்டா!" என்ற முத்திரை முழக்கத்தைத் தைப்புரட்சி நமது பதாகைகளுக்கு வழங்கி யுள்ளது.

   "தமிழன்டா" முழக்கத்தில், ஆண்களும் பெண் களும் அடக்கம்; அனைத்து மதங்களும் சாதிகளும் அடக்கம்!


4. இந்தியத் தேசியவாதக் கட்சிகள் தமிழ் நாட்டில் வெகுமக்கள் கட்சிகளாக இனி ஒரு பொழுதும் எழ மாட்டா! இந்தியத் தேசியவாதிகள் பெயருக்குக் கட்சி நடத்திக் கொண்டிருக்கலாம் என்ற வரலாற்றுப் பாதையை வரையறுத்து விட்டது.

5. பெரும் பெரும் நாளிதழ்கள் வார ஏடுகள், பெரும் பெரும் தொலைக்காட்சிகள் முதலிய ஊடகங்களைவிட வலிமை மிக்க ஊடகம் ஒவ்வொரு தமிழன் தமிழச்சி கையிலும் பையிலும் இருக்கின்றது, அது சமூக வலைத்தளம் என்று காட்டிவிட்டது!

   அவற்றின் வழியாக நடந்து வரும் கருத்துப் பரிமாற்றங்கள், திறனாய்வுகள், அழைப்புகள் ஆகியவற்றால்தான் தைப்புரட்சி ஏற்பட்டது.

**வெள்ளம்போல் தமிழர் கூட்டம்**
**வீரங்கொள்கூட்டம்; அன்னார்**
**உள்ளத்தால் ஒருவரே மற்று**
**உடலினால் பலராய்க் காண்பார்**
**கள்ளத்தால் நெருங்கொணாதே;**
**எனவையம் கலங்கக்கண்டு**
**துள்ளும்நாள் எந்நாள்? உள்ளம்**
**சொக்கும் நாள் எந்தநாளோ?**

என்று ஏங்கிக் கேட்டார் பாவேந்தர். அந்நாள் இந்நாள் என்று மெய்ப்பித்தார் அவர் பேரப்பிள்ளைகள்!



# எச்சரிக்கைகள்

## 1. இசவாதிகள்

தமிழர் எழுச்சியைத் திசை திருப்பிட "இசவாதிகள்" (Isamists) கடுமையாக முயல்வார்கள். "இசவாதிகள்" என்பவர் யார்? வெளிநாட்டில், வடநாட்டில், தமிழ்நாட்டில் முந்தியத் தலைமுறையினர் அவரவர் வாழ்ந்த காலத்தில், அவரவர் எடுத்துக் கொண்ட சிக்கலுக்கேற்ப தயாரித்த சிந்தனைத் தொகுப்புகளை அப்படியே இப்போதும் ஏந்திக் கொண்டு, அந்த சிந்தனைகளுக்கேற்ப தமிழ்ச் சமூகத்தை மாற்றிட முயன்று தோற்போர் ஆவர்!

நோயாளியை ஆய்வு செய்து அவருக்கு வந்திருக்கும் தனித்துவமான நோயை அறிந்து அதற்கான மருத்துவ முறையைக் கையாண்டு, மருத்துவம் பார்ப்பவர் சிறந்த மருத்துவர்! என்னிடம் உள்ள ஒற்றை மருந்து எல்லா நோய்களையும் தீர்த்து விடும் என்று கூறுபவர் மருத்துவர் பெயரில் உள்ள மந்திரவாதி! தமிழ்நாட்டில் மந்திரவாத இசங்களுக்குப் பஞ்சமில்லை!

ஒட்டுமொத்தத் தமிழர்களின் எழுச்சியைக் கூறுபோட்டுப் பங்கிட்டுக் கொள்ள இசவாதிகள் ஓடி வருவார்கள்!

## 2. ஆரிய இந்துத்துவாவாதிகள்

ஆரியப் பார்ப்பனிய இந்துத்துவா வாதிகள் தமிழர் அடையாளங்களை இந்துத்துவா அடையாளங்களாகத் திரித்துக் காட்டித் திருதராட்டிர ஆலிங்கனம் செய்து தமிழர் எழுச்சியைச் சீர்குலைக்க வருவார்கள். எதிரி மீது பாசம் காட்டுவது போல் பாவனை செய்து கட்டித் தழுவி இறுக்கிக் கொன்று விடுவதுதான் திருதராட்டிர ஆலிங்கனம்!

**ஆரியப் பார்ப்பனிய இந்துத்துவா வாதிகள், புராணக் கதைகளற்ற தமிழர் பொங்கல் விழாவை, கருங்கிராந்தி நோய் என்பது போல் சங்கராந்தி என்பார்கள்! தமிழரின் ஏறுதழுவல் "ரிஷப வைபவம்" என்பார்கள்!**

ஆனால் ஆரியவர்த்த மாநிலங்களான உ.பி., ம.பி., பீகார் போன்றவற்றில் தமிழரின் பொங்கல் விழாவைப் போல் போகி தொடங்கி ஏறுதழுவல் வரை நான்கு நாள் நிகழ்வுகள் இல்லை.

## 3. இந்திய ஏகாதிபத்திய அரசு

இந்திய ஏகாதிபத்தியத்தின் நடுவண் அரசு தமிழர்களின் தைப்புரட்சி எழுச்சியைப் பழிவாங்கும் வெறியுடன் குறுகுறு என்று பார்த்துக் கொண்டுள்ளது. என்னென்ன வகைகளில் தமிழர்களை ஒடுக்கி, அடக்கி வைக்கலாம் என்று கருவிக் கொண்டுள்ளது.

காலம் காலமாக நடந்துவந்த காளை விளையாட்டான சல்லிக்கட்டை நடத்திட அனுமதி கோரி, தமிழ்நாடெங்கும் இந்தியாவில் எங்குமே காணாத அளவிற்கு, கோடிக்கணக்கான மக்கள் அங்கங்கே குவிந்து, ஆறு நாட்கள் தொடர்ந்து அறப்போராட்டம் நடத்தினர். மோடி அரசு மக்களின் குரலுக்கு செவி சாய்த்து, தடை செய்யப்பட்ட விலங்குகள் பட்டியலிலிருந்து காளையை நீக்கியிருக்க வேண்டும். தானே முன்வந்து விலங்குகள் துன்புறுத்தல் தடைச் சட்டம் 1960ஐ திருத்தியிருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு செய்யவில்லை.

மாணவர் போராட்டத்தின் நெருக்கடி காரணமாக செயல்பாட்டில் இறங்கிய தமிழ்நாடு முதலமைச்சர் ஓ.பி.எஸ். தில்லிக்குச் சென்று, நரேந்திர மோடியிடம் நேரடியாகக் கோரிக்கை வைத்தபோதுகூட, தம்மால் எதுவும் செய்ய முடியாது என மறுத்து விட்டார் மோடி!

தமிழினத்தின் மீதுள்ள நிரந்தரக் காழ்ப்புணர்ச்சியால், பா.ச.க. நடுவண் ஆட்சி






குறிப்பாக தலைமை அமைச்சர் நரேந்திர மோடி, “தமிழர்களின் ஞாயத்தை ஏற்றுக் கொண்டால், அவர்களுக்குப் பணிந்து போவது போல் ஆகும்” என்று கருதி, தமிழ்நாடு அரசே சட்டத்திருத்தத்துடன் அவசரச்சட்டம் இயற்றிக் கொள்ளுமாறு கூறிவிட்டது.

காவிரி வழக்கில் உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்த படி, மேலாண்மை வாரியம் அமைக்கப்பட இருந்த நிலையில், கடைசி நேரத்தில் அதைத் தட்டிப் பறித்தது மோடி அரசு! தொடர்ந்து இனப்பாகுபாடு பார்த்துதான் தமிழர்களை இந்தியா வஞ்சிக்கிறது. நம் பண்பாட்டு விழாவான ஏறுதழுவலை தடை செய்வதிலும் அதே அணுகுமுறையைத்தான் இந்தியா கொண்டுள்ளது. “தமிழ்நாட்டின் போராட்டங்களைக் கூர்ந்து கவனித்துக் கொண்டுள்ளோம். நடுவணரசின் உளவுத்துறை விவரங்களைத் திரட்டிக் கொண்டுள்ளது. தமிழ்நாடு அரசு உதவி கேட்டால், உடனடியாக துணை இராணுவப் படைகளை அனுப்பி வைப்போம்” என்று தில்லி உள்துறை அதிகாரி ஒருவர் கூறியதாக இந்து ஆங்கில நாளேடு (24.01.2017) செய்தி வெளியிட்டுள்ளது.

### 4. இனப் பெயரில் போலிகள்

தமிழினம், தமிழ்த்தேசியம் என்ற பெயரிலேயே பதவி வேட்டையாடும் போலிகள் புகுவார்கள்; புதிதாகவும் உருவாவார்கள்!

### 5. மடைமாற்றுவர்

தைப்புரட்சியைப் புகழ்ந்து அல்லது திறனாய்வு செய்து கட்டுரை எழுதுவோரில் பலர், கடைசியில் திராவிடவாதத்துக்கு ஆதரவாகவோ அல்லது இந்தியத் தேசியத்திற்கு ஆதரவாகவோ எழுதி முடிப்பர். இவ்வாறு தமிழின எழுச்சியை மடைமாற்றுவர். தைப் புரட்சியில் பங்கு கொண்ட தைப்புரட்சியை ஆதரித்த தமிழர்கள் அனைவரும் இந்த எச்சரிக்கைகளைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

## அ.இ.அ.தி.மு.க. அரசு

சென்னைக் கடற்கரை, மதுரை, கோவை, திருச்சி, அலங்காநல்லூர் மற்றும் தமிழ்நாடெங்கும் ஆறு நாட்கள் வரை மக்கள் திரள் அறப்போராட்டத்தை அ.தி.மு.க. அரசு அனுமதித்ததும், வன்முறை ஏவாமல் இருந்ததும் ஓர் அரசியல் உத்திதான்!

**ஆனால் அதற்கு முன், அவனியாபுரத்தில் 14.01.2017 அன்று அறவழியில் சாலை ஓரமாக இயக்குநர் வ. கவுதமன் தலைமையில் அமர்ந்து, சல்லிக்கட்டு தடை நீக்கிட முழக்கமிட்ட இளைஞர்கள் மீது கடுமையாகத் தடியடி நடத்திக் காயப்படுத்திக் கூட்டத்தைக் கலைத்து, அவர்களைத் தளைப்படுத்தினார்கள். அதனால் அ.தி.மு.க. அரசுக்குப் பெரிய அளவில் கெட்ட பெயர் ஏற்பட்டது.**

இப்பின்னணியில் 17.1.2017 அன்று சென்னை மெரினா கடற்கரையில், வெள்ளம் போல் திரளத் தொடங்கிய தமிழர்கள் மீது அ.தி.மு.க. அரசு கைவைக்கத் தயங்கியது. மாணவர்களும் இளைஞர்களும் தமிழ்நாட்டின் மூலை முடுக்குகளிலிருந்தெல்லாம் வந்து குவிந்தார்கள்.



தமிழ்நாட்டின் பிற பெரு நகரங்கள், நகரங்கள், பேரூர்கள், சிற்றூர்கள் என எல்லா இடங்களிலும் மக்கள் வெள்ளம் அங்கங்கே கூடிப் பெருகியது. இரவு பகலாகக் கூட்டம் தொடர்ந்தது.



சல்லிக்கட்டு உரிமையுடன், காவிரி உரிமை, உழவர் உரிமை, கச்சத்தீவு, பாலாறு, முல்லைப் பெரியாறு எனப் பல உரிமைகள் பேசினர். மீத்தேன் எதிர்ப்பு, கெயில்



குழாய் எதிர்ப்பு, வியோ பால் புட்டி பெப்சி கோகோ கோலா பாட்டில்கள் உடைப்பு, பன்னாட்டு வேட்டை நிறுவனங்கள் எதிர்ப்பு, பீட்டா வெளியேற்றல் எனத் தமிழ்நாட்டின் முகாமையான வாழ்வியல் உரிமை முழக்கங்களை எழுப்பினர். இயற்கை வேளாண்மை, தமிழர் மரபு உணவு பற்றியெல்லாம் உரையாடினர்.

கட்டுக்கோப்பாகவும், தன்னொழுங்குடனும், கண்ணியத்துடனும், ஆண்களும் பெண்களும், மாணவர்களும் இலட்சக்கணக்கில் ஒரே இடத்தில் இரவு பகலாக இருந்து முழக்க மிட்டனர். சுற்றுப்புற தூய்மை பேணினர்.

தாராள மனம் படைத்த தமிழ்ப் பெருமக்கள் உணவு, தின்பண்டம், கழிவறை வசதி எனப் பல உதவிகள் செய்தனர். பொங்குமாங்கடலென மக்கள் குவிந்தனர்.

எனவே வன்முறையை ஏவினால், 1965 மொழிப் போரில் காங்கிரசு காவல்துறையையும் இராணுவத்தையும் ஏவி இரத்தக்குளியல் நடத்தியதுபோல் ஆகிவிடும்; தமிழ்நாட்டில் காங்கிரசு அத்தியாயம் முடிவுக்கு வர அதுவே தொடக்கமாக இருந்தது என்ற வரலாற்றை உணர்ந்த அ.தி.மு.க. அரசு, தமிழர் உரிமைக் கான அறப்போராட்டம் நடத்திய மக்களுக்கு உதவியாக இருந்தது.

சல்லிக்கட்டு உரிமை வழங்கும் அவசரச் சட்டம் கொண்டு வந்தது அ.தி.மு.க. அரசு! அந்தச் சட்ட நகலை வெளியிடாமல் மூடு மந்திரமாக வைத்துக் கொண்டு, மக்கள் வெள்ளத்தைக் கலைந்து போகச் சொல்லி *23.01.2017* அன்று விடியற்காலையிலிருந்து நெருக்கடி கொடுத்தனர் காவல்துறையினர்.

சென்னைக் கடற்கரையில் ஆயிரக்கணக்கில் காவல்துறையினரைக் கொண்டு வந்து இறக்கினர்; சரக்குந்துகளில் தடிகளையும் கொண்டு வந்தனர்.

பிடித்து இழுத்தும், தள்ளியும், தூக்கி எறிந்தும், அடித்தும், விரட்டியும் மக்களைக் கலைத்தனர். பெண்கள், பெரியவர்கள், மாணவர்கள், மாணவிகள் என எல்லாரும் அடிக்கப்பட்டனர். காவல்துறையினரே, தானி வண்டிக்குத் தீ வைத்தனர்; காவல் நிலையத் திற்கும் தீ வைக்கப்பட்டது.

**சல்லிக்கட்டு உரிமையை**
**மீட்டிடும் சட்டம் கொண்டு வந்த**
**பின் தடியடி நடத்தியது ஏன்?**

**அடிபட்டு கடற்கரையில் சூழ்ந்து**
**நின்ற மக்களுக்கு உணவும்,**
**தண்ணீரும் வழங்கிய மீனவ**
**மக்களைத் தாக்கியது ஏன்?**
**இதுதான் அரசின் வன்மம்!**

**காவல்துறையின் பொது**
**உளவியல் இதுதான்!**

காட்சிப்படுத்தத் தடை செய்யப்பட்ட விலங்குகள் பட்டியலிலிருந்து காளையை இந்திய அரசு நீக்க வில்லை. தமிழ்நாடு அரசு போட்ட சட்டத்தை எதிர்த்து, எதிர்த்தரப்பினர் உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தால் தடைப் பட்டியலில் காளை தொடர்வது ஒரு வினாக் குறியே!

இந்த ஒன்றைத் தவிர, மற்றபடி தமிழ்நாடு அரசு கொண்டு வந்த திருத்தச் சட்டம் வரவேற் கத்தக்கதே!


இவ்வாறு இருக்கும்போது, பொறுமையாக

இந்த உண்மைகளை விளக்கி, கூட்டத்தைப் பதற்றமின்றி விடை பெறச் செய்திருக்கலாம்.

வரலாறு காணாத அளவிற்கு உலகமே வியக்கும் வகையில் நடந்த தமிழ்நாடு தழுவிய மாபெரும் மக்கள் திரள் எழுச்சியை அமைதியாகக் கலைய விட்டால், மீண்டும் போராட அவர்களுக்கு ஊக்கம் கொடுக்கும் என்று கருதி, உடலில் மட்டுமின்றி நெஞ்சத்திலும் காயத்தோடு அனுப்ப வேண்டுமென்று தமிழ்நாடு அரசு கருதியிருக்கலாம்.

அடுத்து வரும் காலங்களில், சனநாயகப் போராட்டங்களை வழமைபோல் அனுமதிக்காமல் கெடுபிடிகள் செய்யலாம். அதேவேளை தமிழர்களை அண்டிப் பிழைக்கும் நுகர்வோராக மாற்றுவதற்கு மேலும் சில இலவசங்களையும் வழங்கலாம். இவ்வாறான இரு வழிகளில்தான் அ.இ.அ.தி.மு.க. அரசு தமிழர் எழுச்சிக்குப் பிந்திய செயல்முறையை வகுத்துக் கொள்ளும்.

இவ்வாறான அரசின் போக்கை எதிர்கொள்ளும் சிந்தனைத் தெளிவும், மன உறுதியும் இளைஞர்களுக்கும் மாணவர்களுக்கும் தேவை.



# தி.மு.க.

தைப்புரட்சியாக விளங்கிய தமிழர் எழுச்சியையும், அதில் பங்கேற்றோர் தாக்கப்பட்டதையும் பயன்படுத்தி, மக்கள் செல்வாக்குப் பெற்று ஆட்சியைப் பிடிக்கும் உத்திதான் தி.மு.க.வுக்கு இருக்கும். உண்மையான தமிழின உரிமை மீட்பு நடவடிக்கைகளில், தி.மு.க. இறங்குவதற்கு வாய்ப்பில்லை. திருந்துவதற்கும் வாய்ப்பில்லை. அக்கழகத்தின் ஆட்சியில்தான் பல்வேறு உரிமைகளைத் தமிழ்நாடு இழந்தது.

சிங்கள அரசு இந்தியாவின் துணையோடு ஈழத்தமிழர்கள் மீது இன அழிப்புப் போர் நடத்தி, ஒன்றரை இலட்சம் தமிழர்களை படுகொலை செய்த காலத்தில், அதைக் கண்டித்து 2008 2009 ஆண்டுகளில் மேடையில் பேசியவர்கள் மீது “தேசியப் பாதுகாப்புச் சட்டம்” (N.S.A.), அரசுக் கவிழ்ப்புப் பரப்புரை (Sedition - 124A) போன்ற சட்டங்களின் கீழ் வழக்குகளைத் தொடுத்து சிறையில் அடைத்தது கலைஞர் ஆட்சி.

போர் நிறுத்தம் கோரி போராடிய வழக்கறிஞர்களை சென்னை உயர் நீதிமன்ற வளாகத்திற்குள் சுற்றி வளைத்து, அடித்து நொறுக்கி எலும்புகளை உடைத்துப் படுகாயப்படுத்தியது காவல்துறை (17.02.2009). ஒரு நீதிபதியின் எலும்பும் முறிக்கப்பட்டது. அரசு அமைத்த விசாரணை ஆணையம், குற்றம் இழைத்த காவல்துறை அதிகாரிகளை அடையாளம் கண்டு அறிக்கை கொடுத்தது. ஆனால், அந்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க மறுத்தார் அன்றைய முதலமைச்சர் கருணாநிதி.

இது அண்மைக்கால தி.மு.க. அரசியலுக்கான ஒரு சான்று! அதற்கும் முந்தைய கால சான்றுகள் ஏராளம்! ஏராளம்!

**காங்கிரசு கூட்டணி அரசில் தி.மு.க. அமைச்சர் பதவி வகித்தபோதுதான், ‘‘காளை’’ தடை செய்யப்பட்ட விலங்குகள் பட்டியலில் சேர்க்கப்பட்டது (2011).**

**எனவே, அ.இ.அ.தி.மு.க.வும் தி.மு.க.வும் இனத்துரோக அரசியல் என்ற நாணயத்தின் இரண்டு பக்கங்கள்தான்!**





## மாணவர்களின் வரலாற்று முன்னெடுப்பும் மக்களின் பங்களிப்பும்

ஆதிக்க இந்தியை விரட்டிட 1965இல் மாணவர்கள் முன்னெடுத்த வரலாற்றுச் சிறப்புமிக்க மொழிப் போருக்குப் பின், ஈழத்தமிழர் விடுதலைப்போர் உள்ளிட்ட தமிழர் உரிமைகளுக்கு பலப் போராட் டங்கள் தமிழ் மாணவர்கள் நடத்தியிருந்தாலும், “தைப்புரட்சி” என்ற தமிழர் புரட்சியை முன்னெடுத்த மாபெரும் வரலாற்றுப் பாத்திரம் இன்றையத் தமிழ் மாணவர்களுக்கே இருக்கிறது.

அடையாளப் போராட்டம் நடத்தாமல், விளம்பரப் போராட்டம் நடத்தாமல், பிரமுகத்தனம் காட்டாமல், இலட்சியத்தை மட்டுமே முன்னிறுத்திப் போராடிய மாணவர்களின் நேர்மையும் ஒழுக்கமும் தமிழ் மக்களை ஈர்த்தது. மாணவர் போராட்டமாக முகிழ்த்தது, பெற்றோரும் பங்கேற்ற மாபெரும் தமிழர் வெள்ளமாக மலர்ந்தது. மக்களின் ஆற்றலுக்கு எல்லையில்லை. அவர்கள் நடத்தும் போராட்ட வடிவங்களுக்கும், ஆதரவுச் செயல்பாட்டு வடிவங்களுக்கும் அளவில்லை என்பதை இப்போராட்டத்தில் மாணவர்களும் மக்களும் காட்டினார்கள்.

## தலைமை இல்லாப் போராட்டமா?

இம்மாபெரும் தைப்புரட்சியைத் தலைமை இல்லாப் போராட்டம் என்று ஊடகத்தார் குறிப்பிட்டனர். வெளித்தோற்றத்திற்கு அப்படித்தான் தெரிந்தது. ஆனால் தான் பெற்ற பிள்ளைகளின் போராட்டத்திற்குத் தமிழன்னைதான் தலைமை தாங்கினாள்; அதாவது தமிழ்மொழி வழி பெற்ற தமிழின உணர்வுதான் தலைமை தாங்கியது.

பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே தமிழ் ஆசான்கள், சான்றோர்கள், வீரர்கள், மாமன்னர்கள் நடத்திய வாழ்வும் வழங்கிய சிந்தனைகளும் வாழையடி வாழையாய் தமிழர்களுக்கு இன உணர்ச்சியையும், அறச்சிந்தனைகளையும், போர்க் குணத்தையும் வழங்கி வருகின்றன. வற்றாத அந்த வரலாற்றுத் தொடர்ச்சியே இன்றைய தைப்புரட்சிக்குத் தலைமை தாங்கியது!

தைப்புரட்சியில் எழுந்த தமிழர் எழுச்சி காட்டாற்று வெள்ளமாய்க் காணாமல் போய்விடும் என்று சிலர் கணிக்கிறார்கள். அப்படிக் காணாமல் போய்விட வேண்டும் என்று தமிழினப் பகைவர்களும் வஞ்சகர்களும் ஆசைப்படுகிறார்கள். ஒரு சமூக நெருக்கடியில் எழுந்த மக்கள் கொந்தளிப்பு அலை சாதாரண காலத்திலும் அப்படியே நீடிக்கும் என்று எதிர்பார்ப்பது கற்பனைவாதம்! அது பின்வளர்ச்சியின்றி அடிச்சுவடு தெரியாமல் மறைந்து விடும் என்று கருதுவது அகநிலைவாதம்! அல்லது எதிரிகளின் எதிர்பார்ப்பு! தைப்புரட்சி இளைஞர்களே, மாணவர்களே! உங்களைச் சுற்றி வளைக்கப் பலர் வட்டமிடுவார்கள்! நீங்கள் உங்கள் சொந்த அறிவாற்றல் கொண்டு தேர்வு செய்யுங்கள்!

**நீங்கள் யாரையோ பின்பற்றுவதற்கு மட்டுமே பிறந்தவர்கள் அல்லர். வழிகாட்டவும் பொறுப்புடைய வர்கள் உரிமை உடையவர்கள்!**

இசவாதிகளிடம் எச்சரிக்கையாக இருங்கள்! எந்த இசத்திலும் உள்ள முற்போக்கான கருத்துகளை, சமகாலத்திற்குத் தேவையான கருத்துகளை தமிழர் உளவியல் ஏற்கும்; ஆனால் அதில் தன்னைக் கரைத்துக் கொள்ளாது.

## தத்துவம் வழிகாட்டவும் செய்யும், வழி மறிக்கவும் செய்யும்!

தகவல் தொழில்நுட்பத்தில் ஏற்பட்ட புரட்சி, சிறு சிறு தேசிய இனங்களின் அடையாளங்களை உலக அரங்கில் கொண்டு வந்துள்ளது. பெருந்தேசிய இன ஆதிக்கத்தில் சிக்கிக் கொண்ட சிறு தேசிய இனங்கள் விடுதலை பெற உந்துவிசை அளித்து வருகிறது தகவல் தொழில்நுட்பப் புரட்சி!

இரசியப் பேராதிக்கத்திடமிருந்து 14 தேசிய இனங்கள் பிரிந்தன. பிரித்தானியாவில் ஆங்கிலேயப் பேராதிக்கத்திலிருந்து பிரிந்திட அயர்லாந்தும் ஸ்காட்லாந்தும் நேரம் பார்த்துக் கொண்டுள்ளன. இந்தோனேசியாவிலிருந்து கிழக்குத் திமோர், எத்தியோப்பியாவிலிருந்து எரித்திரியா பிரிந்தன. கனடாவிலிருந்து கியூபெக், ஸ்பெயினிலிருந்து கட்டலோனியா, பாஸ்க், சீனாவிலிருந்து திபெத், உய்கூர் ஆகிய தேசிய இனங்கள் விடுதலை கோருகின்றன.

நாம் தமிழ்நாட்டில் மட்டும் எட்டுக்கோடி பேர் இருக்கிறோம் இந்தியாவின் இதர மாநிலங்களில் இரண்டு கோடிப் பேர் இருக்கலாம். உலகில் மொத்தம் 12 கோடித் தமிழர்கள் மக்கள் தொகை வாழ்கிறோம். பிரித்தானியா, பிரான்சு நாட்டு மக்கள் தொகையைவிட அதிகம்!

**உலகத்தின் இன்றையப் போக்கு தேசிய இன இறையாண்மையை உறுதிப்படுத்துவதுதான். உலகமயம் என்ற பெயரில் வேட்டையாடும் பன்னாட்டு நிறுவனங்களை எல்லை கட்டி வெளியே தள்ள தேசிய இனத் தாயக உரிமையும், தாயக வரலாற்று பண்பாட்டு உளவியல் உணர்ச்சியும் மிகமிக இன்றியமையாதவை!**

தமிழ்த்தேசிய இறையாண்மையே, பன்னாட்டு வேட்டை நிறுவனங்களை வெளியேற்றும்; தடுக்கும்! தமிழ்த்தேசிய இறையாண்மையே, தமிழ்நாட்டைத் தமிழர்களின் வாழ்வுரிமைத் தாயகமாக மாற்றும்! வெளி மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் தமிழ்நாட்டில் தொழில், வணிகம், வேலை வாய்ப்பு ஆகியவற்றில் ஆதிக்கம் செலுத்தி மண்ணின் மக்களாகிய தமிழர்களை தமிழ்நாட்டிலேயே இரண்டாம் தரக் குடி மக்களாக மாற்றி வருகிறார்கள். வெளியாரை வெளியேற்றாவிட்டால் தமிழர் வாழ்வுரிமை பாதிக்கப்படும்.

தமிழ்த்தேசிய இறையாண்மையே, ஆரிய மொழிகளான சமற்கிருதம், இந்தி ஆதிக்கத்திலிருந்து தமிழைக் காக்கும்!

தமிழ்த்தேசிய இறையாண்மையே, பொங்கல் விழா, திருவள்ளுவர் நாள், ஏறுதழுவுதல் போன்ற தமிழ்ப் பண்பாட்டுரிமைகளைக் காக்கும். தமிழ்த்தேசிய இறையாண்மையே, கச்சத்தீவு, கடல் உரிமை, காவிரி, முல்லைப் பெரியாறு, பாலாறு, பவானி உரிமைகளை மீட்கும்!

தமிழ்த்தேசிய இறையாண்மையே, பெப்சி கோக்கோ கோலா, வியோ உள்ளிட்ட வெளிநாட்டு நிறுவனங்களை விரட்டும்; உள்நாட்டு மரபு உற்பத்திகளை வளர்க்கும்! மண்ணுக்கேற்ற புதுமைகளைப் படைக்கும்!

## தமிழர் அறம் மனித சமத்துவத்தை நிலைநாட்டும்!

தைப்புரட்சியில் தமிழர்களாக ஒருங் கிணைந்த இந்து, முசுலிம், கிறித்துவ மக்கள் ஒற்றுமையைத் தமிழ்த்தேசியமே வளர்க்கும்; சாதியைப் பின்னுக்குத் தள்ளி தமிழராய் ஒருங்கிணைந்த இன உணர்ச்சியைப் பெருக்கும்!

ஆணும் பெண்ணும் சமமாய்க் களம் கண்ட தைப்புரட்சியில் சமத்துவத்தைத் தமிழ்த்தேசியமே தொடரும்; தலைவன் தலைவி என்ற சங்ககால சமத்துவத்தை மேலும் மேன்மைப்படுத்தும்!

இந்தியன், திராவிடன் என்ற அயல் இன ஆதிக்கப் புனைவுகளைப் புறந்தள்ளுங்கள்! தமிழராய்த் தலை நிமிருங்கள்!

“தமிழன்டா!”

**நன்றி : தமிழர் கண்ணோட்டம்**





# ஆற்றல் சான்ற தலைமை வேண்டும்!

தமிழக மக்கள் மனத்தில் மொழி, இன உணர்வு என்பது எப்போதும் நீறுபூத்த நெருப்பாக அணையாத தணலாகவே இருந்து வருகிறது. அதற்கோர் நல்ல எடுத்துக்காட்டுதான் தமிழ்ப்பண்பாட்டைப் பாதுகாக்க மாணவர்கள் நடத்திய அறவழிப் போராட்டம். தன்னெழுச்சியான மாணவர்களின் போராட்டத்தில் ஊடுருவிய தமிழ்த்தேசியப் பகைவர்கள், சல்லிக்கட்டுக்காக மட்டும்தான் இந்தப் போராட்டமே தவிர வேறெதையும் வலியுறுத்தி அல்ல என்று நச்சுப் பரப்புரை செய்தார்கள். ஆனால் உண்மை அதுவன்று.

நடுவணரசால் தமிழர்கள் தொடர்ந்து வஞ்சிக்கப்பட்டு வருவதைக் கூட்டணித் தருமம் என்ற பெயரில் அதனோடு தோழமை வைத்துள்ள கட்சிகள் தன்னலத்தோடு உண்மையை மறைத்தாலும், நடுவணரசு நமக்கு இழைக்கும் அநீதியை முற்ற முழுதாக மாணவர்கள் உணர்ந்திருக்கிறார்கள். அதன் வெளிப்பாடுதான் வையம் ஆண்ட வண்டமிழ் மரபினம் கையிருப்பைக்காட்ட கடற்கரை மணலில் இன்னொரு கடலாய் உருவெடுத்தது.



## திரு. செ.ப.முத்தமிழ்மணி

போராட்டத்தைத் தொடங்குவதற்கு சல்லிக்கட்டு ஒரு கருவாக அமைந்தாலும் போராட்டத்தின் நீட்சியில் தமிழர் இழந்த உரிமையை மீட்கும் குரல் முழக்கமாக ஓங்கி ஒலித்தது. குறிப்பாக தமிழீழ விடுதலைச் சிக்கல், முல்லைப் பெரியாறு, பாலாறு, காவிரி ஆற்றுச் சிக்கல்கள், உழவர், மீனவர் சிக்கல், ஆற்று மணல் கொள்ளை, கனிம வளச் சுரண்டல், கூடங்குளம், மீத்தேன் எதிர்ப்பு, அந்நிய நச்சுக் குடிப்பான தடை போன்ற எண்ணற்ற கேடுகளுக்கு எதிராக மாணவர்களும், இளைஞர்களும் அவர்களுக்குத் துணையாக மக்களும் குரல் எழுப்பினார்கள். இப்போராட்டம் என்பது அரசியல் கட்சிகள் பதிவுக்காக நடத்துகின்ற ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்கள் போன்றதல்ல; மாறாக தமிழ்த் தேசியப் பகைவர்கள் தொடர்ந்து நம்மீது தொடுத்துக் கொண்டிருக்கும் பண்பாட்டுப்படையெடுப்பை முறியடிக்க நிகழ்த்திய பண்பாட்டுப் புரட்சியின் தொடக்கமிது.

மாணவர்கள் தம் வாழ்நாளில் செய்ய வேண்டிய வரலாற்றுக் கடமையை எண்ணியதால் தன்னெழுச்சியாக ஒன்றிணைந்தும் மக்களை ஒன்றிணைத்தும் போராடியது பகைவர்களை வியப்பில் ஆழ்த்தியது. இந்தப் பேரெழுச்சியைத் தாங்கிக்கொள்ள முடியாத தற்குறிகளும் தறுதலைகளும் போராட்டத்தைக் கொச்சைப்படுத்த முயன்றன. அதாவது போராட்டக் களத்திலே மாணவர்கள் இந்தியாவையும் அதன் தலைமை அமைச்சரையும் இழிவாகப் பேசினார்கள் என்றும் தமிழ்த்தேசியத்தை வலியுறுத்தி தனித்தமிழ் நாட்டுக் கோரிக்கையை முழங்கினார்கள் என்றும் , மேலும் அவர்கள் கட்டுக்கோப்பிழந்த தலைமையில்லாத ஒரு மந்தையாகவே செயல்பட்டார்கள் என்றும் செய்தியாளர்கள் சந்திப்பை ஏற்படுத்தி அதன் வாயிலாக நஞ்சைக் கக்கினார்கள்.

**56 சமஸ்தானங்களாகப் பிரிந்துகிடந்த நிலப்பகுதிகளை தம் வணிகத்திற்காக ஒன்றிணைத்து அதற்கு இந்தியா என்றும் அதில் வாழ்ந்தவர்களை இந்தியர்கள் என்றும் சொன்னது வெள்ளையர்களே. இல்லாத இந்தியாவை உருவாக்கிய வெள்ளையனிடம் இந்திய விடுதலையைக் கேட்டுப் போராடியது நியாயம் என்றால் இந்தியா உருவாவதற்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இருந்த இப்போதும் இருக்கின்ற எப்போதும் இருக்கப்போகின்ற எங்கள் தமிழ் மண்ணை உருவகப்படுத்தி, தனித்தமிழ்நாடு என கேட்பதிலே என்ன தவறு இருக்கிறது? தமிழர் ஒரு தனித் தேசிய இனம் என்பதை இங்குள்ள படித்த தற்குறிகள் சிந்திக்க மறுப்பது ஏன்?**

கேரளாவில் உள்ளவன் மலையாளியாக இருக்கிறான். ஆந்திராவில் உள்ளவன் தெலுங்கனாக இருக்கிறான். கருநாடகத்தில் உள்ளவன் கன்னடனாக இருக்கிறான். இந்தியத் துணைக்கண்டத்தில் உள்ள அத்துணைத் தேசிய இனங்களும் அவனவனாக இருக்கின்றபோது, இந்த இளித்தவாய்த் தமிழன், புளித்தவாய்த் தமிழன், ஏமாளித் தமிழன், கோமாளித் தமிழன் இன்னும் திராவிடனாகவும், இந்தியனாகவும் இருக்க வேண்டுமா?



# ஏன் வேண்டும்? எதற்கு வேண்டும் தலைமை?

"அரம்பொருத பொன்போலத்
தேயும் உரம்பொருது
உள்பகை உற்ற குடி"

என்று வள்ளுவர் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சொன்னதை இதுவரை உணராமலேயே நாம் நம் பகைவர்களை உடன் இணைத்துக் கொண்டு போராடி வருகின்றோம். இதன் விளைவு மாணவர்கள் நடத்திய போராட்டக் களத் தில் இருந்து வெளியேறிய உட்பகை நஞ்சைக் கக்கி யது. அதன் பிறகுதான் இந்தியமும் அடிமைத் தமிழகமும் கைக்கோர்த்துக் கொண்டு காவல்படையை ஏவி மாணவர்கள் மீதும் உடனிருந்த மீனவர்கள் மீதும் கண்மூடித்தனமான தாக்குதல்களை நடத்தின.

நிரந்தரச் சட்டம் இயற்றும் வரை அவற்றை யெல்லாம் பொறுத்துக்கொண்டிருந்த மாணவர்கள் ஆரிய அரசின் கொடூர எண்ணத்தை வீழ்த்தி வீரியமிக்க தமிழர்களாய் வெற்றியை எட்டிப் பறித் தார்கள்.

தமிழ்நாடெங்கும் மூண்டெழுந்த இந்தத் தன்னெழுச்சிப் போராட் டத்தில் ஊடுருவிய அகப்பகை எனும் நச்சுக் கிருமிகள் ஒட்டுமொத்தமாக இணைந்து ஒற்றைக் குரலாக ஒலித்தது என்னவென்றால் "மாணவர்களிடம் பேச்சு நடத்த ஒரு தலைமை இல்லை' என்பதே.

1965ஆம் ஆண்டு நடந்த மொழிப்போரின் போது அவ்வாண்டு சனவரி 26ஆம் நாள் குடியரசு நாளைக் கருப்பு நாளாகக் கடைப்பிடிக்க வேண்டும் என்று ஓர் அரைகுறையான அறிக்கையை தி.மு.கழகம் வெளியிட்டது. அவ்வறிக்கை அன்றைய மொழிப்போருக்கு ஓர் உந்தாற்றலாக இருந்தாலும், மொழிப்போரில் எண்ணிலடங்காத் துன்பங்களுக்கு ஆளானது மாணவர்கள்தான். அதன் முதல் கட்டமாக மொழிப்போர்க் களத்தில் இராசேந்திரன் என்ற மாணவன் முதல் களப்பலியானான். அதைத் தொடர்ந்து உயிர் ஈகத்தின் பட்டியல் நீண்டது. மொழிப் போர் மறவர்களின் உயிர் ஈகத்தின் விளைச்சலை 1967ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் தி.மு.கழகம் அறுவடை செய்து ஆட்சிக் கட்டிலில் அமர்ந்தது. அன்று முதல் இன்று வரை அக்கழகமோ, மொழிப்போருக்கு எதிராக நின்ற அதன் தாய்க் கழகமோ தமிழ் மொழி மேம்பாட்டிற்கு ஆக்கப்பூர்வமாக ஒன்றும் செய்ய வில்லை என்பது அப்பட்டமான உண்மை.

உணர்வுகளின் அடிப்படையில் அவ்வப் போது கிளர்ந்தெழும் போராட்டங்களின் விளைச்சல்களை அரசியல் கட்சிகள் அறுவடை செய்துவிடும் என்பதை இன்றைய மாணவர்கள் நன்கறிவர். அதனால்தான் அவர்கள் அரசியல்வாதிகளைப் போராட்டக் களத்திலே அனுமதிக்கவில்லை. தலைமை ஒன்றை உருவாக்கி அதன் விளைச்சலை அரசியல் கட்சிகள் அறுவடை செய்துவிடும் என்பதை மாணவர்கள் அறியாதவர்கள் அல்லர். தலைமை ஒன்றை ஏற்படுத்தி அதன் மூலம் மாணவர்களின் போராட்ட வீரியத்தை மழுங்கடித்து உணர்வுகளை விலைபேசி ஒட்டுமொத்தமாக விற்றுவிடலாம் என எண்ணிய சமூக்கர்களைத் தலைமையே இல்லாத மாணவர் பட்டாளம் ஒழுக்கத்தையே அரணாக அமைத்து தமிழ் வீரத்தையே துணையாக நிறுத்தி, தமிழ்ப் பண்பாட்டைக் காக்கப் போராடிய நுட்பம், தலைவர்களையும், தலைமை வேண்டும் என்பாரையும் தலைதெறிக்க ஓடச் செய்தது.

இனி வரும் காலங்களில் மாணவர்கள் முன்னெடுக்கின்ற போராட்டங்களுக்கு தலைமை வேண்டுமா? வேண்டாமா? என்றால் கட்டாயம் வேண்டும். அது எப்படிப்பட்ட தலைமையாக இருக்க வேண்டும்? என்பதுதான் மாணவர்களின் எதிர்பார்ப்பு.

60 ஆண்டு காலம் நடந்த தமிழீழப் போரிலே 30 ஆண்டு கால மறப்போர் நாம் வாழும் காலத்திலேயே நிகழ்ந்தது. அப்போரில் போர் மரபு மீறாமல் வீரியத்தின் கூர்மை மழுங்காமல் ஒழுக்கத்துடனும், கட்டுப்பாட்டுடனும், மொழி, இன, மண் மீட்பை மட்டுமே உள்ளீடாகக் கொண்டு படை நடத்திய ஆற்றல் சான்ற பேராண்மையுள்ள ஒரு தலைமை ஈழத்தில் வாய்த்ததுபோல், இங்கும் நமக்கு அத்தகைய தலைமை அமைய வேண்டும் என்பதே மாணவர்களின் எண்ணமும் எதிர்பார்ப்பும். அந்த பேராண்மை கொண்ட தலைமைதான் தமிழ் மானம் காத்து, தமிழ் நிலத்தை மீட்டு, தனித்தமிழ்நாட்டை வழிநடத்தும். எனவே மாணவர்களுக்கு இப்போது வேண்டும் பேராண்மை கொண்ட தலைமை. அப்போதுதான் மாறும் தமிழ்நாட்டின் நிலைமை.



திரு. ஏ.அழகிய நம்பி

# ஜல்லிக்கட்டுக்கான மக்கள் போராட்டம் எழுப்பும் சில வினாக்கள்?



தேசிய மற்றும் இன அடையாளங்களை திட்டமிட்டு அழிக்கும் சக்திகள் வலுப்பெற்றுத் திரியும் ஒரு காலகட்டத்தில் நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். உண்மைகளை அறிந்து ஏற்றுக் கொள்ள மானுடம் எப்பொழுதும் முயன்றதே இல்லை. அதன் விளைவே காலங்காலமாய் நிகழ்ந்து வரும் வரலாற்றுத் திரிபுகளும், இருட்டடிப்புகளும், இவ்வகை நிகழ்வுகள் இந்தியத் திருநாட்டில் மிக அதிகம்.

இந்திய நாடு என்ற அமைப்பு முதற்கோணலால் உருப் பெற்ற ஒன்று. பல தேசிய இனங் களையும் ஒருங்கிணைத்து வெள்ளையனோடு, அன்று தேசியவாதிகள் என்று மார்தட்டிக் கொண்டவர்கள் பிடித்த “இந்தியா” என்ற பிள்ளையார் இன்று குரங்காய் நிற்கிறது. இன்று இந்திய நாட்டில் வசிக்கும் ஒருவருக்கும் “இந்தியா பல தேசிய இனங்களின் கூட்டமைப்பு” என்ற பச்சை உண்மை தெரியாது. அவ்வாறே தெரிந்தாலும் பேச மறுக்கும் நிலை. இந்நிலைக்கு காரணம், காலங்காலமாய் போதிக்கப்பட்டுவரும் பொய் புனைவு வரலாறும், பொதுவான இந்தியப் பண்பாடு என்ற “இல்லா” ஒன்றாகும்.

மொழி, பண்பாட்டின் ஒரு உயரிய அங்கமாகும். இலக்கியம் மற்றும் எழுத்தில்லா மொழிகள்கூட ஒரு இனக்குழு





அல்லது மக்கள் குழுவின் பண்பாட்டைத் தாங்கி நிற்கும் அடித்தளங்களாகவே உள்ளன. இந்திய நாட்டில் உள்ள எல்லா மொழிகளும் அதனதன் அளவில் தனித்துவமும் சிறப்பும் வாய்ந்தவையே. தமிழ் அதன் பழமையாலும், மெய்ஞானத்தாலும், இலக்கிய வளத்தாலும் தனிச்சிறப்பு வாய்ந்ததாக உள்ளது. அதனால்தான் எல்லா கபளீகரங்களையும் தாங்கி இன்னும் உயிர்வாழ்கிறது. தமிழுணர்ந்த ஒரே ஒருவன் இருக்கும் வரை என்றும் வாழும்.

**மொழியும், பண்பாடும் இரண்டரக்கலந்தே தேசிய இனத்திற்கான வரையறையைத் தகவமைக்கின்றன. இவ்வகையில் தமிழ்ப் பண்பாட்டின் ஒரு அங்கமாக அறியப்படும் ஜல்லிக்கட்டு ஏறுதழுவுதலை சங்க இலக்கியங்கள்வழி நம்மிடம் தெரிவிப்பது மொழியேயாகும். தமிழர் பண்பாட்டிற்கும் மொழிக்கும் உள்ள இணக்கத்தை ஏறுதழுவுதல் உறுதி செய்கிறது.**

“வேற்றுமையில் ஒற்றுமை” என்ற ஏமாற்றுச் சொல்லாடலால் கட்டமைக்கப்பட்ட இந்திய நாடு இன்று ஒரே தேசம், ஒரே வரி என்ற கூப்பாட்டை முன்வைக்கிறது. இதைவிட முக்கியமானது “இந்து கலாச்சாரம்” என்ற வெற்றான ஏமாற்றுத்தனத்தை முன்வைத்து தேசம் கட்ட முயலும் சில கும்பல்களின் முயற்சி. அம்முயற்சியின் தலையாயது செத்தொழிந்த மொழியான சமஸ்கிருதத்தை உயிர்ப்பிக்கச் செய்யும் முயற்சி. இது ஒரு அடாவடித்தனமான அயோக்கியத்தனம். வழக்கிலிருக்கும் மொழிச்செல்வங்களை மாற்றாந்தாய் மனப்பான்மையில் நடத்தும் மத்தியில் ஆட்சி செய்பவர்கள், பிற்போக்குத்தனமான செத்தொழிந்த (தெய்வபாஷையாம்) மொழியான சமஸ்கிருதத்தை முகிழ்க்கச் செய்வதற்கான முயற்சி அக்கிரமத்தின் உச்சகட்டம். அதற்கான எந்த நியாயமும் இல்லை. ஆட்சியில் இருக்கின்றோம் என்ற திமிர்த்தனத்தில் இந்த அடிப்படைவாதிகள் ஆடும் ஆட்டம் பகுத்தறிவிற்கு சிறிதும் ஒவ்வாததாகும்.

**தொடக்கமறியவியலா பல நம்பிக்கைகளை நிறுவனப்படுத்தி இந்துமதம் எனும் பெயரிட்டு அதன் பெயரால் பிழைப்பு நடத்திய, நடத்திக் கொண்டிருக்கும் ஒரு சிறு கூட்டத்தின் பிடியில் இருந்து விடுபட முடியாமல் இன்றும் தவிக்கிறது இந்திய துணைக் கண்டத்தின் பல தேசிய இனங்கள்.**

தேசிய இனங்களின் பகுத்தறிவு சார்ந்த எந்த முன்னெடுப்பையும் இந்த குதர்க்கக் கும்பல் அனுமதித்ததேயில்லை. இக்கும்பலின் நோக்கம் தேசிய இனங்களின் மொழியை குலைத்து சிதைப்பதிலேயே இருந்தது. இச்சூழ்ச்சியில் சிக்கிச் சிதைந்து உருத் தெரியாமல் நிற்கும் இந்திய நாட்டு மொழிகளில் தப்பிப் பிழைத்தது தமிழ் மட்டுமே. இந்தி எதிர்ப்புப் போராட்டத்தைக் குறைகூறும் மானங்கெட்ட தமிழர்கள் பொருளாதார அளவுகோளை ஒன்றைமட்டும் வைத்தே வாழ்வை நோக்கும் அரைவேக்காடுகள் மட்டுமல்ல தமிழ்மொழியின் தனித்துவத்தையும், அறிவுச் செரிவையும் அறியாதவர்கள். அதைவிட முக்கியமாய், இந்தி என்பது ஒரு மொழியே அல்ல என்பதையும், இந்தியா ஒரு தேசமே அல்ல என்பதையும், அதையும்தாண்டி இந்தி ஒரு அலுவல் மொழியேயன்றி தேசிய மொழி அல்ல என்ற உண்மையையும் அறியாதவர்கள். இப்படிப்பட்டவர்களின் உதவியால்தான் மத்தியில் ஆளும் கழைக்கூத்தாடிகள் அம்மண ஆட்டம் ஆடுகின்றார்கள். இவ்வாறான முன்னெப்பொழுதுமில்லாத ஒரு அசாதாரண சூழலில் தேசிய இனங்கள் தன்னிலை குறித்து சுயநினைவற்றுப் போயுள்ள நிலையில் தமிழக மாணவர்களால் முன்னெடுக்கப்பட்டு, மக்களால் நடத்தப்பட்ட, பண்பாட்டு விழுமியம் (இது குறித்த பல விமர்சனங்கள் எனக்கு இருந்த போதிலும்) சார்ந்த ஜல்லிக்கட்டுக்கான மக்கள் எழுச்சி பல ஐயப்பாடுகளையும், வினாக்களையும் நம்முன்னே வைக்கின்றது.

தமிழகம் கடந்த பல பத்தாண்டுகளாகவே இந்திய நாட்டின் அமைப்பிற்கேயான சாபக்கேடுபோல், தகுதி மிகவும் குறைந்த, பொது அரசியல் நாகரீகமற்ற, ஊழலில் திளைத்துப் போன கும்பல்களால் ஆளப்பட்டு வந்துள்ளது. இங்கு அரசியல் என்பது அதில் பங்கெடுப்போர் இலாபம் ஈட்டும் நிறுவனமாக, அதையும் தாண்டி தலைமுறை தலைமுறையாய் தன் சந்ததிகள் கோலோச்ச ஏற்படுத்தப்பட்ட அமைப்பாக மாறிப்போனது. மக்களாட்சி என்பதெல்லாம் உதட்டளவிலும், ஆள்வோர் மக்களை புத்தி மழுங்கச் செய்து ஏமாற்றுவதுமாகிப் போனது. இதற்காக மக்களையும் அரசியல்வாதிகளையும் மாறி மாறி குறைகூறியதுதான் மிச்சம்.

போராட்டம் என்பதை ஒரு கெட்ட வார்த்தையாக மத்தியில் ஆட்சி செய்த காங்கிரஸ் கட்சி குண்டர்கள் கட்டமைத்ததையும், அதை மக்களாட்சியின் ஏதோவொரு தூணான நீதிமன்றம் வழிமொழிந்ததும் பழைய கதை. தமிழ்நாட்டை ஆண்ட மாமன்னர்களும், மாதரசிகளும் மக்கள் எழுச்சியை முளையிலேயே கிள்ளி பிசுபிசுத்துப் போகச் செய்த வரலாறு இந்த ஜல்லிக்கட்டுக்கான மக்கள் போராட்டம் வரை நீடித்த ஒன்று.

இவ்வகைப் போக்கிற்கு முன்னோடியாக செயல்பட்டவர் கருணாநிதி. ஈழப்போரின் போது மக்கள் எழுச்சியை நயவஞ்சகமாய் அடக்கி பெருங்கொலைக்கு வழிவகுத்துத் துணை போனவர் என்ற முறையில் சோனியா காந்தி மற்றும் ராஜபக்ஷ போன்றோரின் புகழ் உள்ளவரை அவர் புகழும் இருக்கும்.

இப்படிப்பட்ட ஒரு பய உணர்வுடன் வாழ்ந்த மக்களை வீதிக்கு வந்து போராட வைத்த உந்து சக்தி எது? ஜெயலலிதா போன்ற துணிவான(?) மக்கள் போராட்டத்தை இரும்புக்கரம் கொண்டு ஒடுக்கும் ஒரு ஆளுமை இல்லாமல் போனதால் உண்டான அரசியல் வெற்றிடமா? அல்லது மக்களின் பெரும்பான்மை உணர்வைத் தூண்டிப் பார்த்து கெட்ட பெயர் வாங்க வேண்டாம் என்று இருந்த தற்போதைய சூழல் முதல்வரின் பயந்த போக்கா? அல்லது ஜெயலலிதாவே இருந்திருந்தால்கூட மக்கள் போராடி இருப்பார்களா?

எவ்வாறாயினும், போராட்டத்தில் பங்கெடுத்தவர்களின் வயது, அரசியல் சார்பின்மை மற்றும் அவர்கள் முன்வைத்த வாதங்களை வைத்து பார்க்கின்ற போது, ஜல்லிக்கட்டு என்பது பல காரணங்களில் ஒன்றாகவே தெரிகிறது. இதுவரை அனுசரித்து, தன் சுயத்தில் கை வைக்காத மத்திய அரசு, அப்போக்கை மாற்றி ஒற்றை தேசியத்தை நோக்கி தன்னை உந்துவதாக, தமிழ்த் தேசியம் என்ற பழந்தேசியத்தின் மக்கள் உணர்வதன் எதிர்வினையாகக்கூட இதைக் கொள்ளலாம்.

**இப்போராட்டத்தில் கலந்து கொண்டவர்களுக்கு தமிழ்த் தேசியம் குறித்த புரிதல் இருந்திருக்குமா? என்பது கேள்விக்குறியே. இருப்பினும் அவர்களுடைய உள்மனதில் தன் சுயம் பற்றிய பிரக்ஞை இருப்பதாகவும், அதை யாரோ தட்டிப் பறிக்க அல்லது இல்லாததாக்க முயல்கிறார்கள் என்ற பயத்தின் எதிர்வினையாகவே இப்போராட்டம் அமைந்தது எனக் கொள்ளவும் வாய்ப்புண்டு.**



காலங்காலமாய் சாதி அடிப்படையில் பிரிந்து பகைமை பாராட்டிய ஒரு சமூகம், பண்பாடு சார்ந்து (ஜல்லிக்கட்டு அனைவருக்குமான பண்பாடா அல்லது தமிழனின் பொதுப் பண்பாடா என்பது விவாதத்திற்குரிய ஒன்று) ஒருங்கிணைவது என்பது ஒரு அரிய நிகழ்வாகும். இந்த பிரச்சனையில், நேரடியாக தொடர்பில்லாத, ஜல்லிக்கட்டை எதிர்க்காத மோடியை போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் வசை பாடியதையும், தன்னாலான அனைத்தையும் செய்து போராட்டத்தை குலைக்க முனையாத பன்னீர் செல்வத்தையும், சசிகலாவையும் அவர்கள் இணையாக திட்டியதையும் பார்க்கும் போது போராட்டக்காரர்களின் தேவையைத் தாண்டி அவர்கள் எதையோ எதிர்பார்த்தார்கள் அல்லது உணர்த்த விரும்பினார்கள் என்பது தெளிவாகும். பிரச்சனையைக் கையாள்பவர்கள், ஜல்லிக்கட்டுத் தொடர்பான எந்தொரு சாதகமான முடிவையும் தனக்கு ஆதாயமாய் பயன்படுத்திக் கொள்ளக்கூடாது என்ற எண்ணமாகவும் இருக்கலாம் அல்லது எங்கள் பிரச்சனையில் தேவையில்லாமல் தலையிட்டால் இதே கதிதான் என்ற எச்சரிக்கையாகவும் இருக்கலாம். ஜெயலலிதா மறைவையொட்டி உண்டான அரசியல் வெற்றிடத்தை கள்ளத்தனமாய் நிரப்ப முயலும் நயவஞ்சக அமித்ஷா கோஷ்டியின் போக்கை வைத்துப் பார்த்தால் மேற்சொன்ன கூற்றின் சாரம் விளங்கும்.

எந்தொரு கட்சியும் மொழி மற்றும் பண்பாடு சார்ந்த பிரச்சனைக்காக முழுமனதுடன் போராடியதில்லை. காரணம், அவ்வகைப் போரட்டத்திற்கு மக்கள் ஆதரவு கிடைக்காது அல்லது அதனால் தங்களுக்கு இலாபம் இல்லை என்ற கயமைத்தனம். அவ்வாறு மக்கள் பிரச்சனைக்காகப் போராடிய சில கட்சிகளும் தனித்தன்மையை பலமுறை இழந்து சமரசம் செய்து கொண்டு பிற தொழில்முறைக் கட்சிகளுடன் இணைந்து செயல்பட்டதால் நம்பகத்தன்மை இழந்து போயினர். கம்யூனிஸ்டுகள் உட்பட, மக்களை முட்டாள்களாக எண்ணிச் செய்யும் அரசியல் இந்த நிலையில்தான் முடியும். இயக்கங்களாகச் செயல்படும் சில குழுக்கள் சாதிச் சண்டையில் மூழ்கித் தன் பேரைக் கெடுத்துக் கொண்டு பத்தோடு பதினொன்றாகி நிற்கின்றன. இச்சூழலை பயன்படுத்தி உட்புகுந்த லாரன்ஸ் போன்ற நடிகர்கள் இப்போராட்டத்தில் முக்கிய முகமாகிப் போனது முரண்பாடான ஒன்றாகும். எது எவ்வாறாயினும் பிரபல முகங்களும், அரசியல்வாதிகளும், மக்களின் எண்ண ஓட்டத்தைப் பார்த்து பயந்து போயுள்ளனர் என்பது மட்டும் தெரிகிறது.


பல நாட்கள் நடந்து கலவரத்துடன் முடிந்த இப்போராட்டம் வெற்றியா, தோல்வியா என்பது இன்னொரு கேள்வி. போராடியவர்களே ஏற்க மறுத்தாலும், அரசு

**ஜல்லிக்கட்டுப் போராட்டத்தின் மற்றுமொரு முக்கியமான கூறு தலைமையற்ற நிலையில் மக்கள் பங்கெடுத்தப் பாங்கு, கட்சிசார்ந்த குழுக்கள் இதில் பங்கெடுத்திருப்பார்களா என்பது தெரியவில்லை. இந்நிலையில் பல கட்சிகள் மற்றும் இயக்கங்களின் ஆதங்கமே மக்களின் எண்ணவோட்டத்தை தமக்காக பயன்படுத்த இயலவில்லையே என்பதேயாகும். இதற்கு யாரை குறை சொல்வது?**



முந்திக்கொண்டு போராட்டம் வெற்றியென அறிவிக்கும் அளவிற்கு முடிவுக்கு வந்தது இப்போராட்டம். அறிவார்த்தமாய் வாதாடியிருந்தால் நீதிமன்றத்திலேயே சாதகமான முடிவைப் பெற்றிருக்கக்கூடிய நிலையைத் தாண்டி, முட்டாள்தனமான வாதத்தின் மூலம் நிலைமையை மோசமாக்கிய “விலங்கு ஆர்வலர்கள்” எதிரியாக சித்தரிக்கப்பட்ட நிகழ்வு தேவையற்ற ஒன்றாகவே படுகிறது. ஒரு மாட்டை ஒரு நாள் வைத்து பராமரிக்க திராணியற்ற நாகரீக உலக விலங்கு ஆர்வலர்கள் மிருகவதையைப் பற்றி ஒரு சொல்கூடப் பேசத் தகுதியற்றவர்கள்.

இந்தியா ஒரு ஏழை நாடு. இன்றைய கோமாளி அரசியல்வாதிகள் இருக்கும்வரை நிலைமை இப்படியேதான் இருக்கும். இன்றும் ஒரு மாட்டை நம்பி ஒரு குடும்பமே வாழும் நிலை உள்ளது. இது ஒரு சார்பு வாழ்க்கை. அவர்கள் விலங்குகளை நேசிப்பவர்கள். உளமாற மாடுகள் குறிப்பாக காளைகள் வேலை வாங்கவே வளர்க்கப்படுகின்றன. விவசாய எந்திரங்களின் வரவால் அவைகளின் முக்கியத்துவம் குறைந்துபோன நிலையிலும் கூட இவ்வாறு வளர்க்கப்படும் காளைகளை ஒரு பருவத்தில் காயடித்து விடுவார்கள். காயடிப்பது என்பது விதைப்பையை நசுக்குவது. விலங்கு ஆர்வலர்களின் பார்வையில் இது மிருகவதையா? அடுத்து மாடுகளை நிலைக்குக் கொண்டுவர மூக்கணாங்கயிறு குத்துவார்கள். இது மிருகவதையா? அடுத்து பொதி சுமக்கும் வண்டி மாடுகளுக்கு குளம்பு நீக்கி “லாடம்” கட்டுவார்கள். இது மிருகவதையா? இவையனைத்தும் ஏறுதழுவுதல் அல்லது ஜல்லிக்கட்டை விட வலிமிகுந்தவை, உடற்காயம் ஏற்படுத்தக்கூடியவை. இவைகளையெல்லாம் மிருகவதை என்று போராட வேண்டியதுதானே ஆர்வலர்கள். அதைவிட கொடுமை 10 டன் எடையை மாட்டு வண்டியில் வைத்து சுமக்கச் செய்வார்கள். மாடுகள் அதை இலாவகமாகச் செய்யும். இதையெல்லாம் மிருகவதை என்று மேற்சொன்னவர்கள் சொன்னால் சந்தி சிரிக்கும் அவர்கள் அறியாமை குறித்து. இவ்வகை விலங்கு ஆர்வலர்கள் போலிகள். மாட்டுச்சாணத்தைக் கண்டாலே மூக்கைப் பொத்திக் கொண்டு ஒரு காததூரம் ஓடுபவர்கள்.



**இவர்களின் வாதத்தை வைத்து ஜல்லிக்கட்டுக்குத் தடை விதித்த நீதிமன்றத்தை நினைத்தால் வாயைப் பொத்திக் கொண்டு சிரிக்கத்தான் தோன்றுகிறது. நீதிபதிகள், குறிப்பாக உச்சநீதிமன்ற நீதிபதிகள் வாதி, பிரதிவாதிகளின் வாதங்களைத் தாண்டி சிந்திக்க அனுமதிக்கப்பட்டவர்கள். பல நேரங்களில் அவர்களின் வாக்கு சட்டமாகி உள்ளது. அல்லது சட்டமுன்வரைவிற்கு அச்சாரமாய் இருந்துள்ளது.**

இன்று நாம் வரிந்து பேசும் அடிப்படை உரிமைகள் குறித்த சட்டப்பாதுகாப்பு, பெண்ணுரிமை சட்டங்கள், சுற்றுச்சூழல் சட்டங்கள் உட்பட நடுவுநிலைமை தவறாத நீதிபதிகளால் முன்மொழியப்பட்டு விவாதிக்கப்பட்டு சட்ட அங்கீகாரம்



பெற்றவையே. அப்படிப்பட்ட நீதிபதிகள் அருகிப்போய்விட்ட நிலையில் நாம் நினைப்பதையெல்லாம் சட்டமாக்க வேண்டும் என்ற எண்ணவோட்டத்தில், தன்புரிதல் மற்றும் ஒருபக்க எண்ணத்தில் சிந்திப்பவர்களாக இன்றைய நீதியரசர்கள் உள்ளனர். அதன் வெளிப்பாடே திரையரங்குகளில் தேசியத்தைத் திணிக்கும் நீதிபதியின் உத்தரவு. அவ்வுத்தரவில் தேசப்பற்று மற்றும் இந்தியப் பண்பாடு குறித்த நீதிபதியின் கருத்து அவருடைய மத நம்பிக்கை சார்ந்து கூறப்பட்டது என்பது வெளிப்படை. இந்தியா பண்பாடுகளின் உச்சம் என்று எதை வைத்து அவர் கூறினார் என்று தெரியவில்லை. திணிக்கப்பட்ட எதுவுமே நிலைத்ததில்லை என்பதே வரலாறு.

மேற்கண்ட தீர்ப்பைக்கூறிய அதே நீதிபதிதான் ஜல்லிக்கட்டு தடையையும் விதித்தார். காட்டுமிராண்டித்தனமான விளையாட்டு என்ற குதர்க்கச் சொல் வேறு. மனிதனை சாதி அடிப்படையில் பிரித்து அடிமையாக்கி அழகு பார்த்த, பெண்களை அடக்கி, வாழ்வை முடமாக்கிய, பிறமொழிகளையும், பண்பாட்டையும் சிதைத்து பாழாய்ப்போன வேதப் பண்பாட்டை புகுத்திய, வல்லான் வகுத்ததே சட்டம் என்ற பாணியில் பலவீனமானவர்களை கீழ்மைப்படுத்திய, பகுத்தறிவுக்கு ஒவ்வாத பண்பாடே அவர்கள் போற்றும் இந்தியப்பண்பாடு. அன்றல்ல இன்றும் அவையெல்லாம் பெருமையாகத் தோன்றும் அவர்களுக்கு ஜல்லிக்கட்டு காட்டு மிராண்டித்தனமாம், மிருகவதையாம். உண்மையில் ஜல்லிக்கட்டில் நடப்பது மனிதவதையே நாகரீக சமூகத்தில் மிருகங்களுடன் மோதி உடல் முடமும், உயிர்ச்சேதமும் அடைவதே வீரமும், பண்பாடும் என்றால் அது அவர்கள் பாடு. அதிகபட்சம் அவ்விளையாட்டை மேலும் முறைப்படுத்தி சேதத்தை தவிர்க்கலாம். அதைவிடுத்து மேதாவிகளான விலங்கு ஆர்வலர்களின் கூற்றை ஏற்று தடை செய்வது எந்தவித நியாயம்?

இது ஒருபுறமிருக்க, நம்மவர்களுக்கு பண்பாட்டு அடையாளமாக ஜல்லிக்கட்டு மட்டும்தான் தெரிகிறதா? பழந்தமிழர் பண்பாடு அறிவுசார்ந்தது என்பதை இலக்கியங்கள் வழி அறிகிறோம். நமது இலக்கியம் உலகின் தலைசிறந்த எந்த இலக்கியத்திற்கும் சளைத்ததல்ல. அவை உணர்த்துவது பகுத்தறிவு சார்ந்த மெய்யுணர்வு வாழ்வியல் சார்ந்த கருத்துக்கள். மக்கட்பண்பு, கல்வி, அறம், வேற்றுமையின்மை, வீரம் என நீளும் பழங்கால பண்பாட்டு ஒழுக்காறு நம் முன்னோர்கள் நமக்கு விட்டுச் சென்ற பொக்கிஷம்.

**காதல், இன்பம் இவையெல்லாம்தான் தமிழனின் பண்பாட்டுக் கூறுகள். இவ்வழி வந்த நம்மில் பலர் நம் பண்பாட்டுக் கூறான மொழி சார்ந்த பெயரை நம் பிள்ளைகளுக்கு வைக்கின்றோமா?**

இதுதான் பண்பாட்டு அடையாளத்தைக் காப்பதற்கான முதற்படி. “மனத்துக்கண் மாசிலன் ஆதல்” என்ற அறம் சார்ந்த சிந்தனை தமிழருள் எத்தனை பேருக்கு உள்ளது. உற்றுழி உதவியும் உருபொருள் கொடுத்தும் எத்துனை பேர் கல்வி கற்கின்றோம். கசடற கற்று அதன் வழி நடக்கின்றோம். சாதி இரண்டொழிய வேறில்லை என்ற ஃமூதுரையின் வழியும் “பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்” என்ற வள்ளுவத்தின் வழி சாதி ஒழிந்து பண்பாட்டின் அடிப்படையில் ஒன்றுகூடி நம்மவர் ஒருவரை ஆள வைக்க வேண்டியதுதானே, அவையல்லாவிடினும் சரியான மொழி பேசி தன் அடையாளத்தைக் காத்து, பிறன் தன்னை சுரண்டாமல் பார்த்துக் கொள்ள வேண்டியதுதானே? அவ்வாறான ஒரு நிலையை அடைய நாம் நீண்ட தூரம் பயணிக்க வேண்டியிருக்கும். காப்பாற்றுவதற்காக அல்ல, பல வாழ்வியல் அறிவுக் கருவூலங்களை அறிய தமிழை நாம் ஆழ்ந்து கற்க வேண்டும். வருமானத்திற்காக ஆங்கிலம் கற்பதைப் போல. வாழ்க்கைக்காக தமிழ் கற்கும் நிலை வர வேண்டும். அவ்வகைப் புரிதலோடு கூடிய இளைய சமூகமே எதிர்காலத்தில் இந்தியம் என்ற வெற்று தேசியம் நம் மீது தொடுத்துக் கொண்டிருக்கும், தொடுக்கத் தலைப்பட்டிருக்கும் கொடிய தாக்குதலை தடுத்து நிறுத்த முடியும். அதையும் தாண்டி, வேறு தேசிய இனங்களுக்கும் வழிகாட்ட முடியும். அதற்கான ஒரு ஆயத்தக் களமாகவே நடந்த முடிந்த ஜல்லிக்கட்டுக்கான எழுச்சியைக் கருத வேண்டும்.



எழுத்தாளர்.
சரவணன் சந்திரன்

# தை வசந்தம்



அரபு வசந்தம் என்றெல்லாம் உலகில் முகநூல் வழியாக இளைஞர்கள் கூடிப் போராடிய பல்வேறு புரட்சிகளைப் பற்றிச் சொல்வார்கள். இங்கேயும் அப்படி நடக்குமா? என ஏங்கியிருந்தவர்கள் ஏராளம். இங்கே நடக்கவே நடக்காது என எதிர்மறையாகச் சத்தியம் செய்தவர்கள் ஏராளம். பொதுவாகவே 90களுக்குப் பிந்தைய தலைமுறைக்கு அரசியல் ஆர்வமோ போராடும் உத்வேகமோ இருப்பதில்லை என ஒரு குற்றச்சாட்டு தொடர்ந்து முன்வைக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டைப் பொறுத்த வரை அவர்கள் எதற்காகவும் இது மாதிரி அலைகடலென ஒன்று கூடியதில்லை.

தமிழ்நாட்டு இளைஞர்கள் மதத்தால், இனத்தால், வாழ்க்கை முறைகளால், சாதியால் பிரிந்து கிடந்தார்கள் என்பதுதான் நிஜம். அவர்களை ஒன்றிணைக்கும் ஒரு புள்ளிக்காகக் காத்திருந்தார்களோ என இப்போது எண்ணத் தோன்றுகிறது. ஒரு சின்ன உதாரணத்தைச் சொல்ல வேண்டுமெனில், பெசண்ட் நகர் கடற்கரையில் கூடும் வர்க்கத்தைச் சேர்ந்த இளைஞர்கள் மெரினா பக்கம் தலை வைத்துக்கூடப் பார்க்க மாட்டார்கள் மெரீனாவை அவர்கள் வெறுப்பதற்கும் பல காரணங்கள் இருக்கின்றன்.

சென்னை கடற்கரையிலேயே இப்படிப் பிரிவுகள் இருப்பது போல அலங்காநல்லூரிலும்கூட இருக்கிறது. அந்த ஊருக்குப் பக்கத்து மாவட்டங்களில் இருக்கும் இளைஞர்கள்கூட அலங்காநல்லூருக்கு இதுவரை போயிருக்க மாட்டார்கள். ஜல்லிக்கட்டை பார்த்தேயிராத தலைமுறை சென்னை போன்ற நகரங்களில் மட்டுமல்ல அலங்காநல்லூருக்கு அருகில் இருக்கிற ஊர்களில்கூட இருக்கின்றது. ஆனால் ஜல்லிக்கட்டு நடக்கும் வாடிவாசலைத் தொட்டாவது பார்த்து வேண்டுமென்கிற உணர்வோடு இளைஞர்கள் படை அலங்காநல்லூரிலும் மெரீனாவிலும் தற்போது குவிந்தது எப்படி? அதுதான் இந்த தை வசந்தம் கொடுத்த நல்ல மகசூல்.

ஆஸ்திரேலியவில் வேலை பார்க்கும் இளைஞர் ஒருவர், வாடிவாசலைத் தொட்டுப் பார்க்க, புத்தம் புதிய சந்தை மதிப்பு மிக்க காரில் வந்து இறங்குகிறார். ஓட்டை உடைசலான தன்னுடைய இருசக்கர வாகனத்தில் வந்து இறங்குகிறார் இன்னொரு இளைஞர். பொருளாதார ரீதியிலும் சமூகக் கட்டுமான ரீதியிலும் நேரெதிரான வாழ்க்கைச் சூழலில் இருக்கும் இளைஞர்கள் சந்திக்கும் புள்ளியாக இந்தப் போராட்டக் களங்கள் மாறின. அலங்காநல்லூரும் மெரீனாவும் ஒட்டுமொத்த தமிழகத்திற்கான குறியீடுகள். இந்த இரண்டு ஊர் மட்டுமல்ல் தமிழகத்தை சாலைப் பயணமாகக் கடந்த போது எல்லா ஊர்களிலும் இதே மாதிரியாகவே காட்சியைப் பார்க்க முடிந்தது. பெண்கள் குழந்தைளோடு களத்தில் நின்றார்கள். பாலின சமத்துவத்தோடு எல்லா வயது பெண்களும் களத்தில் இருந்தார்கள்.

வழக்கமாக பொதுக் காரியங்களில் தலையை நுழைக்கும் இளைஞர்களைஇ வீட்டில் உள்ள பெண்கள்தான் எதற்கு வேண்டாத வேலை என்று கண்டிப்பார்கள். இப்போது அவர்களே முந்திக் கொண்டு களத்தில் இறங்கி விட்டனர். உண்மையைச் சொன்னால் வீட்டின் சும்மா ஒரு இளைஞனாலும் படுத்திருத்திருக்க முடியாது. வீட்டில் உள்ளவர்களே போராட்டத்திற்குப் போவெனச் சொல்லி விரட்டி விட்டிருப்பார்கள்.

பெண்கள் தாய்மார்கள் மத்தியில் முன்னாள் முதல்வர் ஜெ.ஜெயலலிதா மறைவிற்குப் பிறகு இனம்புரியாத ஒரு வெறுப்பும் பதட்டமும் மண்டிக் கிடக்கிறது. கோபத்தை யார் மீதாவது காட்டிக் கொண்டே இருக்கிறார்கள். அவர்களே தார்மீக மற்றும் நேரடி ஆதரவு கொடுத்து விட்ட பிறகு இனியும் களத்தில் இறங்காமல் இருந்தால் பின்னடைவு என்று இளைஞர்கள் எடுத்துக் கொண்டார்களோ, என்னவோ? ஒரே தடை, படிக்கிற கல்லூரிகளும் வேலை பார்க்கிற நிறுவனங்களும்தான். அவர்களும்கூட மறை முகமாகவும் நேரடியாகவும் ஆதரவு தந்துவிட்டனர்.


கடந்த காலங்களில் அவர்களும் பல்வேறு வகைகளில் ஒடுக்கப்பட்டிருத்தனர். போராட்டம் ஆதரவு என்று சொன்னாலே மிரட்டப்பட்டிருந்தனர். சமீபகாலமாக அவர்கள் அந்த அச்சத்தில் இருந்து மெல்ல விடுபட்டிருக்கின்றனர். அழுத்தப்பட்டுக் கிடந்தது வெளியே கிளம்புவது தானே இயற்கை? அதனடிப்படையில் அவர்களும் பச்சைக் கொடிக் காட்டிவிட்டனர்.

எல்லா தடையும் நீங்கின பிறகு இளைஞர்கள் என்ன செய்வார்கள்? களம் தெளிவாக இருக்கிறது. ஆரம்பத்தில் அரசே இந்தப் போராட்டத்தை ஊக்குவித்த மாதிரிதான் தெரிந்தது. தமிழக அரசிற்கு அதற்கான அரசியல் தேவையும் இருந்தது. அதனாலேயே ஆரம்பத்தில் சாமரம் வீசிக் கொண்டிருந்தது



தமிழக அரசு. தமிழகம் முழுக்க முன்னாள் முதல்வரின் மரணம் குறித்த அதிருப்திகளும், அதற்கடுத்த அரசின் நடவடிக்கைகள் குறித்த அதிருப்திகளும் இருந்தன. ஜல்லிக்கட்டு என்பதன் வழியாக அத்தகைய அதிருப்திகளைச் சரிக்கட்டி விடலாம் என யோசித்த அரசின் நடவடிக்கைகளையும் தவறென்று சொல்ல முடியாது. எல்லா பக்கமும் கதவுகள் திறந்து கொண்டன. இளைஞர்களின் எழுச்சி என்னும் காற்று எல்லா பக்கங்களிலும் இருந்தும் புகுந்து வெளியேறியது.

பல வருடங்களாக தமிழ், தமிழர் நலன்களைப் பின்னுக்கு தள்ளிச் செயல்படும் போக்கால் கடுமையான விரக்தியில் இருந்தார்கள். மீத்தேன், விவசாயிகள் தற்கொலை, முல்லைப் பெரியாறு பிரச்சினை, மீனவர்கள் சாவு என தொடர்ந்து தமிழகத்திற்கு எதிராக பல்வேறு அரசுகள் நடந்து கொண்ட விதத்தில் அடியாழத்து அதிருப்தியில் இருந்தார்கள். இனி அவர்களிடம் எதிர்பார்ப்பதில் பயனில்லை என்ற முடிவிற்கு வந்து விட்டார்கள் என்றுதான் சொல்ல வேண்டும். தங்களுக்கான சிறு பொறிக்காகக் காத்திருந்தார்கள். அலங்கநல்லூரில் தடியடி நடத்தி அந்த அக்னிக் குஞ்சை ஜல்லிக்கட்டு என்கிற உணர்வும் பூர்வமான ஒரு விஷயத்தில் பொதித்து வைத்தார்கள். வெந்து தணிந்து விட்டது காடு. அதுதான் மெரீனாவில் போர்க் குரலாக வெளிப்பட்டது. கையேந்தி பவனில் தவம் கிடந்தவர்களும் அங்கிருந்தார்கள். கே.எப்.சியே கதியென்று கிடந்தவர்களும் அங்கு இருந்தார்கள். சாதி, இன , மத உணர்வுகள் கடந்து தமிழர்கள் என்கிற ஒற்றைச் சொல்லை முழங்கிய படி களத்தில் இருந்தார்கள். கட்டுக் கோப்பான ராணுவம் போல களத்தில் இருந்தார்கள். ஒரு அசம்பாவிதம் கூட நடக்கவில்லை என தமிழ் நாடு காவல் துறை ஆரம்பத்தில் ஆச்சரியம் தெரிவித்தது.



கண்ணியமான இந்தப் போராட்டம் தான் மேலும் மேலும் ஆட்களை அதை நோக்கி ஈர்த்தது. இதன் உச்சகட்டமாக எழுத்தாளர் லக்ஷ்மி சரவணக்குமார் தன்னுடைய யுவபுரஸ்கார் விருதை மாணவர்களின் எழுச்சியை முன்னிட்டுத் திருப்பிக் கொடுத்தார். வணிகர் சங்கம் போன்ற அமைப்புகள் எல்லாம் மாணவர்கள் போராட்டத்திற்கு ஆதரவாகக் களத்தில் குதித்தனர். கூட்டம் கூடிய போதும் எந்த அசம்பாவிதங்களும் நடக்கவில்லை. இது போராட்டமல்ல. அறப் போராட்டமாக நடந்த கொண்டாட்டம் என்பதைத் தமிழகக் குடும்பங்கள் புரிந்து கொண்டன. கைக் குழந்தையைத் தூக்கிக் கொண்டெல்லாம் பெண்கள் போராட்டக் களத்திற்கு வந்தார்கள். முதியவர்கள் கூட ஒரு ஓரமாய் அமைதியாய் நின்று வேடிக்கை பார்த்தார்கள்.

சென்னையில் நிலைமை கட்டுக்குள் இருந்தது. ஆனால் வெளியூர்களில் இளைஞர்கள் ரயிலை மறித்தார்கள். பயணிகள் சிரமங்களை அனுபவித்தபடி பேருந்தில் ஏறிப் போனார்கள். ஆனாலும் பொறுத்துக் கொண்டார்கள் என்றுதான் படுகிறது. மிகப்பெரிய போராட்டத்தில் சில ஆர்வக் கோளாறுகளை தவிக்க முடியாதுதான்.

தமிழகமே இளைஞர்கள் ஆரம்பித்த இந்தப் போராட்டத்தின் பின்னால் அணிதிரண்டு விட்டது. அவர்கள் தங்களுக்கு எதிரானவற்றை ஒற்றை எதிரியாய் முன்னிறுத்திப் போராடத் துவங்கிவிட்டனர். ஜல்லிக்கட்டு





அதற்கான துவக்கப் புள்ளி. இதற்குக் காட்டியது மாதிரி எல்லா விஷயங்களுக்கும் காட்டுவார்களா? எனக் கேள்விகள் பல முனைகளில் இருந்தும் வந்து விழுகின்றன. அணி திரள்வது என்பது ஒரே நாளில் நடந்து விடாது. அது சிறுகச் சிறுகச் சேரும் செல்வம் போன்றது. ஒரு பெரிய ஆழிப் பேரலை மாதிரி பிரம்மாண்டமான துவக்கம் அமைய வேண்டும். ஜல்லிக்கட்டு என்பது அப்படியான அக்னிக் குஞ்சாக அமைந்துவிட்டது. ஆயிரம் விமர்சனர்கள் இருந்தாலும் கடல் கடந்தாலும் இளைஞர்கள் பாரம்பரியத்தின் பின்னால்தான் அணி வகுத்திருக்கின்றனர்.

உலகின் பழமையான இனங்களில் சீனர்கள் எப்போதும் தங்களது பாரம்பரியத்தை விட்டுக் கொடுப்பதில்லை அதேபோல் தமிழகப் பாரம்பரிய விளையாட்டான ஜல்லிக்கட்டிற்கு எதிரான தடையை எதிர்த்து பல்வேறு இயக்கங்கள் பல ஆண்டுகளாகப் போராடிக் கொண்டிருக்கின்றன. ராஜசேகரன் சிவசேனாதிபதி போன்ற முன்னோடிகளிடமிருந்து தங்களுக்கான சக்தியை இந்த இளைஞர்கள் பெற்றுக் கொண்டார்கள். ஆனால் இளைஞர்களின் ஒட்டுமொத்த ஆதரவு என்பது இதுவரை கிடைக்காமல் இருந்தது. தமிழ் இளைஞர்கள் பாரம்பரியத்திலிருந்து தடம் மாறுகிறார்களோ என்கிற ஐயம் இருந்தது. அந்த ஐயத்தைத் தவிடு பொடியாக்கி பாரம்பரியத்தின் சிவப்புக் கொம்புகளை தலையில் ஏந்தியிருந்தார்கள் தமிழக இளைஞர்கள். தங்களது வீட்டுப் பெண்களுக்கு அதை அணிவித்தார்கள். குழந்தைகளுக்கு அதை அணிவித்தார்கள். தோழியருக்கு தோழர்களுக்கு தோழமையோடு அதை அணிவித்தார்கள். ஒரு அடர்த்தியான அரசியல் போராட்டத்தை நடத்தினார்கள். பாட்டும் கும்மாளமுமாய் இப்படி ஒரு களத்தை இந்திய தேசம் பார்த்ததில்லை. உலகில் பல்வேறு இடங்களில் இப்படியான கொண்டாட்டமான போராட்ட வடிவங்களைக் கையாண்டிருக்கிறார்கள். இந்தியாவில் இதுதான் முதன்முறை என்பதிலிருந்தே இந்தப் போராட்டத்தின் அடர்த்தியைப் புரிந்து கொள்ள முடியும்.

இந்தப் போராட்டத்தை ஏன் முறியடிக்க முடியவில்லை? ஏனெனில் அவர்கள் ஒற்றைத் தலைமையின் கீழ் இல்லை. உண்மைதான் தலைவர் என்று யாரும் இல்லாமல் ஒரு மிகப்பெரிய தலைமையை எதிர்த்த இந்தப் போராட்டம் வெற்றியில் முடிந்திருக்கிறது. கடைசி நாள் சம்பவங்களைக் கணக்கிலேயே எடுத்துக் கொள்ளப் போவதில்லை. அது இந்தப் போராட்டத்திற்கு எதிரானவர்கள் எழுதிய க்ளைமேக்ஸ். இளைஞர்களின் போராட்டத்தைப் பொறுத்தவரை அது வெற்றி என உலகிற்கு ஏற்கனவே அறிவிக்கப்பட்டு விட்டது.

அரசியலை ஒதுக்கியதன் வழியாக அவர்கள் வேறொரு விஷயத்தையும் மறைமுகமாகச் சொல்லி இருக்கிறார்கள். ஜல்லிக்கட்டு மட்டுமில்லை. தமிழகத்தைப் பாதிக்கும் அத்தனை விஷயத்திற்காகவும் இனி அவர்கள் களத்தில் இறங்குவார்கள்.

**தமிழ் இளைஞர்கள் பிற மாநில, பிற தேச இளைஞர்களுக்கு முன்மாதிரியான போராட்டத்தை நடத்திக் காட்டியிருக்கிறார்கள். இந்தப் போராட்டத்தின் தலைவர் திருவாளர் ஜல்லிக்கட்டுக் காளைதான். காளைகளின் குணத்தை பெண்கள் உட்பட அத்தனை காளையர்களிடம் பார்க்க முடிந்தது. காளைகளின் குணமான மூர்க்கத்தை இது போல் நல்ல விஷயங்களுக்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும் சட்ட ரீதியிலான போராட்டங்களையும் இணையாக நடத்த வேண்டும். ஜல்லிக்கட்டை பொறுத்தவரை இதற்காக காலகாலமாகப் போராடிய முன்னோடிகளின் விரல் பிடித்து இனி சட்டப் போராட்டத்திலும் இறங்க வேண்டும் என்பதே எதிர்பார்ப்பாக இருக்கிறது. அவர்கள் முட்பாதைகளின் வழியே ஜல்லிக்கட்டு உள்ளிட்ட பல போராட்டங்களை நகர்த்திக் கொண்டு வந்திருக்கிறனர். வெற்றி மமதையில் முன்னோடிகளை மறந்து விடக்கூடாது.**

இந்தி எதிர்ப்பு போராட்டங்களை பார்க்காத ஒரு ஹைடெக் தலைமுறைக்குக் கிடைத்த அடையாளமும் கௌரவமும் இந்தப் போராட்டம். நோஞ்சான் தலைமுறை என இனியும் யாரும் இந்த ஹைடெக் தலைமுறையைக் கிண்டலடிக்க முடியாது. அவர்கள் தை வசந்தத்தின் புதல்வர்கள். இல்லையில்லை தை வசந்தத்தின் தூதுவர்கள்!





ஊடகவியலாளர்.
கா.அய்யநாதன்


# ஜல்லிக்கட்டு பண்பாட்டுப் புரிதலின்மை உருவாக்கும் சிக்கல்கள்

‘‘எல்லாவற்றிற்கும் மேலாக தேசப்பற்று எனும் உணர்வுடன் கூடிய ஒற்றுமை என்பது நமது மக்களிடையே மிகச் சாதாரணமாக அழித்துவிடவோ அல்லது குறைந்தவிடவோ முடியாத அளவிற்கு மிக அழுத்தமாக நிலைநிறுத்தப்பட்டுள்ளது. அதே நேரத்தில் இந்த தேசத்தின் அங்கங்களாகத் திகழ்கின்ற துணை தேசங்களின் (மொழி வழி மாநிலங்கள்) இயற்கையான வாழ்க்கையை எவ்வித அச்சுறுத்தலுமின்றித் தொடர அனுமதிப்பதே அவர்களின் சட்டப்பூர்வமான அரசியல் அபிலாஷைகளை நிறைவு செய்வதென்பதாகும்....





அப்போதுதான் இந்தியாவின் தேச வாழ்வென்பது அதன் இயற்கையான பலங்களைக் கொண்டும், பன்மையில் ஒற்றுமை எனும் இலட்சியத்தின் அடிப்படையிலும் கட்டமைக்கப்படும். இத்தன்மையே இத்தேசத்திற்கு உகந்ததாகவும், அதன் அடிப்படையான இயல்பை நிறைவு செய்வதாகவும், அதன் சுயமான இயற்கையாகவும், பன்முகமே ஓர் முகமாகக் கொண்ட சுபாவத்தையும், சுயதர்மத்தையும் பலமாகக் கொண்டு அமைவதாகவும் இருக்கும்''

*என்று இந்நாட்டின் விடுதலைக்கு அளப்பரிய பங்காற்றிய ஸ்ரீ அரவிந்தர் (அரவிந்த் கோஷ்), 1948ஆம் ஆண்டு, டிசம்பர் 11ஆம் நாளன்று ஆந்திர பல்கலைக் கழக பட்டமளிப்பு விழாவிற்கு அனுப்பிய வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்.*

இந்நாட்டின் விடுதலைக்காக தங்களை முழுமையாக அர்ப்பணித்துப் போராடி சர்வபரித் தியாகமும் செய்த தலைவர்கள் பலரும் இந்நாட்டு மக்கள் பேசும் பல்வேறு மொழிகளையும், கடைபிடிக்கும் பழக்க வழக்கங்களை அறிந்தவர்களாகவும், தாங்கள் வணங்கும் தெய்வங்களுக்கு அவர் செய்யும் வழிபாடுகளும், கொண்டாடும் பண்டிகைகளும் தனித் தன்மை கொண்டனவாகவும் இருப்பதையெல்லாம் உணர்ந்தவர்களாகவும், ஒவ்வொரு மொழி வழி இன மக்களும் வெவ்வேறுபட்ட வாழ்வியல் வழிமுறைகளை கடைபிடிப்பவர்களாக இருப்பதை புரிந்தவர்களாகவும் இருந்ததினால்தான் ஒவ்வொரு பகுதி மக்களின் பிரதிநிதிகளாக இத்தேசத்தின் விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்றவர்களை மனப்பூர்வமாக பரஸ்பரம் ஏற்று, எந்த மொழியும், பண்பாடும் எந்த மற்றொரு மொழிக்கும் பண்பாட்டிற்கும் கீழானதோ, மேலானதோ அல்லவென்று உணர்ந்து செயல்பட்டதனாலேயே தேசத்தின் விடுதலை என்ற இலட்சியத்தில் ஒன்றுபட்டு நின்று, தேசப்பற்றை உருவாக்கி, மக்கள் அனைவரையும் விடுதலை உணர்வில் ஒன்றுபடுத்தி இத்தேசத்தின் விடுதலையை வென்றெடுத்தார்கள். வந்தே மாதரம் எனும் விடுதலை முழக்கம் எந்த மொழியில் இருக்கிறதென்று கேள்வி கேட்கவும் இல்லை, அது இந்தி மொழியில்தான் இருக்க வேண்டும் என்று வற்புறுத்தி வாதிட்டுக்கொண்டிருக்கவுமில்லை. எனவேதான் தேச விடுதலை சாத்தியமானது. வெள்ளையரின் காலனி ஆதிக்கம் முடிவிற்கு வந்தது.



இப்படி பல்வேறு மொழி வழி இனங்களைக் கொண்ட மக்கள் சம உரிமையுடன் வாழவும், தங்களின் பண்பாட்டு அடையாளங்களைக் காத்துக்கொள்ளவும், பொருளாதார ரீதியாக தங்கள் வாழ்வை மேம்படுத்திக்கொள்ளவுமே விடுதலைக்குப் பின் மொழி வழி மாநிலங்களை அமைப்பது என்று முடிவெடுத்தனர். இந்நாட்டின் விடுதலைப் போராட்ட அமைப்பாக உருவெடுத்த இந்திய தேசிய காங்கிரஸ் இயக்கம் விடுதலைக்கு முன்னரே அப்படிப்பட்ட (மொழிவழி மாநிலங்களை அமைப்பதென்ற) முடிவை எடுத்துவிட்டது. அதனால்தான் இன்று நமது நாடு 29 மாநிலங்களையும், 7 ஒன்றிய பிரதேசங்களையும் கொண்டதாகவும் ஒரு அரசமைப்பின் கீழ் சேர்ந்தியங்கியும் வருகிறது. நம் நாடு இன்னமும் ஒரு முழுமையான கூட்டாட்சிக் குடியரசாக ஆகவில்லையெனினும் அனைத்து மொழி இன மக்களின் அரசியல் அபிலாஷைகளை நிறைவு செய்யக்கூடிய, அவர்களின் பண்பாட்டில் எவ்விதத் தலையீடுமின்றி காப்பதாக, இத்தேச வாழ்வில் சம வாய்ப்பை அளிக்கக்கூடியதாக சட்டப் பூர்வமாக நிலைநாட்டப்பட்டு இயங்கி வருகிறது.

இந்திய அரசமைப்பின் (கான்சிடியூசன் ஆஃப் இந்தியா) எட்டாவது பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ள காஷ்மீரி முதல் தமிழ்,

மலையாளம் வரையும், குஜராத்தி முதல் மணிப்பூரி வரையிலும், இந்தி, மராட்டி, ஒரியா ஆகியன உள்ளிட்ட 22 மொழிகள் இந்திய நாட்டின் தேச மொழிகள் என்று அங்கீகரிக்கப்பட்டிருந்தாலும், இவைகளையும் தாண்டி, சிறு சிறு இனக் குழுக்களாக ஒவ்வொரு இனக் குழுவையும் சேர்ந்த 10 இலட்சம் பேர் வரை பேசக்கூடிய 122 மொழிகள் இந்நாட்டில் இன்றளவும் வழக்கில் உள்ளது. பல்வேறு மாநிலங்களில் பரவிக்கிடக்கின்ற சில கோடி மக்கள் பேசும் சந்தால் என்ற மொழி இருக்கிறது. ஆனால் இவை எதற்கும் எழுத்து வடிவம் இல்லை. இந்த 122 மொழிகளின்றி, மேலும் பல நூறு மொழிகளை பேசக்கூடிய மக்கள் ஒட்டுமொத்தமாக பல கோடிப்பேர் இந்நாட்டினராக உள்ளனர். அவர்கள் காடுகளிலும், மலைப் பகுதிகளிலும் இந்நாட்டின் பழங்குடியினராக பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக வாழ்ந்து வருபவர்கள். தண்டகாரண்யக் காடுகளில் பல இலட்சக்கணக்கில் வாழ்கின்ற கோண்ட் என்ற பழங்குடியினர் வெள்ளையரை எதிர்கொண்டு ஆயுதம் தாங்கி விடுதலைக்காக போராடியவர்கள். இப்படி பல பழங்குடி இனங்கள் உண்டு. அவைகள் இந்நாட்டை அடிமைப்படுத்தியாண்ட வெள்ளையரை ஆட்சியாளராக ஏற்க மறுத்துப் போராடியதால், குற்றப்பரம்பரையினர் என்று முத்திரை குத்தப்பட்டு ஒடுக்கப்பட்ட வரலாறு உண்டு. வெள்ளையரின் இந்த குற்றப் பரம்பரை சட்ட ரீதியான ஒடுக்குமுறைக்கு உட்படுத்தப்பட்ட பல இனக் குழுக்கள் தமிழகத்திலும் இருந்தன. தென் தமிழ்நாட்டில் மறவர்கள், பிரமலைக் கள்ளர்கள் ஆகியோரும், வட தமிழ்நாட்டின் சில பகுதிகளில் வாழ்ந்த வன்னியர்களும், இன்று தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் இடம்பெற்றுள்ள மக்கள் குழுவினரும் இருந்தனர். இவர்கள் யாவரும் வெள்ளையரின் மேலாதிக்கத்தை அதாவது அடிமைத்தனத்தை வீரங்கொண்டு எதிர்த்தவர்கள் என்பது வரலாற்றை ஆழ்ந்து ஆராய்ந்தவர்களின் முடிவாகும். இவர்களிடையேயும் தனித்த பல சிறப்புகள் இருந்தன. அவற்றில் ஒன்று, பிரமலைக் கள்ளர்கள் பெற்றிருந்த வளரி எனும் பூமராங் வீசும் திறன். அது வெள்ளையர்களை அச்சுறுத்தியது, எனவே குற்றப்பரம்பரையென்று முத்திரையிட்டனர் (இப்போது இந்த பூமராங் வீசும் திறன் ஆஸ்ட்ரேலியாவின் பழங்குடிகளிடம் மட்டுமே இருக்கின்றது). இவை யாவும் பண்பாட்டுச் சிறப்புகளே.

> நமது அரசமைப்பின் எட்டாவது பட்டியலில் இடம்பெற்றுள்ள மொழிகளைப் பேசக் கூடிய மாநிலங்களிலும் கூட வேற்று மொழிகளை பேசக்கூடிய பல இன மக்கள் வாழ்கின்றனர். தமிழ்நாட்டில் எடுத்துக்கொண்டால், நீலமலையில் வாழும் படுகர், தோடர் இன மக்கள். இவர்கள் பேசும் மொழிக்கு எழுத்து வடிவமில்லை. ஆனால் அவ்வினங்களுக்கு பாரம்பரியம் உண்டு, தனித்த பண்பாடு உண்டு. அவைகளைக் கொண்டாடும் பண்டிகைகளும் விழாக்களும், தங்கள் பாரம்பரித்தை பரைசாற்றும் இசையும், பாடல்களும், இசைக் கருவிகளும் கூட உண்டு. நமது நாட்டின் வடகோடி மாநிலங்களில் ஒன்றான இமாச்சல பிரதேசத்தில் பயணம் மேற்கொண்டபோது, அங்கு இந்தி மொழி அல்லவா அம்மக்கள் மொழி என்று வினவினேன். அதற்கு வாகன ஓட்டி அளித்த பதில் எங்களுக்கு வியப்பைத் தந்தது. இங்கு நீங்கள் கடக்கும் ஒவ்வொரு 10 மைல் தொலைவிலும் வெவ்வேறுபட்ட மக்களும், அவர்களின் தனித்த மொழிகளும் இன்றளவும் வழக்கில் உள்ளன என்றார். அப்படியானால் இந்தி மொழி உங்களின் தாய் மொழியில்லையா என்று கேட்டதற்கு, அதுவும் எங்களுக்கு ஒரு தொடர்பு மொழியே என்று கூறினார். எழுத்துவடிவமற்ற மொழியினங்கள் கலந்து வாழும் ஒரு மாநிலத்தில் எழுத்து வடிவம் அளிக்கப்பட்ட இந்தி மொழி ஆட்சி மொழியாக உள்ளது. ஆனால், அம்மக்களின் பண்பாடு அவர்களின் ஆட்சிமொழியோடு எவ்வித தொடர்புமற்ற தனித்த பண்பாடாகும். இப்படி என்னற்ற எடுத்துக்காட்டுகளை கூறிக்கொண்டே போகலாம்.

இப்படி இந்திய நாட்டில் தொன்று தொட்டு வாழும் எண்ணிலடங்கா மொழி வழி இனத்தவர் யாவரும் தங்களுக்கென்ற தனித்த பண்பாட்டுகளைக் கொண்டவர்கள். உணவு, உடை மட்டுமின்றி, அவர்களின் வாழ்வியலும் பெரிதும் வேறுபட்டது, தனித்தன்மை

கொண்டது. தாங்கள் நிலைப்பெற்று வாழ்ந்த பகுதிகளின் இயற்கை சூழலிற்கேற்ப உடலுழைப்பை அடிப்படையாகக் கொண்ட பொருளாதார வாழ்வையும் சமூக கட்டமைப்புகளையும் உருவாக்கிக்கொண்டு வாழ்ந்தவர்கள், வாழ்ந்தும் வருபவர்கள்.

**பருவத்திற்கும், சூழலிற்கும் உகந்த பயரிடுதல், பாத்திரங்களைச் செய்தல், ஆடு, மாடு, கோழிகளை வளர்த்தல், வேட்டையாடுதல், வேட்டைக்கும், தற்காப்பிற்குமான கருவிகளை உருவாக்கியிருத்தல், இசைக் கருவிகளை கொண்டிருத்தல், அவைகளைக் கொண்டு பாடல்களை அமைத்து பாடுதல், அதில் தங்களுடைய வீரத்தையும், பாரம்பரிய சிறப்பையும், முன்னோரின் பெருமையையும் பாடுதல், தங்களைக் காக்கும் குல தெய்வங்களை வழிபடல், அத்தெய்வங்களுக்கு தாங்கள் வளர்க்கும் பிராணிகளை பலியிடுதல், குறிப்பிட்ட பருவத்தில் பண்டிகைகளை கொண்டாடுதல், அப்பண்டிகையின்போது ஆடல், பாடல் நடத்தி, அதன் மூலம் தங்களின் தொன்மைகளை பரம்பரைப் பெருமைகளாக அடுத்த தலைமுறைகளுக்கு கற்பித்தல் என்று இந் திய நாட்டின் இதர சமூகங் களுக்கு அறியாத, தெரியாத முகங்கள் கொண்ட இனங்கள் இந்தியத் திருநாட்டில் ஏராளம் உள்ளன.**

நமது தலைவர்கள் அதாவது இந்நாட்டின் விடுதலைக்கு அளப்பரிய தியாகங்கள் செய்து அறியப்பட்டவர்கள், நமது நெஞ்சங்களில் இன்றளவும் நிலைபெற்று வாழ்பவர்கள் இவையாவற்றையும் உணர்ந்திருந்த காரணத்தினால்தான் “ஆயிரம் உண்டிங்கு சாதி இதில் அந்நியர் வந்திங்கு புகல் என்ன நீதி, ஒரு தாயின் வயிற்றிற் பிறந்தோம்” என்று பாடினர். நாம் இன்றைக்கு பேசும் சாதியல்ல மகாகவி பாரதி பாடிய சாதி (இன்றைக்கு உள்ளவை யாவும் ரிசர்வேஷன் சாதிகள்!). வேற்றுமைகளில் ஒற்றுமை என்பது ஒருவரையொருவர் முகம் தெரியாமல் இருந்தும் அடிமைத் தளையை உடைத்தெறிய ஒன்றுபட்ட உணர்வே ஒற்றுமை, அந்த ஒற்றுமை அடிப்படையில் கட்டப்பட்ட தேசத்தை அனைவரின் நீடித்த வாழ்விற்கான களமாக உயர்த்துதலே தேசிய வாழ்வென்பது. இந்த ஒற்றுமை உணர்வே இன்று வரை இந்தியர் என்ற பலமான அடையாளத்தைத் தாங்கி நிற்கிறது, இந்திய நாட்டின் ஒற்றுமைக்கும் இறைமைக்கும் ஆதாரமாகத் திகழ்கிறது.

இந்நாட்டின் ஒவ்வொரு இனக் குழுவினரும் தங்களின் பண்பாட்டை, பாரம்பரியத்தை சட்ட ரீத்யாக காத்துக்கொள்வதற்கே இந்திய அரசமைப்புச் சட்டத்தில் பிரிவு 29(1) சேர்க்கப்பட்டிருக்கிறது. அது சிறுபான்மை என்று நாம் பொதுவாக அழைத்திடும் எத்தனை சிறிய இனக் குழுவாயினும், அவைகள் பேசும் மொழிக்கு எழுத்து வடிவம் இருக்குமெனில் அவைகளின் பண்பாட்டைக் காத்திட தனித்த சட்டமியற்றும் அதிகாரத்தை அரசுகளுக்கு அளிக்கின்றது. இதனை எழுத்து வடிவமற்ற இனங்களுக்கும் நீட்டித்தலே மேலும் பொருளுடையதாக இருக்கும் என்பது மானுடவியல் ஆய்வாளர்களின் எதிர்பார்பார்ப்பாகும். அதனைச் செய்திடலே இன்றய காலகட்டத்தின் அவசியமாகும்.

ஆனால் இந்நாடு விடுதலைப் பெற்றப் பிறகு, தனித்த அரசமைப்புச் சட்டத்தை யாத்து அளித்துக்கொண்ட ஒரு குடியரசாக உயர்த்திக்கொண்ட பின்னர், அடுத்தடுத்து வந்த ஆட்சியாளர்களின் தற்சார்பு, குறுகிய பார்வைகளால் இந்நாட்டின் ஒரு மொழிக்கு முன்னுரிமை அளிப்பதும், ஒரு சில அடையாளங்களுக்கு முக்கியத்துவம் அளிப்பதுமான நடவடிக்கைகள் தேவையற்ற சிக்கல்கள் உருவாகக் காரணமாகிக் கொண்டிருக்கிறது. ஒரு கட்சியாக இணைந்து தாங்கள் வகுத்துக்கொண்ட கருத்துக்களை கொள்கைகளை எடுத்துரைத்துஅவையே இந்நாட்டின் ஒற்றுமைக்கு அவசியம் என்றும் கூறி ஆட்சி அதிகாரத்தை வைத்து அழுத்தம் கொடுப்பது வாடிக்கையாகியிருக்கிறது. பல்வேறு இனங்களையும் மொழிகளையும்



தனித்தே கொண்ட மாநிலங்களின் ஒருங்கிணைந்த நாடே, ஒன்றியமே இந்தியா என்ற அரசமைப்பு ரீதியாக அருதியிடப்பட்ட நிலையை, அதே அரசமைப்பில் ஒரு மொழியை (மட்டுமே) வளர்ப்பது அரசின் கடமை என்று புகுத்தி, அதை இதர மொழி வழி மாநிலத்தவர்களின் மீது திணித்து, அதை எதிர்ப்பவர்களைத் தேச விரோதிகள் என்று சித்தரிக்கும் ஒரு தற்சார்பு தற்பெருமை அரசியல் இந்நாட்டின் பெருமிதத்திற்கும், ஒற்றுமைக்கும் பெரும் கேடாய் உருவாகி வருகிறது.

விவசாயம், தொழில் துறை முன்னேற்றம், வேலை வாய்ப்பின்மை, பொது சுகாதாரம் என்று எண்ணற்ற முக்கிய சிக்கல்களைத் தீர்க்க வேண்டிய நிலையில் உள்ள இந்நாட்டின் அரசியல் தலைமைகள் மொழி, பண்பாடு, மதம், அடிப்படை உரிமைகள் ஆகியன தொடர்பான தேவையற்றச் சர்ச்சைகளையும் சிக்கல்களையும் உருவாக்கி அதனில் குளிர்காய்கின்றனர். இந்நாட்டின் நாடாளுமன்றத்தில் மக்களின் அன்றாட வாழ்வையும், பொருளாதாரத்தை நெருக்கும் சிக்கல்களைப் பற்றியெல்லாம் பேசப்படுவதில்லை. ஆனால் சிற்சில சட்ட வரைவுகள் மட்டுமே எவ்வித எதிர்ப்புமின்றி மிக சுலபமாக நிறைவேற்றப்படுகின்றன. இதில் மட்டும் ஆளும், எதிர்க் கட்சிகளிடையே ஏதோ ஒரு ‘இணக்கப்பாடு’ இருந்து வருகிறது! மற்றபடி, நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் முழுமையாக நடந்த நாட்களை விட முடக்கப்பட்ட நாட்களே கடந்த சில ஆண்டுகளில் அதிகம் என்கிற அவல நிலையில்தான் நமது ‘பெருமைக்குரிய’ நாடாளுமன்ற ஜனநாயகம் இயங்கிக் கொண்டிருக்கிறது.



**இப்படியான ஒரு ‘ஜனநாயக’ சூழலில்தான் 2011ஆம் ஆண்டில் ஒரு நாள், காங்கிரஸ் கட்சியின் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சி நடைபெற்றுக்கொண்டிருந்த காலத்தில், வனம் மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சராக இருந்த ஜெய்ராம் ரமேஷ்,**

**ஜல்லிக்கட்டு விளையாட்டு காட்டுமிராண்டிக் காலத்துப் பண்பாடு என்று வர்ணித்தார்.**

இந்நாட்டின் பெருமைக்குரிய ஒரு மாநிலத்தின் மக்கள் தங்களின் வீரப் பாரம்பரியப் பெருமையாக நினைத்து கொண்டாடி வரும் ஜல்லிக்கட்டை, இந்நாட்டின் அமைச்சர் ஒருவர் எவ்வித தயக்குமும் இன்றி காட்டுமிராண்டிக் காலத்துப் பண்பாடு என்று எப்படி கூற முடிந்தது? அப்படிக் கூறுவதற்கான அடிப்படை என்ன? அவ்வாறு துணிந்து கூறுவதற்கான அதிகாரம் அமைச்சர் ஜெய்ராம் ரமேஷுக்கு வந்தது எப்படி? பண்பாடு என்பதைப் பற்றிய ஜெய்ராம் ரமேஷின் புரிதல் என்ன?

இந்திய ஒன்றிய அரசின் அமைச்சர் ஒருவர், அந்த ஒன்றிய ஆட்சியின் அங்கமாக அப்போது இருந்த தமிழகத்தின் ஆளும் கட்சியான தி.மு.க. அமைச்சரவையில் இடம் பெற்றிருந்த நிலையில் காட்டுமிராண்டிப் பண்பாடு என்று ஜல்லிக்கட்டை இழித்துக் கூறும் துணிவு எங்கிருந்து வந்தது? என்பதும் மற்றொரு கேள்வியாகும்.

## பண்பாடு, பாரம்பரியம் பற்றிய புரிதல் வேண்டும்

தாங்கள் வாழும் அரை நூற்றாண்டையோ அல்லது ஒரு நூற்றாண்டையோ மட்டும் கண்கொண்டு காண்போர்கள் பாரம்பரியமாய், பண்பாடாய் நிகழ்த்தப்பட்ட வண்ணமிருக்கும் அர்த்தம் கொண்ட சிறப்பான வீரியமிக்க வாழ்வியல் முறைகளை தொலைநோக்குப் பார்வையில்லாமல் பழித்துக் கூறுவது, உள்நோக்கம் கொண்டு களங்கம் கற்பிப்பது தற்குறிச் செயலாகும். எதற்கும் ஆதரவு கிடைக்கும், பெருகும் இக்காலச் சூழலில் ஜல்லிக்கட்டை எதிர்ப்பதற்கும் ஆதரவு கிடைப்பது சாத்தியமானதே. ஆதரவு கிடைப்பதனால் மட்டும் அதையேற்று சாதகக் கொடி பிடிப்பது ஓர் மேன்மையை இழப்பதாகவே ஆகும்.

பாரம்பரியம் என்றாலே கடைபிடிக்கப்பட்ட மாண்பு என்றாகும். அதற்கு பழமை எனும் அரிதாரம் பூசுதல், ஒதுக்கப் பார்த்தல் வாழ்வின் அடிப்படை ஆதாரத்தை விட்டு தூர விலகுதலேயாகும். தங்களுக்குள்ளேயே அடைந்து கிடப்பவர்களுக்குப் பிற மனிதர்களே அந்நியமாய் தெரிகின்றபோது



இவர்கள் நேரடியாக காணாத எவையும், பங்கேற்க இயலாத எவையும் தேவையற்றதாய் தோன்றுவது மிகச் சராசரியான இயல்புச் செயலாகும். மேன்மையான வீரத்தை விளையாட்டாய் காண்பதல்ல வீர விளையாட்டு, விளையாட்டில் வீரத்தை கலப்பதே வீர விளையாட்டாகும். இதில் வதைப்பது, துன்புறுத்துவது என்று கூறுவது தவறாகும். ஜல்லிக்கட்டு என்கிற தமிழரின் வீர விளையாட்டில் ஐந்தறிவு விலங்காயினும் பல மனிதர்களின் பலத்தையும் மிஞ்சிய காளைகளை பயன்படுத்துகையில் அதனை வதை எனக் கூக்குரல் இடுவதேன்?

விலங்குகளை இம்சை செய்வதாய் எதிர்க் குரல் கொடுப்பவர்கள் இந்நாட்டின் பாரம்பரிய வாழ்வில் விலங்குகளுக்கு அளிக்கப்பட்ட மேன்மையை அறியாததேன்? தன் இல்லத்தில் வளர்க்கப்பட்ட காளையை வீரமாய் அடக்கிய வாலிபருக்கு தன் அன்பு மகளை திருமணம் செய்து வைத்துள்ளனரே ஏன்? துன்பம் வந்தால் தன் உயிரையும் துச்சமென கருதி தன் மனைவியை காக்கக் கூடிய வீரம் இவனிடம் உள்ளது என்பதால் மட்டுமேயாகும். வீரத்தை சோதிக்க உட்படுத்தினார்களே அன்றி அதனை சாகடிக்க உட்படுத்தவில்லை. காலப்போக்கில் வாழ்வியலில் இருந்து மறைந்து போன அந்த வீரத்தை பெயரளவிற்கு தூசி தட்டி நினைவுறுத்திக் கொள்ளும் நிகழ்வைத் தடுக்க முயல்வது எவ்வகையான அறிவார்ந்த செயல் என்பதனை தடுப்போர்கள் தெளிவாய் விளக்க வேண்டும். இவ்வீர விளையாட்டை ஊக்கப்படுத்தி கொண்டாடுபவர்கள் விவசாயிகள். இவர்கள் தங்கள் வாழ்வில் பறவை இனங்களுக்கும், விலங்கினங்களுக்கும் குறித்த பங்கினை அளிப்பவர்களாவர். அவர்களுக்கும் அவர்களால் வளர்க்கப்படும் விலங்குகளுக்கும் இடையே ஓர் இணக்கம் இருக்கின்றது. இதனை ஏற்படுத்தியோர், காப்போர் இன்று வாதத்தை நீட்டுவார்களோ? அறிவியல் வளர்ச்சி எனும் பெயரில் இயந்திர கதியினை உருவாக்கி மனிதர்களுக்கும் மற்ற உயிரினங்களுக்கும் இருந்த நெருங்கிய தொடர்பினை வேரறுக்கின்றோரை இவர்கள் கேட்கப் போகின்ற கேள்விகள் என்ன?

**மற்ற உயிரினங்களோடு இணைந்து வாழ்கின்றபோதே மனிதனின் பலம், பலவீனம் தெரிய வருகின்றது. வீர விளையாட்டுகளில் காளையுடன் மோதும்போது இவை வெளிப்படுகின்றது. பலம், பலவீனங்களை அறிந்துகொள்ளும் முறைகளில் வீர விளையாட்டுகளும் ஒன்றாகும். இவை பலத்தை வளர்த்துக்கொள்ளவும், பலவீனத்தை நீக்கிக்கொள்ளவும் உதவியாய் அமைகிறது. பயனுள்ள எவையினையும் பின்பற்றியே ஆக வேண்டும். ஒருவேளை விட்டுவிடுதல் வாழ்வின் மேன்மையை விட்டுவிடுதலாகும். வீரத்தன்மை உடையவர்களை அறிவற்றவர்கள் முரடர்கள் என்றும், கொடுமையானவர்கள் என்றும் அடையாளம் காட்ட முயல்வது இழிவை ஆட்சி மன்றத்தில் வைக்கும் முயற்சியாகும். வீரத்துடன் நேருக்கு நேர் மோத இயலாதவர்கள் வீரத்திற்கு எதிராய் பலபெயர்களை தங்கள் வசதிக்கு இடுவது வாடிக்கையான ஒன்றே.**

தம்மிடம் இல்லா ஆற்றலும், வீரமும் இணை மனிதர்களிடம் இருப்பதைக் கண்டு பெருமிதம் கொள்ளாமல் பல்வேறு காரணங்களை காட்டி மழுங்கடிக்கச் செய்வதும், செய்ய முயல்வதும் அச்சமுதாயத்தை காலப்போக்கில் மாற்றானிடம் முழுமையாக மண்டியிடச் செய்யும் மடமையாகும்.

எப்போதும் பலவீனத்தை பலமே ஆட்சி செய்கின்றது. எனவே நம்மை நாம் வீரம், விவேகம் கொண்டு ஆட்சி செய்கையிலேயே பிறர் நம்மீது ஆதிக்கம் செலுத்தாமல் இருப்பார்கள். உயர்வில்லாதவை எவையும் பாரம்பரியமாய் தழைத்தோங்கி வாழவியலாது. சமுதாயத்தில் நிகழும் தீமைகள் எவையும் வெறுக்கபடுகின்றதே அன்றி மகிழ்ந்து கூட்ட மாய் கூடி வெளிப்படையாய் கடைபிடிக்கப் படுவதில்லை. தீமையாயிருந்தால் காளைகளை வீரமாய் அடக்க முயலுதல், அடக்குதல் வீரமாய் போற்றப்பட மாட்டாது, அவை வினையாய் எப்போதோ தூக்கி வீசப்பட்டிருக்கும். இதற்கு வேறொரு விளக்கம் தனியாய் தேவையில்லை. பாரம்பரியம், கலாச்சாரத்தை எதிர்ப்போர் ஆழ் நோக்கில்லாத மேம்போக்கு மனிதர்களாய் இருப்பார்கள்.


*பாரம்பரியம் மிக்கவர்களை பழமைவாதிகள் என்போர் வாழ்வின் அடிப்படையை தகர்க்க முயன்று ஆதாரமின்றி மண்ணில் சாய்பவர்களாகவே மாறுவார்கள். கடினமாய் இருக்கின்ற காரணத்தினால் எதனையும் இழக்கக்கூடாது. அவ்வாறு இருக்குமானால் சின்னஞ்சிறு இன்னலிற்கும் முன்னால் மடிவதாகவே வாழ்விருக்கும். இம்மண்ணை ஆண்ட மன்னரில் ஒருவரும் வீரத்தை கண்டித்திருக்க மாட்டார்கள். நம்மை குறுக்கு வழியில் ஆட்சி செய்த வெள்ளையர்கள் இந்தியர்களின் வீரத்தினை கண்டு அஞ்சி சூழ்ச்சி செய்து துணிச்சல் மிக்க வீரர்களை இந்நாட்டு மக்களை விட்டு பிரிக்க பொய்யான குற்றஞ்சாட்டி அவர்களை தீயவர்கள், கொடுமையானவர்கள் என முத்திரையை குத்தினார்கள். ஆழ்ந்த பார்வையற்றோர் அதனை ஏற்றனர். கயவர்கள் மற்றவர்களை கயவர்கள் எனக் கூறுவதில் எங்ஙனம் உண்மையிருக்கும்? இந்நாட்டு மக்கள் சிந்திக்காதது ஏன்?*

**வீர விளையாட்டில் எப்போதாவது உயிரிழப்பு ஏற்படுகின்றது என்பது உண்மையே, அதிலிருந்து பாதுகாப்பு பாடம் கற்க வேண்டியதுதானே? ஏன் கொலையால், கொள்ளையால், துரோகத்தால் தேவையற்ற, அநீதியான முறைகளில் உயிரிழப்பு ஏற்படுவதில்லையா? விஞ்ஞான கண்டுபிடிப்பான வாகனங்களை தேவையற்று வேகமாய் இயக்கி, சாகசமாய் முயன்று உயிரிழப்பு ஏற்படுவதில்லையா? இதில் பயனாய் தங்களை வளர்த்துக்கொள்ளும் முயற்சி எங்குள்ளது? வீர விளையாட்டுகளில் ஏற்படும் காயங்கள், உயிரிழப்பை கண்டு உண்மையில் பதைப்போர்கள் ஆழ்ந்த கண் கொண்டு பாதுகாப்பு வழிமுறைகளை கூறினால் வரவேற்பது வீரத்தின் மீது ஈடுபாடு கொண்டோரின் அத்தியாவசிய தேவையாய் அவை இருக்கும் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை.**

*அனைவரும் அனைத்துத் திறனையும் வளர்த்துக் கொள்ள வேண்டும் என்று கூறவில்லை. தங்களை பணையம் வைத்து தங்களின் தனித் திறனை வளர்த்துக் கொள் வோரை இல்லா, பொல்லா காரணங் களைக் கூறி ஏன் தடுக்க வேண்டும்? சிறுவர்கள் ஓடியாடும் விளையாட்டை இயந்திர கதி உல கம் பிரித்துவிட்டது. ஆற்றலை செலவிட்டு ஆற்றலை பெறுவது படைப்பின் தத்துவம். அதை இழந்து ஆற்றலற்ற மானுட வருங்காலம் உருவாகிக் கொண்டிருக்கின்றது. இதனால் யாருக்கு என்ன பயன்? விழாக்கள் எவ்வளவோ பாரம்பரிய மிக்க இந்நாட்டில் அதன் பொருளை உணர்ந்தோர் எவ்வளவு பேர்? நீடித்து உழைப்பவர்கள் இடையிடையே கொண்டாடி மகிழ்வதற்கும், உழைப்பிற்கு பலனை விளைத்து கொடுத்த தெய்வத்திற்கும், இயற்கைக்கும் நன்றி தெரிவிப்பதற்குமே அவ்விழாக்களிலேயே பல்வகையான திறமைகளை காட்ட தொடர்ச்சியாய் பெருக்கிக் கொள்ள தன் இனத்தோடு, தன் நாட்டோடு என பல இருக்கின்றன. மேலை நாட்டோடு நம் வீர மரபுச் செயல்களை ஒப்பிட்டு இது காட்டுமிராண்டித்தனமான செயல் என் பவர்கள் தங்களின் கணவன், மனைவி சார்ந்த தாம்பத்திய வாழ்க்கையை உலகின் பல நாட்டு மக்களின் வாழ்க்கை முறையோடு ஒப்பிட்டு ஏற்க முயல்வார்களானால் எது காட்டுமிராண்டித்தனம் என்பது தெளிவாகும். இந்த பாரம்பரியம் மிக்க இந்நாடு உலகிற்கு வாழ்வியலை கற்றுக்கொடுத்த நாடு. உலகின் பல நாடுகள் பிற நாட்டு மக்களின் வாழ்வை சூறையாடிபோது தங்களை தற்காத்துக்கொள்ள வரையறை செய்யப்பட்டவற்றில் வீரமும், விவேகமும் முக்கிய பங்கினை வகுத்திற்று. அதனின் தொடர்ச்சியாய் எண்ணிக்கையில் மிகக் குறைவாக கடைபிடிக்கப்பட்டு வருபவைகள் பாரம்பரிய விழாக்களும் அதில் நிகழும் வீரம் செறிந்த விளையாட்டுகளும் இருக்கின்றன.*

*பழயன என எவரும் ஒன்றை ஒதுக்கிட வேண்டுமென்பது தனியாய் வேண்டாம். ஒன்றின் பயனற்ற தேக்கமே அதனை நம்மை விட்டு விலக்கி வைத்திடும். அதற்காக ஏன் முட்டி மோதி ஆற்றலை செலவிடுவானேன்?*

*சமுதாயம் இரண்டாய் பிரிவது சூதுவாதுமிக்க மனிதர்களுக்கும், ஆடல்களுக்குமே சாதகமாய் அமைந்திடும், அவைகள் அமைத்துக்கொள்ளும். எப்போதும் பிரிவினை உருவாக்குவது கருத்து வேறுபாடு கொண்டவர்களால் மோதலாகி அழிவைத் தருவது கீழ்நிலையானவர்களாலும், கயவர்களாலுமே என்பதை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும், இதனை அறிந்து கொண்டு பெருமுயல்தலிற்கு பின்*



னர் கருத்து வேறுபாடு மறைந்திடலாம். அதற்குள் உண்டான காயங்கள் எளிதில் மறைந்திடுவது கிடையாது. தனி மனித மோதலிலிருந்து, இருநாட்டுப் போர் வரை நீளும் கருத்து வேறுபாடுகள் கூட விரைவில் நீங்கிடலாம், ஆனால் அதற்குள் உண்டான காயங்கள் நிலையான பிரிவினைகளை தோற்றுவிக்கின்றன. சிந்தனையில் மோதல்கள் உண்டானால் அதனை சீர்தூக்கிப் பார்த்து களைய வேண்டும். இல்லையேல் அவை செயல் மோதலாய் உருமாறும். தவிர்க்க வேண்டும் இல்லையேல் மோதல்களே சிந்தனையாய் மேலெழும் அதன்பின் வீழ்தலொன்றே சாத்தியமாகும்.

தேவை என்பதற்காகத்தான் எதனையும் நாட வேண்டும், இருக்கின்றது என்பதனால் எதனையும் நாடக்கூடாது. நீதிமன்றம் இருப்பதனாலேயே எதற்கெடுத்தாலும் நாடுவதாலேயே வாதத் திறமையால் தீமைகளும், அநீதிகளும் வாழ்வில் பலமாய் வலம் வருகின்றன. எவ்வாறெனில் சட்டங்களுக்கு சாட்சியங்களே முக்கியம். உண்மையாய் நிகழ்வது மட்டும் சாட்சியமாய் ஏற்கப்படுவதில்லை. போலியான முறையில் உருவாக்கப்படுவதும் சாட்சியங்களாய் ஏற்கப்படுகின்றது. தர்மத்தை ஏற்பவர்களுக்கு சட்டம் அவசியமற்றது, சட்டத்தை மட்டும் நாடுபவர்களுக்கு தர்மம் அர்த்தமற்றது. மக்களுக்காகத்தான் சட்டமேயன்றி சட்டத்திற்காக மக்களல்ல. ஆனால் தர்மத்திற்காக மக்கள் வாழ வேண்டும். இல்லையேல் வாழ்வு சந்தேகமே இல்லாமல் நிலையான கேள்விக்குறியே. பாரம்பரியம் மிக்கவை வாழ்வின் பதிலாக இருப்பவைகள் அவைகளை கேள்விக்கு உட்படுத்தி வாழ்வினையே கேள்விக்கு ஆளாக்கி பதிலிற்கு காக்க வைப்பது வாழ்வினை வளர்ச்சிக்கு எதிராய் தேக்கி வைப்பதேயாகும். நீதியை கூறுபவர்கள் அனைவரும் நீதிமான்களாய் இருப்பதில்லை. எவ்வாறெனில் தாங்கள் விரும்பியதை கூறுவதும், அறிந்ததைக் கூறுவதும் தீர்வாகாது. எத்தனையோ தீர்வுகள் ஏன் தேர்விற்கு உட்படுத்தப்படுகின்றது?

நீதிமன்றங்கள் சாட்சியை ஏற்கும் நாம் வாழ்வின் மீட்சியை சாதகமாய் ஏற்போம்.



தோழர். முத்தமிழ் வேந்தன்

# கீழடி

## சங்ககால தமிழர்களின் நகர நாகரிகம்

தமிழர்களின் பெருமையே பழமையான தமிழ்மொழியும், நாகரிகமான வாழ்க்கை முறையும்தான். வெண்பாமாலை நூலில் வரும் "கல் தோன்றி மண் தோன்றா காலத்து முன் தோன்றிய மூத்தகுடி தமிழ்குடி" என்று நாம் பெருமை பேசினாலும் அந்த பெருமைக்கான சான்றுகள் எல்லாமே சங்க நூல்களில் மட்டுமே உள்ளது.

தமிழர்களின் நாகரிகம் எப்படி இருந்தது என்பதற்கான சான்றுகள் பாகிசுதான் நாட்டில் பஞ்சாப் மாநிலத்திலுள்ள இரவி நதிக்கரையிலுள்ள அரப்பாவிலும், அங்கிருந்து 400கிமீ தொலைவில் சிந்து நதிக்கரையிலுள்ள மொகஞ்சதாரோ என்ற இடத்திலும், முப்பதாயிரம் மக்கள் வாழ்ந்ததற்கான அனைத்து கட்டமைப்பு வசதிகளுடன் கொண்ட ஊர்கள் அப்படியே மண்ணுக்குள் புதைந்த நிலையில் கடந்த நூற்றாண்டில் நமக்கு கிடைத்துள்ளன. அதற்கு வலுசேர்க்கும் விதமாக திரு ஆர். பாலகிருஷ்ணன் இ.ஆ.ப. அவர்களின் சிந்துவெளியில் அமைந்துள்ள ஊர்கள், மலைகளின் பெயர்கள், சங்க தமிழ் இலக்கியங்களிலுள்ள பெயர்களை இன்றளவும் தாங்கி நிற்கிறது என்ற அவரின் ஆய்வும் வலுசேர்க்கிறது.

## முதல் தீப்பொறி

1974 ஆம் ஆண்டு உழவிற்காக தோண்டப்பட்ட கிணற்றிலிருந்து கிடைத்த செங்கற்களை மாணவன் ஒருவன் கீழடி பள்ளியின் ஆசிரியரான திரு. பாலசுப்பிரமணி அவர்களிடம் காண்பிக்கின்றான். அந்த செங்கல்லை பார்த்த ஆசிரியர் அவை சங்ககாலத்தை சேர்ந்தது என அறிகிறார். இதுதான் கீழடி வரலாற்றின் முதல்பொறி.

இயல்பிலேயே வரலாறு சார்ந்த விடயங்களில் ஆர்வமுள்ளவரான அவர் சில மாணவர்களை அழைத்துக்கொண்டு செங்கல் கிடைத்த அந்த கிணற்றை பார்வையிடுகிறார். கழுத்துக்கு மேலே தலை மட்டுமுள்ள மண்பொம்மை, கருப்புசிவப்பு வண்ணம் கொண்ட மண் குவளை, மண்டை ஓடுகள், எலும்புகள், நாணயங்கள், தாழிகள் என கிடைக்கிறது. அவற்றையெல்லாம் பாதுகாக்க பள்ளியில் இடமில்லாத காரணத்தால் அவருடைய வீட்டிலேயே வைத்துவிட்டு, அப்போது ஒருங்கிணைந்த இராமநாதபுர மாவட்ட ஆட்சியருக்கு கீழடியில் கிடைத்த பொருட்களை பற்றி கடிதம் ஒன்றை அனுப்புகிறார். அதற்கு இன்றுவரை பதிலில்லை.

அடுத்த ஆண்டே பள்ளியிலேயே "இஸ்டரி கார்னர்" என்ற பகுதியை ஏற்படுத்தி கிடைத்த பொருட்கள் அங்கு வைக்கப்படுகிறது. 1976 ஆம் ஆண்டு அப்போதைய தொல்லியல் ஆய்வுத்துறையின் இயக்குநர் திரு. நாகசாமி அவர்களை சந்தித்து தகவலை தெரிவிக்க, அவர் ஆய்வாளர் வேதாசலம் அவர்களை அனுப்பி அப்பொருட்களை கொண்டுவந்து சென்னை அருங்காட்சியகத்தில் வைக்க ஏற்பாடு செய்தார். மேலும் வெளிநாடுகளுக்கும் ஆய்விற்கு அனுப்பிவைக்கிறார்.

## காலச்சக்கரம் சுழல்கிறது

சரியாக 37 ஆண்டுகள் கடந்து 2013இல் தொல்லியல் ஆய்வாளர்கள் திரு வேதாசலம், திரு அமர்நாத் மற்றும் திரு ராஜேஷ் ஆகியோர் பண்டைய பொருட்கள் கிடைத்த அந்த கிணற்றை நிலத்தின் உரிமையாளர் திரு திலீப்கான் துணையோடு ஆய்வு செய்கிறார்கள். மேலும் வைகை நதி படுகையில் நடைபெற்ற கள ஆய்வில் சுமார் **293** பல்வகை தொல்லியல் எச்சங்கள் கொண்ட ஊர்கள் அடையாளம் காணப்படுகின்றன. அவற்றில் கீழடியை தேர்வு செய்து 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் தொல்லியல் ஆய்வு செய்ய மத்திய அரசிடம் அனுமதி பெற்று ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

2015ஆம் ஆண்டு **43** குழிகளும், 2016ஆம் ஆண்டு **59** குழிகளும், அமைத்து ஆய்வை மேற்கொண்டனர்.





## நகர நாகரிகம்

**தமிழகத்தில் நடந்த அகழ்வாய்வுகளில் கட்டிடங்கள் கிடைப்பது அரிதான விடயம். ஆனால் அரிக்கன்மேடு, காவிரிபூம்பட்டிணம், உறையூர், காஞ்சிபுரம் மற்றும் அழகன்குளம் போன்ற இடங்களில் கிடைத்ததைவிட கீழடியில் 10ற்கும் மேற்பட்ட சங்ககால கட்டிடங்கள் கிடைத்துள்ளன.**

வரிசை வரிசையாக கால்வாய்கள், அதன் முகப்பிலேயே பெரிய தொட்டிகள், தொட்டிக்கு உள் செல்லவும் வெளிசெல்லவுமான அமைப்புகள், கால்வாய் தடத்தை ஒட்டி சிறிது பெரிதுமான ஆறு உலைகள், கால்வாயின் தொடக்கத்தில் வட்ட கிணறுகள், மூடிய வாய்க்கால்கள், திறந்த மற்றும் சுடுமண் குழாய்களால் ஆன வடிகால்கள் என மூன்று விதமான வடிகால் அமைப்புகள் முதன்முறையாக கிடைத்துள்ளன. சங்ககாலத்தில் கட்டிடங்களே இல்லை என்ற கூற்றை இந்த அகழாய்வு மாற்றி அமைத்திருக்கிறது.

மேலும் எழுத்தாணிகள், அம்புகள், முத்திரைக்கட்டைகள், உறை கிணறுகள், சுடுமண் மற்றும் முத்து மணிகள், தந்தத்தினால் ஆன தாயக்கட்டைகள் மற்றும் காதணிகள், சுடுமண் பொம்மைகள், செம்பு இரும்பு மற்றும் எலும்பினாலான ஆயுதங்கள், வணிகர்களின் எடைக்கற்கள், வடஇந்திய பிராகிருத பெயர்கள் தாங்கிய எழுத்துக்கள், பண்டைய தமிழ் எழுத்து பொறித்த சங்ககால பெயர்கள் (திசன், சந்தன், உதிரன், ஆதன், மடைசி, எரவாதன்), ஆப்கானிசுதான் பகுதியை சேர்ந்த சூது பவளத்தினாலான மணிகள், ரோமாபுரியை சேர்ந்த மட்பாண்டங்கள் என ஒரு செழுமையான சங்ககால வாழ்வியல் எச்சங்கள் கிடைத்துள்ளன.

அதேபோல் ஒரு தொழிலகமும், நெசவுக்குரிய தக்கையில் துவங்கி எண்ணற்ற தொழில்நுட்ப கருவிகளும் கண்டறியப்பட்டுள்ளன. பலுசிஸ்தானில் கிடைக்கும் சால்சிடோனி, கார்னீலியன், அகேட் போன்ற அரிய வகை மணிகள், அணிகலன்கள் கிடைத்துள்ளன. பண்டமாற்று முறையில் இந்த அணிகலன்கள் இங்கு வந்துள்ளன.

தமிழர்களுக்கு நகர்ப்புற நாகரிக சான்றுகள் ஏதுமில்லை என்று பரப்புரை செய்யப்பட்டு வந்த நிலையில், கீழடி அகழாய்வு தமிழர்களின் நகர்ப்புற நாகரிகத்தை பறைசாற்றுகிறது.

இந்தியாவில் புகழ்பெற்ற வரலாற்றாளர்கள் பலரும் பழந்தமிழகத்தை ஒரு இனக்குழு சமூகமாகத்தான் வரையறுத்தார்கள். சிந்துவெளி நாகரிகத்தைப்போல, ஒரு நகர நாகரிகம் இங்கு இல்லை என்பது அவர்கள் கருத்தின் அடிப்படை. இலக்கிய வர்ணனைகளை மட்டும் வரலாற்று ஆதாரமாக எடுத்துகொள்ளமுடியாது.




எனவே இலக்கியங்கள் கடந்த ஆதாரங்கள் கண்டறியப்படாத நிலையில் அவர்களின் கருத்துக்கு உயிர் இருந்தது. ஆனால் கீழடியில் கண்டறியப்பட்டுள்ள தரவுகள் அந்த கருத்தியலை தகர்த்திருக்கின்றன. சங்ககாலத்தில் தமிழகத்தில் நகர நாகரிகம் செழிப்புற்று இருந்ததை மெய்ப்பிக்கின்றன.

## ஆய்வுக்குத் தடை

**கீழடியில் இரண்டு ஆண்டுகளாக அகழாய்வு மேற்கொள்ளப்பட்ட நிலையில், 2017ஆம் ஆண்டுக்கான அனுமதியை மத்திய அரசு நிறுத்தி வைத்துள்ளது. காரணம் இதுவரை நடைபெற்ற அகழாய்விற்கு அறிக்கை அளித்த பின்பே அனுமதி தர பரிசிலிக்கப்படுமாம்.**

**குசராத்திலுள்ள தொழவீராவில் 13 ஆண்டுகளும், லோத்தலில் 5 ஆண்டுகளும், ஆந்திராவிலுள்ள நாகார்ஜுனகொண்டாவில் 10 ஆண்டுகளும், அகிசித்ராவில் 6 ஆண்டுகளும் அகழாய்வு செய்தவர்கள், கீழடி ஆய்வை மட்டும் அறிக்கையை காரணம் காட்டி இரண்டே ஆண்டுகளில் முடிவுக்கு கொண்டு வருவதின் பின்னணி என்ன என்ற கேள்வி எழுகிறது. ஆதிச்சநல்லூரில் 2005 ல் மேற்கொண்ட அகழாய்வு நிறுத்தப்பெற்று இன்றுவரை ஆய்வறிக்கையும், ஆய்வு முடிவும் வெளிவரவில்லை என்பது கவனிக்கத்தக்கது.**

## கரிம பகுப்பாய்வு

மொத்தமுள்ள 110 ஏக்கரில் 50 சென்ட் மட்டுமே (ஒரு விழுக்காட்டிற்கும் குறைவாக) ஆய்வு செய்துள்ளனர். கரிம மூலப்பொருட்களின் மாதிரியை வேதிப்பொருள் ஆய்வகங்களுக்கு அனுப்பி "கார்பன்14 பகுப்பாய்வு" எனும் முறையில் ஆய்வுசெய்து அப்பொருளின் காலத்தை கணக்கிடுகின்றனர். அமெரிக்காவின் புளோரிடாவிலுள்ள பீட்டா அனலைசிஸ் ஆய்வு நிறுவனத்திற்கு இவை அனுப்பப்படுகின்றன. அகழாய்வில் கண்டறியப்பட்ட பொருட்களில் எத்தனை பொருட்களின் மூலக்கூறு மாதிரிகளை கார்பன்14 பகுப்பாய்விற்கு அனுப்பவேண்டும் என்பதை மத்திய தொல்லியல்துறை முடிவு செய்கிறது.

இராஜஸ்தானிலுள்ள காளிபங்கனில் நடத்தப்பட்ட அகழாய்வில் 28 பொருட்களும், தொழவீராவிலிருந்து 20 பொருட்களும், கிரிசராவிலிருந்து 15 பொருட்களின் மாதிரிகளை ஆய்விற்கு அனுப்பிவைத்துள்ளனர். ஆனால் கீழடியில் கண்டறியப்பட்டுள்ள மூலப்பொருட்களின் மாதிரியில் 2 மட்டும்தான் கார்பன்14 பகுப்பாய்விற்கு அனுப்ப மத்திய தொல்லியல்துறை அனுமதி வழங்கியுள்ளது. குறைந்தபட்சம் 10 பொருட்களின் மாதிரியாவது ஆய்விற்கு அனுப்பவேண்டும் என்பது தொல்லியலாளர்களின் விருப்பம்.

இரும்புகாலம் தொடங்கி வரலாற்றுக் காலம் வரை தொடர்ச்சியான ஆதாரங்கள் கிடைக்குமிடம் கீழடி. எனவே இந்த ஆதாரங்களை அறிவியல்பூர்வமாக நிறுவ இவ்வாய்வு மிக முக்கியமானது. கீழடி அகழாய்வை தொடர அனுமதி மறுப்பதும், அகழாய்வில் கண்டறியப்பட்டுள்ள பொருட்களை தேவையான எண்ணிக்கையில் ஆய்வுக்கு அனுப்ப மறுப்பதும் பாரபட்சமானது.

"கீழடி அகழாய்வு பற்றி அறிக்கை கேட்டுள்ளோம். அறிக்கை வந்தவுடன் அகழாய்வை தொடர்வது பற்றி முடிவு செய்வோம்" என்கின்றனர் மத்திய கலாச்சாரத்துறை அமைச்சரும், தொல்லியல் துறையின் தலைமை இயக்குனரும் ஒத்த குரலில்.

### ஓரவஞ்சனை

கீழடியோடு அகழாய்வு துவக்கப்பட்ட இடங்கள் வாட்நகர் மற்றும் பிஞ்ஜோர். வாட்நகர் பிரதமர் மோடியின் சொந்த ஊராகும். பிஞ்ஜோர் ராஜஸ்தானில் உள்ளது. இந்த இரண்டு இடங்களிலும் கடந்த இரண்டு ஆண்டுகளாக அகழாய்வு நடந்து முடிந்துள்ளது. 2017 ஆம் ஆண்டுக்கான துவக்க நிகழ்ச்சி வாட்நகரில் கடந்த நவம்பர்






7ஆம் தேதியே கொண்டாடப்பட்டுவிட்டது. பிஞ்சோரில் சனவரி 1ஆம் தேதி துவக்க விழா நடந்துள்ளது. இங்கெல்லாம் இவர்கள் அறிக்கையைப் பெற்றுத்தான் அடுத்த ஆண்டிற்கான அனுமதியை வழங்கினார்களா என்பதை தெளிவுபடுத்தவேண்டும்.

2005 ஆம் ஆண்டு நடந்து முடிந்த ஆதிச்சநல்லூர் அகழாய்வு முடிவு மற்றும் அறிக்கை தற்போதுவரை வெளிவரவில்லை. அகழாய்வு முடிந்து 12 ஆண்டுகளுக்கு பிறகும் அறிக்கையை வெளியிட முயற்சி செய்யாத தொல்லியல்துறை, அகழாய்வு நடந்துகொண்டிருக்கும் இடத்தின் அறிக்கையை கேட்டு அகழாய்வை நிறுத்துகிறது. இவை இரண்டிற்கும் இருப்பது ஒற்றை நோக்கம்தான்.

## என்ன செய்யவேண்டும்

கீழடியின் முக்கியத்துவம் அனைத்து வகையிலும் உணரப்படவேண்டும். அடையாளங்களை அழிப்பதையும், மறைப்பதையும் வெளிப்படையாக செய்யும் அதிகார, ஆதிக்கவர்க்க அரசியலின் பார்வையில் இப்போது தமிழர் வரலாறு அகப்பட்டுக் கொண்டிருக்கிறது. இங்கு கிடைத்துள்ள 5000க்கும் மேற்பட்ட பொருட்களில் மத அடையாளம் சார்ந்த பொருட்கள் என்று எதையும் சொல்லமுடியாது. பெருமதங்கள் உருவாவதற்கு முன்பே சிறந்து விளங்கிய தமிழர் நாகரிகத்தின் அடையாளம் கீழடி.



**மொழியியல் அறிஞர் கால்டுவெல், தமிழ்மொழியின் சிறப்பை பற்றி கூறும்போது இது ஒரு சமயசார்பற்ற மொழி என்று மதிப்பீடு செய்தார். இந்த மதிப்பீட்டிற்கும், கீழடி நாகரிகத்திற்கும் இருக்கின்ற ஒற்றுமையை புரிந்துகொள்ள முடிகிறது.**

தேசிய இனங்களின் தனித்துவமான பண்பாட்டின் மீதும், வரலாற்றின் மீதும் ஒரு பெருந்தாக்குதல் அரங்கேறிக் கொண்டிருக்கும் இந்த காலத்தில், கீழடியில் கிடைத்துள்ள நாகரிகத்தின் எச்சங்களை பாதுகாப்பதும், அங்கு அகழாய்வை தொடரச் செய்வதும், கிடைத்த பொருட்களை தென்னிந்திய தொல்லியல் தலைமையிடமான மைசூருக்கு கொண்டு செல்லாமல், கிடைத்த இடத்திலேயே கள அருங்காட்சியகம் அமைத்து பாதுகாப்பதும், தமிழ்ச்சமூகத்தின் அர்த்தமிக்க வாழ்வியல் வரலாற்று சாரத்தை பாதுகாக்கும் நடவடிக்கையாகும்.

இல்லாத சரசுவதி நதியைக் கண்டறிய கோடிக்கணக்கில் செலவிட்டுக் கொண்டிருக்கிற மத்திய அரசு, அறிவியல்பூர்வமான ஆய்வின் அடிப்படையில் கண்டறியப்பட்ட கீழடியில் ஆய்வைத் தொடர அனுமதி மறுக்கிறது. இராமாயண அருங்காட்சியகத்தை அயோத்தியில் அமைக்க ரூபாய் 151 கோடியும், கன்னியாகுமரியில் அமைக்க ரூபாய் 15 கோடியும் ஒதுக்கி கட்டி முடிக்கப்பெற்று திறப்புவிழாவும் கண்ட இந்த அரசுதான் கீழடியில் கண்டறியப்பட்ட பொருட்களை காலப் பகுப்பாய்விற்கு அனுப்ப வெறும் 1 இலட்சத்தை ஒதுக்கியுள்ளது.

இந்த அப்பட்டமான வரலாற்றுத் துரோகத்திற்கு எதிராக, தமிழக அரசும், அரசியல் கட்சியினரும், அறிவுத்துறையினரும், ஊடகவியலாளர்களும்,படைப்பாளிகளும், எழுத்தாளர்களும், வரலாற்றாய்வாளர்களும், தமிழறிஞர்களும், கலைத்துறையினரும், மாணவர்களும், இளைஞர்களும், தமிழர் என்ற ஒற்றை அடையாளத்துடன் தொன்மையான தமிழர் வரலாற்றை மீட்டெடுக்க ஒன்றுபட்டு போராட முன்வரவேண்டும்.

**""தமிழகத்தில் கிடைத்துள்ள மிக முக்கியமான கண்டுபிடிப்புகள் இவை. இக்கண்டுபிடிப்புகளின் மூலம் தமிழக வரலாற்றை மறு ஆய்வுக்கு உட்படுத்தவேண்டிய கட்டாயத்தில் நாம் இருக்கிறோம்""**



**ரொமிலா தாப்பர்**

கடந்த ஜனவரி 28 ஆம் தேதி அன்று, காமராஜர் துறைமுகம் அருகே இரு கப்பல் மோதிய விபத்தில் கொட்டிய நச்சு எண்ணெய் கசிவுகள், குற்றுயிரும் கொலை உயிருமாக உள்ள எண்ணூர் மண்டலத்தில் மேலதிக பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. முன்னதாக காமராஜர் துறைமுகம், அனல் மின் நிலையங்கள், எண்ணெய் நிறுவனங்கள் எண்ணூர் கழிமுகத்தில் மண் கொட்டி மூடியும், சுடு நீரை வெளியிட்டும், சாம்பல் கழிவை வெளியேற்றியும் கடும் பாதிப்பை ஏற்படுத்தி வருகிறது. மீனவர்களின் வாழ்வாதாரம் உருக்குலைந்து போயுள்ளது.



# மெல்லச் சாகும் எண்ணூர்

## தொடரும் பேரிடர்கள்



# தோழர். அருண் நெடுஞ்செழியன்

இந்நிலையில் தற்போதைய விபத்தால், எண்ணூர் கடற்கரை தொடங்கி அமித் பல்கலைக்கழகம் வரை சுமார் 52 கிலோ மீட்டருக்கு எண்ணெய்கசிவு நடந்துள்ளதாக இந்திய கடல்சார் தகவல்தொடர்பு துறை(ஐழிஊழுஐஞு) அறிவித்துள்ளது.சுமார் 300டன் அளவிற்கு கச்சா எண்ணெய் மண் கழிவுகள் கடலில்இருந்து அப்புறப்படுத்தப் படுத்தப் பட்டுள்ளதாக துறைமுக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். தற்போது முழுவதும் எண்ணெய் படலம் அப்புறப்படுத்து விட்டதாகவும், கடற்கரை பாறைகளில் படிந்த கழிவுகளை தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் அகற்றும் என்றும் கூறி வருகின்றனர்.

முதலில் கடலில் எண்ணெய் கசிவே நடக்கவில்லை என்றவர்கள், பின்பு கொஞ்சம் கலந்தது என்றவர்கள், ஒரு கட்டத்தில் தப்பிக்க இயலாமல் உண்மையை குறைத்துக் கூறி மோசடி செய்து வருகின்றனர். இந்த எண்ணெய் கசிவு பாதிப்பு பெருமளவில் வடசென்னை நெய்தல்திணையின் சூழலியலையும் பொருளாதாரத்தையும் நாசம் செய்தது. வர்தாப் புயலில் இருந்து மீளாத மீனவ மக்கள் மீண்டும் இந்த மோசடிகாரர்களால் மோசமான பாதிப்பை எதிர்கொண்டுவருகின்றனர்.


## சூழலியல் தாக்கமும் பொருளாதார தாக்கமும்:

கச்சா எண்ணெய் படலமானது பல மைல் தூரத்திற்கு கடற்பரப்பிலும் கரையிலும் படர்ந்துள்ளதால் கடல் வாழ் உயிரினங்களும் கடல்சார் சூழலியல் மண்டலும் கடும் அழிவை எதிர்கொண்டுவருகிறது.ஆயிரக்ககணக்கில் மீன்கள் செத்து மிதக்கிறது, ஆமைகள் கொத்து கொத்தாக செத்து கரை ஒதுங்குகிறது. பாறைகளில் எண்ணெய் கசிவு படிந்துள்ளது. கரையில் எண்ணெய் படிந்துள்ளது. கடற்கரை மீன்கள், முகத்துவாரத்திற்கு நீந்தி வந்து முட்டை வைத்து இனப்பெருக்கம் செய்து கடல் சேரும். இந்த நிலையில் முகத்துவாரத்தில் கலந்து எண்ணெயால் முகத்துவாரத்தில் மீனின் இனப்பெருக்கம் மோசமான வகையில் பாதிப்படைந்துள்ளது.

**இந்த விபத்தால், மீன் வியாபாரம் முற்றாக சரிந்துள்ளது. காசிமேடு, நீலாங்கரை மீன் சந்தைகளில் மீன் வியாபாரம் முற்றாக சரிந்துள்ளது. பங்குனி ஆமைகளும் இந்த எண்ணெய் கசிவு பாதிப்பால் அதிக எண்ணிக்கையில் செத்து கரை ஒதுங்கி வருகிறது. எண்ணெய் வித்துகளின் நச்சுத் தன்மை, ஆமைகளின் சுவாசத்தையும் இதயத்தையும் பாதிப்படையச் செய்து இறக்கச் செய்கிறது. இதுவரை சுமார் 200 பங்குனி ஆமைகள் செத்து கரை ஒதுங்கியதாக சூழலியல் ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர். இந்த விபத்து ஒரு நீண்ட கால சூழல் கேட்டிற்கு வழி செய்யும் என்பது மட்டும் தெளிவாக தெரிகிறது.**







## நிர்வாகக் கோளாறுகள்:

கடலில் எண்ணெய் கசிவு பாதிப்பைக் கட்டுப்படுத்துவதிலும் போர்க்கால வகையில் நிலைமையை சரிசெய்வதிலும் போதிய நிர்வாக ஒருங்கிணைப்பும் தொழில்நுட்ப வசதிகளின் போதாமைகளும் அப்பட்டமாக வெளிப்பட்டன. எண்ணைக் கசிவு பேரிடர் ஆணையம் இல்லாத காரணத்தாலும், இவ்வாறு ஒரு விபத்து நடந்தால் என்ன செய்வது என்ற முன்னெச்செரிக்கை நடவடிக்கையில் காமராஜர் துறைமுக நிர்வாகம் அசட்டையாக இருந்தது போன்ற காரணங்களால், வாளிகளை கொண்டு நச்சு எண்ணெய் கசிவை தன்னார்வாளர்கள் அள்ளுகிற பேரவலம் நடந்தது. ஆபத்தான இந்த நச்சுக் கசிவை அகற்றுகிற உபகரணம் அற்ற, தொழில்நுட்பம் அற்ற, நிர்வாக ஏற்பாடற்ற அரசு இயந்திரம்தான் வல்லரசு கனவில் மிதக்கிறது! ஏழு நாளில் கழிவை அப்புறப்படுத்தி சுத்தம் செய்வதாக சொன்ன அரசு, பதினைத்து நாட்கள் ஆகப் போகிற நிலையிலும் நிலையை சீராக்க இயலாமல் தடுமாறுகிறது.

## பொறுப்பில் இருந்து நழுவிச் செல்லுதல்:


விபத்து நடைபெற்ற உடனே, உள்ளூர் நிர்வாகமானது காமராஜர் துறைமுகம், விபத்தை ஏற்படுத்திய கப்பல்கள், மாசுக் கட்டுப்பாட்டு வாரியம், சுற்றுச்சூழல் அமைச்சகம், கடல்சார் ஆய்வு நிறுவனங்கள் போன்ற சம்பந்தப்பட்ட நிறுவனங்களை ஒருங்கிணைத்து போர்க்கால அடிப்படையில் நிலையை சீராக்காமல், விபத்தின் தன்மையை குறைப்பதிலும், யார்மீதும் பழியில்லாமல், விபத்திற்கு யாரும் பொறுப்பேற்காமல் நழுவிவிடுவதிலும்தான் தீவிரம் காட்டின.

சம்பந்தப்பட்ட கப்பல் நிறுவனங்கள், காமராஜர் துறைமுகம், மெத்தென அரசு இந்த விபத்துக்கும் அதன் விளைவுகளுக்கும் பொறுப்பேற்க வேண்டும்.

*(1974 சட்டப்படி)சூழலை சீரமைத்து தரவேண்டும்.மீனவர்களுக்கு உரிய இழப்பீடு வழங்க வேண்டும்.நிறுவனங்களுக்கு தண்டனை வழங்கவேண்டும்.*



# மெரினா



எழுத்தாளர்.
## டி.அருள் எழிலன்

உலகம் எழுச்சியின் வாசலில் நின்று கொண்டிருக்கிறது.பனிப்போர் முடிவுக்கு பின்னர் உலக மக்கள் தங்கள் பிரச்சனைகளின் தீர்வுக்காக திரளுகிறார்கள். ஆனால் அது குறைந்த நலன்களோடு முடிந்து போகிறது. வால்ஸ் ட்ரீட், தாஹிர் சதுக்கம், என நாம் கண்ட பல போராட்டங்கள் முடிவுக்கு வந்தன.ரஷ்ய ஒன்றியத்தின் சிதைவின் பின்னர் முதலாளித்துவம் குடிமக்கள் மீது நடத்திய தாக்குதலின் பின் விளைவுகளையே நாம் அவலங்களாக பார்த்து வருகிறோம். மேற்குலக பொருளாதார நெருக்கடி மக்களை வீதிக்கு துரத்தி அது உலகின் கவனத்தை ஈர்த்தது போல ஒரு எழுச்சி நம்மூரில் சாத்தியமா என்ற கனவெல்லாம் அப்போது பகிரப்பட்டன. அது இந்தியாவில் சாத்தியமானது மெரினாவில்.

மெரினா எப்போதுமே வியப்பானதுதான். அது ஒரு செயற்கை கடற்கரை. உலகின் நீண்ட கடற்கரைகளுள் ஒன்று எனப்படும் மெரினா, சென்னை துறைமுகம் துவங்கப்படுவதற்கு முன் இல்லை. செயிண்ட் ஜார்ஜ் கோட்டையின் முன்னால் சாலையும் அதனையொட்டி அலையும் அடிக்கும், அடிக்கும் அலைக்கும் நிலத்திற்கும் இடையே பரந்த இந்த மெரினா பீச் கிடையாது.

செயற்கையாக மணலை கடலுக்குள் கொட்டி சென்னை துறைமுகம் உருவாக்கப்பட்ட போது அந்த அழுத்தம் காரணமாக கடல் மணலை கரையில் கொட்ட நூறு ஆண்டுகளுக்கு முன்னர் உருவானதுதான் மெரினா கடற்கரை. அப்படி உருவான செயற்கை கடற்கரையின் பின் விளைவு திருவொற்றியூர், எண்ணூர் கரையோரங்களை மிகக் கடுமையாக பாதித்து பல கிராமங்களை மூழ்கடித்து விட்டது.இப்படி மெரினாவின் உருவாக்கத்தின் பின்னர் ரத்தம் தோய்ந்த மீனவர்களின் துயர வரலாறு மூழ்கிக் கிடக்கிறது. நிற்க, தமிழகம் கண்டிராத வகையில் மெரினா போராட்டம் அமைந்தது.

பொதுவாகவே புரட்சி என்ற சொல்லால் இப்போராட்டம் அடையாளப்படுத்தப்பட்டது. காரணம் சுமார் 40 லட்சம் பேர் வரை வந்து சென்ற போராட்டம் வழங்கிய அனுபவமும், அதனூடாக உருவான மன எழுச்சியாலும் புரட்சி என்ற சொல்லில் அதை அர்த்தப்படுத்த முயல்கிறார்கள். ஆனால் புரட்சியின் உள்ளார்ந்த அரசியல் பொருளோடு இதை அணுகினால் அதில் மிச்சம் மீதி எதுவும் இருக்காது என்பதால் நான் இதை பெருந்திரள் எழுச்சி என்கிறேன்.

போராட்டங்களின் மூலம் தமிழகத்தைக் கைப்பற்றிய திராவிட இயக்கங்கள் ஆட்சிக்கு



வந்த பின்னர் தாங்கள் ஆள்வதற்காக போராட்டங்களை தமிழர்களின் வாழ்வில் இருந்து நீக்கினார்கள். கூலி உரிமைக்காகவும், மொழிக்காகவும் போராடிய தமிழர்களை அரசியல் நீக்கம் செய்யப்பட்ட வாக்குப் பிண்டங்களாக மாற்றியதில் தேர்தல் அரசியலில் பங்கேற்கும் கழகங்களின் பெரிய சாதனை எனலாம்.

அரசியல் அழிப்பின் முதல் அடையாளமான சென்னை மெரினாவில் இருந்த சீரணி அரங்கம் அகற்றப்பட்டது, சேப்பாக்கம், உள்ளிட்ட வழக்கமாக போராட்டம் நடக்கும் இடங்கள் மூடப்பட்டன. சென்னை அண்ணாசாலை எத்திராஜ் கல்லூரியில் எதிரே செல்லும் அரவமற்ற கூவக்கரையோர சாலை போராட்டங்களுக்கு வழங்கப்பட்டது. மக்களுக்கு இடைஞ்சல் இல்லாமல் போராட வேண்டும் என்று கழகங்கள் மூச்சுக்கு முந்நூறு தடவை போதித்தது. இன்னொரு பக்கம் நாளுக்கு நாள் மக்களின் பிரச்சனைகள் அதிகரித்தது. இடைஞ்சலாக சென்னையில் அழகிற்கு அச்சுறுத்தலாக இருந்த சென்னையில் பல்லாயிரம் பூர்வ குடிகள் சென்னைக்கு வெளியே தூக்கி வீசப்பட்டார்கள். இன்னொரு பக்கம் மக்களின் பிரச்சனைகள் அதிகரித்துச் சென்றது. விலைவாசி உயர்வு, உரிமைகள் பறிப்பு, மானியங்கள் வெட்டு, வர்தா, வறட்சி, இறுதியாக ரூபாய் நோட்டு செல்லாது அறிவிப்பு என மக்கள் திண்டாடிப் போனார்கள். சில நாட்களுக்கு முன்னர் வரை தங்கள் பணத்தை தாங்களே எடுக்க முடியாமல் நின்ற மக்களை ஈர்த்தது மெரினா திரட்சி. இரண்டாவதுதான் ஜல்லிக்கட்டு கோஷம்.

துவக்கத்தில் இந்த போராட்டத்தை கடுமையாக எதிர்த்த நான் மெரினா சென்று திரும்பிய போது வியப்போடும் ஆச்சரியத்தோடும் நம்பிக்கையோடும் திரும்பினேன். அதற்கு காரணம் அங்கு நிலவிய மோடி எதிர்ப்போ, அரசியல் கோஷங்களோ அல்ல. அங்கு ஒரு பண்பாடு நிலவியது. சமீப காலமாக கலாச்சார அமைப்புகள் மேலெழுந்து ஒழுக்க வாதங்களை மக்களுக்கு போதித்து வரும் நிலையில் சுதந்திர உணர்ச்சியோடு மக்கள் கூடி ஆடிப்பாடினார்கள், நடனமாடினார்கள். கோஷமிட்டார்கள், கரவொலி எழுப்பினார்கள். தங்கள் மொபைல் போனில் வெளிச்சம் ஏற்படுத்தினார்கள். மீம்ஸ் போட்டார்கள். வாட்ஸ் அப், முகநூல் மூலம் கூட்டம் சேர்த்தார்கள். ஜல்லிக்கட்டு நடந்த அவசரச் சட்டம் நிறைவேற்றப்பட்டதன் மூலம் இந்த போராட்டம் முடியவில்லை என்பதுதான் இந்த போராட்டத்தின் பன்மைத்தன்மையை உணர்த்தியது.

இப்போராட்டத்தில் பங்கேற்ற நடிகர் லாரன்ஸ், பாடகர் ஆதி, நாட்டு மாடுகள் வணிகரும், அது தொடர்பான ஆராய்ச்சிகளில் ஈடுபடுகிறவர் என்று சொல்லிக்கொள்கிறவருமான சேனாதிபதி போன்றோர் இந்த போராட்டத்தில் வெவ்வேறு கோஷங்களை எழுப்பியதாக குற்றம் சுமத்தினார்கள். குறிப்பாக, மோடியை திட்டினார்கள். தனிநாடு கோரினார்கள் என்று சொல்வது அவர்கள் பெருந்திரள் எழுச்சியின் மீது அவர்கள் கொண்டிருந்த சுய விருப்பத்தை வெளிப்படுத்துகிறது.இவர்கள் அனைவருமே இன்றைய அரசுகளால் இப்போராட்டத்தினுள் நுழைக்கப்பட்டிருக்கலாம்.இப்போராட்டம் வெறுமனே ஜல்லிக்கட்டு போராட்டமாக மட்டுமே சுருங்கிப் போனால் இவர்கள் ஒவ்வொருவரின் தேவைகளும் இப்போராடத்தின் மூலம் ஆதாயமாக மாறும். ஆனால் இப்போராட்டம் யாருடைய தனிப்பட்ட தேவைகளின்பால் பட்டதல்ல, அது மக்கள் அடைந்த அவதியில் இருந்து எழுந்த உந்துதல். அதனால்தான் போராட்டம் முடிய மறுத்தது. போலீசார் மாணவர்களைச் சூழ்ந்து



தாக்கியபோது சென்னை உட்பட தமிழகம் முழுக்க மக்கள் தன்னெழுச்சியாக வீதிக்கு வந்து தமிழகத்தை முடக்கியதுதான் இந்த போராட்டம் உருவாக்கிய பண்பாடு. இங்கு செல்வாக்குச் செலுத்தும் அரசியல் கட்சிகள் நடத்தும் அடையாளப் போரட்டங்களை இடது கையால் துடைத்துப் போட்டு விட்டு கம்பீரமாக நின்றது இதன் வெற்றி.

ஆனால், இந்த போராட்டத்தின் பின்னால் மிக முக்கியமாக நாம் எழுப்ப வேண்டிய கேள்வி. இந்த போராட்டம் உருவாக்கிய பண்பாட்டை வளர்த்தெடுப்பது எவ்விதம் அது சாத்தியமா என்பதுதான்.

இந்த போராட்டம் மக்களின் ஆன்மாவைத் தொட்ட போராட்டம்.சாதி, மொழி, இனம், கடந்த ஒரு ஐக்கியத்தை உருவாக்கி அதை மெரினாவில் வெளிப்படுத்திய நிலையில் அரசும் காவல்துறையும் இதை நீண்டகால அச்சுறுத்தலாகப் பார்த்தது. காரணம் இந்த ஐக்கியம் நீடித்தால் அது வளர்த்தெடுக்கப்பட்டால் அரசுக்கு சிக்கல் வரும் என்பதால் அதை சிதைக்க எண்ணி திட்டமிட்டு கலவரத்தை தூண்டினார்கள். மக்கள் மத்தியில் ஒரு அச்சுறுத்தலை ஏற்படுத்தியாக வேண்டிய தேவையும் உருவானது. அந்த அச்சுறுத்தலின் திட்டமிட்ட வெளிப்பாடுதான் போலீஸ் நரவேட்டை. அரங்கில் இருக்கும் கட்சிகளை அங்கு திரண்டவர்கள் ஏற்றுக் கொள்ளாத காரணத்தால் அவர்களுக்கும் இந்த போராட்டம் அச்சுறுத்தலாக இருந்தது.அதனால் அரசின் அடக்குமுறையை திமுக உள்ளிட்ட கட்சிகள் மவுனமாக வேடிக்கை பார்த்தது. ஒப்புக்கு சில அறிக்கைகளை திமுக விட்டாலும் அது எப்படி ஜல்லிக்கட்டு போராட்டம் மீது முதல்வர் பன்னீர் செல்வம் அரசு ஏவிய அடக்குமுறையை ஆதரித்தது என்பதை புரிந்து கொள்வதன் மூலமே இந்த போராட்டப் பண்பாட்டின் வீரியம் புரியும்.

மாணவர்களை போலீசார் தாக்கி துரத்திய போது மீனவர்கள் படகுகளில் வெளியேற்றப்பட்டவர்களை ஏற்றி கடல் வழியே கொண்டு போய் மீண்டும் மெரினாவில் இறக்கினார்கள். உணவு தண்ணீர் கொடுத்தார்கள். அதனால்தான் மெரீனாவை அண்டியிருக்கும் மீனவர் குடியிருப்புகளில் போலீசார் நரவேட்டையை நடத்தினார்கள். மீன் மார்க்கெட், வீடுகள், என ஒன்று விடாமல் சேதமாக்கி அடித்து நொறுக்கியதோடு, ஆட்களையும் அள்ளிச் சென்று சித்ரவதை செய்து சிறையில் அடைத்தார்கள். தீவைத்தார்கள், பெண்களை நிந்தனை




செய்தார்கள். மெரினா போராட்டத்தின் மொத்த எதிர்வினையையும் அனுபவித்தவர்கள் கடற்கரையோர பட்டினவர்களான மீனவர்களும், கடற்கரைக்கு வெளியில் வாழ்ந்த தலித் மக்களும். ஆனால் மாணவர்கள் மீதான தாக்குதலுக்கு கவலை கொண்ட பொதுச் சமூகம் உதவி செய்யப் போய் உபத்திரவத்தில் சிக்கிக் கொண்ட இவர்கள் பற்றி கவலை கொள்ளவில்லை. அதை பயன்படுத்திக் கொண்ட முதல்வர் பன்னீர் போராட்டத்தில் கைதான மாணவர்களை விடுதலை செய்தார். மீனவர்களை சிறையில் தள்ளி ஏராளமான வழக்குகளை அவர்கள் மீது போட்டார்.

மாணவர்கள் உருவாக்கிய பொது பண்பாடு போலீசாலும், அரசாலும் சிதைக்கப்பட்டது. அதன் முதிர்ந்த வடிவம்தான் ஆங்காங்கே நடந்த ஜல்லிக்கட்டும் கொண்டாட்டங்களும். இந்த துயரங்களுக்கும் இழப்புகளுக்கும் பிறகு போராடி பெற்ற ஜல்லிக்கட்டு உரிமையை அந்த நினைவுகள் எதுவுமற்ற சாதிகளின் விளையாட்டு போல நடத்தி விட்டார்கள். நாளை மீண்டும் ஜல்லிக்கட்டுக்கு தடை வரும் போது இன்னொரு போராட்டத்தை எவரும் கற்பனை கூட செய்து பார்க்க முடியாது. அதுதான் இந்த போராட்டம் கொடுத்த படிப்பினை.

போராட்டத்தின் நோக்கம் வெற்றி என்றாலும் அதற்கான துன்பங்களை அனுபவித்த மக்களை சிறையில் தள்ளி விட்டு, அதற்காக வருந்திய மக்களை புறந்தள்ளி விட்டு அரசும், காவல்துறையும், பொதுப்புத்தியின் துணையோடு மெரினா போராட்டம் உருவாக்கிய பொதுப் பண்பாட்டை சிதைத்து விட்டது.

இந்த போராட்டம் தோல்வி என்று சொல்ல முடியாது சிதைக்கப்பட்டிருக்கிறது. தமிழகத்தின் இன்றைய அரசியல் சூழல் திட்டமிட்டு மத்திய பாஜக அரசால் குழப்பட்டு விட்ட நிலையில் மெரினா அராஜகத்தின் கை நனைத்தவர்கள் தங்கள் பாவங்களை கழுவ பிராயச்சித்தம் தேடுகிறார்கள். மீண்டும் தங்களின் இயல்பு வாழ்க்கையில் மூழ்கிவிட்ட பொது மக்களுக்கு அது பற்றிய எண்ணம் ஒரு நினைவாக மட்டுமே இனி இருக்கும்.




ஐயா. இராம.
அகத்தியதாசன்

agathiyadaasan.blogspot.in இந்த இணையத்தில் திராவிடம் தமிழைக் குறிக்காது தமிரைக் குறிக்காது என்றத் தலைப்பில் பல்லவர்கள் தமிழர்களே என்ற இந்தத் தலைப்பில் மேலும் கூடுதல் தகவல் வேண்டுவோர்கள் பார்க்கவும்.

**உலகில்** 10,000 ஆண்டுகளுக்கு முந்தைய காலத்தில் மனிதன் கற்கைளைக் கொண்டு வேட்டையாடி கற்கால காலத்தில் தாய்வழி மக்கள் சமுதாயம் இருந்தது என்பார்கள், அந்தக் காலத்திற்கும் முந்தியும் அவனது உணவு என்பது காய்கறி கீரை, விலங்கினங்களின் கறி, உணவாக இருந்தது, அந்த உணவு சேகரிக்கும் காலம் முதல் தமிழகத்தில் சோழ மன்னர்கள் வாழ்ந்தனர் என்பதை பூம்பூகார் அகழ்வாராச்சி காண்பிக்கிறது, இன்றைய மதுரை கீழடி அகழ்வாராச்சி விளக்குகிறது,

# பல்லவர்கள் தமிழர்களே





**அந்த மக்கள் தங்கள் வாழ்வாதாரத்திற்குக் காரணம் வள்ளி, காந்தள்கிழங்கு, பச்சைப் பயிறு, பூக்கள் காரணம் என்பதால் அவற்றைத் தெய்வமாக வணங்கினர் என்பதை உணர்த்தும் செய்திகள் வள்ளித்தெய்வானை, கார்த்திகைத்தெய்வம், பச்சையாயி, பூங்காயி போன்ற தமிழில் உள்ள தாய்த் தெய்வங்களின் பெயர்கள் ஆகும், இந்தத் தெய்வங்கள் பரவலாகத் தமிழகத்தில் இருப்பதே இந்தத் தற்காலத் தமிழகத்தில் தமிழர்கள் தற்காலத் தமிழை 10,000ஆண்டுகளாகப் பேசி வருகிறார்கள் என்பதை விளக்கும்.**

அந்த மக்களின் எச்சக் கூறாக அவர்கள் வாழ்ந்த நிலத்தில் வள்ளித் தெய்வம் ஒரு பெண்வழி வழிபாடாக மாறியது என்பதை விளக்க காஞ்சிபுரத்தை அடுத்த வேலூருக்கும் அருகில் உள்ள வள்ளி மலை உள்ளது. முருகன் வள்ளியைத் திருமணம் செய்துக்கொண்டார் என்ற முருகன் கதையை நாம் அறிவோம், அந்த வள்ளித் தெய்வம் இங்கே பிறந்து வளர்ந்து முருகனை காதலித்து திருமணம் செய்தனர் என்பதை இங்கே உள்ள மக்களும் நம்புகிறார்கள், இருவரும் கற்பனை பாத்திரம் என்று கூட வைத்துக் கொண்டால்கூட இந்தத் தெய்வங்களை முருகன் வள்ளித் தெய்வங்களை வணங்கிய மக்கள் இங்கே 10,000ஆண்டுகளாக வாழ்கிறார்கள் என்பது உறுதியானச் செய்தியாகும், இந்தத் தமிழ்ச் சொற்கள் முருகன், வள்ளி சொற்கள இங்கே இருக்கும் மக்களிடையே சமுதாய, சமய, வரலாற்றில் பல மாற்றங்களை ஏற்படுத்தின.

கி.மு. 8,000 ஆண்டுகளுக்கு முன்பே பயிர்த் தொழில் வளர்ந்து வந்த நிலையில் கிமு, வாக்கில்தான் இரும்பின் உபயோகத்தால் ஏர் உழுவது உலகம் முழுவதும் இருந்தற்குச் சாட்சியங்கள் கிடைக்கின்றன.

கரிகாலன் காலத்தையதாகக் கருதக்கூடிய சான்றாக தமிழகத்தில் கிருட்ணகிரி மாவட்டத்தில் எட்றப்பள்ளி மேல்பள்ளம் பகுதியில் உள்ள ஒரு குகையில் உள்ள படம் ஏர் கலப்பையாகக் கருத முடிகிறது, நகரமயமான சூழலில் உலகில் எங்கே ஏர் உழுகருவி பெரும்பாலும் குகையில்தான் கிடைக்கிறது என்பது வியப்பாக இருக்கிறது, அதனால் கச்சி நகரில் பயிர்த் தொழில் சிறந்தக் காலம் கி.பி. மற்றும் கிமு காலத்தில் ஏர் உழுது வாழ வெளியே இருந்து வந்தவர்கள் அங்கே இருந்தார்களுக்கு உதவிட வந்தவர்களாக இருக்க வேண்டும்.

அதற்கு முந்தைய காலத்தில் அங்கே தமிழ் அறிந்தவர்கள் இருந்தனர் என்பதற்கு ஆதராம் வள்ளி, முருகன் பரவலாக தமிழகம் முழுவதும் பேசப்படுவதே சான்றாகக் கொள்வோம், வள்ளி என்ற பெயர் பல்லவரானது.

## வேலூரிக்கும் அருகில் 20 கி.மீ. தொலைவில் அமைந்த வள்ளி மலை

வள்ளிக் கிழங்கு தங்கள் வாழ்வாதாரத்திற்கு முக்கியமாக கருதியவர்கள் தங்கள் தெய்வமாக வள்ளியை வணங்கினர். அந்த வள்ளிக் கிழங்கு பள்ளத்தில் வளர்ந்ததால் பள்ளி என்றும் பள்ளி என்ற இடத்தில் பலரை இடும் நிலையில் பள்ளிப்படை என்றும் பெயர் பெற்றது, பள்ளிப்படையே பல இடங்களில் சிவன் கோயிலாக இருப்பதை நாம் அறிவோம். சிவன் கோயில்கள் உள்ள இடத்தில் பாடம் நடத்துதல், நீதி வழங்குதல், செல்வத்தை சேமித்து வைத்தல், ஆவணங்கள் சேமித்தல் என்ற நிலை ஏற்பட்டக் காலத்தில் பள்ளிப்படை பள்ளிக்கூடம் என்று அழைக்கப்பட்டது.

பள்ளிப்படையில் வீரம் விளைத்தவர்கள் இடப்பட்ட போது அவர்கள் வள்ளி கள், வள்ளல், வல்லவர் என்ற அழைக்கப்படலா னார்கள். வல்லவர்கள் வீரம் விளைத்த போதே பல்லவர்கள் என்று அழைக்கப்பட்டனர்.





இப்படி மொழியாலும் சமயத்தாலும் சமுக வியலாலும் நில அமைப்பாலும் பின்னி பிணைந்து இருந்த மக்கள் இங்கே 10,000 ஆண்டுகளாக இங்கே வாழ்ந்து வந்தார்கள் என்பதை அறிகிறோம்.

## பல்லவர்கள் பெயரில் தொகைப்பெயர்கள் வந்தன.

சிந்து நதிப் பகுதியில் சிபியின் வம்சாவளியைச் சேர்ந்தவர்கள் சௌவீரர்கள் என்னும் பெயருடன் ஆண்டனர். கௌரவர்களது ஒரே சகோதரியான துச்சலையை மணந்த செயத்ரதன் சௌவீர நாட்டு மன்னன். சௌட என்றே பெயர் கௌட எனத் திரிந்த்து என்பதை அறிகிறோம். சேர நாடு கேரள நாடு எனத் திரிந்தது போல் சௌடா சௌட, கௌட நாடு எனத் திரிந்துள்ளதைக் காண்கிறோம்,

இந்தப் பகுதி சிந்து நதியை ஒட்டி அதற்கு மேற்கே இருந்தது. ஆதலின் சோழர்களின் இனமாக கௌரவர்கள் இனம் இருந்ததையும் அறிகிறோம்,

சூரியன்...... சோழன்...... சோ... சோனி. சோலார். ரே.... ரேடியன்.

சோழ... சோடா... சௌடா..... கௌடா... கௌடர். கௌடநாடு.

சோழன்... சூரியன். சம்பு. சாம்பு. சம்போ. சாவகம். காம்போ சிவந்தவன்... சிவன்... சைவம்...

இந்தப் பள்ளியர்கள் பல்லவர்கள் கங்கைப்பகுதியில் இருந்த தம் முன்னோர்கள் கௌரவர்கள் என்ற நிலையில் அவர்கள் பெயரை தொகையாகக் கொண்டனர் என்பதையும் உணர்த்தும் கல்வெட்டுகள் சான்றுகள் சில இடம் பெற்றன. அவர்கள் பிராமணர்களை ஆதரித்ததால் அவர்கள் பெயரில் பிராமணர் ஆதரித்த பல்லவர்கள் என்று பெயர் பதம் தொகையாக இடம் பெற்றன.

**பல்லவர்கள் தங்கள் முன்னோர்கள் செய்த வீரத்தை விளக்கியே பாரதக் கதையை நாடு எங்கும் பரப்பி வந்தனர். பாரதக் கதை பிராமணர்களின் கதை இல்லை. அது சோழர்கள் பாண்டியர்கள் இடையே கங்கை கரையிலியே நடந்த கதை என்பதை அறியாமல் ஆக்கப்பட்டது. சோழர் என்றே சொல்லே கௌரவர் என்று திரிந்தது.**

முருகன் வழிபாடு இங்கே முருகன் சிவனுக்கு அப்பனாக ஆக்கப்பட்டு சிவ வழிபாடு வளர்ந்து. காஞ்சியில் மயான சிவன் கோயில் ஏகாம்பரம் கோயில் முதலியன கட்டுமானம் பெற்றன.பல்லவர்கள் சிற்பக் கலையை வளர்த்தனர். தமிழையும் வளர்த்தனர். சமயத்தையும் வளர்த்தனர்.



**சிவதாரணி மலர்மகள்**

# புலம் பெயர்ந்து வாழும் தமிழர்களின் கோரிக்கை மற்றும் தேவைகள்

**பல ஆண்டுகளாக இலங்கையில் ஏற்பட்ட இனக்கலவரத்தால் உறவினரையும், உடைமைகளை இழந்தும், இடம் பெயர்ந்தும், புலம் பெயர்ந்தும் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.**

*அப்படிப் புலம் பெயர்ந்த மக்கள் பலர் தமிழ்நாட்டிற்கு அகதிகளாக 1983 முதல் வந்துள்ளார்கள், 1990 முதல் அகதிகள் வருகை அதிகரித்துள்ளது 2009 போர் முடிவிற்கு வந்த பின்னும் அங்கு வாழ்வதற்குரிய சூழ்நிலை இல்லாததால் மக்களின் புலம்பெயர்வு அதிகரித்துள்ளது.*

*அப்படி புலம் பெயர்ந்தவர்களில் பலர் முகாம்களிலும் வெளிப்பதிவிலும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். முகாம்களின் எண்ணிக்கை முன்னர் சுமார் 132 முகாம்கள் தற்சமயம் 112 + 1 (சிறப்புமுகாம்) 113 முகாம்கள் தற்சமயம் உள்ள மக்கள் தொகை, 1. முகாம் மக்கள் தொகை 63,425 சுமார் 22,000 குடும்பங்கள், 2. வெளிப்பதிவில் உள்ள தமிழர்கள் 34,000 சுமார் 12,500 குடும்பங்கள், 3. 1983 முதல் இந்தியாவில் வந்து வாழ்ந்தவர்கள் எல்லாம் சுமார் 2½-3 லட்சம் மக்கள் என எதிர்பார்க்கப்படுகிறார்கள்.*

*இப்படி புலம்பெயர்ந்த தமிழர்களில் ஈழத்தைப் பூர்வீகமாகக் கொண்டவர்களும் இந்திய வம்சா வழியைச் சார்ந்தவர்களும் அடங்குவார்கள்.*

*இப்படி 25 ஆண்டுகளுக்கும் மேலாகப் புலம்பெயர்ந்து வாழும் எம் மக்கள் இன்றும் அகதி வாழ்விலே வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள்.*

*25 ஆண்டுகள் கடந்து முகாம்களில் உள்ள குடியிருப்புகள் சிதைந்தும் பாழடைந்த நிலையில் உள்ளன. கழிப்பிட வசதிகள் சரிவர இல்லாமல் மக்கள் அவதிப்படுகிறார்கள்.*

1 பட்டதாரிகள் கூட கூலித் தொழில் செய்து பிழைக்கும் நிலையில் தான் உள்ளார்கள்

2 அவர்களின் படிப்பிற்கு ஏற்ற வேலை, சம்பளம் கிடைப்பதில்லை

3 சில தொழிற்சாலைகளில் ஈழத் தமிழர் என்பதனாலே வேலை வாய்ப்பு மறுக்கப்படுகிறது.

4 அது மட்டுமல்லாமல் அவர்கள் முகாம் பதிவில் இருப்பதால் வெளியில் தங்கி வேலை செய்வது கடினமாக உள்ளது.

5 முகாம் சோதனையின் போதும், மானியம் வழங்கலின் போதும் முகாமில் அவர்கள் இருப்பது அவசியம் (கட்டாயம்). அதனாலும் அவர்கள் தொழில் பாதிக்கப்படுகிறது. இலங்கையில் போர் முடிவிற்கு வந்த போதும் எங்களின் அகதி வாழ்க்கை தொடர்ந்து கொண்டே உள்ளது. வெளிப்பதிவில் வாழும் புலம் பெயர் தமிழர்களின் நிலமை தேவை.

## வெளிப்பதிவில் வாழும் புலம்பெயர் தமிழர்களின் நிலைமையும் தேவையும்

*1) போலீஸ் பதிவு வெளிப்பதிவில் உள்ள தமிழர்கள் ஒவ்வொரு வீடு மாறும் போதும் அவர்களின் முகவரி மாற்றம் செய்ய வேண்டும். அப்படி பதிவதற்கு வீட்டு*

உரிமையாளரின் விபரம், கடிதம் தேவை. அதனால் எங்களுக்கு வீடு கொடுப்பதற்கே பலர் தயங்குகிறார்கள்.

2) திருமணப் பதிவு, ஓட்டுநர் உரிமம் பெறவும் முடியாமல் உள்ளது.

3) கடவுச்சீட்டு புதிதாகப் பெறுவதும் புதிப்பிற்கவும் முடியாமல் உள்ளதால் ஒரு அவசரத்திற்குக் கூட எங்கும் செல்ல முடியாமல் உள்ளது. இலங்கை செல் வதற்கு மட்டும் ஒரு வழி கடவுச் சீட்டு வழங்கப்படுகிறது. இச்சூழ்நிலையில் இலங்கை சென்றால் இந்தியாவிற்கு 5 ஆண்டுகள் திரும்பி வர இயலாது.

4) இந்திய இளைக்ஞரையோ, பெண்ணையோ திருமணம் முடித்தவர்கள் கூட குடியுரிமை இன்றி வாழ்கிறார்கள்.

5) ஒரு தொழில் தொடங்கவோ, வங்கிக் கணக்கு, காஸ் போன்றவற்றை பெறுவதற்கு எங்கள் முகவரியை உறுதிப்படுத்த சரி யான ஆவணம் இல்லாமல் உள்ளது. மேல் படிப்பிற்கு அவர்களுக்கு வசதி வாய்ப்புகள் இல்லாமல் உள்ளது. அப்படி படித்து முடித்தவர்களுக்கு வேலை வாய்பபு மற்றும் சம்பளம் உயர்வு, ஈழத்தமிழர் என்பதால் மறுக்கப்படுகிறது. வெளிநாட்டு வேலை வாய்ப்பு, மேற்படிப்பிற்கோ செல்ல முடி யாத சூழ்நிலை உள்ளது.

## இப்படி வாழும் மக்களின் கோரிக்கை

தமிழக முகாம்களிலும் வெளிப்பதிவிலும் புலம் பெயர்ந்து வாழும் ஈழத் தமிழ் அகதி மக்களுக்கு குடியுரிமை கிடைக்காததால் அரசுப் பணி வாய்ப்பு உட்பட தமிழ் நாட்டில் வாழும் சாதாரண குடிமக்களுக்கு கிடைக்கும் எந்த உதவியும் கிடைக்காமல் இன்றும் பல ஆண்டுகளாக அகதி அகதி என்ற அவதி நிலையிலேயே வாழ்கிறார்கள்.

எங்களின் வாழ்விற்கு வழிகாட்டி ஐநா அகதிகள் ஆணையத்திற்குள் அவர்களைப் பதிந்தும் எங்களுக்கு இரட்டையர் குடியுரிமை அல்லது வதிவிட உரிமை, மற்றும் பயண ஆவணம் கொடுத்தும் எங்களின் வாழ்வும் வளமும் சிறக்க மத்திய, மாநில அரசுகளும் தொண்டு நிறுவனங்களும், சமூக ஆர்வலர்கள், மற்றும் அரசியல் தலைவர்கள் முன்வருவார்களா? நாங்கள் அகதி என்ற அல்லலில் இருந்து விடுபட்டு இன்பமாக சுதந்திரமாக வாழ அனுமதிப்பார்களா? உதவிக் கரம் நீட்டுவார்களா?

என்னும் இந்த வேதனைகளோடு எங்கள் சமூகம் வாழ்ந்து மடிய வேண்டுமா?

அன்னிய நாடுகளில் புலம் பெயர்ந்து வாழும் தமிழர்கள் அனைத்து நலன்களும் பெற்று வாழ்கிறார்கள்.

நாம் இந்தியாவில் இன்றும் அகதிகளாகவே வாழ்ந்து கொண்டிருக்கிறோம் (இருப்பினும்)

இங்கு நாம் உண்டு உடுத்து உறங்குகிறோமே ஒழிய நாம் எதுவாகவும் இல்லை. ஆனாலும் எமக்கு எம் மொழி பேசும் மக்களும் சகோதர உணர்வோடு எம்மை ஆதரிப்பவர்களுமே எமக்குக் கிடைத்த வரப்பிரசாதம்.

1959 ஆண்டு சட்டப்படி, ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், பங்களாதேஷ், இந்துக்களுக்குக் குடியுரிமை வழங்கலாம் என சட்டம் இயற்றப்பட்டுள்ளது. அப்படிப் பார்க்கும் போது இலங்கையில் வாழும் மக்களில் 85 விழுக்காடு சைவர்கள், (தேவாரம், திருவாசகம்) நால்வர் பற்றியும் அறிந்தவர்கள் தமிழர்கள் உணர்வுகளோடு ஒன்றியவர்கள். மற்றைய நாடுகளில் உள்ளவர்களால் தமிழர்களுக்கு என்ன நன்மை உண்டோ தெரியாது நாங்கள் இந்தியாவை வளமாக்குவதற்கும் மேன்மேலும்



சிறப்பதற்கும் உறுதுணையாக இருப்போம் ஏன் என்றால் நாங்கள் உங்கள் உணர்வோடு ஒன்றியவர்கள். சமயமும் மொழி உணர்வும் எங்களுக்கு இரண்டு கண்களைப் போன்றவை. ஆங்கிலேய ஆட்சியின் போது இலங்கையில் ஏற்பட்ட மதமாற்றத்தை ஒரு ஆறுமுக நாவலர் தடுத்து நிறுத்தினார். நாங்கள் ஒவ்வொருவரும் இதற்காகப் பாடுபடுவோம்.

## புலம் பெயர்ந்து வாழ்பவர்கள் இலங்கை செல்ல மறுப்பது ஏன்?

1) உறவினரையும், உடமைகளையும் இழந்து வந்தவர்கள் திரும்பிச் செல்ல விரும்பவில்லை (மனவிரக்தி)

2) புலம் பெயர்ந்து, இந்தியா வந்து திரும்பி பல வாக்குறுதியின் அடிப்படையில் இலங்கை சென்று அங்கும் முகாம்களிலே வாழ்ந்து திரும்ப வந்தவர்களும் உள்ளார்கள் அவர்கள் திரும்பச் செல்ல விரும்பவில்லை (அவர்கள் பட்ட துயரம் மீளச் செல்ல மனம் துணியவில்லை)

3) வேலை வாய்ப்பின்மை அங்கு வாழும் 15 ஆயிரம் பட்டதாரிகள் வேலை வாய்ப்பு இல்லாமல் வாழ்கிறார்கள். அப்படி இங்கிருந்து செல்லும் பட்டதாரிகள் (நிலை) அங்கு என்ன செய்வது? வடக்கு மகாணத்தில் பெரிய தொழிற்சாலைகள் இல்லை இன்னும் வடக்கு, கிழக்கு இணைக்கப் படவும் இல்லை, அது மட்டுமல்லாமல், விவசாயம், மீன்பிடித் தொழில் இவற்றைத் தொடர்வதும் முடியாது, எனவே அங்கு சென்று எப்படி வாழ்வது



## அரசியல், புவியியல், பொருளாதார பாதுகாப்பு உறுதி செய்யப்படவில்லை.

ஈழத்தைப் பூர்வீகமாகக் கொண்ட மக்களும் இந்திய வம்சா வழியில் அங்கு வாழ்ந்தவர்களும் இலங்கை செல்ல விரும்பலாம், ஆனால் இங்கு பிறந்து வாழ்பவர்களின் நிலை, (பூத்துக் காய்க்கும் மரத்தை வேரோடு பிடுங்கி நடுவது எவ்வளவு சாத்தியம் இல்லையோ இதுவும் அப்படித்தான்)

இலங்கையில் இருந்து புலம் பெயர்ந்து இந்தியாவில் வாழ்பவர்கள் திரும்ப இங்கிருந்து புலம் பெயர்ந்து இலங்கையில் வாழும் நிலமை தான் நீடிக்கும்.

ஆயுதப் போராட்டம் முடிந்தாலும் இலங்கை யில் தமிழர் பிரச்சனை தீர்க்கப்படாமலே உள்ளது. இந்திய இலங்கை ஒப்பந்தப்படி கூட ஒரு தீர்வும் நிறைவேற்றப்படவில்லை. இப்போது பிரச்சனை இரட்டிப்பாக உள்ளது எப்போதும் இருந்த தேசிய இனங்களின் பிரச்சனை தீர்க்கப்படாமலே உள்ளது. போரி னால் ஏற்பட்ட அழிவும் புலம்பெயர்வும் இன்னும் பல சிக்கல்களும் சேர்ந்துள்ளன. இந்தப் பிரச்சனைகளைத் தீர்க்காமல் புலம் பெயர்ந்து அகதிகள் தாயகம் திரும்பச் செல்வது எந்த வகையிலும் நியாயம் இல்லை. உலக நாடுகள் ஒரு அரசியல் தீர்விற்கு இலங்கை அரசை வலியுறுத்தியும் இலங்கை அரசு எந்த முயற்சியும் முழுமையாக முன் எடுக்கவில்லை.

இந்திய அரசு இந்திய இலங்கை (ராஜீவ் ஜயவர்த்தன) ஒப்பந்தப்படி தீர்வு காண முன்வருமா? அல்லது உலக நாடுகளுடன் இணைந்து புதியதொரு அரசியல் தீர்வை முன் எடுக்க வலியுறுத்துமா?

எதுவுமே முடிவாகத நிலையில் புலம் பெயர்ந்து வாழும் ஈழத் தமிழ் அகதிகள் தாயகம் திரும்புவது பற்றி எவ்வாறு முடிவு செய்ய முடியும்.

தாயகம் திரும்புமாறு அரசியல் தலைவர்களும் தொண்டு நிறுவனங்களும்,




அனைத்துலக மக்களும் ஆசை வார்த்தை பேசி இங்கு வாழும் தமிழ் அகதிகளை நாடு கடத்த முயல்வதும் நரகத்தில் தள்ளுவதும் ஒன்றல்லவா?

எனவே எமக்கு இரட்டைக் குடியுரிமை, பயண ஆவணம், ரேசன் அட்டை, போன்றவற்றைப் பெறுவதற்கும் இங்கு நாம் சுதந்திரமாக வாழ்வதற்கும் வழிவகை செய்யுமாறு அனைவரையும் வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம்

## குறிப்பு:

மக்களை அகதி என்ற நிலையில் இருந்து குடியுரிமை கொடுத்தாலும் முகாம் வாழ் மக்களுக்கான கொடுப்பனவுகள் மற்றும் குடியிருப்பு வசதிகளையும் ஐநா சபையும் தொண்டு நிறுவனங்களும் அனைத்துலக மக்களும் செய்து கொடுக்க வேண்டும்.

அவர்களின் இன்னல்களைப் போக்கி நட்டாற்றில் விட முடியாது அவர்கள் தங்கள் வாழ்வாதாரத்தைப் பெருக்கும் வரை கொடுப்பனவுகள் கொடுக்க வேண்டும்.

இந்திய அரசாங்கத்திடம் இதை வலியுறுத்தல் ஆகாது ஏனெனில் 125 கோடி மக்கள் வாழ்கிறார்கள் வறுமைக் கோட்டிற்கு உட்பட்டவர்களும் உள்ளார்கள் ஆகையால் இதனை ஐநா அகதிகள் ஆணையம் முன்நின்று (சுமார் இரண்டரை லட்சம்) புலம் பெயர்ந்து வாழும் மக்களின் துயரினைத் துடைத்து அவர்களின் வாழ்விற்கும் வழிகாட்டவேண்டும் என கேட்டுக்கொள்கிறோம்.

இந்திய அரசு எதிர்நோக்க இருக்கும் ஆபத்தும் அவர்கள் கொடுத்த ஆதரவும்

இலங்கைத் தமிழர் பிரச்சனை இந்திய அரசு நன்கு அறிந்தது. இந்திய அரசு ஏற்றுக்கொண்டது. தமிழர்களின் விடுதலைப்போராட்டத்தை இந்திய அரசு ஆதரித்தது.

விடுதலைப் போரின் போது பூமாலை ஆபரேசன் மூலம் விமானத்தில் உணவுப் பொட்டலங்கள் போட்டு உதவியது. இந்திய இலங்கை ஒப்பந்தம் இயற்றியது. அமைதிப் படையையும் அனுப்பி வைத்தது எனினும் நடைப்பெற்ற காப்புணர்வுகளால் தமிழர்களின் நிலையை கண் காணமல் உள்ளார்கள்.

இலங்கைத் தமிழர்களின் மீதான ஒடுக்குமுறையை எதிர்த்து, தடுத்து அவர்களின் உரிமையை தமிழ் ஈழத்தைப் (தனிநாடு) பெற்றுக் கொடுக்க முன்வரவேண்டும்.

தற்போது தமிழர் பகுதியில் சிங்களக் குடியேற்றம் நடைபெறுகிறது. அது மட்டுமல்லாமல் இலங்கையில் பெரும் பரப்பளவு சீனாவிற்கு தாரை வார்த்தும் கொடுக்கப்பட்டுள்ளது.

தற்பொழுது சீனா கொழும்பில் அவர்களுக்கென பெரிய துறைமுகமும் சொகுசு விடுதியும் அமைத்துக் கொண்டு உள்ளார்கள்.

அத்தோடு அம்பாந்தோட்டையில் சீனக் குடியேற்றமும் விமான நிலையமும் அமைக்க உள்ளார்கள்.

மக்கள் தொகை அதிகமாக உள்ள சீனர்கள் இலங்கையில் பல்கிப் பெருகினால் அங்கிருக்கும் தமிழருக்கும் அவல நிலை தான் இந்த நிலை நீடித்தால் அடுத்து அவர்களின் பார்வை திருகோணமலைத் துறைமுகம் மீது திரும்பியுள்ளது. அதைக் கைப்பற்றினால் அவர்களின் பண்முகப் பார்வை ஓங்கும். இந்தியாவின் கடல் பிராந்தியப் பாதுகாப்பு (கேள்விக் குறியாகும்?) பாதிக்கப்படும்


இது போன்ற நிலை ஏற்படாமல் தடுத்து அங்கு வாழும் தமிழ் மக்களுக்கு ஆதரவும் முன்னெடுக்க வேண்டும்.

உலக நாடுகளுடன் இணைந்து தமிழர்களுக்கு தமிழீழத்தை பெற்றுக் கொடுத்து அவர்களுடைய வாழ்விற்கு வழிகாட்டியாக விளங்க வேண்டும்.

இதன் மூலம் இத்தகைய பாதுகாப்பு இன்மையைத் தடுத்து என்றும் இந்தியா வல்லரசாகவே வாழ்வதற்கு ஈழத் தமிழர்கள் உறுதுணையாக இருப்பார்கள் என்பது உறுதி.

இதை இந்திய அரசும், அரசு அதிகாரிகளும் அறிந்திருப்பார்கள் எனினும் மக்களின் விழிப்புணர்ச்சிக்கும் பாதுகாப்பிற்குமாய் தமிழகத்தில் வாழும் புலம் பெயர் தமிழராய் இதைத் தெரிவிக்கின்றோம்.








**தோழர்.**
**கே.ஆர்.எஸ். மணி**

# மாக்சிய நோக்கில்



பிரிட்டிஷ் அரசாங்கம் இந்தியாவில் காலூன்றிய போது, அது தனது வர்த்தகத்தை அபிவிருத்தி செய்து கொள்ளவும், அது தங்கு தடையின்றி நடக்கவும், அதனுடைய சட்ட வடிவங்கள் இங்கு நிலை நாட்டப்படவும் அதற்கான நிர்வாக இயந்திரத்தை இந்தியாவில் கொண்டு வந்தது. அதற்கு சேவகம் செய்வதற்கான எல்லா துறைகளும், இங்குள்ள ஏழை மக்கள் மூலமாக பயன்படுத்தப்பட்டது.

அப்போது எதுவெல்லாம் அவன் நிர்வாகத் திற்குத் தடையாக இருந்ததோ அதையெல்லாம் தன்வயப்படுத்திக் கொண்ட பிரிட்டிஷ் அரசு அதை தனக்கு தோதான முறையில் மெல்ல மெல்ல மாற்றி அமைத்தது. அது முதன் முதலில் கல்வியில் தொடங்கி கணக்கன் முதல் பணியாளன் வரை மாற்றி அமைக்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாக நமது கலாச்சாரம், பண்பாடு, மொழி, மதம், கிராமப்புற கலைகள் யாவும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை நோக்கி மாற்றப்பட்டது. அதில் நமது விளையாட்டு களான கபடி, கால்பந்து, மட்டைப் பந்து போன்ற வீர விளையாட்டுக்கள் கூட மெல்ல, மெல்ல சிதைக்கப்பட்டு கிரிக்கெட் போன்ற ஏகாதிபத்திய கலாச்சாரம் சார்ந்த விளையாட்டுகள் புகுத்தப்பட்டது. அது போலவே நமது கிராமப்புற கலாச்சாரத்தின்





வேராக இருந்த ஜல்லிக்கட்டு கூட நாளடைவில் மறக்கப்பட்டு, விலங்கினங்கள் வரிசையில் நாட்டு மாடுகளும், பசுக்களும் கூட ஏகாதிபத்திய பாலினங்கள் மூலமாக நமது தேசிய காளை இனங்கள் அழிக்கப்பட்டது.

ஜல்லிக்கட்டு, எனது வாழ்வின், கலாச்சாரத்தின், பண்பாட்டின் அடையாளம் என்ற கோஷத்தோடு புறப்பட்ட, 20க்கும் 30க்கும் இடைப்பட்ட வயதையுடைய இளைஞர்கள், மாணவர்கள், யுவதிகள், பெண்கள் எல்லோரும் கூடி, அகன்று விரிந்த மெரினாவின் மென்மையான மணலில் அமர்ந்து ஆர்ப்பரிக்கும் கடல் அலையின் வேகத்துக்கு இணையான உணர்ச்சி பெருக்கினை வெளிப்படுத்திய மௌனப்புரட்சி இது. உலகின் வரலாற்றில் உன்னதமான மௌனப் புரட்சியை நடத்தி முடித்த இளைஞர்களும், மாணவர்களும் இந்த சமூகத்துக்கு விட்டுச் சென்ற கேள்வி எது?

ஏன் இந்த ஆர்ப்பாட்டம்? எதனால் உந்தப்பட்டது இந்த எழுச்சி? வெறும் ஜல்லிக்கட்டு மட்டும் தானா? அவ்வாறாயின் ஜல்லிக்கட்டு போராட்டம் பற்றி அறிந்த உடனே பலதரப்பட்ட, அறிவு ஜீவிகளாலும், உழைக்கும் மக்களாலும், வணிக பெருமக்களாலும், கலைஞர்களாலும் அந்த ஆறு நாட்களாகவும் தொடர்ந்து அரவணைக்கப்பட்டு ஆதரித்தார்களே அது வெறும் ஜல்லிக்கட்டு என்ற ஒரு கோஷத்துக்குத்தானா? இல்லை என்பதே அந்த போராட்டத்தின் ஒருமித்த வெளிப்படாக இருந்தது. அதில் தமிழ்ச் சமூகம் தமிழர் பண்பாடு, தமிழர் உரிமை, தமிழர் விடுதலை போன்ற கோஷங்கள் ஒலித்தனவே. அது எந்த உணர்வின் வெளிப்பாடு? அது அடக்கப்பட்டவரின் குரலாக கேட்கவில்லையா?

இரு ஒரு சுதந்திர வேட்கையாக உணரப்படவில்லையா? ஒரு குழந்தை தன் தாயின் மடியில் உணரும், சுகம், பால் சுதந்திரம், அரவணைப்பு, பாதுகாப்பு, இத்தனையும் உள்ளடக்கிய ஒரு இன்பத்தை பெறுவது போல், மாணவர்கள் தங்கள் சமூகத்தில் தங்களுக்கு வேண்டிய, உரிமை, சுகம், பாதுகாப்பு, சுதந்திரம் இல்லையென உணர்ந்ததின் வெளிப்பாடே இந்த உணர்வு வழியான போராட்டம்.

வரலாற்றில் விடுதலையை பெற்றுத் தந்தவர்கள் எல்லோரும் இளைஞர்களே, அவர்கள் கவிதை வடிவிலும், நாடக வடிவிலும், எழுத்து வடிவிலும், போராட்ட வடிவிலும் கிளர்ச்சி, எழுச்சி என்ற எண்ணற்ற வடிவங்களில் இணைந்து வெற்றியை எட்டியவர்கள் தான். ஜல்லிக்கட்டு போராட்டத்தில் இணைந்த மாணவர்கள், இளைஞர்கள் தங்களின் போராட்டத்தில் அரசியல்வாதிகளையும், அரசியல் கட்சிகளையும் அனுமதிக்கவில்லையே ஏன்? பேயைக் கண்டார் போல அச்சம் தரும் அரசியல்வாதிகளை மாணவர்கள் கண்டனர்.

கடலில் தூக்கி எறிந்தாலும் கட்டுமரமாய் இருந்து உழைப்பேன் என்ற வரையும், மக்களால் நான் மக்களுக்காக நான், உங்களால் நான் உங்களுக்காகவே நான் என்று சொன்ன புரட்டுத் தலைவர்கள் மேல் நம்பிக்கை இழந்துதானே அரசியல்வாதிகளை போராட்டத்தில் அனுமதிக்கவில்லை.

தேசத்தின் விடுதலைக்கும், தேசியத்தின் உரிமைகளுக்குமான போராட்ட வடிவங்கள் வேறு வேறானவை,

இந்த நிலையில் நாம் சைமன் பொலிவார் அரசியலையும், லெனின், மாவோ, காஸ்ட்ரோ போன்ற இளவயது போராளிகள் அரசியலையும், அவர்தம் நடைமுறைகளையும் பார்க்க வேண்டி உள்ளது.

30, 35 வயதுக்குட்பட்ட காலங்களில் காஸ்ட்ரோ, சேகுவேரா, பிரபாகரன் போன்றவர்கள் வீரச்செறிந்த போராட்டங்களை முன் எடுத்தனர். 30, 35 வயதுக்குட்பட்ட பகத்சிங் போராடினார். 35 வயதில் மகாகவி வீரச் செறிந்த பாடல் மூலம் போராடினார். வீரச் செறிந்த வர்க்கப் போராட்டத்துக்கு வடிவம் கொடுத்த பாட்டாளி வர்க்க அறிக்கை கூட 30 -35 வயதை ஒத்த மார்க்சும், ஏங்கல்சும் எழுதியது. இன்றளவும் அது





உயிர்ப்புடன் உள்ளது. இந்த வீரம் செறிந்த தத்துவம் திருக்குறளுக்கு பொழிப்புரை எழுதுவதைப் போல கம்யூனிஸ்டுகளும், மற்ற இடதுசாரி சிந்தனையாளர்களும் அதை கையிலெடுத்து மழுங்கடித்து வருகின்றனர்.

மாற்றம் நிலையானது. மாறாதது எதுவும் இல்லை என்ற கோட்பாட்டை மறந்து மக்களுக்கான சனநாயகத்துக்கு எதிராக, பாராளுமன்ற சனநாயகத்தை தூக்கி நிறுத்தும் கம்யூனிஸ்டுகள் மாறவேயில்லை. படை ஒன்று இல்லையெனில், தடை ஒன்று உடைக்கப்பட முடியாது. சுகப்பிரசவமேயோனாலும் இரத்தம் சிந்தாமல் நடப்பதில்லை.

மக்களிடம் செல்லாமல் மாற்றம் என்பது இல்லை. உழைப்பவனிடமிருந்து, உழைப்பை மாற்றத்துக்கான மூலதனமாக மாற்றாமல், மடைமாற்றம் செய்து ஓட்டுப் பெட்டிக்குள் தலைகுனிய வைத்த அரசியல் வாதிகளோடு, கம்யூனிஸ்டுகளும் கைகோர்த்தார்கள். அதனால் நல்லவர்களும், தூய்மையான போராளிகளும் கூட மக்களிடம் செல்ல முடியவில்லை.

மக்களுக்கு எதிராக அரசியல் செய்யும் அறிவு ஜீவிகள் மக்களை சாதிய ஏகாதிபத்தியம் பேசி சாதித் தலைவர்களாக வலம் வருகிறார்கள். அவர்கள் புரட்சி பேசுகிறார்கள். சாதி என்பதை அடையாளம் காட்டியவனோடு சேர்ந்து கொண்டே சாதி தலைவர்கள் பள்ளன், பறையன், சக்கிலி என்ற பெயர்கள், அருந்ததியர், ஆதி திராவிடர், தேவேந்திர குல வேளாளர்கள் என்று சொல்லிக் கொள்வதில் பெருமைப்பட்டு சாதிய தலைவர்கள் குறுநில மன்னர்களாக மாறிவிட்டனர். ஆதலால் அவர்களையும் இந்த தை புரட்சி தடை செய்தது.

ஒரு வீரம் செறிந்த தத்துவம் மக்கள் மத்தியில் புழங்கவில்லை. மாறாக வறண்ட பாலைவனத்தை நோக்கி பயணிப்பது போல உள்ளது. அவரவர்கள் புரிந்து கொண்டது போல வழித்தடங்களும் அமைகின்றன. மக்கள் உரிமைக்கான போராட்ட வடிவங்களை திசை திருப்பும் வேலை நடைபெறுவது போல தெரிகிறது.


இதயமற்ற உலகில் இதயமாக இருப்பது மதம். இதயத்தின் மென்மையான துடிப்புகளை அழித்துவிட்டு மார்க்சீய பக்தியினால் மக்களை பலவீனப்படுத்துகிறீர்களா? என்பது கேள்வியாகிறது. அப்படியானால் சற்று விலகி நில்லுங்கள். ஏழை மக்களுக்காக இதய பூர்வமாக உழைப்பவனே, மாற்றத்தை நோக்கி பயணிக்க முடியும். சமூகத்தில் பிறப்பு சமமானது. ஆனால் அது வளரும் சூழல் வேறாக உள்ளது. அப்படியாயின் அதிலேயிருந்து மால்வதை போன்ற ஒரு பயங்கரம் வேறு எதுவும் இல்லை. ஏழ்மையிலும், அறியாமையிலும் இருக்கும் மக்கள் நலனுக்கான போராட்டத்தை அனுதாப உணர்வோடு மறுபரிசீலனை செய்யுங்கள். வாங்குபவனும், கொடுப்பவனும் சமநிலையில் வாழ வழிகாணுங்கள். அனுதாப உணர்வுடன் கரம் நீட்டாதீர்கள். அது புரட்சியை, மாற்றத்ததை ஒத்திப் போடும்.

மிலேச்சன் என்ற வார்த்தையின் ஆழம் இன்னும் நாடெங்கும் வியாபித்துள்ளது. இதில் இருந்து, இந்தியாவின் வீழ்ச்சி, நிமிர்ந்து எழ முடியவில்லை. மிலேச்சனின் புழுங்கும் இடம் சுதந்திர இந்தியாவில் இன்னும் ஒரு வட்டத்துக்குள்ளேயே உள்ளது. (மிலேச்சன் என்ற வார்த்தை இந்து அல்லாதவன், ஏழை இந்து என்று பொருள் படுக)

பணக்காரனுக்கு சேவகம் செய்து அவனி டம் ஆதரவு கேட்டு, அவனையே தெங்கிக் கொண்டிருப்பது வேசியின் நடத்தைக்கு ஒப்பானது என்று விவேகானந்தர் சொல் கிறார். அது போலவே மக்களுக்கு எதிரான சனநாய கத்தை தாங்கிப் பிடித்துக் கொண்டு, மக்களுக்கு சேவகம் செய்வதென்பது வேசித்தனமானது விவேகானந்தர் சொல்லியது போல.

சரி இனி நாம் தொடங்கிய இந்த மௌனப் புரட்சி, தாயின் வயிற்றில் வளரும் கருவைப் போல. எரிதனலில் சூடாகும் நீரைப் போல கொதிக்கின்ற காலமாகவும், பிரசவிக்கத் தேவையான காலமாகவும் உள்ளது. ஆனால் கொதிக்கின்ற காலத்தில் பிரசவிக்கின்ற புரட்சி மக்களுக்கானது. அது இளைஞர்கள், மாணவர்கள் அனுபவம் முதிர்ந்த மக்கள் தலைவர்களால் வென்றேடுக்கப்படும்.

நீருபூத்த நெருப்பாக அடிதனழலில் கனன்று கொண்டிருக்கும் கங்குகள் போல் இளைஞர்கள், மாணவர்களின் தமிழ் தேசிய விடுதலையும் தமிழ் மக்களுக்கான இறையாண்மையும் சேர்ந்தே இருக்கிறது.



தோழர் தியாகு




# தமிழ் மக்களின் சல்லிக்கட்டு உரிமைப் போராட்டமும் தமிழீழமும்

தமிழ் மக்களின் பண்பாட்டு அடையாளங்களில் ஒன்றும், பாரம்பரியமான வீர விளையாட்டுமாகிய சல்லிக்கட்டு பொங்கல் திருநாளின் ஓர் அங்கமாகவே பல்லாண்டு காலமாக நடத்தப்பட்டு வருகிறது. அண்மைய ஆண்டுகளில்தான் விலங்குநல ஆர்வலர்களின் தலையீட்டால் முதலில் உயர் நீதிமன்றமும், பிறகு உச்ச நீதிமன்றமும் சல்லிக்கட்டுக்குக் கட்டுப்பாடுகளும், பிறகு தடையும் விதிக்கலாயின. தமிழக அரசைப் பொறுத்த வரை நீதிமன்றத்திலும் அரசியல் அரங்கத்திலும் எப்போதுமே சல்லிக்கட்டுக்கு ஆதரவாகத்தான் நிலையெடுத்து வருகிறது. இந்திய அரசு குறித்து இப்படித் திட்டவட்டமாகச் சொல்ல முடியாது.

*காங்கிரசாட்சிக் காலத்தில்தான் 2014ஆம் ஆண்டு காட்சிப்படுத்தக் கூடாத விலங்குகள் பட்டியலில் காளை மாடு சேர்க்கப்பட்டு, அதைக் காரணமாகக் காட்டித்தான் உச்ச நீதின்றம் சல்லிக்கட்டுக்குத் தடைவிதித்தது. பாரதிய சனதாக் கட்சி தலைமையிலான நடுவணரசு சல்லிக்கட்டுத் தடைக்குரிய இந்தக் காரணத்தைக் களையாமலே, சல்லிக்கட்டு என்பது கலாச்சாரம், மதம் தொடர்பானது என்று சொல்லி சல்லிக்கட்டுத் தடைக்கு எதிராக வழக்காடிக் கொண்டிருந்தது.*

சல்லிக்கட்டு தமிழினத்துக்குரியதே தவிர, இந்து மதத்துக்குரியதோ பாரதப் பண்பாட்டுக்குரியதோ அன்று. இந்த உண்மையை ஏற்றுக் கொள்ள இந்துத்துவ, பார்ப்பனிய, பாரதிய ஆற்றல்களுக்கு மனமில்லை. சல்லிக்கட்டு கி.மு. 2000 வாக்கிலேயே விளையாடப்பட்டது என்று ஆய்வாளர்கள் கருதுகிறார்கள். சிந்து வெளி நாகரிகத்திலும் இதற்கான சான்றுகள் கிடைத்துள்ளன. திணைவழிச் சமூகத்தில் முல்லைத் திணைக்குரிய பண்பாட்டு அடையாளங்களில் ஒன்றாக ஏறுதழுவல் இருந்தது.

**“கொல்லேற்றுக் கோடஞ்சுவானை மறுமையும்**

**புல்லாளே ஆயமகள்”**

என்பது கலித்தொகையில் வரும் முல்லைக் கலிப் பாடல். ஏறுகோள், சல்லிக்கட்டு, மஞ்சு விரட்டு யாவும் இதன் பல்வேறு கிளை வடிவங்களே. கால்நடை வளர்ப்பு, உழவு என்ற பொருளாக்க அடித்தளத்துக்கு உரியவாறு காளையை அடக்குதல், பழக்குதல் என்ற தேவைக்குப் பொருத்தமாக இந்த விளையாட்டு பிறந்து வளர்ந்திருக்க வேண்டும். இந்து என்ற சொல் பிறப்பதற்கு ஈராயிரத்துக்கு மேற்பட்ட ஆண்டுகள் முன்பே சல்லிக்கட்டு பிறந்து விட்டது.

காங்கிரஸ் ஆனாலும், பா.ச.க. ஆனாலும் தமிழ்ப் பண்பாடு என்ற எண்ணமே அடிமனத்தில் கசப்பதால்தான், சல்லிக்கட்டு உரிமையை உளமார ஆதரிக்க முடியவில்லை. அரசியல் காரணங்களுக்காக ஆதரிக்க நேரிட்டாலும் அதற்கு இந்து, பாரதம் என்றெல்லாம் இல்லாத பொல்லாத காரணங்களைச் சொல்லிக் கொள்கின்றனர். இந்தியத் தேசிய மயக்கமுடைய அனைவருக்குமே சல்லிக்கட்டு என்றால் தயக்கம்தான். தமிழ்த் தேசியப் பிடிப்பு இல்லாதவர்கள் அனைவருக்குமே சல்லிக்கட்டை ஆதரிப்பதில் நெருடல் உண்டு.

சல்லிக்கட்டைப் பிரபுத்துவ, சாதியப் பண்பாடு என்று கருதி எதிர்ப்பவர்களும் உண்டு. பகுத்தறிவு நோக்கில் எதிர்ப்பவர்களும் உண்டு. சல்லிக்கட்டைப் பிரபுத்துவ, சாதியப் பண்பாடாகப் புரிந்து கொள்வது வரலாற்று இயங்கியல் பார்வை அன்று. பிரபுத்துவம், சாதியம் தலையெடுப்பதற்கு முன்பே திணைவழிச் சமூகத்தில் முல்லைத் திணைக்குரிய பண்பாட்டு அடையாளமாக ஏறுதழுவல் இருந்ததெனவும், சிந்துவெளி நாகரிகத்தில் இதற்கு இடமிருந்தது எனவும் கண்டோம்.

இடையில் வந்த பிரபுத்துவம், சாதியம் அதே போல மதமும் இந்தத் தமிழர்ப் பண்பாட்டில் நுழைந்து விட்டது. சமூகநீதிப் பண்பாடு இந்த நுழைவை எதிர்த்துப் போராட வேண்டுமே தவிர, மக்கள் பண்பாட்டை மறுதலிக்கக் கூடாது. இன்றும் சல்லிக்கட்டு சாதிக்கட்டாகவே இருக்குமானால் அந்த சாதிக்கட்டுகளை அறுக்க வேண்டுமே தவிர, சல்லிக்கட்டை தில்லிக்கட்டுக்குள் விட்டு விடக் கூடாது.



முதலியம் வளர்ந்து உலகமயமாகி விட்ட இந்தக் காலத்தில் மாட்டு விளையாட்டா? என்று பகுத்தறிவுக் கேள்வி கேட்பவர்களும் உண்டு. சமூக அடித்தளமான பொருளாக்க முறைக்கும் மேற்கட்டுமானமாகிய பண்பாட்டுக்குமான உறவை நெகிழ்வற்ற நேர்கோட்டுறவாகப் புரிந்து கொள்ளும் கொச்சைப் பொருள்முதல் பார்வையின் விளைவு இது. வாழ்நிலை உணர்வுநிலையைத் தீர்மானிக்கிறது என்ற அடிப்படை உண்மையை வைத்து, பொருளாக்க முறை ஒரு சுரப்பியைப் போல் பண்பாட்டைச் சுரப்பதாகப் புரிந்து கொள்ளக் கூடாது. பொருளாக்க முறைக்கென்று தனியாக ஒரு வரலாறு இருப்பது போல், அரசியல், பண்பாடு, இலக்கியம் என்று ஒவ்வொரு துறைக்கும் தனித்தனியாக வரலாறு உண்டு. மேற்கட்டுமானத் துறையிலான நிகழ்வு ஒவ்வொன்றையும் பொருளாக்க முறையின் அடிப்படையில் விளக்கும் முயற்சியை எதிர்த்து பிரெடெரிக் எங்கெல்ஸ் தமது இறுதி எழுத்துக்களில் நிறையவே எழுதியுள்ளார்.

பண்பாட்டு வளர்ச்சிக்குப் புற ஏரணம் போலவே அக ஏரணமும் உண்டு. இன்ன விளையாட்டு இன்ன சாதிக்கு என்ற இயங்காவியல் பார்வை வர்க்கச் சுருக்கவாதம் போல் சாதிச் சுருக்கவாதமே. மற்றவற்றை போலவே பண்பாடும் தேங்கி நிற்கும் குட்டையல்ல. அது பாய்ந்தோடும் ஆறு போன்றது. திணைவழிச் சமூகத்தில் பெரும்பாலும் முல்லைத் திணைக்குரிய ஆயர் விளையாட்டாக இருந்த ஏறுகோள்,

ஏறுதழுவல் அல்லது சல்லிக்கட்டு, சாதியச் சமூகத்தில் பெரும்பாலும் படைச் சாதிகளின் விளையாட்டாயிற்று. இப்போதும் அதற்கு ஓரளவு முல்லைநிலச் சார்பு இருக்கக் காணலாம். முதலிய வளர்ச்சியும், அதற்குரிய சமூகநீதிப் போராட்டமும் இந்த விளையாட்டின் சாதித் தளைகளை அறுப்பதற்கேற்ற அடிப்படையை ஆக்கித் தந்துள்ளன.

கோமான்களின் கிரிக்கெட் இப்போது தெரு விளையாட்டாக வந்து விட்டதல்லவா? தானாக வராதென்றால் வரச் செய்வதுதானே நம் வேலை? கோயிலுக்குப் போவதா? வேண்டாமா? என்பது வேறு. அனைவர்க்கும் கோயில் நுழைவு உரிமை வேண்டுமா? வேண்டாமா? என்பது வேறு. சல்லிக்கட்டு என்ற விளயாட்டு தேவையில்லை என்று கருதக் கூடிய அனைவரும் இன இரண்டகர்கள் என்று நான் நினைக்கவில்லை. அந்தக் கருத்தைச் சொல்லவும் பரப்பவும் அவர் களுக்கு உரிமை உண்டு. அதே போல் சல்லிக் கட்டு வேண்டும் என்பவர் களின் உரிமையையும் சல்லிக்கட்டு எதிர்ப்பாளர்கள் ஆதரிக்க வேண்டும். மெரினா முதல் அலங்கா நல்லூர் வரையிலான போராட்டம் இந்தப் பாடத்தைக் கற்க விரும்பும் அனைவர்க்கும் கற்றுக் கொடுத்துள்ளது.

மாட்டோடு மனிதன் ஏதோ ஒருவகையில் விளையாட்டாகக் கூட பொருதுவது பகுத்தறிவின் பாற்பட்டதுதானா? என்று கேட்கப்படுகிறது. பகுத்தறிவின் பாற்பட்டு இன்னும் சில கேள்விகளும் கேட்டுப் பார்க்கலாம். நடுகல் வழிபாடு என்ற தமிழர் பண்பாடு பகுத்தறிவின் பாற்பட்டதுதானா? மாவீரர்கள் துயிலும் இல்லம் என்பதும், அங்கு மலர் தூவுவதும், சுடர் ஏற்றுவதும், சூளுரைப்பதும் எப்படி? பெரியார் உட்பட தலைவர்களுக்குச் சிலை வைப்பதும், சிலைகளுக்கு மாலை அணிவிப்பதும் எப்படி? பகுத்தறிவுக்கு அடிப்படை அறிவியல். வெறும் இயற்கை அறிவியல் மட்டுமன்று, சமூக அறிவியலும்தான். பண்பாட்டைப் புரிந்துகொள்ள இயற்கை அறிவியல் போதாது, சமூக அறிவியலும் வேண்டும். சமூக அறிவியலை சமூக வளர்ச்சி விதிகளையும், மனித குல முன்னேற்றத்தில் பண்பாட்டின் பங்கையும் அறிந்தேற்றுக் கொள்ளும் போதுதான் மக்களின் பண்பாட்டுத் தொன்மங்களிலும் அடையாளங்களிலும் உள்ளடக்கமாக இருக்கும் வாழ்க்கையை ஊடுகாணவும் உள்நுழைந்து மாற்றம் காணவும் இயலும்.

# வெற்றிப் பட்டயம்!

சல்லிக்கட்டு உரிமைக்கான போராட்டத்தில் தமிழக மாணவர்கள் இளைஞர்கள் — மக்கள் அடைந்த வெற்றியின் ஆவணம் சனவரி 21ஆம் நாள் தமிழக ஆளுநரால் பிறப்பிக்கப்பெற்ற ‘அவசரச் சட்ட’மாகும். இதே சட்டம் 23ஆம் நாள் தமிழகச் சட்டப் பேரவையால் ஒருமனதாக இயற்றப்பட்டு முறைப்படியான சட்டமாகியுள்ளது.

இந்தச் சட்டம் குறித்துத் தமிழக அரசு வெளிப்படையாக விளக்கமளிக்கத் தவறியதால் ஏற்பட்ட குழப்பங்களை நாமறிவோம். போராட்டம் நடந்து கொண்டிருந்த போதே ஒரு தெளிவை ஏற்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டவர்களில் ஒருவன் என்ற முறையில் இதனை எழுதுகிறேன்.

சல்லிக்கட்டுக்கு இந்திய உச்ச நீதிமன்றம் விதித்த தடையைக் கடந்து சல்லிக்கட்டு நடத்த வேண்டுமானால், 1960ஆம் வருடத்திய இந்திய விலங்குவதைத் தடுப்புச் சட்டத்தில் திருத்தம் செய்தாக வேண்டும். இந்தத் திருத்தத்தை இந்திய அரசு செய்யலாம், அல்லது, விலங்குநலம் பொது அதிகாரப் பட்டியலில் இருப்பதால், மாநில அரசும் செய்யலாம். அதாவது உரிய திருத்தச் சட்டத்தை இந்திய அரசு நாடாளுமன்றத்தில் முன்மொழிந்து நிறைவேற்ற வேண்டும். இல்லையேல் மாநில அரசு சட்டப் பேரவையில் முன்மொழிந்து நிறைவேற்ற வேண்டும். எப்படிச் செய்தாலும் குடியரசுத் தலைவர் ஒப்புதல் பெற வேண்டும் என்பது வேறு செய்தி.

எனவேதான் சல்லிக்கட்டு உரிமை மீட்புக்கான நமது கோரிக்கை இந்திய அரசு விலங்குவதைத் தடுப்புச் சட்டத்துக்குத் திருத்தச் சட்டம் கொண்டுவர வேண்டும் என்பதாயிற்று. இந்திய அரசு இப்படிச் செய்ய முன்வராத நிலையில் தமிழக அரசே சட்டப் பேரவையை கூட்டித் திருத்தச் சட்டம் கொண்டுவருமாறு கேட்டோம். இந்திய அரசோ தமிழக அரசோ இப்படி எதுவும் செய்யாமல் காலங்கடத்திக் கொண்டு உச்ச நீதிமன்றத்தின் பக்கமே கைகாட்டிக் கொண்டிருந்தன.

அந்த நேரம் நாடாளுமன்றமோ தமிழகச் சட்டப் பேரவையோ அமர்வில் இல்லாததால் முறையான மன்றச் சட்டத்துக்கு மாற்றாக ‘அவசரச் சட்டம்’ இயற்றக் கேட்டோம். போராட்டத்தின் அழுத்தத்தால் தில்லி சென்ற தமிழக முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் இந்தக் கோரிக்கையை

**குதிரை மனித வாழ்வில் முகாமைப் பங்கு வகித்துள்ள நாடுகளில் குதிரை உழவும் குதிரை வண்டியும் வழக்கொழிந்த பிறகும் குதிரைப் பந்தயம், குதிரையேற்றம் போன்றவை கேளிக்கையாகவும் விளையாட்டாகவும் தொடர்ந்து நீடிப்பதில் தேடாத பகுத்தறிவை... மாட்டு வண்டியும் மாட்டு உழவும் இன்னும் அடியோடு வழக்கொழியாத தமிழ்நாட்டில் சல்லிக்கட்டு நீடிப்பதில் மட்டும் தேடுவது ஏனோ?**



மக்களின் பண்பாட்டிலும் பாரம் பரியத்திலும் மாற்றம் வேண்டுமென்றால் அது மக்களிடமிருந்து வர வேண்டுமே தவிர அரச எந்திரத்திடமிருந்து வருவதை ஏற்க முடியாது. பொதுநலன் கருதி ஒழுங்குபடுத்தலாம், ஒழுங்குபடுத்தவும் வேண்டும். தடை செய்வது பண்பாட்டு ஒடுக்குமுறையே தவிர வேறன்று.

சல்லிக்கட்டுக்கான தடையை நீக்க வேண்டுமென்றால் சட்டப்படி அதற்குரிய நேர்வழி 1960ஆம் ஆண்டு இயற்றப்பட்ட விலங்குவதைத் தடுப்புச் சட்டத்தில் உரிய திருத்தங்கள் செய்வதுதான். இதைச் செய் வதற்கு வழிதேடாமல் "இந்த ஆண்டு சல்லிக் கட்டு உறுதியாக நடைபெறும்" என்று திரும் பத் திரும்ப சத்தியம் செய்தே நடுவண் அமைச்சர் பொன். இராதாகிருட்டிணன் கேலிப்பொருளாகிப் போனார்.

இந்திய அரசமைப்புச் சட்டம் விலங்குநலம் என்பதைப் பொது அதிகாரப் பட்டியலில் வைத்திருப்பதால் விலங்குவதைத் தடுப்புச் சட்டத்தில் திருத்தம் கொண்டுவர மாநில அரசும் முயற்சி எடுக்கலாம். அப்படி எதுவும் செய்யாமல் மாநில அரசும் கடமை தவறியது என்பதே மெய். ஆனால் இந்த ஆண்டு சல்லிக்கட்டு நடைபெறும் என்று தமிழக அரசும் நம்பிக்கை ஊட்டிக் கொண்டே இருந்தது. உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கும், அது சல்லிக்கட்டுத் தடையை நீக்குவதாக இருக்கும் என்ற நம்பிக்கையே இதற்கெல்லாம் அடிப்படை. இருக்கிற சட்ட நிலவரத்தையும்இ உச்ச நீதிமன்றத்தின் கடந்த

வலியுறுத்திய போது இந்தியத் தலைமையச்சர் மோதி மறுத்து விட்டார். இந்தக் கட்டத்தில்தான் மாநில அரசே 'அவசரச் சட்டம்' இயற்றலாம் என்ற கருத்தைத் தமிழக அரசு ஏற்றது. உடனே சட்டம் வரையப்பட்டு, தொடர்புடைய நடுவணரசு அமைச்சகங்களின் இசைவு பெறப்பட்டு, குடியரசுத் தலைவரின் ஒப்புதலும் பெறப்பட்டு, மறுநாளே தமிழக ஆளுனரால் பிறப்பிக்கப்பட்டது.

இது சல்லிக்கட்டு உரிமைக்கான போராட்டத்துக்குக் கிடைத்த முழுமையான வெற்றி. ஆனால் இந்த வெற்றியை அறிந்தேற்று போராட்டத்தை நிறைவு செய்வதற்கு மாறாக நீட்டிச் சென்றதற்கு சட்ட அறியாமைதான் முக்கியக் காரணம். அரசு இந்த அறியாமையைப் போக்க முயலாத நிலையில் போராட்டக்காரர்கள் பலரும் "அவசரச் சட்டம் வேண்டாம், நிரந்தரச் சட்டம் வேண்டும்" என்று குரல் கொடுக்கலாயினர்.

'அவசரச் சட்டம்' என்றால் என்ன என்பதை அவர்கள் விளங்கிக் கொள்ளவில்லை என்பதே காரணம். Ordinance என்ற ஆங்கிலச் சொல்தான் அவசரச் சட்டம் என்று தமிழாக்கம் செய்யப்படுகிறது. இயல்புச் சூழலில் நாடாளுமன்றம் அல்லது சட்ட மன்றம்தான் சட்டமியற்றுவதற்குச் சரியான சனநாயக நிறுவனம். ஆனால் அந்த மன்றங்கள் கூடாமலிருக்கும் நேரத்தில் அவசரமாக ஒரு சட்டம் இயற்ற வேண்டி வந்தால் என்ன செய்வது? குடியரசுத் தலைவரோ ஆளுனரோ அமைச்சரவைப் பரிந்துரைப்படி ஆணை பிறப்பிப்பதன் வாயிலாக அச்சட்டத்தை இயற்றலாம், பிறகு ஆறு மாதம் என்பது போல் வரையறுத்த குறுகிய காலத்துக்குள் அதனை நாடாளுமன்றம் அல்லது சட்ட மன்றத்தில் முன்வைத்து முறையான சட்டமாக்கிக் கொள்ளலாம். அவசரத் தேவை கருதி பிறப்பிக்கப்படுவது என்பதால் அவசரச் சட்டம் என்று பெயர்பெற்று விட்டது.

ஆனால் ordinance என்ற சொல்லில் அவசரம் என்ற கூறு மருந்துக்கும் இல்லை. Ordinance என்றால் அரச கட்டளை என்று பொருள். எனவே ordinance என்பதை ஆணைவழிச் சட்டம் எனலாம். Legislation என்றால் மன்றவழிச் சட்டம், ordinance என்றால் ஆணைவழிச் சட்டம். சுருக்கமாக, மன்றச் சட்டம், ஆணைச் சட்டம் என்று வேறுபடுத்திப் பார்க்கலாம். மற்றபடி அவசரச் சட்டம், நிரந்தரச் சட்டம் என்று வேறுபடுத்திப் பேசுவதற்கு அடிப்படை ஒன்றுமில்லை. அவசரச் சட்டம், நிரந்தரச் சட்டம் என்று

ஆளாளுக்குப் பேசப்போய், வல்லுநர்களும் இதே ‘மக்கள் மொழி’யில் பேசத் தொடங்கி விட்டார்கள். இது குழப்பத்தைக் குறைக்கப் பயன்படவில்லை.

சட்ட மன்றத்தால் நிறைவேற்றப்படாத சட்டம் என்பதால் ஊராட்சி பிறப்பிக்கும் சட்டத்தை ordinance என்று சில நாடுகளில் அழைக்கின்றனர். அதாவது சட்டம் பிறப்பிக்கப்படுகிற முறையைப் பொறுத்தே அதற்கு இந்தப் பெயர் வருகிறது.

சனவரி 19 அறிவிக்கப்பட்டு, 20 குடியரசுத் தலைவர் ஒப்புதல் பெற்று, 21 ஆளுனரால் பிறப்பிக்கப்பட்ட சல்லிக்கட்டு உரிமைக்கான ஆணைச் சட்டம் 23 மாலை சட்டப் பேரவையால் ஒருமனதாக ஏற்கப்பட்டு முறையான மன்றச் சட்டம் ஆகிச் செயலுக்கு வந்து விட்டது. இந்த வெற்றிக்கான பெருமை அறப்போரில் களங்கண்ட மாணவர்கள், இளைஞர்கள், மக்களைச் சாரும்.

ஆணைச் சட்டமாகப் பிறப்பிக்கப்பட்டு, முறைப்படி மன்றச் சட்டமாக மலர்ந்துள்ள சல்லிக்கட்டு உரிமைக்கான சட்டத்தின் முதன்மைக் கூறுகளைத் தெரிந்து கொள்வோம்.

விலங்குவதைத் தடுப்புச் சட்டம், 1960 — இந்தச் சட்டத்தின் சில பிரிவுகளைத் திருத்துவதுதான் இப்போதைய சட்டம். கடந்த 2014 மே 7ஆம் நாள் இந்திய உச்ச நீதிமன்றம் சல்லிக்கட்டுக்குத் தடைவிதித்த போது சுட்டிய காரணிகளைக் கவனித்துச் சரி செய்வதாக இந்தத் திருத்தச் சட்டம் உள்ளது. இவ்விதம் உச்ச நீதிமன்றம் விதித்த தடையை அது செயலிழக்கச் செய்கிறது. எப்படி என்று பார்ப்போம். மூலச் சட்டமான விலங்குவதைத் தடுப்புச் சட்டத்தில் திருத்தச் சட்டம் செய்யும் மாற்றங்களை ஒவ்வொன்றாகப் பார்ப்போம்:

1) திருத்தச் சட்டத்தின் நோக்கத்தைக் குறிப்பிடும் போது, தமிழ்நாட்டின் மரபு, பண்பாட்டு உரிமை என்ற வகையில் மட்டுமல்லாமல், நாட்டு மாடுகளின் நலத்துக்கும் காப்புக்கும் தேவை என்ற வகையிலும் சல்லிக்கட்டை வலியுறுத்துவது சிறப்பு.

2) சல்லிக்கட்டு என்பதற்கு இலக்கணம் வகுக்கும் வகையில் 2(இஇ) [ஆங்கிலத்தில் 2(dd)] என்ற புதிய பிரிவு சேர்க்கப்பட்டுள்ளது. சல்லிக்கட்டு என்பதில் மஞ்சுவிரட்டு, வடமாடு, எருதுவிடும் விழா ஆகியவையும் அடங்கும் என்று தெளிவுபடுத்தப்படுகிறது.

3) சல்லிக்கட்டு நடத்த விதிகள் வகுக்கும் அதிகாரம் தமிழக அரசுக்கு வழங்கப்படும் வகையில் பிரிவு 3 திருத்தப்பட்டு 3(2) என்ற புதிய பிரிவு சேர்க்கப்பட்டுள்ளது.

4) பிரிவு 11(3) என்பதில், சல்லிக்கட்டு என்பது விலங்குகளை வதைப்பதாகாது என்று கூறும் (ஊ) [ஆங்கிலத்தில்

*கால அணுகுமுறையையும் வைத்துப் பார்த்தல் இது மூட நம்பிக்கையே.*

*ஆனால் உச்ச நீதிமன்றம் உடனே தீர்ப்பு தர மாட்டோம் என்று கூறிக் கடைசி நேரத்தில் கழன்று கொண்டது. இந்திய அரசும் கைவிரித்து விட்டது. பொன்னார் மன்னிப்புக் கேட்டுக் கொண்டார், என்ன எதற்கு என்பதைத் தெளிவாகச் சொல்லாமலே! தமிழக அரசைப் பொறுத்த வரை, யாரும் தடையை மீறி சல்லிக்கட்டு நடத்தி விடாமல் தடுப்பதிதான் குறியாக இருந்தது. முதன்மையான சல்லிக்கட்டு மையங்களில் காவல் படை குவிக்கப்பட்டது.*

*மதுரை மாவட்டம் அவனியாபுரம் பகுதியில் சனவரி 14 பொங்கல் நாளில் சல்லிக்கட்டுக்காக நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின் மீது காவல்துறையினர் தடியடித் தாக்குதல் நடத்தினர். பலரும் காயமுற்றுக் கைது செய்யப்பட்டனர். அலங்காநல்லூரில் சல்லிக்கட்டு நடப்பதைத் தடுக்க வேண்டுமெனக் காவல்துறையினர் முற்றுகையிட்டுக் கெடுபிடி செய்தனர். வாடிவாசலை அடைத்து நின்றனர். இதனால் எந்த ஒழுங்குமுறையும் இன்றிச் சில காளைகள் அவிழ்த்து விடப்பட்டன என்றாலும், நல்வாய்ப்பாகக் கெடுநிகழ்வு ஏதும் நிகழாமற்போயிற்று.*



(ஈ)] என்ற கூறு சேர்க்கப்பட்டுள்ளது. அதாவது, கொம்பு அகற்றுதல், சூடு போட்டுப் பெயர், எண் எழுதுதல், மூக்கணாங்கயிறு போடுதல், இலாடமடித்தல், பலியிடுதல், உணவுக்காகக் கொல்லுதல், வண்டியிழுக்கச் செய்தல், ஏர் பூட்டுதல், காயடித்தல்... இவையெல்லாம் விலங்குவதையாகக் கருதப்பட மாட்டா என்பது போலவே சல்லிக்கட்டும் விலங்குவதையாகக் கருதப்பட மாட்டாது.

5) பிரிவு 22க்குச் சேர்க்கப்பட்டுள்ள விலக்கு விதி அப்பிரிவு சல்லிக்கட்டுக்குப் பொருந்தாது என்று தெளிவாக்குகிறது. அதாவது காட்சிப்படுத்தக் கூடாத விலங்குகள் பட்டியலில் காளையைச் சேர்க்கும் 11.07.2011 நாளிட்ட நடுவணரசின் அறிவிக்கை — எதைக் காரணமாகக் காட்டி சல்லிக்கட்டுக்கு உச்ச நீதிமன்றம் தடை விதித்ததோ அந்த அறிவிக்கை — சல்லிக்கட்டுக்குப் பொருந்தாமற் செய்யப்பட்டுள்ளது. (தமிழகத் திருத்தச் சட்டத்துக்குப் பின் இந்த அறிவிக்கையையே இந்திய அரசு விலக்கிக் கொண்டு விட்டது.)

6) விலங்குவதைத் தடுப்புச் சட்டத்தின் 27ஆம் பிரிவில் ஒரு கூறு சேர்க்கப்பட்டிருப்பதால் அச்சட்டத்தின் அத்தியாயம் Vஇன் ஆட்சியெல்லையிலிருந்து சல்லிக்கட்டுக்கு விலக்களிக்கப்பட்டுள்ளது. அதாவது படைத்துறையும் காவல்துறையும் நாய், குதிரை போன்ற விலங்குகளைத் தங்கள் பணிகளுக்குத் துணையாகப் பயன்படுத்திக் கொள்வது எப்படி விலங்குவதையாகக் கருதப்படாதோ, அதேபோல் சல்லிக்கட்டும் விலங்குவதையாகக் கருதப் படாது என்பதே இதன் பொருள். இப்படி விலக்களிக்கப் பட்டிருப்பதால் விலங்குவதைத் தடுப்புச் சட்டத்தின் 22ஆம் பிரிவின்படியான எந்த அறிவிக்கையாலும் சல்லிக்கட்டுக்குத் தடை விதிக்க முடியாமற்போகும்.

7) இந்தச் சட்டத்தின் எந்தப் பிரிவின் படியும் சல்லிக்கட்டு நடத்துவது குற்றமாகாது என்று பிரிவு 28க்குப்பிறகு 28A தெளிவாக்குகிறது.

ஆகவே, இது சல்லிக்கட்டு உரிமையைப் பாதுகாப்பதற்கான மிகச் சிறந்த சட்டம். நமது உறுதியான அறப் போராட்டத்தால் கிடைத்திருக்கும் அருமையான சட்டம். இந்தச் சட்டத்தைத் தமிழ்ப் பண்பாட்டின் பகைவர்கள் நேர்வழியில் வந்து வீழ்த்த முடியாது. நீதிமன்றத்திலும் வெளியிலும் அவர்கள் வேறு வழியில் வருவார்களானால், வரட்டும், விழிப்போடிருந்து முறியடிப்போம். அப்போது இந்தச் சட்டமும் நமக்கொரு போராட்டக் கருவியாகப் பயன்படும். உறங்கா விழிப்பே உரிமைவாழ்வுக்கு விலையன்றோ?

அவனியாபுரத்தில் கைது செய்யப்பட்ட வர்களை விடுவிக்கக் கோரி அலங்காநல்லூர் உள்ளிட்ட சில இடங்களில் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. ஆர்ப்பாட்டம் செய்தவர்களைக் கைது செய்த காவல்துறையினர் அவர்களை வாடிப்பட்டி அருகிலுள்ள திருமண மண்ட பத்தில் அடைத்து வைத்தனர். அலங்காநல்லூர் அடக்குமுறையைக் கண்டித்து சனவரி 16ஆம் நாள் சில மாணவர்கள் இளைஞர்கள் சென்னை மெரினாவில் கூடினார்கள். இந்தச் செய்தி சமூக வலைத்தளங்களில் பரவி 17ஆம் நாள் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் கூடத் தொடங்கினர். இதுவே தமிழகமெங்கும் சல்லிக்கட்டு உரிமைக்கான மாபெரும் அறப்போராட்டமாக உருவெடுத்தது.

சல்லிக்கட்டு உரிமைக்கான கோரிக்கையை ஏற்றுக் கொள்வதாக உறுதியளித்த இந்திய அரசும் தமிழக அரசும் உரிய நேரத்தில் அதற்கான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தவறியதால் ஏற்பட்ட ஏமாற்றமும், அரசுகள் மீதான அவநம்பிக்கையும் தமிழர் போராட்டம் தீயாய்ப் பரவக் காரணம் என்றால், அவனியாபுரத்திலும் அலங்காநல்லூரிலும் காவல்துறை நடத்திய அடக்குமுறை அந்தத் தீயை மூட்டிய தீப்பொறியாக அமைந்து விட்டது.



*சல்லிக்கட்டு என்னும் ஒரு பண்பாட்டு அடையாளத்துக்கான போராட்டம் இவ்வளவு பெரும் வீச்சுப் பெற்றது எப்படி? மொழிப் போர் 1965 ஒரு தமிழ்த் தேசிய எழுச்சி. பிறகு சல்லிக்கட்டு உரிமைப் போர் 2017 மீண்டும் ஒரு தமிழ்த் தேசிய எழுச்சி என்பது என் உறுதியான நம்பிக்கை. இந்தித் திணிப்புக்கு எதிர்ப்பு போல் சல்லிக்கட்டு ஒரு பெரிய தேசியக் கோரிக்கையா? என்று கேட்கப்படலாம்.*



**சல்லிக்கட்டுக்கான போராட்டம் என்பதை விட சல்லிக்கட்டு உரிமைக்கான போராட்டம் என்பதே சரி. எங்கள் பண்பாடு, எங்கள் கலாசாரம் என்று முழக்கமிட்ட மாணவர்களில் பலருக்கு சல்லிக்கட்டு தெரியாது. விளையாடியவர்களும் அல்லர், விளையாட்டைப் பார்த்தவர்களும் அல்லர். அவர்களைப் பொறுத்த வரை பண்பாட்டு உரிமையின் ஓர் அடையாளம்தான் சல்லிக்கட்டு. ஒரு தேசிய இனத்தின் உரிமைகளில் மொழியுரிமைக்கு நிகரான இடம் பண்பாட்டு உரிமைக்கும் உண்டு. சல்லிக்கட்டுக்கு நேர்மையாக எதிர்க் கருத்துக் கொண்டவர்களும் கூட இந்தப் போராட்டத்தை உரிமைப் போராட்டமாக ஏற்று மெரினாவுக்குத் துணை நின்றது நல்ல செய்தி.**

*மொழிப் போர் 1965 ஒரு தமிழ்த் தேசிய எழுச்சி. பிறகு சல்லிக்கட்டு உரிமைப் போர் 2017 மீண்டும் ஒரு தமிழ்த் தேசிய எழுச்சி என்பது என் உறுதியான நம்பிக்கை. இந்தித் திணிப்புக்கு எதிர்ப்பு போல் சல்லிக்கட்டு ஒரு பெரிய தேசியக் கோரிக்கையா? என்ற கேள்விக்கு, சல்லிக்கட்டு வெறும் விளையாட்டு அல்ல, தமிழர்களின் பண்பாட்டு உரிமை என்று நம் மாணவர்கள், இளைஞர்கள் விடையிறுத்தார்கள். பண்பாடு உரிமைக்காக மட்டுமன்று, தமிழ் மக்களின் முழுமையான வாழ்வுரிமைக்காகவும் போராடுகின்ற உணர்வோடுதான் மாணவர்களும் இளைஞர்களும் களத்தில் நின்றார்கள்.*

*காவிரி, முல்லைப்பெரியாறு, பாலாறு, பவானி உள்ளிட்ட ஆற்று நீர் உரிமை மறுக்கப்படுவதும், நூற்றுக்கு மேற்பட்ட தமிழக உழவர்களின் தற்கொலையும் கொடுஞ் சாவும், கல்விக் கொள்ளையும், சமூக நீதி மறுப்பும், இந்திஆங்கிலசமற்கிருதத் திணிப்பும், வளர்ச்சி என்ற பெயரில் நசிந்து வரும் உழவுசிறுதொழில்வணிகமும், பெருகி வரும் வேலையின்மையும் வறுமையும், இறுதியாக நரேந்திர மோதி அரசின் செல்லாக் காசுத் திட்டத்தால் ஏழை, எளிய நடுத்தர மக்கள் படும் அல்லலும், இந்திய அரசின் வஞ்சகத் திட்டங்களுக்கு தமிழக அரசும் உடந்தையாக இருப்பதும், பதவி வேட்டையாடும் அரசியல் கட்சிகளின் கையாலாகாத்தனமும்... எல்லாம் சேர்ந்து எரிமலையாகக் குமுறிக் கொண்டிருந்த தமிழ் உள்ளம் சீறி வெடிக்க சல்லிக்கட்டு ஒரு காரணமாயிற்று என்பதே உண்மை.*

*சுருங்கச் சொல்லின், சல்லிக்கட்டுப் போராட்டத்துக்குப் பின்னால் பற்பல பொருளியல், அரசியல், பண்பாட்டுக் காரணங்கள் இருந்தன. கரையைத் தொடும் சிற்றலைக்குப் பின்னால் ஆழ்கடலின் பேரழுத்தம் இருக்குமல்லவா, அதேபோல் மெரினாவும் பற்பல அழுத்தங்களால்தான் எழுந்தது. அவற்றில் வலுவானதொன்று ஈழத் துயரம். கூடி ஆர்ப்பரித்த கூட்டு உளவியலின் கருவில் சிலநேரம் மறைவாக, சிலநேரம் தெளிவாகத் தமிழீழ வேட்கை உயிராகத் துடித்துக் கொண்டிருந்தது. ஆம், போராட்டக் களத்தில் காளை என்கிற அடையாளம் எல்லாப் பதாகைகளிலும் கொம்புயர்த்தி நின்றது போலவே எல்லார் உள்ளத்திலும் முள்ளிவாய்க்கால் நெருப்பு கனன்று கொண்டிருந்தது.*

*கரையேறி வந்த ஆழிப்பேரலையாகக் குதியாடிய பெருங்கூட்டத்தில் பெரும்பங்காக அமைந்த மாணவர்களும் இளைஞர்களும் 2009 தமிழின அழிப்பிலிருந்து போரை நிறுத்து! எனும் முழக்கத்திலிருந்து பொதுவாழ்வு கண்டவர்கள். அந்தப் போராட்டத்திலும் இந்தப் போராட்டத்திலும் முக்கியப் பங்கு புதிய நடுத்தர வர்க்கமாகிய தகவல்தொழில்நுட்பப் பணியாளர்களுக்கு இருந்தது. மாணவர்களிலும் சென்னையைப் பொறுத்த வரை ஆங்கிலவழிக் கல்வி பயில்வோர் கணிசமாக இருந்தனர்.*

ஆங்கிலத்தில் எழுதப்பட்ட பதாகைகள் இதையே உணர்த்தி நின்றன. “We want Jallikkattu. We want Cauvery. We want Tamil Eelam”- என்ற பதாகை சல்லிக்கட்டையும் காவிரியையும் தமிழீழத்தையும் அழகுற இணைத்தது.

இந்தப் போராட்டத்திற்குள் இந்திய தேசியக் கொடியைக் கொண்டுவரும் முயற்சி போராட்டக்காரர்களின் கூட்டு உணர்வாலேயே முறியடிக்கப்பட்டது. இளைஞர் ஒருவர் கையிலிருந்த முழக்கத் தட்டி மூவண்ணத்தில் இருந்தது ஆனால் தலைகீழாக! பச்சை மேலே! நெருங்கிப் பார்த்த போது அந்தப் பச்சைப் பின்னணியில் வெள்ளை எழுத்தில் “WE REJECT INDIA” என்று எழுதியிருந்தது. இது 2009 முள்ளிவாய்க்கால் கற்றுத் தந்த பாடம்!

**இறுதிக் கட்டத்தில் காவல்துறையின் வலுவந்த இழுப்பைத் தடுக்க இந்தியத் தேசியக் கொடியை சில பெண்கள் நெஞ்சில் போட்டுக் கொண்டது ஒரு போராட்ட உத்தி என்பதற்கு மேல் ஒன்றுமில்லை. தமிழன்டா! என்பதுதான் ஆண்பெண் அனைவர்க்கும் பொது முழக்கம். இனவுணர்ச்சி ததும்பும் இந்த அடையாளம் இவர்களில் பெரும்பாலார்க்கு ஈழப் போராட்டத்திலிருந்து கிடைத்தது.**



பழைய வரலாற்றைத் திரும்பிப் பார்த்தால் இந்தியத் துணைக் கண்டத்திலேயே அநேகமாய் காசுமீரத்துக்கு அடுத்தபடி தேசிய இன உணர்வில் முன்னுக்கு நின்றது தமிழகம்தான். 1965 மொழிப் போராட்டத்தில் இது உச்சம் கண்டது. 1967 ஆட்சி மாற்றத்துக்கு அதுவே வழியமைத்தது. ஆனால் மறுபுறம் போராட்ட உணர்வு பதவி அரசியலில் திசைமாறி, இன எழுச்சி குன்றியது. அதை மீட்டெடுத்தது 1983 கறுப்பு ஜூலை. ஆம், இலங்கையில் நிகழ்ந்த இனவதையும் அரச பயங்கரவாதமும் வெலிக்கடைச் சிறைப் படுகொலையும் ஈழப் போராட்டத்தில் போலவே தமிழக இனவுணர்வுப் போராட்டத்திலும் ஒரு திருப்புமுனை ஆயின.

அது முதல் தமிழக அரசியலில் தமிழீழம் ஒரு முதன்மைக் கூறு ஆயிற்று. பதவி அரசியலுக்கும் போராட்ட அரசியலுக்குமான முரண்பாடு தொடர்ந்தாலும் தமிழீழம் குறித்தொரு நிலைப்பாடு இல்லாமல் யாரும் இங்கே அரசியல் செய்ய முடியாத நிலை உருவாயிற்று. இராசீவ் கொலைக்குப் பின் மீண்டும் ஒரு பெரும் பின்னடைவு குறுக்கிட்டாலும், தமிழ்நாட்டில் தமிழ்த் தேசிய ஆற்றல்கள் ஈழ ஆதரவை நீறு பூத்த நெருப்பாகக் காத்து வந்தன. 2008-09 இறுதிப் போரும், போரை நிறுத்தக் கோரும் அமைதிப் போரும் அந்த சிறு நெருப்பை ஊழித் தீயாக வளர்த்தெடுத்தன. ஆனாலும் நாம் தோற்றோம்! அங்கேயும் இங்கேயும்!

முள்ளிவாய்க்கால் ஈழத் தமிழர்கள், தமிழ்நாட்டுத் தமிழர்கள், உலகத் தமிழர்கள் அனைவர்க்கும் மாறாத் துயரம், தமிழினத்தின் உளவியலில் ஆறா வடு. அண்டம் குலுங்க நிகழ்ந்த அணுக்கரு வெடிப்பு. விடுதலைக்கான போராட்டத்தின் முற்றுப் புள்ளியன்று, கூரிய திருப்புமுனைப் புள்ளி. விடுதலைப் போராட்டம் முடியவில்லை, உலக வீச்சுடன்



உருமாறியது, இனவழிப்புக்கு நீதி கோரும் போராட்டமாக உருவெடுத்தது. தொடக்கக் குழப்பங்களும் சோர்வுகளும் நீங்கி, 2013இல் பாலச்சந்திரன் படிமம் ஏந்தி எழுந்தனர் தமிழ்நாட்டு மாணவர்கள். அந்த எழுச்சியின் தொடர்ச்சியை மெரினாவில் கண்டோம்.

**காவிரி, முல்லைப்**<br>
**பெரியாறு, பாலாறு, பவானி,**<br>
**ஆற்று மணல், தாதுமணல்,**<br>
**கூடங்குளம், கெயில்**<br>
**குழாய், கல்விக் கொள்ளை,**<br>
**செல்லாத நோட்டு...**<br>
**எல்லாம் சேர்ந்துதான்**<br>
**சல்லிக்கட்டுத் தீ மூட்டின.**<br>
**இந்த வரிசையில் ஈழமும்**<br>
**ஓர் அக்கினிக் குஞ்சு.**<br>
**தீப்பொறியில் பெரிது, சிறிது**<br>
**இல்லை. தழல் வீரத்தில்**<br>
**குஞ்சென்றும் மூப்பென்றும்**<br>
**உண்டோ?**




கோரிக்கையில் நிறைவெற்றி கண்ட சல்லிக்கட்டுப் போராட்டத்தின் முடிவில் காவல்துறை நடத்திய வன்செயல், தீவைப்புக்குக் காரணம் தேடும் போது, தமிழீழ ஆதரவும், அதன் தொடர்ச்சியான இந்திய எதிர்ப்பும் போராட்டத்தில் இழையோடி நின்றது இந்திய வல்லாதிக்கத்துக்கு எரிச்சலூட்டியது புரிகிறது. எரிச்சல் மட்டு மன்று, எதிர்காலத்திலும் இது போன்ற போராட்டங்கள் நடந்தால் நசுக்குவதற்கான வெள்ளோட்டமாகவும், ஆதரவு தரும் மக்களுக் கான கடும் எச்சரிக்கையாகவும் காக்கி வெறியாட்டம் அரங்கேறியது. இந்த அடக்குமுறையை நியாயப்படுத்த தேச விரோதிகள், சமூக விரோதிகள் என்ற முத் திரை பயன்படுத்தப்பட்டதிலிருந்தே இது தெளிவாகிறது. நடுக்குப்பம் உள்ளிட்ட மீனவர் குப்பங்கள் காக்கிக் காடையரின் வன்தாக்கு தலுக்கு முக்கிய இலக்காக்கப்பட்டன.

சல்லிக்கட்டுப் போராட்டம் தமிழர்களின் போராட்ட ஒற்றுமைக்குக் களம் அமைத்துக் கொடுத்தது. ஆண்கள் பெண்கள், மாணவர்கள் மீனவர்கள், உழவர்கள் தொழிலாளர்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் பிற்படுத்தப்பட்ட மக்கள், கிராமத்தினர் நகரத்தினர், இந்துக்கள் முசுலிம்கள்... எல்லாத்தரப்பட்டவர்களும் தமிழ் ஓர்மையுடன் ஒன்றுபட்டு நின்றனர். தமிழ் கூறும் உலகெங்கும் இந்த ஒற்றுமை பரவி நிற்க ஈழம் ஊடிழை ஆயிற்று.

அரபு வசந்தத்தில் கெய்ரோவின் தகிர் சதுக்கத்துக்கு ஒப்பான பங்கு தமிழ் வசந்தத்தில் சென்னையின் மெரினாவுக்கு உண்டு. ஒவ்வொரு தேசத்துக்கும் ஒரு தகிர் சதுக்கம் தேவை என்றொரு கவிதை வரி உண்டு. சீப்பை மறைத்து வைத்தால் திருமணம் நின்று விடும் என்றெண்ணிய மூடரைப் போல் மெரினாவில் தடைச் சட்டம் போட்டால் மீண்டும் ஒரு தமிழ் வசந்தம் எழாது தடுத்து விடலாம் என்று ஆட்சியாளர்களும் அவர்களின் அடியாள் படியான காவல்துறையும் மனப்பால் குடிக்கலாம். ஆனால் மெரினாவில் கரை தழுவும் கடலலைகளைப் போலவே மக்கள் போராட்டங்களும் ஓய்வதில்லை. அந்த ஓயாத அலைகளில் அடுத்த ஒன்று தமிழீழ மக்களுக்கு நீதி என்ற முழக்கத்தோடு ஆழிப்பேரலை போல் எழும் என்று நம்புவோம்.

thozharthiagu@gmail.com